# திறனாய்வு நோக்கில்
# வேங்கடசாமி நாட்டார்

பதிப்பாசிரியர்

**வே. இரா. மாதவன்**

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பஎ 7195

# திறனாய்வு நோக்கில் வேங்கடசாமி நாட்டார்

பதிப்பாசிரியர்

**முனைவர் வே.இரா. மாதவன்**

பேராசிரியர் & தலைவர்

ஓலைச்சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

## தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-405-2

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 362

நூல் : திறனாய்வு நோக்கில்
வேங்கடசாமி நாட்டார்

ஆசிரியர் : முனைவர் வே.இரா. மாதவன்

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2041, ஆனி
முதற்பதிப்பு - சூன் 2010

பக்கம் : 208 + 8

அளவு : டெம்மி 1/8

தாள் : 70 ஜிஎஸ்எம் மேப்லித்தோ

படிகள் : 1200

விலை : உரூ. 80.00

ஒளியச்சு : முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,
தெற்கு வீதி, தஞ்சாவூர்.

அச்சு : ஜப்பானிக்கா பிரிண்டிங் மீடியா
17 (7) ஸ்ரீபுரம் 2ஆவது தெரு
இராயப்பேட்டை
சென்னை 600 014

முனைவர் ம. இராசேந்திரன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010

நாள் 03-06-2010

## அணிந்துரை

**மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம்,

இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. அவ்வகையில் இந்நூலும் ஒன்று. இதன் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய பதிப்பாசிரியர் முனைவர் வே.இரா.மாதவன்,பதிவாளர் முனைவர் சா.பி. சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை.கண்ணபுரக் கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

**முனைவர் வே.இரா. மாதவன்**
பேராசிரியர் மற்றும் தலைவர்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

# பதிப்பாசிரியர் உரை

தமிழின் பழமையைப் போற்றிப் பாதுகாக்கும் உயரிய நோக்கமுடன் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஐந்து புலங்களுள் சுவடிப்புலம் அடிப்படையானதாகும். அரிய பல தமிழ் நூல்களுக்கு அடிப்படையான ஓலைச்சுவடிகளைத் திரட்டிப் பாதுகாக்கவும், பதிப்பித்து வெளியிடவும், ஆய்வுக்குத் துணை யாகவும் இயங்கி வரும் ஓலைச்சுவடித் துறையில் ஆண்டுதோறும் சிறப்புக் கருத்தரங்குகளும் நடைபெற்று வருகின்றன. உலகப் புத்தக ஆண்டான 2002ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30ஆம் நாளன்று தமிழறிஞர் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் நூல்கள் பற்றிய சிறப்புக் கருத்தரங்கு இத்துறையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் படிக்கப் பெற்ற இருபது கட்டுரைகள் 'திறனாய்வு நோக்கில் வேங்கடசாமி நாட்டார்' என்ற தலைப்பில் தொகுக்கப்பெற்று இப்பொழுது அச்சில் வெளியிடப் பெறுகின்றன.

தமிழுலகில் நாவலராகவும், பாவலராகவும், பேராசானாக வும், தலைசிறந்த ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்து அழியாப் புகழ் பெற்ற நாவலர் அவர்களின் நூல்களின் மாண்பைத் திறனாய்வு நோக்கில் பலரும் அணுகிப் போற்றியுரைத்துள்ளனர். இவற்றுள் பல விரிவான மேலாய்விற்குரியன. ஒருநாளில், சில மணி நேரங்களில் கூடி விவாதிக்கப்படும் நிலையில் உருவாக்கப்பட்ட கட்டுரைகள் இவை. இக்கட்டுரைகளிலுள்ள செய்திகள், மொழி நடை போன்ற அனைத்திற்கும் கட்டுரையாளர்களே பொறுப் பாவர். நாவலர் ஐயா அவர்களின் நூல்களை முழுமையாக ஆராய முற்படுவோருக்கு இக்கட்டுரைகள் அரிய துணையாகும் என்ற நோக்கில் இவை தொகுக்கப்பெற்று நூலாக வெளியிடப்பட் டுள்ளன.

கருத்தரங்கில் படிக்கப்பெறும் ஆய்வுரைகள் காற்றோடு கலந்து மறைந்துவிடாமல் அவற்றைப் பதிப்பித்து வெளியிட்டு ஆய்வுலகிற்கு வழங்க வேண்டுமென்ற விழைவுடன், இந்நூலாக்கப் பணிகளுக்கு ஆணை வழங்கிய மாண்புநிறை துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

இத்துறைக் கருத்தரங்கில் ஆய்வுரைகளை வழங்கி ஒத்துழைப்பு நல்கிய அனைத்துக் கட்டுரையாளர்களுக்கும் நன்றிகள் பல உரித்தாகும். இத்தகைய கருத்தரங்குகளை நடத்துவதிலும், கட்டுரைத் தொகுப்புகளை உருவாக்க வேண்டுமென்ற விழைவிலும், முனைப்புடன் செயலாற்றி வந்த முன்னைத் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் த.கோ. பரமசிவம் அவர்களின் ஈடுபாடும் உழைப்பும் என்றும் நினைவைத் தருவனவாம்.

துறைப் பணிகளிலும் கருத்தரங்கப் பணிகளிலும் தொடர்ந்து உதவிகளை நல்கி வரும் துறையின் உதவிப் பேராசிரியர்களான முனைவர் மோ.கோ. கோவைமணி மற்றும் முனைவர் த. கலாஸ்ரீதர் ஆகியோருக்கும் நன்றி.

கருத்தரங்க நாளில் உருளச்சு வடிவில் வழங்கப்பெற்ற கட்டுரைத் தொகுப்பினை நூல் வடிவில் அச்சாக்கி வெளியிட்டு தவிய பதிப்புத்துறை இயக்குநர் திரு வை. கண்ணபுரக்கண்ணன் அவர்களுக்கும், அச்சகப் பணியாளர்களுக்கும் மற்றுமுள்ள பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி.

– பதிப்பாசிரியர்

# பொருளடக்கம்

பக்கம்

பதிப்புரை

பதிப்பாசிரியர் உரை

1. நாட்டாரின் கடிதங்கள் 1
- முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி, புதுவை

2. நாட்டார் ஆற்றிய உரைகள் 13
- முனைவர் சி. இலட்சுமணன், தஞ்சாவூர்

3. நாட்டாரின் சிலப்பதிகார உரைத்திறன் 23
- பேரா. சு. உலகநாதன், தஞ்சாவூர்

4. நாட்டாரின் வரலாற்று நூல்கள் 35
- முனைவர் த. கலாஶ்ரீதர், தஞ்சாவூர்

5. நாட்டாரின் வரலாற்றுப் புலமை 41
- முனைவர் இரா. கலியபெருமாள், தஞ்சாவூர்

6. படைப்புலகில் நாட்டார் 49
- முனைவர் மோ.கோ. கோவைமணி, தஞ்சாவூர்

7. சிலம்பின் அரங்கேற்று காதையில் நாட்டாரின் உரைவளம் 65
-முனைவர் கோ. சண்முகவேல், திருவையாறு

8. நாட்டாரின் திருவிளையாடற்புராணப் பதிப்பு 79
- முனைவர் கா. சத்தியபாமா, தஞ்சாவூர்

9. நாட்டாரின் கல்விக்கொள்கை 89
- பேரா. வே. சிவானந்தம், தஞ்சாவூர்

10. கள்ளர் சரித்திரம் - ஒரு மதிப்பீடு 97
- முனைவர் சி. சுந்தரேசன், தஞ்சாவூர்

11. நாட்டார் ஐயாவின் கோயில் 111
- திரு. க. திருநாவுக்கரசு, தஞ்சாவூர்

12. நாட்டாரின் கட்டுரைத்திறன் 117
- முனைவர் கோ.ப. நல்லசிவம், தஞ்சாவூர்

13. நாட்டாரின் அகநானூறு உரைத்திறன் 125
- முனைவர் த.கோ. பரமசிவம், தஞ்சாவூர்

14. ஆசிரியரும் மாணாக்கரும் 135
- திருமதி க. புனிதாதேவி, தஞ்சாவூர்

15. உமாமகேசுவரனாரும் நாட்டாரும் 145
- முனைவர் தி. புஷ்கலா, சென்னை

16. தமிழ்ப் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு நாட்டாரின் பங்கு 153
- பேரா. கி. பெரியசாமி, தஞ்சாவூர்

17. நாட்டாரின் நீதிநூல் உரைகள் 165
- முனைவர் ய. மணிகண்டன், சென்னை

18. நாட்டாரின் கட்டுரைகளில் தமிழர்ப் பண்பாடு 173
- முனைவர் அரு. மருததுரை, திருச்சிராப்பள்ளி

19. நாட்டாரின் மணிமேகலை உரை மாண்பு 183
- முனைவர் வே.இரா. மாதவன், தஞ்சாவூர்

20. நாட்டார் ஐயாவும் சமய சீர்திருத்தமும் 199
- பேரா. கி. விமலா, தஞ்சாவூர்

# நாட்டாரின் கடிதங்கள்

முதுமுனைவர் ம. சா. அறிவுடைநம்பி
புதுவை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பணியாற்றிய நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் புரைதீர்ந்த தமிழ்ப்பெரும் புலமை வாய்ந்தவராகத் திகழ்ந்தார். கல்வி கற்பிப்பதிலும், சொற்பொழிவாற்றுவதிலும், உரை எழுதுவதிலும் திறமை உடையவராக விளங்கினார். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பணியாற்றிய காலத்தில் தம் மகன் நடராசனுக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளார். இக்கடிதத் தொகுப்புகள் தற்பொழுது தமிழ்ப் பல்கலைக்கழக அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இக்கடிதத் தொகுப்பில் காணப்படும் செய்திகளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.

## கடிதத் தொகுப்புகள்

நாட்டார் தம் மகன் நடராசனுக்கு 03.07.1938 முதல் 20.03.1943 முடிய உள்ள காலங்களில் எழுதியவற்றுள் 129 கடிதங்கள் இத்தொகுப்பில் உள்ளன. இவற்றில் அக்காலப்

பண்பாடு, பழக்க வழக்கங்கள், சமயநிலை, அறிவுரைகள், நாட்டார் குடும்பநிலை முதலான பலவற்றைக் காணமுடிகின்றன. ஒரு தந்தை மகனுக்கு எழுதிய இக்கடிதங்களில் 'என்ன இருக்க முடியும்?' என்றெண்ணி இவற்றை எளிதில் ஒதுக்கிட முடியாது. 'வெறும் செய்திகள்தானே!' என்று நினைத்து இவற்றை அழித்துவிடவும் முடியாது. இக்கடிதங்களைப் படித்துப் பார்க்கும்பொழுதுதான் பல அரிய செய்திகள் இவற்றில் புதைந்து கிடந்தமையை அறிய முடிந்தது.

தமிழ் நூல்களிலுள்ள பல உயரிய கருத்துக்களை இக்கடிதங்களில் நாட்டார் தம் மகனுக்கு வெளிப்படுத்தியுள்ளார். இதைத்,

> **''தமிழ் நூற்பாவிலுள்ள உயரிய கருத்துக்களைக் கடிதங்கள் வாயிலாக வெளிப்படுத்துவதே என் உட்கோள்''**

என்று 22.01.1939இல் எழுதிய கடிதத்தின் மூலம் அறியமுடிகிறது. தம் வாழ்வில் அடைந்த அனுபவங்களைத் தம் மகனுக்கு எடுத்துக் கூறுவதன் வாயிலாக அவருடைய நுண்மாண் நுழைபுலத்தையும் ஆழங்காற்பட்ட அறிவையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. கடிதத்தினுடைய பயன்பாட்டையும் அறியமுடிகிறது. அனைத்துக் கடிதங்களும் நாட்டாரால் தம் கைப்படவே தாள்களில் எழுதப் பட்டுள்ளன. கடிதத்தைத் தொடங்கும்பொழுது 'அன்புள்ள குழந்தை நடராஜனுக்கு', 'அன்புள்ள மைந்தன் நடராஜனுக்கு' என்றெழுதி இறுதியில் 'அன்புள்ள ந.மு.வே.', 'அன்புள்ள ந.மு.வேங்கடசாமி' என்று ஒப்பமிட்டுள்ளார்.

## இறைப்பற்று

நாட்டார் கடவுள் நம்பிக்கை கொண்டவர். திருச்சியில் பணிபுரிந்த காலத்தில் நாள்தோறும் தாயுமானவர் கோயிலுக்குச் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டவர் என்பதை அவர்

வரலாறு காட்டும். பல சமயப் பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார். பல கடிதங்களில் இறைப்பற்றை எடுத்துக் கூறியுள்ளார். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். துன்பம் வரும்பொழுது மனம் கலங்காமல் 'எல்லாம் நன்மைக்கே' என்று எளிதாக எடுத்துக் கொண்டு கடவுளை நினைத்து வழிபடுவதே சிறந்த மருந்து என்கின்றார்.

> *''உயிர்க்குயிராக இருந்து எக்காலத்தும் எந்நிலையிலும் உதவி புரிந்து வருவோர் அவரே (கடவுளே). உண்மையாக அவரை நம்பி, அவரது திருவருளையே வழிகாட்டியாகக் கொள்வோமாயின் அது நம்மை நன்னெறிக்கட் செலுத்தி உய்விக்குமென்பது ஒருதலை''(07.03.39)*

என்றும்,

> *''எவ்வளவு துன்பம் நேர்ந்த போதிலும் சிறிதும் கலங்காமல், கடவுளிடத்தில் முழு நம்பிக்கை வைத்து, செய்ய வேண்டிய பரிகாரங்களைக் குறைவின்றிச் செய்துவர வேண்டும்''(10.04.40)*

என்றும்,

> *''தளரா ஊக்கமும் விடாமுயற்சியும், கடவுள்பால் நம்பிக்கையும் இருப்பின் யாவும் நன்மையாகவே முடியும்''(27.04.41)*

என்றும் கூறியுள்ளார்.

தீமைக்கு விலகிப் போகாமல் எதிர்த்து நிற்பதனால் வாழ்வில் பல துன்பங்கள் நேரும் என்கின்றார். துன்பம் நேரும்பொழுது உறுதியுடன் கடவுள் நம்பிக்கை கொண்டு திருக்கோயில்களில்

விளக்கிடுதல், அருச்சனை செய்தல் முதலானவற்றைச் செய்யின் கூடிய விரைவில் தீமைகள் நீங்கும் என்கின்றார். (18.11.38)

கடிதத்தைத் தொடங்கும்பொழுதே ‘சிவபெருமான் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாக', ‘இறைவனருளால் எல்லா நலங்களும் உண்டாக', ‘இறைவனருளால் நலமுண்டாக', ‘கடவுளருளால் நலமுண்டாக', ‘அம்பலவாணன் திருவருளால் அனைத்து நலனும் உண்டாக' என்றுதான் தொடங்குகின்றார்.

தந்தையைப் போலவே தனயனாகிய நடராசனும் இறைப்பற்று மிக்கவராகத் திகழ்ந்தார் என்பதைக்,

> *''கடவுளிடத்தில் உனக்கு உறுதியான நம்பிக்கை யிருப்பது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது'' (07.03.39)*

என்ற கடிதத்தின் மூலம் அறியமுடிகிறது.

## திருக்குறள்

தமிழ் இலக்கியங்களில் முதலில் திருக்குறளைத்தான் படிக்க வேண்டுமென்று ஒரு கடிதத்தில் (02.09.40) கூறியுள்ளார். மற்றொரு கடிதத்தில் (19.12.40) திருக்குறள் முழுவதும் பலமுறை படிக்க வேண்டிய நூலாகும் என்கின்றார். அத்துடன் ஊக்க முடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை ஆகிய நான்கு அதிகாரங்களையாவது முதலில் மனப்பாடம் செய்ய வேண்டும் என்கின்றார். இவற்றைப் பார்க்கும் பொழுது இளைஞர்களாக இருக்கின்றவர்கள் எந்தச் செயலைச் செய்யும் பொழுதும் சோம்பலின்றி ஊக்கத்துடன் செயல்பட வேண்டும் என்பதையும், இடைவிடாத முயற்சியுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பதையும், துன்பம் வந்தபோது மனம் கலங்காமல் இருத்தல் வேண்டும் என்பதையும் தம் வாழ்நாளில் கடைப்பிடித்தல் வேண்டும் என்று நாட்டார் விரும்பியதைக் காணமுடிகின்றன. இக்கூற்று இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு மிகவும் தேவை

என்பதையே வலியுறுத்துகிறது. இக்கருத்து எக்காலத்துக்கும் பொருந்துவதாகவே அமைகிறது.

**ஆசிரியர்கள்**

கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக – வழிகாட்டியாக – யாவராலும் போற்றிப் புகழத் தக்கவராக – ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் என்ற கொள்கைப் பிடிப்புடையவராக நாட்டார் இருந்து வாழ்ந்து காட்டியுள்ளார். தம் மகன் நடராசனையே,

> **''இவர் பி.எல். பட்டம் படிப்பது தமக்கும், தமது சமூகத்திற்கும் சிறப்பை அளிக்கும்''**

என்ற நம்பிக்கையில் சென்னையிலுள்ள சட்டக்கல்லூரிகளில் வழக்கறிஞர் படிப்பில் சேர்த்தார். சட்டம் கற்றுத்தரும் ஆசிரியர்கள் மீது நாட்டார் எத்தகைய மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார் என்பதை அவர் எழுதிய ஒரு கடிதத்தின் மூலம் அறியமுடிகிறது.

> **''சட்டக்கலாசாலை போலும் பெரிய கல்லூரிகளில் ஆசிரியர்களாயிருப்போர் உயர்ந்த கல்வியும், சிறந்த குணங்களும், உலக அனுபவமும் வாய்ந்தவர்களாய் இருப்பார்கள். மற்றும், அவர்கள் பிறப்பினாலும், ஏனோரின் சேர்க்கையாலும், தங்கள் முயற்சியாலும் எவ்வளவோ சிறந்த பண்புகளுக்கு உரியவர்களாதல் கூடும். அவர்களுக்குள்ளே சிற்சில இயல்புகளால் சிற்சிலர் மேம்பாட்டிருந்தலுங்கூடும். அவர்கள் கற்பிக்குங்கால் பாடத்திற்குப் புறம்பான பொருள்களைக் கூறினும் அவற்றையும் கருத்துடன் கேட்க வேண்டும். மற்றும், அவர்கள் கூறும் பொருள்களைக் கேட்பதோடமையாமல், அவர்கள் தாம் கூறுவனவற்றை எவ்வாறு ஒழுங்கு செய்து எத்தகைய தோற்ற**

முடன் எத்தகைய குரலில் எவ்வளவு ஆர்வத்துடன் கூறுகின்றார்கள் என்பதையும், மற்றும் அவர்கள் பாற் காணப்படும் சிறந்த பண்புகளையும் நுட்ப மாக அறிந்து உள்ளத்தே பதிய வைக்க வேண்டும். மற்றும் உயர்ந்த நோக்கங்கள் கொண்டே ஆசிரியர் களிடம் அடுத்தடுத்து நெருங்கிப் பழகுதல் பொருந்தும். மைந்தனே, நின் ஆசிரியர்களுள் அறிவாற்றலாலும், உயர்குணத்தாலும் உன் உள்ளத்தைக் கவர்ந்திருப்பவர் யார்? அவருடைய இயல்புகள் என்ன? அவருடன் நீ நெருங்கிப் பழகுவதுண்டா?'' (27.11.38)

இக்கடிதத்தில் பொதுவாக ஓர் ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும்? அவர் இயல்பு என்ன? பண்பு நலன்கள் யாவை? அவரிடம் பயிலும் மாணவர்கள் எப்படி நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதை எல்லாம் நாட்டார் தெளிவாகக் கூறியிருப் பதைக் காணமுடிகின்றன. ஓர் ஆசிரியர் பெயரைச் சொல்லி நான் இவருடைய மாணவன் என்று சொன்னாலே அந்த ஆசிரியரைப் பற்றியும், அவரிடம் பயின்ற மாணவனின் குணநலனைப் பற்றியும் எளிதில் புரிந்து கொண்டு அதற்கேற்றபடிச் செயற்படமுடியும். இதையெல்லாம் இன்றைய காலத்தோடு பொருத்தி ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் அக்காலம் ஒரு பொற்காலமாகத் திகழ் வதையே கூறவியலும். ஏனெனில் இக்காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக ஆசிரியர்களும் இல்லை, அதற்கேற்றபடி மாணவர்களும் அமையவில்லை. இந்நிலை வருந்தற்குரிய ஒன்றேயாகும்.

### மாணவர்களின் விடுதி வாழ்க்கை

இந்தியாவிலுள்ள பல்வேறிடங்களிலிருந்தும் மாணவர்கள் அக்காலத்தில் கல்வி பயிலுவதற்குப் பல கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் மிகமிகக் குறைவாகவே இருந்தன. இக்காலத்தில் உள்ளதுபோல அவ்வளவு மிகுதியாக இல்லை.

தமிழகத்தைப் பொறுத்த அளவில் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள்தாம் அக்காலத்தில் இருந்தவையாகும். எனவே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் விடுதியில் மாண வர்கள் சேர்ந்து கல்வி பயிலும் நிலை ஏற்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் அடிக்கடிக் கலவரங்களும், மாணவர் போராட்டங்களும் நடந்துள்ளன. 27.11.38இல் நாட்டார் தம் மகனுக்கு எழுதிய கடிதத்தில் அன்றைய காலகட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த கலவரத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதில் மாணவர்களின் நிலையையும் அவர்கள் விடுதியில் தங்கி வாழ்கின்ற முறையையும் விடுதி வாழ்க்கையின் சிறப்பையும் எடுத்துக் கூறியிருப்பது இக்காலத்திற்கும் ஏற்புடைய சிறந்த அறிவுரையாகத் திகழ்கிறது.

> **‘‘மாணாக்கர்கள் ஓர் விடுதியில் வதிவதென்பது உயர்ந்த நோக்கமுடையதாதல் வேண்டும். மொழி, மதம், இனம், இடம் முதலியவற்றால் பலவாறாகப் பிரிக்கப்பட்டிருக்கிற மாணவர்கள் ஓரிடத்தில் ஒருங்கு உறைதலால் ஒருவர் ஒருவரோடு நன்கு அளவளாவவும், ஏனையோரிடமுள்ள உயர்ந்த குணங்களைக் கண்டு மகிழ்ந்து தாமும் அவற்றைக் கைக்கொள்ளவும், ஏனையோரின் அறிவுநுட்பத்தை யும் கல்வித் திறத்தையும் கண்டு, தமது செருக்கு அடங்கப்பெற்று அவர்போல் தாமும் சிறப்படை வதற்கு முயற்சி செய்யவும், ஒருவருக்கொருவர் உதவி செய்து ஒற்றுமையும் அன்பும் உடையராய் வாழவும் வசதிகள் உண்டு. இவ்வாறாகத் தமது மனத்தைப் பண்படுத்திக் கொண்டு விடுதியில் உறைவார்களானால் அதனால் உண்டாகும் இன்பத் திற்கு நிகராக வேறெதையும் சொல்லவியலாது. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மாணவர்கள் ஒருவாறு இத்தகைய இன்பங்களை அனுபவித்து வந்தார்கள். மாணவ வாழ்க்கையானது தேவலோக**

வாழ்க்கைபோல் அவர்களுக்குத் தோன்றிற்று. நாளடைவில் மாணவர்களின் இயல்புகள் மாறி வரலாயின. இன்று இப்பல்கலைக்கழகத்து மாணவர்களின் இயல்பினைப் பார்க்கும்பொழுது இது நரக வாழ்க்கையிலும் தீதாகத் தோன்றுகிறது. தமது வாழ்நாளின் இன்றிமையாத பாகமும் தம் வாழ்க்கையைச் செம்மையாய் நடத்துதற்கு வேண்டிய அறிவு ஆற்றல் அடக்கம் பொறுமை முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளுதற்குரியது மாகிய கட்டிளமைப் பருவத்தைப் பாழாக்குகின் றார்கள். கம்பும் கத்தியும் எடுத்துக் கொண்டு பகலிலும் இரவிலும் கூட்டம் கூட்டமாகத் திரிவதும், ஒரு பகுதியாரை மற்றொரு பகுதியார் அடித்து விடுவதாகக் கூறி உறுமிக் கொண்டிருப்ப தும் எவ்வளவு அழகாயிருக்கின்றன? இவர்கள் கல்லூரியிற் சேர்ந்தது என்ன பயன் கருதியோ? தம் பெற்றோர்கள் வருந்தித் தேடிய பொருளையும் தொலைத்துத் தறிதலையாய்த் திரியும் இப்பேதை களின் நிலைமை இரங்கற்குரியதே''

இக்கடிதம் எழுதிய ஆண்டு 1938 ஆகும். 25 ஆண்டு களுக்கு முன்பிருந்த மாணவர்கள் நிலை மாறியதை இக்கடிதம் தெரிவிக்கின்றது. அப்பொழுதே மாணவர்கள் நிலை வேறு பாதையில் செல்லத் தொடங்கியதை அறியும் பொழுது மிகவும் வேதனையாகத்தான் உள்ளது.

### கோள்களின் நிலையும் ஊழும்

தீமைக்கு விலகிப் போகாமல் எதிர்த்து நிற்பதனால் வாழ்வில் எவ்வளவு துன்பங்கள் நேருகின்றன என்பதைத் தம் உடன்பிறந்த தம்பியின் மூலம் கண்கூடாகக் கண்ட நாட்டார் இதற்குக் கோள்களின் நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்றும், அதற்குரிய பரிகாரங்கள் என்ன என்பதையும்,

> **''சுக்கிர திசையில் சனிபுத்தி நடக்கும் பொழுது சனி 7½ நாட்டுச்சனியாக அதிலும் ஜென்மச் சனியாக இருப்பதே இதற்குக் காரணம். கோசார ரீதியாக மற்றைய கோட்களும் பொருந்தாத இடங்களிலேயே இருக்கின்றன ........ திருக் கோயில்களில் விளக்கிடுதல், அருச்சனை செய்தல் முதலியன செய்ய வேண்டும் .......... இவ்வாறு செய்யின் கூடிய விரைவில் தீமை நீங்குமென்று நம்புகிறேன். எனினும் பரிகாரங்கள் செய்து கொண்டு, இன்னும் ஜாக்கிரதையாக இருப்பது நலம்'' *(18.11.38)***

என்று கூறியுள்ளார். ஒரு கடிதத்தில்,

> **''ஒவ்வொருவர்க்கும் ஊழால் உள்ளவை மாற்றக் கூடாதன. உனக்கு அப்படியொன்றும் துன்புறும் நிலையைக் கடவுள் உண்டாக்கவில்லை. சாமர்த்தியமாக இருந்தால் உள்ளது கொண்டே நன்கு வாழலாம்'' *(19.12.40)***

என்கிறார்.

### தற்கொலை

தம்முடைய மாணவர்களுள் ஒருவர் தற்கொலை செய்ய முயன்றதை ஒரு கடிதத்தில் நாட்டார் குறிப்பிடுகின்றார். இவ்வாறு தற்கொலை செய்வது தவறு என்பதை நாட்டார் வலியுறுத்தி எழுதியதைப் பின்வரும் பகுதி மெய்ப்பிக்கிறது.

> **''தெய்வ நம்பிக்கையுடையவர்கள் தற்கொலை யைப் பற்றி நினைக்கவும் மாட்டார்கள். இறைவன் எவ்வளவு பெருங்கருணையால் இவ்வுடம்பை யளித்துள்ளா னென்பதனையும் அதன் நோக்கத்தை**

**யும் சிறிது மறியாத அறிவிலிகள்தாம் தற்கொலை செய்து கொள்வதை எளிதாக நினைப்பார்கள். மேலும் தம் கொள்கை தீதாயின் அதினின்று தன்னை மீட்டுக் கொள்வதும் நன்றாயின் எத்துணை முயற்சியெடுத்தும் சித்தி பெறுவதுமே ஆண்மையாகும். உலகியலால் நோக்கினும் தற் கொலையென்பது அறிவும் ஆண்மையுமற்றவர்கள் செய்யும் செய்கையேயாகும்!'' (27.07.40)**

**அறிவுரைகள்**

பல கடிதங்களில் தம் மகனுக்குச் சிறந்த பல அறிவுரை களை நாட்டார் வழங்கியுள்ளார். இவ் அறிவுரைகள் அனைவருக் கும் பொருந்துமாறு அமைந்துள்ளன. வாழ்க்கையில் அவர் அடைந்த இன்னல்கள் பலவாகும். அவற்றுள் ஒருசில வருமாறு:

தம்மிடம் கைமாற்றாக ஒருவர் பணம் வாங்கிச் சென்று திரும்பக் கொடுக்க இயலாத நிலையைச் சுட்டிக்காட்டி 'உலக இயல்பு அறிந்து நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' (21. 10. 38)

'தேர்வில் படித்து முதன்மையாக வருவது திறமையோடு அதிர்ஷ்டத்தையும் பொறுத்தது' (16. 04. 39) என்று கூறியவர் மற்றோர் கடிதத்தில் (12. 04. 40) மனோதிடமே வெற்றிக்குக் காரணம் என்றும் கூறுகின்றார்.

'ஆராயாமலே யாருடனும் நெருங்கிய பழக்கம் வைத்துக் கொள்வதும், நம்பி விடுவதும் தீங்கு பயக்கும்' (15.08.40) என்றும், 'முதலில் சிறிது கஷ்டப்படுவது பின்பு சுகமாயிருப்பதற்கு அடை யாளமாகும்' (06.03.41) என்றும், "இக்காலத்தில், பிறரிடமுள்ள தீமை பற்றாதிருப்பின் அதுவே முதற்பயனாகக் கருதப்பட வேண்டும். பிறரிடம் நன்மையிருப்பது பற்றப்படின் சிறந்த பயனே" (27.11.38) என்றும், "உலகிலே நீ ஒரு சிறந்த மனிதனாக விளங்க வேண்டுமானால் கடவுளருளுனக்குக் கிடைக்க வேண்டுமானால்

உன்னுடைய செய்கையும் திறமையுமே அவற்றிற்குக் காரண மாதல் வேண்டும்" (27.07.40) என்றும், "வாழ்க்கையில் எப் பொழுதும் மகிழ்ச்சியாய் இருந்து வருவதுடன், அறிவினால் எதனையும் சிந்தித்து அறியும் ஆற்றலும் ஊக்கமும் உடைய வர்களாய் இருத்தல் வேண்டும்" (02.09.40) என்றும், "குறைவான சம்பளத்தில் இருந்துதான் படிப்படியாகப் பலரும் மேல்நிலைக்கு வந்துள்ளனர்" (05.09.40) என்றும், "அதிஷ்டம் இருந்தால், விரைவில் உயர்ந்த சம்பளமும் செல்வாக்கும் உண்டாகக் கூடும்" (18.09.40) என்றும் கூறுகின்றார்.

மேலை நாட்டோடு ஒப்பிடும்பொழுது கடித இலக்கியம் தனியொரு இலக்கிய வகையாகப் பிற்காலத்தில்தான் உரு வாகியது. தொடக்கத்தில் கவிதை நடையில் எழுதப்பெற்ற கடிதங்கள் உரைநடை அறிமுகமான பிறகு அக்கவிதை நடை மெல்ல மெல்ல மாறிவிட்டது. நாட்டார் கடிதங்களில் ஆளுமை (Personality), நேருக்கு நேர் உரையாடும் பாங்கு, அவர் வாழ்ந்த காலச்சூழல், பழக்க வழக்கங்கள், மொழிநடை போன்றவற்றைக் காணமுடிகின்றன. இச்செய்திகள் இக்கால இளைய சமுதாயத் தினருக்கு மிகவும் பயனளிக்கும் என்பதில் எள்ளளவும் ஐய மில்லை.

# நாட்டார் ஆற்றிய உரைகள்

முனைவர் சி. இலட்சுமணன்
தஞ்சாவூர்

கன்னித் தமிழ்க் காவலராக, கற்றோர் உலகு போற்றும் நாவலராக, படைப்பாற்றல் மிக்க பாவலராக விளங்கியவர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள். இவர் உரையெழுதிய நூல்களுண்டு, உயர் ஆராய்ச்சி நோக்கில் எழுதிய ஆய்வு நூல்களுண்டு, வளமான வரலாற்று நூல்களுண்டு, இத்தோடு அமையாது மேடைகளிலும் வானொலியிலும் ஆற்றிய உரைகளுமுண்டு. சுருங்கக்கூறின் பல்துறைப் புலமையும் பல்வகை ஆற்றலும் கைவரப் பெற்றவராய் நடமாடும் தமிழ்ப் பல்கலைக் கழகமாய்த் திகழ்ந்தவர் நாட்டார். சொல்வன்மையும் நாவன்மையும் மிக்க நாட்டார் ஆற்றிய உரைகளின் பெருமை பேச முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நாட்டாரின் உரைகள்

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைகளை இவர் எழுதிய உரைகள், ஆற்றிய உரைகள் என இருவகைப்படுத்தலாம். இவர் எழுதிய உரைகளை, சொற்பொருளுரை, கட்டுரை, முகவுரை,

ஆய்வுரை என மேலும் பல்வேறு வகைப்படுத்தலாம். இவர் ஆற்றிய உரைகளை, மேடையில் ஆற்றிய உரைகள், வானொலியில் ஆற்றிய உரைகள் என இருகூறு படுத்தலாம். மேடையில் ஆற்றிய உரைகளைத் தலைமையுரை, வரவேற்புரை, பாராட்டுரை என பலவகைப்படுத்தலாம். வானொலியில் ஆற்றிய உரைகளை இலக்கியத்தில் காணப்படும் இசை பற்றியவை, இலக்கியச்சுவை பற்றியவை என இருவகைப் படுத்தலாம். இந்நிலையில் வகுத்தும் தொகுத்தும் ஆராய்வதற்கு வழிகோலும் நிலையில் இவர்தம் உரைகள் அமைந்துள்ளன.

## சொல்லாற்றலுக்கோர் இலக்கணம்

எழுத்தாற்றல், எடுத்தியம்பும் சொல்லாற்றல், இவ்விரண்டு ஆற்றலுக்கும் உரமூட்டும் சிந்தனை ஆற்றல் ஆகிய மூன்றும் ஒருவருடைய சொல்வன்மையைக் காட்டும் முக்கியக் கூறுகளாகும். அக்காலத்தில் சொல்லின் செல்வராய் விளங்கிய ஞானியாரடிகளின் பொன்விழா பாராட்டுரையில் சொல்லாற்றலுக்கோர் இலக்கணத்தைப் பின்வருமாறு சொல்லோவியமாக வரைந்து காட்டுகின்றார். "கேட்போர் மனங்கொள்ளுமாறு எளியவாகச் சொல்லுதல், வழுவிலவாகச் சொல்லுதல், தமக்கும் கேட்போர்க்கும் உளவாய் தகுதி வேறுபாடுகளை அறிந்து சொல்லுதல், நிரல்பட கோத்துச் சொல்லுதல், கூறும் பொருளுக்கேற்ப எடுத்தல், படுத்தல் முதலிய ஓசை வேறுபாடமையவும் மெய்ப்பாடு தோன்றவும் நிமிர்ந்த நிலையும் மலர்ந்த முகமும் தெளிந்த குரலும் உடையவராய்த் தடுமாற்றமின்றி சொல்லுதல் என்று இன்னோரன்ன தொகுதியே சொல்வன்மை எனப்படும் (ந.மு.வே. ஆய்வுக் கட்டுரைகள், ப.129).

## உரை தொடக்கமும் அவையடக்கமும்

அவையில் அமர்ந்திருப்போரை நாவலர் விளித்துத் தொடங்குகின்ற உரையின் தொடக்கமே கேட்போர் எழுச்சிபெறும் வண்ணம் அமைந்துள்ளன. சான்றாகச் சிலவற்றை இவண் காணலாம்.

"தமிழ்த் தெய்வத்தின் எழுச்சி கண்டின்புற விழைந்து குழுமியிருக்கும் சான்றோர்களே (ஆ.க., ப. 6) தாவா நல்லிசைத் தண்டமிழ் புலவீர்! ஓவாத் தமிழ்ப் பற்றுடைய நற்செல்வீர் (ஆ.க., ப.85). தமிழின் திருவுருவாய் இருக்கும் நாட்டார் பெருமான் மரபு கருதி கூறும் அவையடக்கச் சொற்கள் அவர்தம் எளிமைக்குச் சான்றாகும். "கரந்தை தமிழ்ச்சங்கத்தின் 21ஆவது ஆண்டு விழாப் பேரவைக்கு வந்து இந்நிலைக்களத்தில் அமர்தற்கு யான் உரியனானமையை உன்னின் ....... எனது தகுதியின்மையை என்போல் அறியவல்லார் யாருமிலரென்பது இப்பொழுது தெளிவாயிற்று (ஆ.க., ப. 67).

நிறைகுடமாய் நிறைமாந்தராய் விளங்கிய நாட்டாரின் அவையடக்கத்திற்கு மற்றுமொரு சான்று; "ஆன்றோர்களே! இதுகாறும் அறிவாற்றல் சுருங்கிய என் புன்மொழிகளைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த நுங்கட்கு என் வணக் கத்தைச் செலுத்துகின்றேன். ........ புழுவினுங் கீழ்மையுடைய என்னையும் இப்பொழுது இந்நிலையில் இருக்கப் பணித்து இதனை நிறைவேற்றா நின்ற செம்பொருளின் திருவருளைப் போற்ற வல்லனாவேன்" (ஆ.க., ப.84).

## முடிவுரையின் முத்தாய்ப்புகள்

நாட்டார் ஆற்றிய உரைகள் ஒவ்வொன்றும் ஆய்வுரை களாக அமைந்துள்ளன. அவர் ஆற்றிய உரைகளின் முடிப்புரைகள் ஆய்வு முடிவுகளை இறுதியாகச் சுட்டுவதுபோல் அமைந்துள்ளன என்பதற்கு "நமது தாய்மொழி" என்னும் தலைப்பில் ஆற்றிய வானொலி உரையின் பின்வரும் முடிப்புரையே தக்க சான்றாகும். "ஓர் ஆற்று வெள்ளத்தைக் குறுக்கே அணையிட்டுத் தடுத்து நிறுத்தல் கூடாதாயினும் அதன்போக்கில் சென்று பாழாகாதபடி கனாகோலி நேரிதிற் செலுத்திக் கண்வாய்களின் வழியே நீரைப் பாய்ச்சிப் புலங்களை விளைவித்தல் அறிவுடைமையாகும். அவ்வாறே மொழியினையும் சில வரம்புகளுக்குட்பட்டு வளரும்படி செய்து மக்கட்குப் பயன் விளைத்தல் வேண்டும்" (ஆ.க., பா.235).

## நாட்டார் ஆற்றிய உரையின் உள்ளடக்கம்

நாட்டார் பெருமான் ஆற்றிய உரையின் உள்ளடக்கம் பல்வேறு சிந்தனைக் களங்களில் அமைந்துள்ளன. சான்றாகச் சிலவற்றைக் காணலாம்.

## இலக்கிய இலக்கணத்தைப் படிக்கவேண்டும்

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஓரளாவாவது அழுத்த மான பயிற்சியைப் பெறுதல் நமக்குரிய கடனாகும். இக்கருத்தினை நாவலர் பல இடங்களில் பலநிலைகளில் வலியுறுத்திக் கூறு கின்றார். "தமிழ் மக்களாகிய நாமனைவரும் பண்டைச் செந் தமிழாகிய இலக்கணங்களை எல்லாம் துறைபோகக் கற்று அவை கூறும் விழுப்பொருளை நுகர்ந்து இன்புறலும், தமிழின் பழமை பெருமைகளையும் பண்டைத் தமிழ் மக்களின் மேதக்க சிறப்பு களையும் பாராட்டிப் பயனெய்தலும் வேண்டுமெனத் தெரிவித்தல் ஈண்டு எனது கடனாகின்றது". (ப. 72)

## தாய்மொழிக் கல்வி

உள்ளத்து உணர்ச்சிகள் கொப்பளிக்க தாய்மொழிக் கல்வியின் அவசியத்தைப் பற்றி நாவலர் தமது உரைகளில் பல இடங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளார். சான்றாக, "கல்வியானது உலகில் வழங்கும் பல மொழிகளானும் எய்தற்பாலதே எனினுஃ தாய்மொழியிற் கற்றல் என்பது ஒவ்வொருவருக்கும் பிறப் பானாகிய கடன்களுள் விழுமிய தொன்றாம். அன்றியும் நாட்டு மக்கள் அனைவரும் கல்விகற்று அறியாமை நீங்குதற்கு வேற்று மொழியையும் துணையாகக் கொள்ளுதல் ஆற்று வெள்ளத்தைக் கடக்க மண்குதிரை கொண்டது போலும் பயனில் செயலேயாகும்" (ஆ.க., பா. 71)

## தமிழின் பெருமையும் தமிழ்ப்பற்றும்

நம் தாய்மொழியாகிய அருமைத் தமிழ் மொழியோ நெருநற் றோற்றியதன்று; நிரம்பா இலக்கணத்ததுமன்று;

ஆராய்ச்சியாளர் எவரும் இன்னும் தமிழில் தொடக்கம் கண்டாரில்லை எனத் தமிழின் பெருமை பேசி, "தமிழ் தமிழ்" என வானளாவக் கூச்சலிடுவதெல்லாம் ஏதோ வேறுபயன் கருதிய செயலாவதன்றி உண்மையான தமிழ்ப் பற்றாகாதென்பது ஒருதலை" என்று கூறி, "தமிழ் நூல்களைக் கற்று அவற்றின் பயனை நுகர்வதன்றோ தமிழ்ப் பற்றாளர்களுக்குரிய முதற்கடன்" என்று தமிழ்ப் பற்றின் இலக்கணத்தையும் எடுத்தியம்புகின்றார். (ஆ.க., பா.90)

## ஆராய்ச்சி பற்றிய நாவலர் கருத்துரைகள்

தமிழ் ஆராய்ச்சி பற்றியும் ஆராய்ச்சியாளர்களின் தகுதிகள் பற்றியும் அவர்தம் காலத்து ஆராய்ச்சியின் நிலை குறித்தும் கூறிய பல செய்திகள் நாட்டார் ஆற்றிய உரைகளில் காணக்கிடக்கின்றன. அவற்றுள் தமிழ் வளர்ச்சி நோக்கில் கூறும் ஆராய்ச்சி பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். "பட்டம் பெற்றவர்கள் அதனைத் தம் படிப்பிற்குத் தொடக்கமென நினைத்து மேலும் மேலும் பல நூல்களையும் கற்றலும் அதன் பயனாக அரிய ஆராய்ச்சியுரைகளை எழுதி வெளியிடுதலும் செய்வாராயின் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தோராவார்" (ஆ.க., ப.80) என்பது மட்டுமல்லாமல் "ஆராய்ச்சியை மேற்கொள்வோர் தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு இயைபுள்ள பலவற்றையும் நன்கு கற்றறிதல் வேண்டும். பண்டை நூற்களின் கருத்துக்களை நுணித்துணர்தல் வேண்டும்" (ஆ.க., ப. 80) என ஆய்வாளர்க்கு வேண்டும் தகுதிகளை வரையறுத்துக் காட்டுகின்றார்.

அவர்தம் காலத்து ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகள் ஏற்புடையதாய் அமையவில்லை என்பதைப் பின்வரும் கூற்றில் புலப்படுத்துகின்றார். "இக்காலத்து ஆராய்ச்சி செய்வோர் சிலர் பண்டு தொட்டுவரும் கொள்கையுடன் மாறுபட்டு உரைத்தலே ஆராய்ச்சியாமெனவும், அதுவே தம்மறிவை மிகுத்துக் காட்டுமெனவும் கருதி யாதோர் ஆதரவுமின்றித் தாம் கருதியவாறெல்லாம் புரைபட்ட கொள்கைகளை வெளியிட்டு அரங்கின்றி வட்டாடி வருகின்றார்" (ப. 81).

## நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்

வீட்டுப் பற்றும் வீடுபேறுமே வாழ்க்கையின் இலட்சியம் என்று எண்ணுகின்ற இக்காலச் சூழலில் நாட்டாரின் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் குறிப்பிடத்தக்கதாகும். சான்றாக, "பிறந்த குடி என்பது அறிவுடைய பெருமக்களும் அவரவர் அறிவுக்கு பெருமைக்கும் ஏற்ப ஒரு நாடாகவும் தேசமாகவும் இருக்கும் ........ பரதகண்டம், இரகுவின் வம்சம், பூருவின் மரபு, குருநாடு என வழங்குவது போல நம் தமிழ்நாட்டை கரிகாலன்நாடு, நெடுஞ்செழியன் நாடு, செங்குட்டுவன் நாடு என வழங்குவோமாக என்றும் அங்ஙனமே தமிழையும் வள்ளுவர் தமிழ், நக்கீரர் தமிழ், கம்பர் தமிழ், சேக்கிழார் தமிழ், சம்பந்தர் தமிழ், சடகோபர் தமிழ் என்று கூறிப் பாராட்டி மகிழ்கின்றார்". (ஆ.க., ப. 115)

## சொற்பொருள் வரையறைகள்

நாட்டார் ஆற்றிய உரைகளில் பல சொற்களுக்கு விளக்கங்கள் அளித்துள்ளார். அவை அச்சொற்களுக்கு இலக்கண வரையறை போல் அமைந்துள்ளன. அவை சிந்தனை வளமிக்கதாகவும் சிந்தைக்கு விருந்தாகவும் அமைந்துள்ளன. சான்றாக, "உண்மைப் பொருள் காணவேண்டும் என்பதே ஆராய்ச்சி" (ப. 119). சமயம் என்பது, "மன்பதைகள் உய்ந்திடுதல் வேண்டிக் கடவுள் அருள்பெற்ற பேரறிவுடைய பெருமக்கள் கண்ட நெறி (ப. 98), இசை என்பது, "மிக்க மென்மையுடன் நுண்மையும் வாய்ந்து செவிப்புலனாகக் குளிர்வித்து உள்ளத்தைக் கனிவிக்கும் இனிய ஓசையாகும்" (ப. 194). அகப்பொருள் என்பதற்கு அன்பினாலேயே நுகரும் இன்பம் எனச் சுருக்கமாகப் பொருள் உரைக்கலாம் என்றும் (ப.238) கூறுகின்றார்.

## கலைச்சொல் ஆக்கக் கருத்துரைகள்

நமது தாய்மொழி என்னும் தலைப்பில் ஆற்றிய உரையில் கலைச்சொல் ஆக்கம் பற்றி நாட்டார் குறிப்பிடும் செய்திகள் இவண்

சுட்டத்தக்கதாகும். "இக்காலத்துப் புதிய கலைகள் பலவும் எழுதுதற்குச் சொற்கள் பல வேண்டுமென்பது உண்மையாயினும், அதன் பொருட்டுத் தமிழினைத் துருவி ஆராய்ந்து வேண்டுஞ் சொற்களைக் காண்டலும் அவை போதாவிடத்துத் தமிழ்ப் பகுதியி னின்று புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளுதலுமே இன்றியமை யாத வழி பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளுதலுமே அறிவும் ஊக்கமும் முயற்சியும் உடையார்க்கு அழகானவாம்" (ஆ.க., ப. 234) என்றும்; அறிவியல் கலைச்சொல் உருவாக்க முயற்சியில் ஈடுபடுவோர்க்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டுகின்ற வகையில், "அறிவியல் நூற்பொருள்களைக் குறிக்கும் சொற்கள் தமிழில் அகப்படா என்போர் அறிவும் முயற்சியும் சுருங்கியோரே யாவர். இரு மொழியிலும் புலமையுடையோர்கள் கூடி மடியின்றி முயன்றால் எத்தகையை பொருளுக்கும் தமிழ்ச்சொல் காண்டல் அரிதன்று" (ஆ.க., ப. 79) எனக் கூறி ஆர்வமூட்டுகின்றார்.

## நாவலர் போற்றும் நாவலர்

சிறந்த கல்வியைப் பெற்றுள்ளோர் சொல்வன்மையும் உடையவராதல் வேண்டும் என்பது இவர்தம் கருத்தாகும். நூல் கற்பிக்கும் ஆசிரியர்க்கும் அவையின் கண் சொற்பொழிவாற்று வார்க்கும் முறைமன்றத்தில் வாதுசெய்வார்க்கும் சொல்வன்மை இன்றியாதது என நாட்டார் கூறுகின்றார். செழுந்தமிழ்ச் சிந்தனை ஆற்றலும் எழுச்சிமிகு எழுத்தாற்றலும், இனிய எளிய நடையில் எடுத்தியம்பும் சொல்லாற்றலும் நிரம்பிய நாட்டார் பெருமான் மற்றொரு சொல்லின் செல்வரைச் சுட்டிக்காட்டிப் பாராட்டுகின்றார். நாட்டாரின் பாராட்டுக்குரியவராகத் திகழ்பவர் திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் திரு. ஞானியார் மடாலயத்தில் அருட்குரவராக எழுந்தருளிய சிவத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகளாவார். இவர்தம் சொல்வன்மையைப் பற்றிக் கூறும்போது, "உலகிலே சொற்பொழிவு செய்வார் பற்பலர். ஆனால் சிவத்திரு ஞானியாரடிகளைப் போல் ஐந்துமணி ஆறுமணி

என்னும் கால அளவு நிலைபெயராதிருந்து கேட்போர் சிந்தையும் யாதொன்றிற் செல்லாது சொன்மழை பொழிவாரை இன்றி னூங்கோ கேளலம்" (ஆ.க., ப. *130 – 131*) என உளம்நெகிழ்ந்து உரையாற்றியுள்ளார்.

## மெய்சிலிர்க்க வைக்கும் உரை

தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தி, தமிழ்த்தாயின் நிலையை எண்ணி உருகும் தமிழ்த்தாயின் தவப்புதல்வனாக விளங்குகின்றார் நாட்டார் பெருமான். இவர் தமிழ்த்தாயின் நிலையைத் தமது உள்ளக்குறையாக வைத்து, கேட்போர் உள்ளம் உருகும் வண்ணம் மெய்சிலிர்க்க வைக்கும் மேன்மையில் உரையாற்றியுள்ளார் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு:

" தாய்மொழி வரலாறு இல்லை. தமிழ்ப்புலவர் வரலாறும் இல்லை. பண்டைய இலக்கியங்களைப் பற்றிய சிறந்த ஆராய்ச்சி உரைகளும் இல்லை. கம்பராமாயணம் என்பது காப்பிய வரசாகத் திகழ்வது.... பெரியபுராணமும் ஆராய்ச்சிக்கு நிலைக்களனாக வுள்ளதே. கலித்தொகை முதலிய செய்யுட்களின் அழகுகளையும் பலபடியாக ஆராய்ந்து வெளியிடுதல் வேண்டும்".

## சொல்லின் செல்வர்

சொல்லின் செல்வராய் நாடு போற்றும் நாவலராகத் திகழ்ந்துள்ளார் என்பதற்கு இவர் ஆற்றிய உரைகளே சான்று பகரும். துறையூர் தமிழ்ப்புலவர் மாநாட்டு வரவேற்புரையில், "தமிழ்ப் புலவரென்பார் தமிழகத்திலே ஓர் குறுகிய கூட்டத்தின ரல்லர். விரிந்த சிந்தையுடைய பெருந்தக்கோர்கள் அன்னரேயாவர். தமிழ்ப் புலவரின்றித் தமிழகம் என்பது யாண்டுளது? 'யாம் தமிழரேம்" எமது பீடுடைத் தமிழகம், எம் வீறுடை முன்னோர் என்று கூறிக் கொள்வதெல்லாம் தமிழ்ப் புலவர்களால் வந்த பேறல் லவோ" (ப. 87) என்பது இவர்தம் சொற்பெருக்காற்றின் சிறு கூறாகும்.

## சோகத்தில் தமிழின் சுகம் காட்டும் வித்தகர்

எண்வகைச் சுவைகளையும் எடுத்தியம்புவதில் ஈடு இணையற்றவர் நாட்டார் என்பதற்கு இவர் வழங்கிய வீரச்சுவை, அவலச்சுவை, இன்பச்சுவை பற்றிய உரைகளே சான்றாகும். சோகச் சுவையில் தமிழின் சுகம் காட்டும் வித்தகர் என்பதற்குப் பின்வரும் சான்று பகரும். சீவகனின் மனைவி விசயை மயிற் பொறியில் ஊர்ந்து நகரின் புறத்தேயுள்ள புறங்காட்டிலே நள்ளிருளில் புதல்வனை ஈன்று அவனைப் பார்த்துப் பின்வருமாறு புலம்புகின்றார்.

> ''வெவ்வாய் ஓரிமுழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
> ஒவ்வாச் சுடுகாட்டு உயராங்கின் நிழல்போல் நுடங்கிப்போட
> எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகைகுழறிப் பாராட்ட
> இவ்வாறாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க்கியல்
> வேந்தே'' *(ப. 210)*

என்னும் சூழ்நிலைக்குப் பின்புலம் அமைந்துள்ள நாட்டாரின் உரை சோகத்தில் தமிழின் சுகம் காட்டும் வித்தகர் என்பதையே காட்டுகிறது.

நாட்டார் ஆற்றிய உரைகள் இவர்தம் சொல்லாற்றலுக்கும் பல்துறைப் புலமைக்கும் சான்றுகளாகும். சிந்தனையாற்றலும் எழுத்தாற்றலும் எடுத்தியம்பும் சொல்லாற்றலும் கைவரப் பெற்ற முத்தமிழ் வித்தகர் என்பதற்கும் இவர் ஆற்றிய உரைகள் சான்று பகரும். இவர் ஆற்றிய உரைகள் ஒவ்வொன்றும் ஆய்வுரைகள் மட்டுமல்ல, உரைநடைப் பாக்கள் எனலாம். சாதாரணப் பாக்கள் சங்கத் தமிழாம் சந்தத் தமிழ்ப்பாக்கள். இவர் நாவலர் மட்டும் அல்ல பாவலர் என்பதற்கும் இவர் ஆற்றிய உரைகளே சான்றுகளாக விளங்குகின்றன. இத்தனைக்கும் மேலாக, தமிழின் திருவுருவாய், வரம்பற்ற தமிழ்ப் பற்றுடையவராய் விளங்கியதோடு நடமாடும்

தமிழ்ப் பல்கலைக்கழகமாய் விளங்கியவர் நாவலர் ந.மு.வேங்கட சாமி நாட்டார் என்பதற்கு இவர் மேடை மற்றும் வானொலி ஆகிய இருநிலைகளிலும் ஆற்றிய உரையே நனிமிகு சான்றுகளாம்.

# நாட்டாரின் சிலப்பதிகார உரைத்திறன்

பேரா. சு. உலகநாதன்
தஞ்சாவூர்

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய 'சிலப்பதிகாரம்' இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது. இரட்டைக் காப்பியத்தில் ஒன்று, குடிமக்கள் காப்பியம், கண்ணகி காப்பியம், சிலம்புக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், மூவேந்தர் காப்பியம், நாடகக் காப்பியம் என்று பலவாறு போற்றப்படுகின்ற இந்நூலிற்குத் தாமே கற்ற ஆசான் ஆகிய நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரை யாத்துள்ளார்கள். இக்கட்டுரை, நாட்டார் ஐயாவின் சிலப்பதிகார உரைத்திறனை, உரையின் தோற்றம், உரையாசிரியர்கள், உரையின் தேவை, உரையின் போக்கு, அரும்பத உரை, அடியார்க்கு நல்லார் உரை, அவரின் பன்னூற் புலமை, இலக்கண விளக்கம், பொருள் கொள்ளும் முறை, ஆய்வாளர்களுக்கான வழிகாட்டி போன்ற தலைப்புகளில் ஆய்வு செய்கிறது.

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் துறவியோ, இல்லத்தாராய் இருப்பாரோ என்று வியக்கும் அளவிற்கு இல்லறம்,

ஊடல், ஆடல், இசை நுணுக்கம், அரங்கின் அமைப்பு போன்றவற்றை விளக்குவதில் தனி முத்திரையைப் பதித்துத் திகழ்கின்றார் என்பதை உரையாசிரியர்கள் துணைகொண்டு நாம் அறிய முடிகிறது. மூல நூல்களில் காட்டப் பெற்றுள்ள சொற்சுவை, பொருட்சுவை, இலக்கண விளக்கம் ஆகியவை "சாந்தின் மீமிசைத் தொடுத்த தீந்தேனாக இருக்கவும்" அதனை வேடன் எவ்வருத்தமும் பாராது எடுத்துத் தான் சுவைப்பதோடு மட்டுமல்லாமல், இடையூறு ஒன்றுமின்றி, இல்லிருப்போரும் உண்ணும்வண்ணம் தருமாறு போல உரையாசிரியர்கள் தாம் கண்ட கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றார்.

### உரையின் தோற்றம்

உரைநடையின் தோற்றம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பேயிருந்து வந்துள்ளது. இன்று பல்வேறு மாற்றங்களை அடைந்து வளர்ச்சி அடைந்துள்ளது. ஈண்டு தொல்காப்பியர் சுட்டும் உரை வகையைக் காண்போம்.

''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலொ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்''

(தொல். செய்யுளியல், 79)

என்பதாலும்,

''பாட்டிடை வைத்த குறிப்பி னாலும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று
உரைநடை வகையே நான்கென மொழிப''

(மேலது. 172)

என்பதாலும்,

> **"சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற**
> **இன்றிய மையாது இயைபவை எல்லாம்**
> **ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே"**
>
> (தொல். மரபியல், 102)

என்பதாலும் உரைநடையின் இலக்கணத்தையும் உரைநடையின் வகைகளையும் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது.

**உரையாசிரியர்கள்**

உரைநடையின் தோற்றத்தினை டாக்டர் மு.வ. அவர்கள் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலில் வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார். "களவியல் உரை, உரைநடையாக இல்லாமல் செய்யுள் நடைபோன்றே உள்ளது (ப. 193)" என்பர். "களவியல் நூலுக்கு நக்கீரர் என்னும் உரையாசிரியர் எழுதிய உரையே பழமையானது (ப.193)" என்பர். இதனையடுத்துத் தொல்காப்பிய உரையாசிரியர் என்று போற்றப்படும் இளம்பூரணர் உரையும், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் போன்ற பல உரையாசிரியர்கள் எழுதிய உரைகளும் உள்ளன. "முன்னமே இருந்த உயர்ந்த இலக்கியங்கள் உரையாசிரியர்களால் நுட்பமான உரைகளும், நயமான விளக்கங்களும் பெற்றுச் சிறப்படைந்தன" (ப. 193) என்பர் மு. வரதராசனார். இவர் கூற்றுக்கேற்பச் சிலப்பதி காரம் உரையாசிரியர்களால் பட்டை தீட்டப்பெற்று, மாற்றுக் குறையாத தங்கத்தில் பதிக்கப்பெற்ற வைரமாக விளங்குகின்றது. இதற்கு அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார், நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், டாக்டர் இரா.க.சண்முகம் செட்டியார், பொ.வே. சோமசுந்தரனார், புலியூர்க் கேசிகன் போன்றவர்களால் உரைகள் எழுதப்பெற்றுள்ளன.

மேற்கண்ட உரையாசிரியர்களில் சிலப்பதிகாரம் முழு மைக்கும் முதலில் உரை யாத்த பெருமை நாட்டார் ஐயாவையே

சாரும். “சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீடாக வந்த, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைப் பதிப்பே அனைத்துக் காதைகளுக்கும் உரிய யாப்பு வகைகளைச் சுட்டிய முதற்பதிப்பு” என்று டாக்டர் வ.சுப மாணிக்கம் அவர்கள் தமது ‘சிலப்பதிகார யாப்பமைதி’ (ப. 2) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளது இதனை மெய்ப்பிக்கும்.

## உரையின் தேவை

அரும்பத உரையும், அடியார்க்குநல்லார் உரையும், டாக்டர் சாமிநாதையர் பதிப்பும் இருக்க இவ்வுரை தேவைதானா? என்ற வினா எழுவது இயற்கையே. இதற்கு விடைபகரும் முகமாக, “பாகனேரியிலுள்ள தனவணிகர் குலமணியும், அளவு கடந்த தமிழ்ப் பற்றுடையாருமாகிய திருவாளர் வெ.பெரி.பழ.மு. காசி விசுவ நாதன் செட்டியார் அவர்கள் சிலப்பதிகாரத்தில் பன்னிரண்டு உறுப்புகட்கு அடியார்க்குநல்லார் உரை இன்மையானும், அரும் பதவுரை கொண்டு நூற்பொருளை முற்றவுணர்தல் கற்பார் யாவர்க்கும் எளிதன்றாகலானும் நூன்முழுதுக்கும் ஒரு தன்மை யாகத் தெளிந்த முறையில் ஓர் உரையெழுதுவித்து வெளியிடுதல் நலமெனக் கருதி, உரையெழுதும் அப்பணியினை எனக்கு அளித்தனர்” என்று தம்முடைய முகவுரையில் ஐயா அவர்கள் கூறியுள்ளது நோக்கற்பாலதாம்.

ஐயா அவர்களால் எழுதப்பெற்ற இச்சிலப்பதிகார உரை நூல் முகவுரை, இளங்கோவடிகள் வரலாறு, அரும்பத உரை யாசிரியர் வரலாறு, அடியார்க்கு நல்லார் வரலாறு, சிலப்பதிகாரப் பதிகம், உரைபெறு கட்டுரை, புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம், நூற்கட்டுரை, அருஞ்சொல் முதலியவற்றின் அகரவரிசை என்ற முறையில் அமைந்துள்ளது.

## உரையின் போக்கு

முகவுரையா அல்லது ஆய்வடங்கலா என்னும் வகையில், நாட்டார் ஐயா அவர்களின் முகவுரை விளங்குகிறது. கண்ணற்ற

ஒருவன் கோலின் துணையோடு எவ்வித பயமுமின்றி நடத்தல் போலவும், நடந்தறியாக் குழந்தை பெரியவர்கள் கையைப் பற்றி ஓடிவருதல் போன்றும், ஐயாவின் முகவுரையை ஒருமுறை நோக்கினாலேயே எம் போன்றோர்கள் செம்மையுற முடியும். “இவ்வுரையின் கண் மூலத்தின் இன்ன பகுதிக்கு இதுபொருள் என்று தேடி இடர்ப்படாவண்ணம், சொற்களைக் கிடந்தவாறே கொண்டு கூட்டின்றித் தனி மொழியாகவும், தொடர்மொழியாகவும், ஏற்ற பெற்றி எடுத்தமைத்துப் பொருள் கூறப்பெற்றுள்ளது; அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் வேறுபடக் கொண்ட பாடங்களையும், பொருள்களையும் சீர்தூக்கிப் பார்த்து ஏற்பன கொள்ளப்பெற்றுள; ஒரோவழி அவ்வேறுபாடுகளையும் உரையின் சிறந்த பகுதிகளையும் எடுத்துக்காட்டுதலும், பொருந்தா தனவெனத் தோன்றியவைகளைக் காரணங்காட்டி மறுத்தலும் செய்யப்பெற்றுள; அவ்வுரைகளால் விளக்கம் பெறாதன விளக்க வும் பெற்றுள. இன்றியமையாத இலக்கணங்களும், மேற்கோள் களும் ஆண்டாண்டுக் காட்டபெற்றுள; இவ்வுரையின் போக்கினை ஒருவாறு தெரிவித்தல் கருதி இக்குறிப்புகள் ஈண்டுத்தரலாயின” என்ற ஐயா அவர்களின் முகவுரை உரை செல்லும் பாங்கினைச் சுட்டுகின்றது.

**உரைநயம்**

இவரது உரையில் இளங்கோவடிகளின் தனிச்சிறப்பை முப்பதிற்கு மேற்பட்ட இடத்தில் சுட்டிச் சிறப்பிக்கின்றார். வினா விடை முறையிலும் ஒப்பீட்டு முறையிலும் அந்த நயங்களைக் கண்டு இவை மகிழத்தக்கன, இவை இன்புறத்தக்கன, இவை காணத்தக்கன என்பன போன்ற சொல்லாட்சியின் மூலம் சுற்றுலாப் பயணிகள் காட்சிகளைக் கண்டு இன்புறுவதற்கு வழிகாட்டிகள் உதவுவது போன்று இவரது உரைநயம் திகழ்கிறது.

புகார்க் காண்டம், வேனிற் காதையில் அகநிலை மருதம், புறநிலை மருதம், அருகியின் மருதம், பெருகியின் மருதம் என்ற நான்கினைப் பற்றி விளக்கம் கூறும் பகுதியின் அடிக்குறிப்பில்

இவை நான்கும் பழைய பதிப்புகளில் பிழைபட்டிருந்தவை. ஓர் அறிஞரால் திருத்தப்பட்டன (தமிழ்ப்பொழில்,துணர் 17, ப. 70 காண்க) சிறுபான்மை ஈண்டு எம்மாலும் திருத்தப்பட்டன என்று சுட்டித் தாம் செய்த திருத்தத்திற்குக் காரணம் உரைக்கின்றார். மதுரைக்காண்டம் வஞ்சினமாலையில் இறுதியாக உள்ள 'பொற்பு' என்று தொடங்கும் "வெண்பா இளம்புலவர் யாராலோ எழுதிச் சேர்க்கப்பட்டது. பொருட் சிறப்பில்லாதது" என்று எடுத்துரைக் கின்றார். மதுரைக் காண்டம் அழற்படு காதையில் சில பகுதிகளுக்கு உரை வரையவில்லை. இதனை நாட்டார் அவர்கள் [ ] இக்குறியீட்டி னுட்பட்ட ஐந்து பகுதிகள் கந்தியார் போலும் ஒருவரால் பாடி இடைமடுக்கப்பட்டன ஆகலின், அவற்றிற்கு உரை எழுதப்பட வில்லை" என்று கூறியுள்ளார். "குறியீட்டுக்குட்பட்ட பகுதிகளில் ஒருசொற்கேனும் அவரெழுதிய அரும்பத உரையாசிரியர் பொருள் காணப்படாமையானும் அவை இளங்கோவடிகள் இயற்றியன அல்ல என்பதும், பின்னுள்ள யாரோ ஒருவரால் இயற்றப் புகுத்தப் பட்டுள்ளன ஆகுமென்பதும் நன்கு துணியப்படும்" என்று இயம்பு தல் வாயிலாக இவரது கண்டு துணியும் ஆற்றலை அறியலாம்.

அரும்பத உரையாசிரியர் கருத்துக்களை 53 இடங்களுக் குக் குறையாமல் எடுத்தாண்டும், ஒரு சில இடங்களில் மறுத்தும், உரை கண்டுள்ள ஐயா அவர்கள் அடியார்க்கு நல்லார் கருத்துக் களை 51 இடங்களுக்குக் குறையாமல் எடுத்தாண்டும் பல இடங் களில் அவர் உரையை மறுத்தும் தமது உரையைச் செம்மையாக்கி உள்ளார். 'அரும்பத உரையாசிரியர்' கருத்தை மறுத்தல் குறைவாகவும், 'அடியார்க்கு நல்லார்' கருத்துக்களை மறுத்தல் அதிகமாகவும் இவர் உரையில் காணப்படுகின்றன.

ஊர்காண் காதையில், "வேற்றுப்புலம் படர ஓசனிக்கின்ற" என்ற வரிகளுக்கு விளக்கம் தருமிடத்து, "ஓரோர் தேயங்கட்கு ஓரொரு காலம் மாறி நிகழ்தலின் வேற்றுப் புலம் படர வென்றார் என்னும் அடியார்க்குநல்லார் உரை தமிழ்கூறு நல்லுலகத்திற்குப்

பொருந்துவதன்று'' என்று மறுத்து, நாட்டார் ஐயா அவ்விடத் திருந்தும், அகலவென்பார் "வேற்றுப் புலம் படர" என்று விளக்கம் தருகிறார். இதுவே இயைபுடையதாக உள்ளது.

பல இடங்களில் பாட பேதங்களைச் சுட்டிப் பொருள் கொள்ளும் முறைகளையும் விவரிக்கின்றார். மதுரைக் காண்டம், ஊர்காண் காதையில் பொருள்கொள்ளும் முறையைச் சுட்டுவதைச் சான்றாகக் காண்போம்.

''காவியங் கண்ணார் கட்டுரை எட்டுக்கும்
நாவொடு நவிலா நகைபடு கிளவியும்''
(மதுரை. ஊர்காண். *138 – 139*)

என்ற வரிகளுக்கு உரை கூறப்புகுந்த ஐயா அவர்கள், எட்டு என்பதற்கு எண்வகை இடம் எனப் பொருள் கூறுகிறார். 'கட்டுரை எட்டுக்கும்' என்ற தொடரினைக் 'கட்டுரை எடுக்குநர்' எனப்பாடங் கொண்டு 'வார்த்தை சொல்லப் புகுகின்றவர்' எனப் பொருள் கூறும் அரும்பத உரைகாரரை மறுக்கும் முகமாக 'காவியங்கண்ணார்' உரைத்த கட்டுரையாகிய கிளவியும் எனக் கூட்டுக' என்று கூறி மறுக்கிறார். இந்த உரையே நயமாகவும் தோன்றுகிறது.

**பன்னூல் புலமை**

சங்க இலக்கியம், இலக்கணம், நிகண்டு போன்றவற்றிலும், இசை, கூத்து பற்றிய நூல் புலமையும் பெற்றுள்ளார். இதனை உரை எழுதும்போது தக்க இடங்களில் இயைந்த பொருள்களை நுட்பமாகவும், நயமாகவும் "குன்றிலிட்ட விளக்காக" விளக்கிச் செல்வது கொண்டு அறிய முடிகிறது. மேலும், சிலப்பதிகாரத்தின் ஒரு காதையில் உள்ள செய்திகளைப் பிற காதைகளுக்கு உரையெழுதும்போது மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். இவர்தம் சிலப்பதிகார உரையில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டியுள்ள நூற்கள் பட்டியல் வருமாறு:

**இலக்கண நூல்கள்**

தொல்காப்பியம், பேராசிரியர் உரை, புறப்பொருள் வெண்பா மாலை, கல்லாடம்.

**சங்க இலக்கியங்கள்**

மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை, நெடுநல்வாடை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை, பதிற்றுப் பத்து, பரிபாடல்.

**நீதிநூல்கள்**

திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, நான்மணிக் கடிகை, திரிகடுகம், மூதுரை, அறநெறிச்சாரம்.

**அகராதி நூல்கள்**

பிங்கலம், திவாரகம், நிகண்டு.

**காப்பியங்கள்**

மணிமேகலை, பெருங்கதை, சீவகசிந்தாமணி, வளையாபதி, சூளாமணி.

**இதிகாசம்**

கம்பராமாயணம் (பால காண்டம், சுந்தர காண்டம், அங்கதன் தூது படலம்), வில்லிபாரதம்.

**புராணங்கள்**

பெரியபுராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி திருவிளையாடற் புராணம்.

**பக்தி இலக்கியம்**

திருவாசகம், திருஞானசம்பந்தர் தேவாரம், திருக் கோவையார்.

**பிற நூல்கள்**

இறையனார் களவியல் அகம், கனா நூல், திருவள்ளுவ மாலை, கலிங்கத்துப் பரணி, ஆத்திரையன் பொதுப் பாயிரம், தமிழ்ப் பொழில் முதலியன.

மேற்கண்ட நூல்களிலிருந்து அரிய கருத்துக்களை இயைபு நோக்கி ஒப்பிட்டுச் செல்லுகின்ற பாங்கிலிருந்து பானைச் சோற்றுக்குப் பருக்கைச் சோறு பதம் என்பதற்கேற்ப நாட்டார் ஐயாவின் பன்னூல் புலமைக்கு ஒரு சான்று ஈண்டு சுட்டப்பெறு கிறது. வஞ்சிக் காண்டம் குன்றக்குரவைக் காதையில் உரைப் பாட்டுமடைப் பகுதியில் பாடல் 8இல்,

"பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்" என்னும் இவ்வரியிலுள்ள 'பிணிமுகம்' என்பதற்குப் பின்வருமாறு விளக்கம் அளித்துள்ளார். பிணிமுகம் – மயில் என்பது அரும்பத வுரை; "பிணிமுக மஞ்ஞை செருமுகத் தேந்திய" என்புழியும் பிணிமுகம் இப்பொருட்டாதல் காண்க. புறநானூற்றுரையாசிரிய ரும் இவ்வாறு கூறுவர். "சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கு" என்புழிப் பரிமேலழகரும், "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" என்புழி நச்சினார்க்கினியரும் பிணிமுகம் முருகக் கடவுள் ஊரும் யானை என்பர். முருகற்கு யானையும் ஊர்தியாதல் பரிபாடல், பதிற்றுப்பத்து, முதலியவற்றான் அறியப்படும்.

**இலக்கண விளக்கம்**

புகார்க்காண்டத்திலும், மதுரைக்காண்டத்திலும், இலக் கண விளக்கங்களை மொழிந்தளவிற்கு வஞ்சிக் காண்டத்தில் இயம்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், தலைவன்

கூற்று, தோழி கூற்று, கண்ணகி கூற்று, இளங்கோ கூற்று, கவிக் கூற்று என்ற அடிப்படையிலும் தமது கருத்தை முன்வைக்கின்றார். முரண் அணி, உருவக அணி, ஐய உவமை,நிரனிறை, தற்குறிப் பேற்றம், உண்மை உவமை முதலிய அணிகளைச் சுட்டுகின்றார்.

உண்மை உவமை என்பது உண்மையைக் கூறி மறுத்துப் பொருளினையே கூறி முடிப்பது. மதுரைக்காண்டம் வழக்குரை காதையில் கண்ணகியின் தோற்றத்தினை வாயிலோன் உரைக்கின்றபோது தெய்வங்களோடு ஒப்பிட்டு மறுத்து உரைப் பதன் வாயிலாக இளங்கோவடிகள் உண்மை உவமையை விளம்பு கிறார் என்று “கொற்றவை போல்வாளாயினும் அவர்களல்லள் என்றமையான் இஃது உண்மை உவமை அணியாகும்” என்பர்.

## ஆய்வாளர்களுக்கு வழிகாட்டி

மேற்கண்ட கருத்துக்களை நோக்கும்பொழுது நாட்டார் ஐயாவின் இலக்கணப் புலமையும், இலக்கிய வளமையையும், ஒப்பிடும் முறையையும் நாம் அறிய முடிகிறது. ஆய்வாளர்கள் எவ்வாறு ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டிய இடங்கள், கற்பவர்கள் எவ்வாறு கற்றுத் தேர்ச்சி பெறவேண்டும் என்பதைத் தாமே கற்ற ஆசான் நேரே நின்று பேசுவதுபோலக் கருத்துக்களை விளம்பியுள்ளார்.

இதுகாறும் கூறியவற்றால் ஐயா அவர்களின் செம்மாந்த இலக்கணப் புலமையும், சீர்சான்ற இலக்கிய அறிவும், பலகாலம் இலக்கண இலக்கியங்களுக்கிடையே தோய்ந்து கிடந்த பான்மை யும், பல்கலை உணர்விற்பனத் திறனும், தமிழ் மொழியிடமும், தமிழ் மாந்தரிடமும் கொண்டுள்ள பற்றுள்ளமும் தெற்றென வெளிப்படக் காணலாம். இவ்வாய்வு ஐயா அவர்களின் உரை காணும் திறனை ஒரு பருந்துப் பார்வையில் கண்டறியப்பட்டதே அன்றி அவரின் ஆற்றலில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் கூறியதில்லை என உணர்க!

## குறிப்பு

முதற்பதிப்பு: ஆகஸ்டு 1942, இரண்டாம் பதிப்பு: மார்ச்சு 1947, மூன்றாம் பதிப்பு: மார்ச்சு 1950, நான்காம் பதிப்பு: ஆகஸ்டு 1953, ஐந்தாம் பதிப்பு: மே என்ற குறிப்போடு நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இயற்றிய உரை, பாகனேரி வெ.பெரி.பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்களால் வெளியிடப்பட்டது.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் நூற்பதிப்பில் காணப்படுகின்ற நாட்டார் ஐயா முகவுரைக்கும், முதற்பதிப்பு 1942 &கழகம் முதற் பதிப்பு மார்ச்சு 1992 என்ற குறிப்போடு நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இயற்றிய உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் என்ற நூற்பதிப்பில் காணப்படும் நாட்டார் ஐயாவின் முடிவுரைக்கும் சில வேறுபாடுகள் உள்ள பத்தி மாற்றமும் சில கருத்துக்கள் இணைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## துணைநூற் பட்டியல்

1. தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை – செய்யு ளியல் & மரபியல், பாவலரேறு பேராசிரியர் பாலசுந்தரம் (உரை), தாமரை வெளியீட்டகம், தஞ்சை, சூன் 1991.

2. தண்டியலங்காரம் – சுப்பிரமணிய தேசிகர் உரையுடன், கழக வெளியீடு, சென்னை, மு.ப. பிப்ரவரி 1953, நான்காம் பதிப்பு ஆகஸ்டு 1988.

3. சிலப்பதிகாரம், நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் இயற்றிய உரையும், பாகனேரி வெ.பெரி.பழ.மு. காசிவிசுவநாதன் செட்டியார் வெளியீடு, மு.ப.1942, ஐ.ப.1956; கழகம் முதற்பதிப்பு 1992.

4. சிலப்பதிகார யாப்பமைதி, டாக்டர் வ.சுப. மாணிக்கம்.

5. தமிழ் இலக்கிய வரலாறு, டாக்டர் மு.வரதராசன், பாவை பிரிண்டர்ஸ், சென்னை, மு.ப. 1972, பதினைந்தாம் பதிப்பு *2001.*

# நாட்டாரின் வரலாற்று நூல்கள்

முனைவர் த. கலா ஸ்ரீதர்
தஞ்சாவூர்

ஒரு நூலை வடிவமைக்க வேண்டுமாயின் அதற்குத் தேவையான நம்பத்தகுந்த ஆதாரங்களைக் கொண்டே நூல் எழுதவேண்டும். இதன் அடிப்படையில் வேங்கடசாமி நாட்டார் அவர்கள் இலக்கிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டதுடன் வரலாற்றாய்வுகளையும் மேற்கொண்டுள்ளார் என்பதற்கு ஆதாரமாக, சோழர் சரித்திரம், கண்ணகியின் கற்பு வரலாறு, கள்ளர் சரித்திரம் போன்ற படைப்புகளின் வழி உணரப்படுகிறது. பொதுவாக வரலாற்றாய்வுகளை மேற்கொள்ளும்போது முதன்மை ஆதாரங்களாக, கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்கள், அகழாய்வுச் சின்னங்கள் போன்றவற்றுடன் இலக்கிய ஆதாரங்களையும் கொண்டு மேற்கொள்ளப்பெறும் ஆய்வுகளே முழுமையானதாக அமையக்கூடும். அவர் எழுதிய அனைத்து நூல்களையும் ஆராய்வதற்கு நேரமின்மையாலும் குறுகிய காலத்திலே கட்டுரை வழங்க வேண்டிய சூழலாலும் நாட்டாரவர்களின் வரலாற்று நூல்களில் சோழர் சரித்திரம் எனும் நூல் மற்ற வரலாற்று நூல்களில் இருந்து எவ்விதம் மாறுபடுகிறது

அல்லது எவ்வாறு ஒன்றுபடுகிறது என்ற மேற்படி செய்திகளை பி.டி. சீனிவாச ஐயங்கார் அவர்களின் தமிழர் வரலாறு எனும் நூலுடன் ஒப்பிட்டு நோக்கப்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சோழர் சரித்திரம்**

சோழர் சரித்திரத்தில் நாட்டாரவர்கள் முழுமையான இலக்கிய ஆதாரங்களைக் கொண்டு தூய தமிழில் நூலை முழுமையாக்கியுள்ளார். முற்கால சோழர்கள் ஒருவரை மட்டும் கொண்டு நூலை எழுதவில்லை. தமிழகத்தின் பழமை, சோழ நாட்டின் பழமை மனுவில் தொடங்கி, கோச்செங்கட்சோழர் வரை இலக்கியத் தரவுகளைக் கொண்டு அலசியுள்ளார். அதுமட்டுமின்றி, அரசியல், கைத்தொழில், வணிகம், கல்வி, சமயம், இவைகளையும் சிறப்பான முறையில் சொல்லியுள்ளார். இவர் சொல்லும் செய்திகள் அனைத்திலும் இலக்கிய நூல்களையே பயன்படுத்தியுள்ளார். தெலுங்குக் கல்வெட்டுகளில் செய்திகள் இருந்துள்ளன. ஆனால் அவற்றைப் பற்றி நாட்டார் எந்தத் தகவலும் தமது நூலில் எடுத்தாளவில்லை. போர்முறை, அரசியல், நாட்டின் வளமை, நிர்வாகம், கல்வி, வணிகம், பொருளாதாரம் அனைத்திலும் இலக்கியக் கோட்பாடுகளே நிறைந்துள்ளன. இம்மன்னர்கள் காலத்தில் அரசியல் முதலியனவும் தமிழிலே நடைபெற்றுள்ளன என்பதை இவர் சுட்டிக்காட்டுவது தமிழ்மீது இவருக்கு இருந்த அளவிடற்கரிய பற்றைப் புலப்படுத்துகிறது.

**பி.டி. சீனிவாச அய்யங்காரின் தமிழர் வரலாறு**

பி.டி சீனிவாச அய்யங்கார் தமிழர் வரலாறு எனும் நூலில் முற்கால சோழர்களில் சிறந்தவராகத் திகழ்ந்த கரிகாற் சோழனை மட்டும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர் இலக்கியங்களுடன் கல்வெட்டுச் செய்திகளையும் எடுத்தாண்டுள்ளார்.

கரிகாலனும் காவிரியும் என்னும் தலைப்பில் கரிகாலன் காவிரிக்குத் செய்தவைகளைச் செப்பேட்டு ஆவணங்கள் வழியாக

பி.டி சீனிவாச அய்யங்கார் குறிப்பிடுகின்றார். இத்தெலுங்குச் செப்பேட்டு ஆவணங்கள் 'கவேரன் மகளின் (கா – ஏரி எனும் ஆறு) 'கரை கடந்து ஓடும் வெள்ளப் பெருக்கைத் தடுத்து நிறுத்திய கரிகாலன் பெருஞ்செயலைக் குறிப்பிடுகின்றன (IP - India, Vol. XI, page 339). காவிரி ஆற்றுக்குக் கரைகட்டினான் கரிகாலன் எனக் கூறுதல் முதலாம் ராஜேந்திரசோழ தேவனின் ஆறாம் ஆண்டுத் திருவாலங்காட்டுச் செப்பேட்டுத் தொடர்களில் இத்தொடர்ப் பொருள் விளக்கப்படுகிறது (S.I.I. III : II page 386). காவிரி ஆற்றின் கடைமுகப் பகுதி பண்டை நாட்களில் புனல் நாடு அதாவது வெள்ளத்தின் நாடு எனப்பெயர் பெறுமளவு காவிரியாறு நாடு முழுவதையும் ஆண்டுதோறும் தவறாமல் வெள்ளக்காடாக்கி வந்துள்ளது. உயர்ந்த வெள்ளத்தடுப்புக் கரைகளைக் கட்டியதன் மூலம் ஆண்டுதோறும் தவறாமல் நிகழும் இயற்கை விளைவிக்கும் அழிவினின்று நாட்டைத் தெளிவுறக் காத்தான் எனக் கூறப்படுகிறது.

குளம் தொட்டு வளம்பெருக்கினான் (பட்டினப்பாலை, 284)

என்று மட்டுமே கூறும் பட்டினப்பாலையில் கரிகாலனின் இப்பெரும்பணி சிறப்பிட்டுக் கூறப்படவில்லை. இவைமட்டுமின்றி கரிகாலன் ஆணைப்படி தம் கண்களை அவனுடைய தாமரைத் தாள்மீது வைக்கும் திருலோசனனாலும் மற்றும் பிற அரசர் களாலும் முடிக்கப்பட்டதாக (E.P. Inl. Vol. XI, page 340) கூறப்படுகிறது. அய்யங்காரின் நூலில் இலக்கியச் செய்திகளுக்கு இணையாக கல்வெட்டு, செப்பேட்டுச் செய்திகளை மேற்கோள் காட்டி நூலைச் சிறப்பித்துள்ளார். அவரது நூல் முழுவதும் இலக்கியங்கள் கையாளப்பட்டிருந்தாலும், கல்வெட்டு, செப்பேட்டுச் செய்திகளுக்கென்று தனி இடம் ஒதுக்கி அதில் கல்வெட்டு, இலக்கியம் இரண்டையும் ஒப்பிட்டு ஆதாரங்களைத் தந்துள்ளார். கரிகாலனின் சிறப்பைப் பட்டினப்பாலை விளக்க மாகக் கூறாதவைகளையும் கல்வெட்டுச் செய்தி கூறுவதாக விளக்கம் தருகிறார்.

## வேங்கடசாமி நாட்டாரால் கூறப்படும் கரிகாலன்

கரிகாலன் என்றாலே கோயில்வெண்ணிப் போர் கரிகாலன் கட்டிய கல்லணை தான் நினைவிற்கு வரும். போர் முறையால் சிறந்து விளங்கிய கரிகாலன், தென்னவன் ஒளியர், அருவானர், குடவர், வடவர், பொதுவர் இருங்கோவேள் என்பவர்கள் இவனால் வெல்லப்பட்டவர்கள். வடநாடு சென்று போரிடச் சென்றபோது அங்குள்ள மன்னர்கள் இவனுக்குப் பல பரிசுகளை வழங்கி நட்புறவு கொண்டனர். இமயத்தில் புலிக்கொடி நாட்டினான். நீதியிலும் வீரத்திலும் சிறந்து விளங்கிய இவன் வேளாண்மை யிலும் சிறந்து விளங்கினான் என்பதைத் தெளிவுபடுத்த "காடு கொன்று நாடாக்கிக், குளந்தொட்டு வளம்பெருக்கி" எனப் பட்டினப் பாலை கூறுகிறது. தெலுங்கு நாட்டு மன்னன் முக்கண்ணன் காவிரிக்கு அணைகட்ட வராமல் செறுக்குற்றுப் பேசியதால் அவனுடன் போரிட்டு ஒரு கண்ணைச் செயலிழக்கச் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. போரில் தோல்வியுற்ற மன்னர்களைக் கொண்டு காவிரிக்கு அணைகட்டியதாக நாட்டாரவர்கள் தம் நூலில் கூறியுள்ளார்.

> ''சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
> பொன்னிக் கரைகண்ட பூபதியும்''

என விக்கிரம சோழனுலாவில் கரிகாலனின் சிறப்பு பேசப்படுகிறது.

## நாட்டார் - அய்யங்கார் ஒப்பீடு

நாட்டாரவர்கள் முற்காலச் சோழர் வரலாறு முழுவதையும் தமிழிலேயே கொடுத்துள்ளார். அதில் மற்ற ஆதாரங்கள் எதுவும் பயன்படுத்தவில்லை. இலக்கியச் சான்றுகளே உள்ளன. தமிழகத் தின் பழைமை, சோழ நாட்டின் பழமை, சோழர் குடி இவற்றை விளக்கும் பாங்கு அவரால் கையாளப்பட்டு உள்ள தூய தமிழ்நடை மிகவும் வியக்கவைக்கும் வகையில் அமைந்துள்ளது. அவர் கூறும் ஒவ்வொரு செய்திகளுக்கும் நடுவில் இலக்கிய ஆதாரங்களைத்

தெளிவாகக் கொடுத்துள்ளார். அப்படி நடந்திருக்கலாம், இப்படி இருக்கலாம் என்ற கேள்விக் குறி இவர்காட்டும் மேற்கோளில் இல்லை.

அய்யங்கார் அவர்கள் வரலாறு எழுதுவதற்குத் தேவையான ஆதாரங்கள் அனைத்தையும் கையாண்டுள்ளார். கல்வெட்டுச் செய்திகளுக்கு இடையில் இலக்கியச் செய்திகளைத் தந்துள்ளார். இலக்கியச் செய்திகள் விரிவாகத் தராததைக் கரிகாலன் காடுகளை அகற்றியது, கரை தோற்றுவித்தது, நீர்ப்பாசன முறைகளை வகுத்தது, அவன் வழிவந்தவர்களாகிய தெலுங்கு பேசும் சோழ அரசைத் தோற்றுவித்தது, இவற்றைக் கி.பி. 640 சீன யாத்ரீகன் ஹுவான் ஸ்வாங் காலத்தில் இத்தெலுங்கு ஆவணங்களை நாம் கண்டெடுத்த நிலப்பகுதியில் சூ–லி–யெ என்ற பெயருடைய நாடு இருந்திருப்பது என்பதற்குத் தெளிவான சான்றாக (EP - Ind, Vol. XI) செப்பேடுகள் மாலேபாடு செப்பேடுகள் இந்தியக் கல்வெட்டுக்கள் (EP - Ind, Vol. XI, page ===) வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், பட்டினப்பாலையில் (284) குளம்தொட்டு வளம் பெருக்கினான் என்று மட்டுமே கூறப்படுகிறதே தவிர கரிகாலனின் பெரும்பணி குறிப்பிடப்படவில்லை. நாட்டார் அவர்கள் தமது நூலில் முற்காலச் சோழர்கள் முழுவதையும், சோழர் சரித்திரம் முதற்பாகம் எனும் தலைப்பில் இலக்கிய ஆதாரங்களைக் கொண்டு சிறப்பான நூலை நமக்குத் தந்துள்ளார். இதில் கல்வெட்டு மற்றும் செப்பேட்டுச் செய்திகளையும் இணைத்துத் தந்திருந்தால் இன்னும் சோழர் சரித்திரத்திற்குப் பெருமை சேர்ந்திருக்கும்.

அய்யங்கார் அவர்கள் இலக்கியம் மற்றும் வெளிநாட்டார் குறிப்பு, கல்வெட்டு, செப்பேட்டுச் செய்திகளையும் இணைத்து முற்காலச் சோழர்களில் கரிகாலனை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். மற்ற பத்து அரசர்களைக் குறிப்பிடவில்லை. தெலுங்குச் சோழ ஆவணங்களின் படி காவிரியை இரு கரைகளுக்குள்ளே அடக்கிய

தோடு கரிகாலன் காஞ்சியிலிருந்து ஆட்சி புரிந்தான் (Madras EP Report, 1900, page 17) என்றும், திருவாலங்காட்டுச் செப்பேடுகள் அவன் காஞ்சிக்குப் பொன்வேய்ந்தன் என்றும் குறிப்பிடுகின்றன. ஆனால் கரிகாலன் பொன்வேய்ந்த செய்தி மட்டுமே நமக்குக் கிடைக்கிறதே தவிர அந்தக் கோயில் விஷ்ணு கோயிலா என்பது புதிராகவே உள்ளது. இந்தச் செய்தி வளரும் வரலாற்று ஆய்வாளர் களின் கண்டுப்பிடிப்பிற்கு ஒரு புதிய செய்தியாகும்.

# நாட்டாரின் வரலாற்றுப் புலமை

முனைவர் இரா.கலியபெருமாள்
தஞ்சாவூர்

வடக்கின்கண் நெடியோன் குன்றமும், தெற்கின்கண் தொடியோன் பௌவமும், ஏனையிரு திக்குகளிலும் இருபெருங் கடல்களையும் எல்லையாகக் கொண்டிலங்கும் இத்தமிழ் கூறும் நல்லுலகில் நுண்மாண் நுழைபுலமும், பன்மாண் கலையறிவும் பெற்றுப் பல்கிச் சிறந்த சான்றோர் ஏனைப்பலர் இருந்தனர் என்பதனை எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் இறும்பூதெய்தாத தமிழரும் உண்டு கொல்! அவ்வேற்றுமையில்லா விழுத்திணைப் பிறந்த சான்றோருள் ஒருவராய்த் திகழ்ந்து பல்துறை அறிவும் பாங்குறப் பெற்றுத் தன் எண்ணம், சொல், செயல் அனைத்தையும் தாய்த்தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர்தம் மேன்மைக்குமாய்ச் செலவிட்ட தானேயாய்க் கற்று முழுதுணர்ந்த தண்டமிழாசான் பண்டித, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களின் வரலாற்றுப் புலமையினை ஒல்லும் வகையான் காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாட்டோர் வரலாற்றை நன்கனம் ஆய்ந்துரைக்க நாட்டாரின் வரலாற்றை நன்குணர்ந்த நங்கள் சான்றோர் கெழுமியுள்ள இவ்வரங்கில் நாட்டாரின் வரலாற்றுப் புலமையை நான் உணர்த் தப்புகுவது கொற்சேரியில் துன்னசி விற்றிடும் வேலையாகும். என்னுடைய நயனில் இச்செயல் நனி பேதைமைத்து! என்னே! என் இழிதகைமை இருந்தவாறு! எனினும் ஐயாவின் மீது யான் கொண்ட ஆராத் தமிழ்க் காதலால் குரைகடல் பெருமையைக் கூவல் ஆமைக் கூறத் தொடங்கியது போலவும் திங்களைக் கண்ணிலான் சிறப்புறுத்தியது போலவும் என் ஆய்வினைத் தொடங்குவன்.

எட்டுணைச் சிற்றறிவும் பற்றாத யான் ஐயா அவர்களின் பெயரைத் தானும் உரைப்பதற்குத் தகுதியுடையேன் அல்லேன் ஆகலின் அவர்களின் திருப்பெயரைச் சுட்ட நேரும் இடமெல்லாம் பெயரினை முழுதும் சுட்டாது 'ஐயா' என்றே சுட்டிச் செல்ல அறிஞர் உலகு என்னை அனுமதிக்க வேண்டுவன்.

நிற்க, ஐயா அவர்கள், பொதுவாக மொழிவரலாறு, சிறப்பாகத் தமிழ் வரலாறு, சொல்வரலாறு, புலவர்கள் வரலாறு, வேந்தர் வரலாறு, தமிழ் மக்கள் வரலாறு, ஆழ்வார் நாயன்மார் வரலாறு, நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறு, சமய வரலாறு போன்ற பல்துறை வரலாற்றறிவினைப் பெற்று குன்றிலிட்டப் பெருவிளக்காய் நின்று விளங்கிய சான்றோராவார்.

ஐயா அவர்கள் இவ்வரலாறுகளை எல்லாம் தனித்தனிக் கட்டுரைகளாயும்; சோழர் சரித்திரம், கள்ளர் சரித்திரம், வேளிர் வரலாற்று ஆராய்ச்சி, நக்கீரர், கபிலர், கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும் போன்ற நூல்கள் வடிவினவாயும் ஆக்கிப் படைத்துத் தமிழன்னைக்கு அணி சேர்த்த தலைமகன் ஆவார் என்பது ஆன்றோர் உலகம் அறிந்தனவேயாம்.

'செருநரும் விழையும் செயிர்தீர்க் காட்சிச் செம்ம'லாம் ஐயா அவர்கள் இவ்வரலாற்று முடிவுகளை ஏனோ தானோ

என்றோ, எடுத்தேன் கவிழ்த்தேன் என்றோ, யாதானுமொரு பராக்கால் கூறினாரல்லர். சங்கத்துப் பாட்டுத் தொகையுமாய் அமைந்து மிளிரும் பனுவல்களின் துணைகொண்டும், அவையிற் றுக்குப் பான்மையிற் சிறந்த உரையாத்தளித்த உரையாசிரியர் களின் உரைகளினூடே ஒளிரும் சான்றாதரவுகளின் துணை கொண்டும், வழக்குமறை நான்கிலும், உயர்ந்துலகம் ஓதும்.

வழக்கினும், மதிக்கவியின் மரபினும், நாட்டங் கொண்டும், திறம்பல் இல்லாத் தம் இலக்கண ஞானச் செருக்கோடும், திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், சேக்கிழார், திருத்தக்கதேவர் போன்ற தெய்வப்புலவர்களின் திருவாக்கினோடும், பிற்காலத் தலபுராணங்கள் யாத்தளித்த பெரும் புலவர்களின் கற்பனை, புராண, இதிகாச, வருணனைகளின் துணையோடும் ஒப்ப நோக்கி யும், உறழ்ந்து நோக்கியும், அனைவரும் ஒப்பும் வகையில் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் தந்து செல்வாராயினர்.

ஐயா அவர்களின் தனித்த ஆற்றலைப் பற்றிச் செல்லூர்க் கிழார் செ.ரெ. இராமசாமிப்பிள்ளை அவர்கள் தாமியற்றிய சிலப்பதிகார உரைப்பாயிரத்தில்,

**''ஒழுக்க உறையுள், உணர்வுப் பிறப்பிடம்,
பழுத்த புலமை, பாங்குறு பண்பினன்,
நச்சினார்க் கினியன், நற்பே ராசான்,
மெச்சிளம் பூரணன், யாவரும் ஈண்ட
ஒருருக் கொண்ட உரையா சிரியன்''** என்றும்,

**''நிலைகொள் இறையடி நீங்க நெஞ்சினன்
துலைநா அன்ன நடுவுநிலைத் தோன்றல்
மலைஎன மதிக்கும் புலமை மாண்பினன்''**

என்றும் கூறியுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கற்கு உரியனவாகும்.

குடந்தை நகர் கவிஞர் கோ, தமிழ்த்தாத்தா ஐயா அவர்களுக்குப் பிறகு தோன்றிய தமிழ்ச்சான்றோருள் கங்கையிற் காவேரிய மைந்தன் ஐயா அவர்கள்தான், தனி ஒருவராய் நின்று, நிறுவனம் ஒன்று முயன்று செய்யினும் முடியாத அரும்பணியினைச் செய்துள்ளார் என்பது ஆசை பற்றி அறைந்ததன்று, உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை என்றவாறு.

"தனித்தமிழ்ப் பயின்றோர் ஆராய்ச்சி நூல் எழுதுதற்குத் தகுதியில்லாதவர்" எனக் கழறுவோர் கூற்றை வெட்டி வீழ்த்தி ஆங்கிலம் பயின்றோரும் எழுதற்காகா ஆராய்ச்சி நூல்கள் எழுதி வெளியிட்ட எம் அறிஞர் " என்று தமிழ்ப்பொழில் ஆசிரியராக இருந்த கோ.சி.பெரியசாமிப் புலவர், ஐயா அவர்களின் கல்லறையில் ஆற்றிய சொற்பொழிவில் குறிப்பிட்டதை நினைவில் கொள்ளல் தகும்.

வரலாற்றின் இப்பல்வகைப் பரிமாணங்களில் ஐயாவுக்கு உள்ள புலமையினைக் காணுந்தொறும் அளப்பருங்கடலன்ன அவர்தம் அறிவின் பெருமை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. அறிவிற் சிறந்த புலவர்களாக மதிக்கப் பெற்ற பிரயோக விவேக நூலாசிரியர் சுப்பிரமணியத் தீச்சிதரும், இலக்கணக் கொத்து ஆசிரியர் சுவாமிநாத தேசிகரும், தமிழ் மொழியைப் பற்றி "ஐந்தெழுத்தாலான பாடை" எனக் கூறி இழித்தும், பழித்தும் பேசிக் கொண்டிருந்த காலத்தைப் பற்றித் தம் கருத்தினைக் கூறப்புகுந்த ஐயா அவர்கள், "ஒரு காலத்தவராய தீக்கிதரும், தேசிகரும் இங்ஙனம் கூறியிருப்பதை நோக்குழி வடமொழி மதம் பற்றிய இவ்வேழங்களின் தருக்கை யடக்கும் கோளரி போலும் தமிழ்ப் புலவர் அக்காலத்தில் இருந்திலர் போலும் எனக் கூறியதோடமை யாது ற, ன, ழ, எ, ஒ என்னும் அந்த ஐந்து எழுத்துக்களால் மட்டுமே ஆன இரண்டாவது திருக்குறளின் இரண்டாவது அடியான "னற்றா டொழாஅ ரெனின்" என்பதனை எடுத்துக்காட்டி நிறைய எழுத்துக் களைக் கொண்டு இயங்குவதாகப் பேசலுறும் அம்மொழியால் இத்தொடரை எழுதிடல் இயலுமா? எனவும் வினவுகின்றார்.

ஐயா அவர்களின் கட்டுரைகள் அடங்கிய கட்டுரைத் தொகுப்பில் இந்தக் கருத்தினைக் கண்ணுறும் தமிழன்பர்கள் கண்கள் பெற்ற பயனை அறிந்து, கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்பதன்றி அத்தமிழ்க் கடவுளுக்கு வேறென்ன கைமாறு ஆற்றுவல்லர் என்பதனை ஓர்க! ஓர்க! எழுத்தெண்ணிக் கற்ற இரும்புலமையை என் என்போம்! எத்துணை நினைவாற்றல்! எத்துணை நுண்ணறிவு! எண்ணிய உடன் எடுத்துக்கொள் என மடிதற்று முந்துறும் தமிழன்னையின் இன்னருள்தான் என்னே! நினைத்து நினைத்து நெஞ்சம் நெக்குருகி அன்பர் ஆகுதல் அன்றி மற்றொன்றும் ஆற்றகில்லோம்! அல்லேமோ?

ஐந்தெழுத்தால் ஆன பாடை என ஆகடியம் பேசினோர் தமிழ் ஐந்தெழுத்தால் ஆன படை என்று ஓர்ந்து ஒடுங்கினர். சைவர்க்கு மந்திரமான அந்த ஐந்தெழுத்தைப் போலத் தமிழர்க்கு இந்த ஐந்தெழுத்து மந்திரமாகி மிகுபயனளித்தது. இதனைக் கண்ணுற்ற பின்றையும் சித்தம் தடுமாறுவராயின் அன்னாரின் பித்தம் தெளிக்கும் மருந்து பேரின்ப மன்றுள்ளும் கிடையாது எனக் கூறி அறிவு கொளுத்துவோமாக!

சங்கப்பாவலர் பொய்கையார்; களவழி நாற்பது பாடிய பொய்கையார்; ஆதியாழ்வார் மூவரில் ஒருவராய பொய்கையாழ் வார் போன்ற எல்லாரும் ஒருவரே எனத் துணிந்த வரலாற்றாசிரியர் மு. இராகவையங்காரின் கூற்றினை மறுத்து சங்கப்பாவலராகிய பொய்கையார், நாக்கொண்டு மானுடம் பாடியவர் என்றும்; மற்றைப் பொய்கையாழ்வாரோ எனின் இறைவனின் பொருள்சேர் புகழ் பாடியவர் என்றும் மறுத்து இருவரும் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த வேறுவேறு இருவரே என நிறுவியுள்ளார்.

மேலும், இன்னிலை என்னும் அரிய நூலினை உரை எழுதி வெளியிட்ட திருவாளர் சிதம்பரம் பிள்ளை அவர்கள் அந்நூலா சியரின் வரலாறு கூறுமிடத்து, இன்னிலை இயற்றியவர் பொய்கை யார் என்னும் பெயரினர் என்றும், அவர் களவழி பாடிய பொய்கை

யாரின் வேறாவார் என்ற கருத்தினை எடுத்துக்காட்டியும் விளக்கி யுள்ளார். (இஃதன்றிப் பன்னிருபாட்டியல் என்னும் பாட்டியல் இலக்கண நூலில் பொய்கையார் என்னும் பெயரிய புலவர் ஒருவரின் பெயரான் அமைந்த நூற்பாக்கள் காணப்படுவதை அந்நூலினைப் பயின்றவர் அறிவர்).

வரலாற்றாசிரியர் டி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் ஆராய்ந்து கூறியுள்ள கணம்புல்ல நாயனாரின் திருப்பதியைப் பற்றி ஐயா அவர்கள் மேற்கொண்ட வரலாற்றாய்வும்; வித்துவான் வே. வேங்கடராசலு ரெட்டியார் அவர்களின் 'அங்ஙனம்', 'முகித்தல்' போன்ற சொற்களின் ஆய்வு முடிவு பற்றிய ஐயா அவர்களின் ஆணித்தரமான மறுப்புரைகளும்; பரணிப்பெயர்க்காரணம் பற்றி ஐயா அவர்கள் செய்திருக்கும் ஆய்வும், அவ்வாய்வின் முடிவாகப் பரணி நாளில் கூழ் அடும் செயலைப் பாடுவதுதான் பரணி என அறுதியிட்டுரைப்பதுவும், ஒரு குறிப்பிட்ட நாளில் அடப்படும் உணவிற்கு நாட்பெயரிடுதல் சாலுமோ எனின் சாலும் என்க. 'திருவாதிரைக்களி' என்னும் வழக்காறுண்மையின் எனத் தெளிவாக்கி உள்ளமையும், 'இளங்கிளை' என்னும் சொல்லுக்கு அரசு வெளியிட்டுள்ள அகர முதலியில் தங்கை என்னும் ஒரு பொருளே சுட்டப் பெற்றிருப்பவும் அதனைப் பற்றி ஆய்வு மேற் கொண்ட ஐயா அவர்கள் திரிகடுகம், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, தேவாரம் போன்ற நூல்களிலிருந்து தக்க சான்று களைக் காட்டி அச்சொல்லுக்கு மக்கள், மாணாக்கன், மைத்துனன், தங்கை, தோழன், தொண்டன் என்னும் பொருள்களும் உள என நிறுவியிருக்கும் புலமையும்; "புறநானூற்றில் கண்ட சில பழைய வழக்குகளும் வரலாறுகளும்" என்னும் தலைப்பில் ஐயா அவர் களால் எழுதப்பெற்றிருக்கும் கட்டுரையில் காணப்படும் வரலாறு களும்; "தொண்டைமான் இளந்திரை"யனைப் பற்றிய வரலாற்று ஆய்வுக் கட்டுரையும் ஐயா அவர்களின் வரலாற்றுப் புலமை யினைப் பறைசாற்றுவனவாய் அமைந்திலங்குவதைக் காணலாம்.

மேலும்,

**''வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்**
**தென்குமரி யாண்ட செருவில் கயல் புலியான்**
**மன்பதைக் காக்கும் கோமான் திறம்பாடி''**

என்னும் சிலப்பதிகார வாழ்த்துக் காதைப் பகுதிக்கு உரை வகுக்கப் புகுந்த ஐயா அவர்கள், "மூவேந்தருள் ஒருவன் பெருமை கூறு மிடத்து ஏனை இருவருடைய கொடியையும், இலச்சினையையும் அவனுக்கு ஏற்றி உரைப்பது வழக்கம்" எனச் சொல்லி "தென்தமிழ் நாட்டுச் செழுவில் கயல்புலி, மண்டலை ஏற்ற வரைக'' என்ற காட்சிக்காதை வரிகளைச் சான்றாகக் காட்டியிருப்பதும் நோக்கத் தகுந்தது.

அகநானூற்றுக்கு உரை எழுதிய ஐயா அவர்கள் நக்கீரர், பரணர், மாமூலனார் போன்ற சங்கச் சான்றோரால் பாடப்பெற்றுள்ள வரலாற்றுக் கருவூலங்களான பாடல்களில் உவமைகளாகவும், செய்திகளாகவும், அருளியும் வெகுண்டும் கூறப்படுகின்ற கூற்றுக் களாகவும் தரப்படுகின்ற வரலாற்று நிகழ்வுகளை ஏனைய இலக் கியங்களின் சான்றுகளோடும் கல்வெட்டு மூலங்களோடும் ஒப்பிட்டு விளக்கிடும் பாங்கு ஒரு வரலாற்றாய்வாளனுக்கு அமைதிருக்க வேண்டிய இலக்கணங்களை வரையறுப்பதாய் அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.

பண்டைநாட்புலவர் பெருமக்களின் பீடுசால் குண நலன்களை ஆயப்புகுந்த ஐயா அவர்கள், "ஒரு காலத்தே இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ என்ற இரண்டு சிற்றரசர்கள் ஒருங்கு கூடியிருந்தவிடத்துச் சென்ற பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் கண்டீரக்கோவைக் கைகுலுக்கிச் சிறப்புச் செய்து விச்சிக்கோவை அங்ஙனம் செய்யாது விட்டனர். அது அவ்விச் சிக்கோவிற்குச் சிறிது வருத்தத்தையுண்டாக்க அவன் அதன் காரணத்தை உசாவினான். அதற்குப் புலவர் தம் கணவர் சேய்மை யின்கண் சென்றிருப்பின் பெண்டிரும் பாடிவந்தோர்க்குப் பரிசில்

கொடுத்தனுப்பும் உயர்ந்த குடியிற் பிறந்த கண்டீரக்கோன் ஆதலின் யான் அவனைப் புல்லினேன். நீயும் வள்ளலாகிய நன்னன் வழியில் தோன்றிய உயர்கணம் உடையவனாயினும் நும்முன் னோருள் ஒருவன் புலவர்கட்குத் கதவு அடைத்தனன் ஆகலின் நுங்கள் மலையை எங்களில் யாரும் பாடாது விட்டனர். ஆதலால் யானும் நின்னைத் தழுவிற்றிலேன்" என்ற வரலாற்றுச் செய்தி யினைக் குறிப்பிட்டுள்ளார். இதன்வழி அந்தநாளில் புலவர்க்கும் புரவலர்க்கும் இடையே அமைந்த நட்பின் பாங்கும் பெருமையும் தெற்றெனப் புலப்படுவதனைக் காண இயல்கிறது.

மேலே கண்ட இவற்றாலும் இன்னோரன்ன பிறவற்றானும் மதிநுட்பம் நூலோடுடைய ஐயா அவர்களின் வரலாற்றுப் புலமை ஓராற்றான் வெளிப்படும் என்பது வெள்ளிடை!

**"கள்ளனேன் கள்ளத் தொண்டால் காலத்தைக் கழித்துப் போக்கித்**
**தெள்ளியேன் ஆகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்**
**உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந் தறிதி என்று**
**வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட் டேனே"**

- அப்பர்

# படைப்புலகில் நாட்டார்

முனைவர் மோ.கோ. கோவைமணி
தஞ்சாவூர்

பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழாசிரியராகப் பணியாற்றிப் பல நூறு மாணவர்களுக்குக் குருவாகத் திகழ்ந்தவர் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள். அறுபது ஆண்டுகளே (1884 – 1944) தமிழுலகில் வாழ்ந்தாலும் தமிழுலகம் உள்ள வரை நிலைபெற்று வாழும் சிறப்பினைப் பெற்றவர். தமிழாசிரியராகவும், வரலாற்றாசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும், உரையாசிரியராகவும் தமிழுலகில் வீறுநடை போட்ட நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கவிஞராகவும் திகழ்ந்திருக்கின்றார் என்பது அதிகம் அறியப்பெறாத ஒரு செய்தியாகும். வேளிர் வரலாற்று ஆராய்ச்சி (1915), நக்கீரர் (1919), கபிலர் (1921), கள்ளர் சரித்திரம் (1923), கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும் (1926), சோழர் சரித்திரம் (1928) ஆகிய வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளார். இதழ்கள் வழி பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவைகளின் தொகுப்பாகக் ‘கட்டுரைத் திரட்டு – பாகம் 1 (1940), கட்டுரைத் திரட்டு – பாகம் 2 (மறுபதிப்பு 1951),

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக் கட்டுரைகள் (1994)' ஆகிய நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்கி கீழ்க்கணக்கு நூல்களில் நானாற்பது (இன்னா நாற்பது, இனியவை நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது) என்பனவற்றிற்கும்; ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை,.மூதுரை, நல்வழி, நன்னெறி என்னும் பிற்கால நீதிநூல்களுக்கும், அகத்தியர் தேவாரத் திரட்டிற்கும் திருந்திய முறையில் உரை எழுதியிருக்கின்றார். இவ்வுரைகள் எல்லாம் 1925ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக வெளிவந்துள்ளன. திருவிளையாடற் புராணம் (1927–31), சிலப்பதிகாரம் (1942), அகநானூறு (1943 – 44), மணிமேகலை (1946) ஆகியவைகளின் உரைகளும் நாட்டாரின் உரைத்திறனை வெளிப்படுத்துவனவாகும். தமிழாசிரியராகவும், நூலாசிரியராக வும், உரையாசிரியராகவும் நாட்டாரைக் கண்டவர்கள் அவரை யாரும் கவிஞராகப் பார்த்ததில்லை. இவண், நாவலர் ந.மு.வேங் கடசாமி நாட்டாரைக் கவிஞராகக் காண்குவன். படைப்புலகில் நாட்டாரின் இருப்பிடம் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## கவிஞர்களான உரையாசிரியர்கள்

தமிழுலகில் காலங்காலமாக விளங்கிய உரையாசிரியர் கள் பலரும் கவிஞர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர் என்பது வரலாற் றுண்மை. குறிப்பாக மழவை மகாலிங்கையர் (மழவைச் சிங்காரச் சதகம்), முகவை இராமநுசக் கவிராயர் (பார்த்தசாரதிமாலை, வரதராசப் பெருமாள் பதிற்றுப்பத்தந்தாதி), சரவணப்பெருமாளை யர் (நான்மணி மாலை, குளத்தூர்ப் புராணம்), சு. சபாபதி முதலியார் (திருக்குளந்தை வடிவேலர் பிள்ளைத்தமிழ், மதுரை மாலை, திருப்பரங்குன்றத்தந்தாதி), யாழ்ப்பாணம் சபாபதி நாவலர் (சிதம்பரநாத புராணம், திருச்சிற்றம்பல யமக அந்தாதி,

திருவிடைமருதூர் பதிற்றுப்பத்தந்தாதி, மாவையந்தாதி), திருமயிலை சண்முகம் பிள்ளை (திருமுல்லைவாயிற்புராணம், திருமயிலை உலா, கபாலீசர் பஞ்சரத்தினம்), இரா. இராகவை யங்கார் (பாரி காதை, புவி எழுபது, தொழிற் சிறப்பு, திருவடி மாலை), மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் (கயற்கண்ணி மாலை), வெ.ப. சுப்பிரமணிய முதலியார் (அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், நெல்லைச் சிலேடை வெண்பா), மு. கதிரேசச் செட்டியார் (சுந்தரவிநாயகர்பதிகம், வீர விநாயகர் மாலை, பதிற்றுப்பத்தந்தாதி), அறிஞர் மு.கோ. இராமன் (மதுரகவி இராமாயண வெண்பா) போன்ற உரையாசிரியர்கள் தங்கள் திறனைக் கவிதைகளில் வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடி கிறது. இவர்களில் ஒருவராக வைத்து எண்ணத்தக்கவர் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களும் ஆவார். நாட்டாரின் 'வைகறை நினைவு, தமிழன்னை வாழ்த்து, கருவூர் ஒன்பான் மணிமாலை, பஞ்சரத்தினம், வள்ளுவர் கலித்துறை' போன்ற கவிதைகள் குறிப்பிடத்தக்கனவாம்.

## வைகறை நினைவு

'வைகறை நினைவு' எனும் நூல் 91 அகவலடி கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பாவால் ஆனது. 3.1.1924ஆம் நாள் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தம்முடைய மாணவர்களை நினைத்து அதிகாலையில் எழுதியதாகும். ஆசிரியரும் மாணாக்கரும் எப்படி இருக்கவேண்டும் என்பதை எழுத்தில் காட்டாமல் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர் நாவலர். விடுமுறைக்காலத்தில் மாணவ நண்பர்கள் சிலநாள் தமதூருக்குச் சென்றிருந்த காலத்தில் ஆசிரியராகிய நாவலர் அவர்கள் மாணவர்களின் பிரிவினை ஆற்றாது தம்முள்ளக் கிடக்கையைக் கவிதையாகத் தந்துள்ளார். நாட்டார் அவர்கள் ஆசிரியர் – மாணவர் என்ற நிலையன்றி தோழமையுணர்வோடு இருந்திருக்கின்றார். மாணவர்களோடு தான் எப்படியெல்லாம் இருந்தேன் என்பதை,

''யானவ ரிருக்கை யெய்துவ ; லன்னார்
ஆனவகை யென்னி எடைந்து காண்குறுவர்;
சேர்ந்துண்டி கொள்வோம், சேர்ந்து விளையாடுவேம்;
நேர்ந்திடு மின்ப துன்பங்க ளெல்லாம்
ஒருவர்க் கொருவ ருசாவுவம் அவருள்
மருவு நுண்ணறி வாளரும் யானும்
வானநூல் எண்ணூல் மன்னுமெய் யுணர்வுநூல்
ஏனவும் பேசி யிருநிலந் தன்னில்
'நுண்ணறிவி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற் றால்' எனும்
தொல்லோர் கட்டுரைச் சுவைதெரிந் திடுவாம்;"
(வரி. 25 – 35)

என்று நாவலர் அவர்களே குறிப்பிடுகின்றார். மாணவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை நாவலர் அவர்கள்,

''மற்றிந் நாளின் வகைமையோ வென்னில்,
மாணவ ரென்பால் மதிப்பு நனிவுடையர்,
காணவு மடக்கங் காட்டுவர், மனையில்
உடனிருப் பதனுக் கஞ்சி யொடுங்குவர்,
தொடர்பு வேறிலர்; சொற்றிடில் யானும்
பள்ளியி லவர்க்குப் பல்கலைக் கழகம்
தெள்ளி விதித்தநூல் செப்புத லன்றிப்
பிறிது தொடர்பிலாப் பெற்றிய னாவேன்''
(வரி. 42 – 49)

என்று குறிப்பிடுகின்றார். மாணவ நண்பர்கள் இல்லாமல் தாம் எவ்வாறெல்லாம் இடர்ப்பட நேரிட்டது என்பதை நாவலர் அவர்கள்,

''நல்லொழுக் கருகினன், நலந்திகழ் தூய்மை
ஒல்லுமா றில்லேன், நோன்புக ளுஞற்றேன்,
மெய்யுணர் வுறுகிலன், மேதகு பூசனை

**செய்யுமா றறியென், ஆயினும் சீர்த்த**
**அன்பே யமையுமென் றிருந்தேன் அதுவும்**
**வன்பே யாகி முடிதலின், வள்ளுவர்**
**'அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்**
**கென்புதோல் போர்த்த வுடம்' பெனும் படியான்**
**உயிரிலி யானேன் ஓ! ஓ! கொடியதே!!''** (வரி. 66 – 74)

என்கிறார். இவற்றையெல்லாம் காணும்போது அன்று ஆசிரியர் – மாணவர் உறவுநிலை எப்படி இருந்தது என்பதைப் படம்பிடித்துக் காட்டுகின்றார். மேலும், இவரே 'ஆசிரியரும் மாணாக்கரும்' (செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு *11*, பரல் *5*, *1933*) என்ற கட்டுரையையும் எழுதி தம்முள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

## தமிழன்னை வாழ்த்து

'தமிழன்னை வாழ்த்து' என்பது ஆறு பாடல்களாலானது. தமிழின் சிறப்பையும் பெருமையையும் பலவாறாக இப்பாடல்கள் வழி சுட்டிச்செல்கிறார். அப்பாடல்கள் எளிமையும் தெளிவும் கொண்டதால் அவற்றை அவ்வாறே இங்குத் தருதல் சாலத்தகும்.

*1.* **திறவுமிகு செந்தமிழாம் தேமலர்தான் எப்பொழுதும்**
**முருகுவிரித் தொளிரும் மூவுலகும் அம்மானை**
**முருகுவிரித் தொளிரும் மூவுலகும் ஆமாயின்**
**அருமைமிகு வானவரும் அணிவரோ அம்மானை**
**அங்கொன்றைத் தாரனும் முன்அன்பு வைத்தானம்மானை.**

*2.* **தேங்கு சுவையிற் கவினிற் றிகழ்பழமையில் மிகுந்த**
**பாங்கின் உயர்மொழிநம் பைந்தமிழ் காணம்மானை**
**பாங்கின் உயர்மொழிநம் பைந்தமிழே யாமாயின்**
**ஆங்கிலத்திற் பொருள்மிகவே அளிக்குமோ வம்மானை**
**அகத்தும் புறத்தும் அளித்துடுமே அம்மானை**

3. எவ்வுலகினோடு மனத்தெண்ணுவன செந்தமிழின்
அவ்வை அருளால் அளித்திடுங்காண் அம்மானை
அவ்வை அருளால் அளிக்குமே யாமாயின்
செவ்விய சிந்தாமணிநேர் செப்புகமே அம்மானை
சிந்தாமணி தருவான் தெய்வமன்றோ வம்மானை

4. வள்ளுவரே சாற்றுகின்றார் மன்றுதமிழ் மாண்பனைத்தும்
ஒள்ளியசீர் நால்வருமே யுரைக்கின்றார் அம்மானை
தெள்ளியசீர் நால்வருமே யுரைக்கின்றார் ஆமாயின்
எள்ளலிலா அம்மைஅழகு இயைபுறுமோ அம்மானை
இருந்தமிழ் யாப்புணரின் வனப்பெல்லாங் காணம்மானை

5. குன்றா வண்டமிழாலும் குலத்தாலும் குறுமுனிவன்
தென்றிசையே உயர்ந்ததெனச் சேர்ந்தனன் காணம்மானை
தென்றிசையே உயர்ந்ததெனச் சேர்ந்தனன் என்றாமாயின்
அன்றவன் மற்றையரின் அடைந்ததெவ னம்மானை
அம்ம குடமுனி யாகும் பேறடைந்த னம்மானை

6. அன்றாலின் கீழிறைவன் அழகிய செந்தமிழ் மணப்ப
தென்றே தென்திசை நோக்கி யிருந்தனன் காணம்மானை
என்றே தென்திசை நோக்கி யிருந்தனன் என்றாமாயின்
மன்றேயும் ஆரியத்தின் வழக்கெவன் காணம்மானை
வழக்கிழந்தே யன்றோ வடக்கிருந்த தம்மானை

எனும் பாடல்களால் தமிழின் பெருமையை நாவலர் அவர்கள் உலகுக்குணர்த்தும் விதத்தினைக் காணமுடிகிறது.

### கருவூர் ஒன்பான் மணிமாலை

'கருவூர் ஒன்பான் மணிமாலை' எனும்நூல் காப்பு வெண்பா ஒன்றும், நூல் ஒன்பது கட்டளைக் கலித்துறையாலும் அமைந்து நூற்பயன் கட்டளைக் கலித்துறை ஒன்றும் வெண்பா ஒன்றும் ஆக 12 பாடல்களாலானது. இந்நூல் கருவூரில் கோயில்கொண்டுள்ள

பசுபதீசுவரர் மீது பாடப்பெற்றதாகும். சிற்றிலக்கிய வகைகளில் ‘நவமணிமாலை’ என்பதையே நாட்டார் அவர்கள் ‘ஒன்பான் மணிமாலை’ எனத் தமிழ்ப்படுத்தியிருக்கின்றார். ஒன்பது செய்யுட்கள் கொண்டு வருதலால் இந்நூல் இப்பெயர் பெற்றது என்பர். வெண்பா முதல் பிற பாவும் இனமும் கலந்தோ அல்லது ஆசிரிய விருத்தங்களாலோ ஒன்பது பாடல்களால் துதிப்பொருள் மீது அல்லது பிற பொருள்மீது அந்தாதித்து முடியப்பெறுவது இவ்விலக்கியமாகும்.

இந்நூலில் கருவூரில் கோயில் கொண்டிருக்கும் பசுபதீசுரரின் புகழ் பலவாறாகப் பேசப்படுகின்றதைக் காணலாம். குறிப்பாக, கருவூரில் கோயில் கொண்டுள்ள பசுபதீசுரனைச் சொல்லவும் தொழவும் நினையவும் செய்தாலே போதும் துன்பங்கள் யாவும் விலகிவிடும் என்பதை நாவலர்,

> **‘‘நிலநீ ரெரி வளி வான் ஞாயிறுமதி நீடுமுயிர்**
> **பலவும் முடலாவுறை தருவான் படைப்பாதி யைந்தும்**
> **நிலவும் திருநடத் தெந்தை கருவூர் நிமலன்தாள்**
> **சொலவும் தொழவும் நினையவும் போயினந் துன்பங்களே’’**
> (பா. 1)

எனும் பாடலால் குறிப்பிடுகின்றார். கருவூர் நகரில் முசுகுந்தன் தங்கிச் சிவ மூர்த்தத்தைப் பிரதிட்டை செய்ததையும், அங்கண மாமுனியின் தவத்தைச் சிவபெருமான் கலைத்துக் காட்சி கொடுத்ததையும் நாவலர் அவர்கள்,

> **‘‘புங்கமுற முசுகுந்தன் முற்சோழர் பரிவுடனே**
> **தங்கிமுறை செய் தலைநகராங் கருவூரதினில்**
> **திங்களும் கங்கையும் சேர மிலைந்தான் செய்ய சடை**
> **அங்கணன் பாதந் தொழுவார் நரபதி யாகுவரே’’** (பா.4)

என்கிறார். பசுபதீசுவரன் எப்படிப்பட்டவன் என்பதை,

"ஆனுடை யானெனை யாளுடையான் திருவாதிரையான்
கோனுடை யானெவர்க்கும்மே வைக்கும் ஒருகோல்
வளையைத்
தானுடையான் மெய்த்தமி ழுடையான் சங்கரன் சுரத்தோர்
மானுடைக் கருவூர் கண்டனம் வாழ்ந்தனமே" (பா. 8)

எனும் பாடலால் அறியலாம்.

## பஞ்சரத்தினம்

ஐவகை இரத்தினங்கள் என்ற பொதுப்பொருண்மை பற்றியும் இலக்கியப் பெயரான நிலையில் ஐந்து செய்யுள் கொண்ட பிரபந்தத்தைப் பற்றியும் குறிக்கும் சொல்லே 'பஞ்சரத்தினம்' ஆகும். பஞ்சரத்தின நூல்கள் பெரும்பாலும் ஆசிரிய விருத்தம் ஐந்தால் அமைந்து பாடல் தோறும் ஈறொப்புப் பெறுவது இயல்பு எனத் தெரிகின்றது. இவ்வகையில் ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் பேரில் பஞ்சரத்தினம், தணிகாசலர் பஞ்சரத்தினம், ஆறுமுகசுவாமி பேரில் பஞ்சரத்தினம், சண்முகக்கடவுள் பஞ்சரத்தினம், காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் பெருந்தேவியார் பஞ்சரத்தினம், காஞ்சிபுரம் பெருந்தேவித்தாயார் பஞ்சரத்தினம், ஸ்ரீநம்மாழ்வார் பஞ்சரத்தினம், சரஸ்வதி அம்மன் பஞ்சரத்தினம், மதுரை சொக்கநாதர் பஞ்ச ரத்தினம்,மீனாட்சியம்மன் பஞ்சரத்தினம், திருமயிலாசலம் முருகக் கடவுள் பஞ்சரத்தினம், கற்பக வள்ளியம்மை பஞ்சரத்தினம், தேவி பஞ்சரத்தினம், ஸ்ரீகணேசர் பஞ்சரத்தினம், ஸ்ரீசுப்பிரமணியர் பேரில் பஞ்சரத்தினம் எனப் பல பஞ்சரத்தினங்கள் தமிழிலக்கியத்தில் இருக்கின்றன. இவைகள் விருத்த யாப்பில் பஞ்சரத்தினங்களாகும். ஆனால், நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் பஞ்சரத்தின மானது வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. இந்நூல் கருவூர்ப் பதியில் வீற்றிருக்கும் பெத்தாச்சிப் பெருமாள் மீது பாடப்பெற்ற தாகும். காட்டாக ஒரு பாடல்,

"ஞானக் கலைவாணி நன்மையுற நானிலத்தோர்
ஊனப் பிறவியிட ரோட்டெடுப்பக் - கானத்தே
நட்டமிடுவோர்ப் பாடும் நால்வரீர் பெத்தாச்சி
இட்டமுடன் வாழ வருள்வீர்" (பா. 5)

என்பதால் இந்நூலைப் பெத்தாச்சிப் பெருமான் பஞ்சரத்தினம் என்றும் கூறலாம். இதில் இடம்பெற்றுள்ள ஐந்து வெண்பாக் களிலும் பெத்தாச்சிப் பெருமானின் புகழ் பேசப்பெற்றுள்ளன.

## வள்ளுவர் கலித்துறை

'வள்ளுவர் கலித்துறை' எனும் நூல் திருக்குறள் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒரு கலித்துறை என 133 கலித்துறையாலானது. ஆனால் இந்நூல் முழுமையும் பதிப்பாகவில்லை. எழுத்துருவும் இதுவரை கிடைக்கவில்லை. இந்நூலின் முதல் பத்து அதிகாரங் களுக்கான பத்துக் கலித்துறைகள் மட்டும் 1925 – 26ஆம் ஆண்டு வெளியான தமிழ்ப்பொழில் மாத இதழில் (துணர் 1, மலர் 11 மற்றும் 12) வெளிவந்திருக்கின்றன. இதுவே இப்பகுதிக்கு ஆதாரமாகும்.

## பிற வடிவில் 'வள்ளுவம்'

வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள் பழங்காலந் தொட்டு இன்று வரை அறிஞர் பெருமக்களைப் பெரிதும் ஆட்கொண்டுள்ளது. அவருடைய உரைகளையும் பொருள்களை யும் பின்னையோர் தத்தம் வாக்குகளோடு பொன்னேபோலப் பொதிந்து போற்றிப் பெருமை கொண்டுள்ளனர். புலவர் பலர் தம்முடைய கருத்துகளோடு குறட்கருத்துக்களையும் அங்கங்கே சேர்த்துக் கொண்டுள்ளனர். சிலர் குறளை அப்படியே எடுத் தாண்டும் இருக்கின்றனர். மணிமேகலையை யாத்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்,

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்''
(மணிமேகலை, 12: 59 – 61)

எனும் பகுதியில் குறட்பா அப்படியே கையாண்டு இருப்பது தெரிய வருகின்றது. சேரமான்பெருமாள் நாயனாரின் ஆதியுலாவில் திருவள்ளுவரின் குறள்கள் இரண்டு இடம்பெற்றுள்ளன (ஆதியுலா, வரி 136 – 137 மற்றும் 173 – 174). அதேபோல் உமாபதி சிவாசாரியரின் நெஞ்சுவிடுதூதில் ஒரு குறள் இடம்பெற்றுள்ளது (நெஞ்சுவிடுதூது, வரி, 24 – 25), கம்பராமாயணத்தில் வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கு விளக்கமாய்ப் பல இடங்களைக் காணலாம். குறிப்பாக,

''எடுத்தொருவர்க் கொருவர் ஈவதனின் முன்னம்
தடுப்பது நினக்கழகி தோதகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோய்உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிவிடு கின்றாய்''

என்று கம்பர் அமைத்துள்ளார். இது,

''கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூ உம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்'' (குறள். 166)

எனும் குறளின் மறுபதிப்பாய் அதற்குரிய விளக்கமாய் அமை கிறதைக் காணலாம். முன்னையோர் பலரும் குறள் மணிகளைத் தேர்ந்தெடுத்துத் தாம் கூறும் பொருளுக்குப் பொருந்த அமைந் திருப்பதும், ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு கருத்தைத் கூறுவதையும் காண்கிறோம்.

அதிகாரத்திற்கு ஒரு குறளைத் தேர்ந்தெடுத்து அக் குறளைப் பின்னிரண்டடியாகவும், அதற்கு விளக்கம் தரும்

செய்தியை முன்னிரண்டியாகவும் அமைத்துப் பாடிய நாலடி வெண்பாக்கள் தமிழுலகில் பலவுண்டு. இவ்வகையில், பிறைசைச் சாந்தக் கவிராயரின் இரங்கேச வெண்பா, பாகை அழகப்பனின் வடமலை வெண்பா, சிவஞான சுவாமிகளின் சோமேசர் முதுமொழி வெண்பா, சென்ன மல்லையரின் சிவசிவ வெண்பா, அரசஞ் சண்முகனாரின் வள்ளுவர் நேரிசை, சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள் முருகேசர் முதுநெறி வெண்பா, குன்னூர் ஆறுமுக நாவலரின் வள்ளுவர் வெண்பா, ஏனையோரின் தினகர வெண்பா, திருமலை வெண்பா, முதுமொழி மேல்வைப்பு, திருப் புல்லாணி மாலை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்நூல்கள் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒரு குறளை எடுத்துக் கொண்டு 133 வெண்பாவால் ஆனதாகும்.

குறள் ஒவ்வொன்றிலும் ஆசிரியரின் கருத்தைப் புகுத்தி யும் பாடியிருக்கின்றனர். இவ்வகையில் சினேந்திரமாலை, ஜெகவீரபாண்டியனாரின் திருக்குறட் குமரேச வெண்பா போன்றன குறிப்பிடத்தக்கனவாகும். இந்நூல்கள் 1330 வெண்பாக்களால் அமைக்கப்பெற்றுள்ளன. இதுவன்றி சைவத் தொண்டர்களாகிய நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிக்கு ஒத்த குறட் பாக்களை அமைத்து குமாரபாரதி அவர்கள் 'திருத்தொண்டர் மாலை'யை 100 வெண்பாக்களால் ஆக்கியுள்ளார்.

திருக்குறளை நாலடி வெண்பாக்களில் புகுத்தி வந்தது போக, அறிஞர் பெருமக்கள் வள்ளுவக் கருத்துக்களை அப்படியே உள்வாங்கிக்கொண்டு பல்வேறு வகையான இலக்கிய வடிவங் களில் யாத்துள்ளனர். மா.வேதாசலத்தின் 'திருக்குறள் அகவல்', வ.ஞா.கணேசபண்டிதரின் 'திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு', ஆக்கூர் சுந்தரமூர்த்தியின் 'திருக்குறள் நீதி', நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் 'வள்ளுவர் கலித்துறை' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## வள்ளுவர் கலித்துறைச் சிறப்பு

இதுவரை வள்ளுவத்தை இடைப்புகுத்தி எழுந்த நூல்கள் வள்ளுவக் குறளை அப்படியே எடுத்தாண்டிருக்கின்றன. ஆனால் நாவலர் நாட்டார் அவர்களோ ஒவ்வொரு அதிகாரக் கருத்தையும் உள்வாங்கிக் கொண்டு அதிகாரப் பிழிவாக அதிகாரத்திற்கு ஒரு கட்டளைக் கலித்துறையாக அமைத்திருக்கின்றார். இந்நூல் முழுமையும் கிடைக்காதது ஒருபெருங்குறையே. இந்நூலில் நாட்டார் வள்ளுவத்தை புதுவிதமாகப் பயன்படுத்தி இருக்கின்றார். திருவள்ளுவர் ஒருபொருளின் நன்மை – தீமை பற்றி விளக்கிக் காட்டுவார். ஆனால் நாட்டார் அவர்களோ வள்ளுவத்தின் நன்மைப் பொருளை மட்டும் எடுத்துக் கூறுகின்றார். குறிப்பாக, சில பாடல்களைக் காண்போம்.

ஊனம் இல்லாமல் உயிர்கள் வாழ்வதுவும் உண்பதுவும்; தானம், தவம் இவையிரண்டும் தழைத்தோங்குவதுவும்; வானவர்கள் முறை தவறாது பூசை நடத்துவதுவும் எதனாலே என்றால் வானம் மழையைப் பெய்விப்பதனால்தான் என்கின்றார் வள்ளுவப் பெருந்தகை. இதில் வானத்தின் சிறப்பை மட்டும் எடுத்துக்கூறி 'வான்சிறப்பு' அதிகாரத்தின் நிலையை எடுத்துக் கூறுகின்றார் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார். ஆனால் வள்ளுவரோ வான் பொய்ப்பினால் ஏற்படும் விளைவுகளையும் வான்சிறப்பாக்கிப் பாடியுள்ளார்.

> *''ஊனமி லாதுயிர் யாவையும் வாழ்வது முண்பதுவும்*
> *தான முடன்றவர் தான்றழைத் தோங்கலுந் தாரணியில்*
> *வானவர் பூசை நடத்தலும் வான்பெய லாலெனநற்*
> *றேனமர் சொல்லிற் றெரித்தவன் சீர்த்திரு வள்ளுவனே''*
>
> (பா. 2)

எனும் நாட்டாரின் பாடல் அவர்தம் கருத்தை உணர்த்துவதாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இதேபோல் வாழ்க்கைத் துணைநலம் அதிகாரத்தில் வள்ளுவப் பெருந்தகையின்,

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை'' (குறள். 55)

''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' (குறள். 56)

ஆகிய குறட் பாக்களை அடிப்படையாக் கொண்டு,

''தன்னிறை காத்துக் கணவனைப் பேணுந் தகையுறுசொற்
பொன்னினல் லாண்மழை பெய்யெனப் பெய்யும் பொலியு
மவ்வில்
என்னில தூங்குப் பெருந்தக்க வென்னுள வென்றுரைத்தான்
மன்னிய வாய்மையன் மன்புல வன்றிரு வள்ளுவனே''
(பா.6)

எனும் பாடலை நாட்டார் தருகின்றார். இதில், தன்னையும் தன்னைக் கொண்டவனையும் பாதுகாத்து எப்பொழுதும் சோர்வடையாமல் இருப்பவளே நல்ல பெண் என்றும், அவள் பெய் என்றால் மழையும் பெய்யும் என்றும், பெண்களிடம் இருக்க வேண்டிய பண்புகளில் மனத்திண்மையாகிய கற்பு என்ற உள்ள உறுதியே எல்லாவற்றினும் மேம்பட்டது என்றும் கூறுகின்றார்.

புதல்வரைப் பெறுதல் அதிகாரத்தில் வள்ளுவரின்,

''குழல்இனிது யாழ்இனிது என்ப தம்மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்'' (குறள். 66)

''தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்'' (குறள். 67)

ஆகிய குறட்பாக்களின் கருத்தை நாட்டார் அவர்கள்,

''குழலினும் யாழினு மின்பம் பயக்குங் குதலைச்செவ்வாய்
அழகிய மக்கட் பெறலிற் பெறும்பே றரிதவரைக்
கழகமுந் தேறப் புரிவது தந்தை கடனெனவே
தழல்புரை தூய்மைத் திருவள் ளுவனுரை தந்தனனே''
(பா.7)

எனும் பாடலில் சுட்டுகின்றார். இது, குழலிசையை விடவும் யாழிசையை விடவும் இன்பம் தரக்கூடியது மழலையரின் சொற்களே என்றும், மழலைச் சொல்லின்பத்தை நுகர்வது மட்டும் ஒரு தந்தை நின்றுவிடாமல் அவனைப் பெரிய அவையின் முன்னே இருக்கச் செய்யவும் வேண்டும் என்றும் கூறுகின்றார்.

இப்படியாக நாவலர் நாட்டார் அவர்கள் வள்ளுவரின் நேர்வழிக் கருத்துக்களைத் தம்முடைய 'வள்ளுவர் கலித்துறை' எனும் நூலில் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது. நாவலர் நாட்டாரின் 'வைகறை நினைவு', 'தமிழன்னை வாழ்த்து', 'பஞ்ச ரத்தினம்', 'கருவூர் ஒன்பான் மணிமாலை' ஆகியவையன்றி 'பந்து விளையாடல்', 'கரந்தை மாணவர்களுக்கு வாழ்த்து', திருநெல்வேலி மாவட்டம் சிந்துபூந்துறையில் உதவிப் பதிவாளர் வள்ளிநாயகம் அவர்கள் தாயார் 1.11.1926இல் காலமான பொழுது பாடிய 'இரங்கற்பா' போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது நாவலர் நாட்டார் அவர்கள் கவியும் புனைந்திருக்கின்றார் என்பது தெரிகிறது. வரலாற்று ஆராய்ச்சியை விடவும், உரை வரைவதை விடவும் நாட்டார் கவி புனைவதில் அதிக ஆர்வம் காட்டியதாகத் தெரிய வில்லை என்றே சொல்லலாம். ஏனெனில், வேளிர் வரலாற்று ஆராய்ச்சி, நக்கீரர், கபிலர், கள்ளர்சரித்திரம், கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும், சோழர் சரித்திரம் ஆகியவற்றில் உள்ள வரலாற்றுப் புலமையும்; இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார்நாற்பது, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை,

நல்வழி, நன்னெறி, திருவிளையாடற்புராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு ஆகிய நூல்களுக்கான உரைகளில் உள்ள உரைத்திறனும் – உரைமாண்பும் அவ்வளவாக கவிதை களில் வெளிப்படவில்லை. வள்ளுவர் கலித்துறை மட்டும் முழுமை யும் கிடைத்திருந்தால் நாவலர் நாட்டாரின் படைப்பாற்றல் ஓரள வேனும் வெளிப்பட்டிருக்கலாம்.

### துணை நூல்கள்

1. நாட்டார் ஐயா, வே. நடராஜன், கழக வெளியீடு, *1998.*

2. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக் கட்டுரைகள் பி.விருத்தாசலம் (பதி.), நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கல்வி அறப்பணிக்கழக வெளியீடு, தஞ்சை, *1994.*

# சிலம்பின் அரங்கேற்று காதையில் நாட்டாரின் உரைவளம்

முனைவர் கோ. சண்முகவேல்
திருவையாறு

பொதுவாக ஓர் இன மக்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்தோங்கித் திகழ வேண்டுமாயின், அந்த இனமக்கள் பல்வேறு வகைப்பட்ட கலையறிவு மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். அம்மக்கள் கலையறிவில் வல்லமையும், சீர்மையும் பெறவேண்டுமானால், அவர்கள் ஆழ்ந்து பரந்த புலமையும், கல்வியறிவும் பெற்றவர்களாகத் திகழவேண்டும். அச்செழுமைக்கு மொழியின் தன்மையும், செறிவும், வளமையும், பொறுத்தே கல்வியும், கல்வியைப் பொறுத்தே கலையும், அக்கலையறிவின் ஆற்றலைப் பொறுத்தே நாகரிகமும், பண்பாடும் சிறந்து விளங்கும் என்பது தெளிவு. நமது தமிழ் மொழி இயற்கையோடு இயைந்து நின்று இயற்கையாகவே தோன்றிய மொழியாகும். பழமைக்குப் பழைமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்த் திகழும் மூத்த மொழிக்கு இலக்கண இலக்கியத்திற்கு உரை கண்டவர்கள் பலராவர்.

"சுவை புதிது பொருள் புதிது வளம்புதிது சொற்புதிது
சோதிமிக்க
உரைவளம் எந்நாளும் அழியாத மாபெரும் புதையல்"

என்பதை நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்கள் வெளிப்படுத்தும் சிந்தனையாளர் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

### உரை ஆய்வு மூலங்கள்

ஐம்பெருங்காப்பியங்களுள் கலைச்சிறப்பு வாய்ந்தது சிலப்பதிகாரம். புகார், மதுரை, வஞ்சி எனும் மூவேந்தர்களின் தலைநகர்களின் பெயர்களையே காண்டங்களுக்குச் சூட்டி இளங்கோவடிகள் உருவாக்கிய சிலப்பதிகாரம் ஓர் இசைக்கலைக் களஞ்சியமாக விளங்குகிறது என்பார்கள் ஆய்வாளர்கள். இந்நூல் மூன்று காண்டங்களையும், முப்பது காதைகளையும் உள்ளடக்கியது. அவற்றுள் மூன்றாம் காதையாகிய அரங்கேற்று காதை கலைஞர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கடினமான பகுதியாக இருந்து வருகிறது. எனவே, பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் பாடமாக அமைவதில்லை எனலாம். ஆகையால் அக்காதையின் செய்திகளை அரும்பதனார், அடியார்க்கு நல்லார், உ.வே.சாமிநாதையர், ந.மு.வேங்கடசாமி நாட்டார், பெருமழைப் புலவர் முதலானவர்களின் உரை விளக்கங்கள் சிலப்பதிகாரம் முழுமைக்கும் வெளிவந்துள்ளன.

### சிலப்பதிகார உரை

முத்தமிழும் இயைந்தக் குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரத்திற்கும், அகநானூறு, மணிமேகலை போன்ற நூல்கட்கும் உரை எழுதித் தருமாறு பாகனேரி மு.காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் கழக சுப்பையாபிள்ளை வாயிலாக நாட்டாரைக் கேட்டுக்கொண்டார். அதனை ஏற்று 11.11.1940ல் முடித்து அருளினார். நாட்டார் அவர்கள் புலவர் சிங்காரவேல்

சேதிராயர் துணையுடன் சிலம்பு முழுமைக்கும் சிறந்த விளக்கவுரை எழுதியுள்ளார்கள். அரும்பதனார், அடியார்க்கு நல்லார் உரை நின்று நாட்டார் அவர்களின் சிறப்பை அரங்கேற்று காதை வாயிலாகக் காண்போம்.

## அரங்கேற்று காதை

சிலம்பின் அரங்கேற்று காதையில் காணப்படும் இசைக்குறிப்புக்கள் பகுப்பாய்வு முறையில் கட்டுரைக்கப்படு கின்றன. "தெய்வமால் வரைத்திரு முனியருள .... என்பது முதல் வடுநீங்கு சிறப்பிற்றன் மனையக மறந்தென்" வரை 175 வரிகளை உடையது. அதில் வரும்செய்திகள் பின்வரும் பத்துக் கூறுகளில் அடங்கும்.

### 1. கூத்தின் அமைதி

கூத்தின் அமைதி என்பது கூத்தின் இலக்கணமாகும். அமைதி என்பது அமைப்பு, இயல்பு, இலக்கணம் என்னும் பொருள்படுவது. நடனக்கலையோடு, இசை, இலக்கியம், மெய்ப்பாடு முதலியவற்றையெல்லாம் அறிந்திருக்கவேண்டும் என அரும்பதனாரும், அடியார்க்கு நல்லாரும் எடுத்துக் கூறுகின்றானர். ஆடலும், பாடலும், அழகும் என்று இக்கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல் ஏழாண்டு இயற்றி ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி, ஐயாண்டில் தண்டியம் படிப்பித்து அரங்கேற்றினால், அங்கு கரிகாலன் என்று பெயர் கூறப்படாமை யால் நாட்டார் அவர்கள்,

> "வெருவெங் காதலின் திருமா வளவன்
> புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்"

என இந்திர விழவூரெடுத்த காதையிலும், "மன்னன் கரிகால் வளவன் நீங்கியநாள்" என மணிமேகலை வரிதனையும் எடுத்துக் காட்டி நிறுவும் தன்மை குறிப்பிடத்தக்கது.

**உ. ஆடலாசிரியன் அமைதி**

அ. இருவகைக் கூத்துக்களையும் பலவகைப்பட்ட புற நடனங்களையும், விலக்குறுப்புகளைச் சேரப்புணர்க்கவும், அல்லியம் முதல் கொடுகொட்டி யீறாக உள்ள பதினொரு வகைக் கூத்துக்களையும் அறிந்திருத்தல் வேண்டும்.

ஆ. அகக்கூத்து, புறக்கூத்து நிகழ்த்து மாடத்துப் பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை என்ற நான்கு வகை அவிநயங் களின் இயக்கங்களை உணர்ந்து இருத்தல் சிறப்பு.

இ. குரவைக்கூத்து, வரிக்கூத்து தம்மில் விரவாதபடி செலுத்தும் முறை வேண்டும். புறக்கூத்து நிகழும் போது அவிநயம் நிகழாமலும் அவிநயம் நிகழும் போது ஆடல் நிகழாமலும் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

பலவகைக் கூத்துக்களும் அளவாலும், தன்மையாலும் வேறுபடுதல் வேண்டும். சிற்றவை முதல் பேரவை வரை பல்வேறுபட்ட அரங்குகளில் அவை நிகழ்வதுண்டு. எனவே கூத்தியல் என்பது ஒரு முழுமையான பொது இலக்கணத்தைப் பெற்றிருக்க வேண்டும். அசைவே நாட்டியக் கலையின் அடிமனை யாகும். வெறும் ஆட்டம் ஒருவகையாகவும் இசையும் ஆட்டமும் மெய்ப்பாடும் கூடிய ஆட்டம் என மறுவகையும் உண்டு. ஆட்டம் விரிவடையும்போது தாளம், இசை, மெய்ப்பாடு சேர்க்கையால் 4 வகைகள் பெருகும். அரும்பதனாரும், அடியார்க்கு நல்லாரும் முரண்பட வரும்ஆறு பிரிவுகளை அறிமுகப்படுத்துகின்றனர். அவையாவன; வசைக்கூத்து – புகழ்க்கூத்து; வேத்தியல் – பொதுவியல்; வரிக்கூத்து – வரிவிந்திக்கூத்து; சாந்திக்கூத்து – விநோதக்கூத்து; ஆரியக்கூத்து –தமிழ்க்கூத்து; இயல்புக்கூத்து– தேசிக்கூத்து (சிலப். 3:12)என இவ்வாறு ஆறுவகையாகப் பிரித்து நின்று முரண்பட வரும் ஒவ்வொரு கூத்தையும் விரித்துக்கூறும் போதும், “வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்தின்” (சிலப். 3:39)

“நாடக நூலை நன்றாகக் கடைப்பிடித்து என்றவாறு” என்று கூறுகின்றார்களே தவிர வேத்தியல் என்றால் என்ன? பொதுவியல் என்றால் என்ன? என்பதற்கு எந்தவித விளக்கமும் அரங்கேற்று காதையில் தரப்படவில்லை.

நாட்டார் ஐயா சுருக்கமாக பசுமரத்தாணி போல் இரு வகைக் கூத்தாவன, சாந்தியும் விநோதமும் என்று விளக்கம் கூறி, அகமும் புறமும் ஆகிய இருவகைக் கூத்து என்றாலே பொருத்த மாகும். இரண்டிரண்டாக எடுத்துக் காட்டியவையெல்லாம் வெவ் வேறியல்பு பற்றி வேறுவேறு பெயரான் வழங்கப்படுவன என்றும் வெவ்வேறு கூத்துக்கள் அல்ல. அவற்றை அகம், புறம் என்றும், வேத்தியல், பொதுவியல் என்றும்; விந்தி, விநோதம் என்றும் பாகுபடுத்தல் பொருந்தும். வேத்தியல் என்பது அரசர்க்கு ஆடுவது. பொதுவியல் என்பது ஏனையோர்க்கு ஆடுவது என்று எடுத் துரைக்கின்றார்.

பிண்டி என்பது ஒன்று, ஈண்டு ஒற்றைக் கைக்கு ஆகுபெயர். பிணையல் என்பது இணைதல், ஈண்டு இரட்டைக் கைகள் அவிநயக்கை இருவகைப்படும். பிண்டி என்பது பொருட்கை, பிணையல் என்பது தொழிற்கை என்பதை எளிமையாக்கிக் கூறுகின்றார். ந.மு.வே. அவர்கள். அத்துடன் இத்தொடர்நிலைச் செய்யுளின்கண், முல்லை சாந்தது ஆய்ச்சியர் குரவையும், குறிஞ்சி சார்ந்தது குன்றக்குரவையும், நெய்தல் சார்ந்தது கானல்வரியும், பாலை சார்ந்தது வேட்டுவ வரியும், மருதம் சார்ந்தது ஊர்சூழ் வரியும் நிகழ்ந்தனவாக அமைந்திருத்தல் வேண்டும் எனச் சுட்டிக் காட்டுவது சிறப்பாகும்.

**வரிப்பாடல்**

வரிக்கூத்திற்கு உரிய பாடல் வரிப்பாடல் பண்ணும், திறனும், செயலும், பரணியும் ஒருநெறியன்றி மயங்கச் சொல்லப் பட்ட எட்டன் இயல்பும், ஆறன் இயல்பும், தெய்வம் சுட்டியும்

மக்களைப் பத்தும் வருமென அரும்பதனார் கானல்வரியில் விளக்குகின்றார் (சிலப். 7:12 – 16). அடியார்க்கு நல்லார் கானல் வரியுள்ளும், வேனிற்காதையிலும் கூறுகின்றார். ந.மு.வே. அவர்கள் வரிப்பாட்டுக்கள், திணைநிலைவரி, கிணைநிலைவரி, முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரி, அவை பலவாக பாகுபாடு எய்தும் என்று தனிநிலைப்படுத்தி உரைக்கின்றார். எட்டுவகை வரிப் பாடலுக்குரிய ஆட்டங்கள் முன்வேனிற் காதையில் மாதவி கோவலனுக்கு ஆடி காதல் களிப்புச் சுவையை ஊட்டினாள். அரங்கேற்று காதையில் ஆடியவை தெய்வங்கள் ஆடிய கூத்துக்களாகும் என்பதை நாம் உணர்தல் வேண்டும் எனச் சுட்டுகிறார்.

### 3. இசையாசிரியன் அமைதி

யாழ்ப்பாடலும், வங்கியப்பாடலும், மிடற்றுப்பாடலும் மந்தமாகிய சுரத்தினை உடைய தண்ணுமை அமைப்பும் அறிந் திருத்தல் வேண்டும். இயற்புலனின் அறிவு பெற்றிருத்தல், முதல் நடை, வாரம், கூடை, திரன் என்னும் இயக்க நான்கினையும் அறிந்து இசைப்பூணும்படியும் செயல்பட வல்லவனாய் இருத்தல் வேண்டும் என்று விளக்கியுள்ளார் (சிலப். 3:26 – 36)

மேற்கூறியவற்றுடன் இசை உருக்களை வரிக்கும், ஆடற்கும் உருப்பொருள் இயக்கி, செந்துறை, வெண்டுறை என்னும் இருவகைப்பட்ட இசைப்பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையும் அமைத்து தளராத இயல்பினை உடையவன் இசைப்புலவன் என்று தமிழ் இலக்கணப் புலமையுடன் நாட்டார் அவர்கள் நிலைநாட்டியுள்ளார். மிடற்றுப்பாடல் இதனைச் சாரீர வீணை என்னும் உடல் ஐம்பூதங்களின் பரிணாமத்தால் ஆகும் முறைமை என்று அடியார்க்குநல்லார் விரித்துரைக்கின்றார். இதனை இவ்விடம் வேண்டப்படுவதில்லை என்று மறுத்து உரைப்ப தோடு உடம்பினளவு 96 அங்குலம் எனவும், அவற்றுள் மேலே நாற்பத்து ஏழரை, கீழே நாற்பத்து ஏழரை அங்குலமும் விட்டு

நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம் எனவும் கூறுகின்றார். பின் அம்மூலாதாரம் தொடங்கி எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப் பின் இசை என்றும், பண்ணென்றும் பெயராம் அவை தொல்காப்பியர் கூறும் பிறப்பியலுடன் நெஞ்சும், மிடறும், நாக்கும், மூக்கும், அண்ணமும், உதடும், பல்லும், தலையும் என்னும் பெருந்தானம் எட்டானும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் கிரியைகளால் பண்ணிப்படுத்தலால் பண்ணென்று பெயராயிற்று என்று தேனிட்டப்பாலாய் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார்.

**4. கவிஞன் அமைதி**

> ''இமிழ்கடல் வரைப்பில் தமிழகம் அறியத்
> தமிழ்முழு தறிந்த தன்மையன் ஆகி'' (சிலப். 3:37 – 38)

என்று இளங்கோவடிகள் கூறுவதால் தமிழ்நாட்டின் பரப்பும், அக்கவிஞன் அறிவுப்பரப்பும் புலனாகிறது. வேத்தியல், பொது வியல் என்று கூறப்பட்ட இரண்டு நாடகக் கூறுபாட்டினை நன்கு அறிந்து கடைப்பிடிப்பவன் அரும்பத உரையாசிரியர் அரசருக்கு ஆடும் கூத்து, எல்லோருக்கும் ஒப்ப ஆடும் கூத்து, ஊர்காண் காதையில் (சிலப். 14 – 148) குறிப்பிடுவார். ஆனால் அடியார்க்கு நல்லார் வேத்தியல் அகம் என்றும், பொதுவியல் புறம் என்றும் இவ்விடத்தில் உரை எழுதுவது பொருந்தவில்லை எனலாம் என்பதைச் சுட்டுகிறார்.

ந.மு.வே. அவர்கள் வேத்தியல், பொதுவியல் என்று கூறப்படும் இரண்டு கூறுபாட்டை நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து, நாடகநூலை நன்றாகப் பற்றிக் கொண்டு, இசை யோன் வக்கிரித்திட்டத்தை உணர்ந்து, ஆளத்திவைத்த பண்ணீர் மையை அறிந்து, தாளநிலையில் எய்த வைத்து தன் கவியில் தோன்ற வைக்க வல்லவன் என்று கூறுகின்றார். "வசையில்லாத மொழி"களால் நாடகக் கவி செய்ய வல்ல நல்ல நூலறிப்புலவன் என்று அடைமொழியிட்டுக் காட்டுகின்றார்.

தாளம் இன்றிப் பண்ணை விரிவாக அணிசெய்வது ஆளத்தி ஆகும். எட்டுவகைத் தாளங்களில் இசைத்தலும், அதன் கிரியைகளை வெளிப்படுத்தி இசைத்தலும் வேண்டும்.

"குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலைந்தும்
நின்றார்ந்த மந்நகரந் தவ்வொடு - நன்றாக
நீளத்தா லேழு நிதானத்தா னின்றுயங்க
ஆளத்தி யாமென் றறி" (சிலப். 3:26 மிடறும் என்ற பகுதி)

"முதலும் முறையும் முடிவும் நிறையும் குறையும் கிழமையும் வலிவும் மெலிவும் சமனும் வரையறையும் நீர்மையும்" என்னும் பதினொரு பாகுபாட்டினை எல்லா உரையாசிரியர்களும் ஒருமித்து நின்று உரைக்கின்றனர். இவற்றைக் கொண்டே பிற் காலத்தில் ஆலாபனை இலக்கண நூல்கள் தோன்றின (கே. வாசு தேவ சாஸ்திரி, இராக ஆலாபனைகளும் தாயங்களும், சரஸ்வதி மகால் வெளியீடு, தஞ்சை, 1958).

## 5. தண்ணுமையாசிரியன் அமைதி

தண்ணுமையோன் அமைதி குறித்து இளங்கோவடிகள் விரிவாய் குறிப்பிட்டுள்ளார் (சிலப். 3: 45 – 55). மத்தளச்சொற் கட்டுக்களில் வட எழுத்து ஒலிகளை நீக்கி ஏழுவகைத்தூக்கும், நிற்குமானம் நிறுத்திக் கழியுமான்ம் கழித்துக் கொண்டு முழங்குதல், யாழ், குழல், கண்டப்பாடல் இயல்பறிந்து, முழங்கும் வல்லமை, இயற்சொல் முதல் நான்கு வகைச் சொற்களையும் உணர்ந்து வாசிப்பவன் தண்ணுமையாளன் (சிலப். 3:45). ந.மு.வே. அவர்கள் இளங்கோவடிகள் கூறும், "ஆடல்பாடல் இசையே தமிழே" (சிலப். 3: 45) வரிக்கு – எல்லாக் கூத்துக்களும், எல்லாப் பாட்டுக்களும்; எல்லா இசைகளும், இயல் இசை நாடகம் என்னும் மூவகைத் தமிழும் கொண்டு இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொல் வழக்குகளும், அவற்றின் குற்றம் நீக்கி (நுண்மையுமா) நிற்குமானம் நிறுத்திக் கழியுமானாய்

கழிக்கவும் என்ற இடத்தில் யாழும் குழலும் ஏங்கிய மிடறு இசைவன என்று தம்சொல் அமைப்பை நிலைப்படுத்துகிறார்.

இசை நரம்படைவால் உரைக்கப்பட்ட பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்றாகிய (11991) ஆதி இசைகள் என்பர். இதற்கு நாட்டார் அவர்கள் அரங்கேற்று காதையில் ஒன்றை எடுத்தாண்டுள்ளமை சிறப்பாகும்.

> "உயிருயிர் மெய்யள வுரைத்தவைம் பாலினும்
> உடறமி ழியலிசை யேழுடன் பகுத்து
> மூவேழ் பெய்தந்
> தொண்டு மீண்ட பன்னீராயிரங்
> கொண்டன இயற்றல் கொளைவல் லோர்கடனே"

என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஈண்டுதமிழ் என்பதற்கு, வடவெழுத் தொரீஇ வந்த எழுத்தானே உறழ்ந்து காட்டப்பட்ட வாக்கியக் கூறுகள் என்றும் உரைப்பார்.

### 6. குழலாசிரியன் அமைதி

குழல் நூல்களில் சொல்லப்பட்ட முறைமைகளை அறிந்தவனவாகவும் பாடல்களை இசைக்குங்கால் வல்லொற்று, மெல்லொற்றுகளை இனிய ஓசையில் அமைத்துப் பண்ணீர்மை குன்றாது இசைப்பவனாகவும் அனுபவப் பயிற்சிப் பக்குவப் பட்டிருக்க வேண்டும். "இதன் பருமையும், நீளமும் அளவுக்குத் துளையிட்ட விரல் துளைகளையும், ஊது துளை உடையதாய் சுரபேதங்கள் குறையாமல் அளவெடுக்கப்பட்டு நின்றது வங்கியப் பாடல்" என்றார் உரையாசிரியர் (சிலப். 3:26 அரும்.) ந.மு.வே. அவர்கள் நூல்களில் சொன்னமுறையாலே, சித்திரப்புணர்ப்பு, வஞ்சனைப் புணர்ப்பு என்னும் இரு கூற்றினை அறிந்து, சித்திரப் புணர்ப்பு இசைகொள்ளும் எழுத்துக்களின் மேலே வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுப் போலப் பண்ணீர்மை நிறுத்தல்,

வஞ்சனைப்புணர்ப்பு, இசைகொள்ள எழுத்துக்களின் மேலே வல்லொற்று வந்த வழி மெல்லொற்றும் நெகிழ்ந்துப் புணர்த்தல் என்று உரைக்கின்றார்.

வர்த்தனை என்பதற்கு: குழலில் விரலுளர்ந்தூதுந் துளைகள் சுட்டுவிரல் முதலாக விட்டுப்பிடிப்பது ஆரோகணம். சிறுவிரல் முதலாக விட்டுப்பிடிப்பது அவரோகணம். இங்ஙனம் ஏற்றி இறக்கலும், இறக்கி ஏற்றலும் என்று சுருக்கமாகத் தெளிவுபடுத்துகின்றார். பட்டடை என்பது எல்லாப் பண்ணிற்கும் அடிமனை ஆதலின், 'இளி' நரம்பு பட்டை எனப்பட்டது (சட்சக்கிரமம்). முதல் நடை, வாரம், கூடை, திரள் சொல்லப்பட்ட இயக்கம் நான்கும் வழுவின்றி நிறுத்தி இசைக்கும் வல்லவன் என்று பிரித்துச் சுட்டிக் காட்டுகின்றார்.

**7. யாழாசிரியன் அமைதி**

யாழின் அமைப்பும் தன்மையும் கூறுவது. தமிழில் இசை என்பது சுரம் இராகம் என்னும் இருபொருளிலும் வழங்கும். இராகத்திற்கு இசை என்றும் பண் என்றும் பெயருண்டு. வடமொழியில் சுருதி என்று சொல்லப்படுவதைத் தமிழில் 'அலகு' என்றும், மாத்திரை என்றும் வழங்கும். மற்றும் சுரம் என்பதற்கு நரம்பு என்ற பெயரும், பண் என்பதற்கு யாழ் என்ற பெயரும் தமிழில் வழங்கும். தமிழில் ஏழிசைகளுக்கும் இருபத்திரண்டு அலகுகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் முதலில் தோன்றியது 'தாரம்'என்றும்,

> "தாரத்துட் டோன்றும் உழையுழையுட் டோன்றும்
> ஒருங்குரல் குரலினுட் டோன்றிச் - சேருமிளி
> விட்டொன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
> கைக்கிளை தோன்றும் பிறப்பு"

இரு உரையாசிரியர்கள் கூறாதவற்றைப் பின் ஆய்ச்சியர் குரவையுள் விளக்கப்படும் என்றும்,

"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும்
இவ்வே ழெழுத்தும் ஏழிசைக் குரிய"

என்று திவாகரம் கூறும் நெட்டுயிர் ஏழினையும் பண்டைத்தமிழ் மக்கள் இசையுடன் பாடியிருக்க வேண்டும் எனக் குறிப்பு மொழியால் எடுத்துரைக்கின்றார் ந.மு.வே. அவர்கள். மேலும் சாரங்கதேவரின் சங்கீத ரத்னாகரம் கூறும் செயல்பாடுகள் பலவும் தமிழுக்கும் பொருந்தும் எனவும் பின் கூறும் இசையியல்புகளை அறிய விழைவோர், 'இசைநூற்களைக் கற்றும், இசைப்பயிற்சியும் செய்து அறிதல் வேண்டும். ஈண்டு 'விழைவோர்' என்று உரையாசிரியர்கள் கூறா அருந்தமிழைக் கையாண்டுள்ளமை நன்கு தெளிவு படுகிறது.

## 8. அரங்கின் அமைதி

அரங்கினை அமைப்பதற்கு இடம் தேர்ந்தெடுக்குங்கால் சிற்ப நூலாசிரியர்கள் வகுத்த இயல்புகள் வழுவாத வகையில் குற்றங்கள் நீங்கிய இடத்தினைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் (சிலப். 3:95 – 113). அரங்கினை அளக்கும் கோல் புண்ணியமலைப் பக்கங்களிலே ஓங்கி உயர்ந்த மலைகளில், மூங்கிலில் கண்ணுக்குக் கண் ஒருசாண் வளர்ந்ததைக் கண்டு உத்தமன் வகையின் பெருவிரலின் இருபத்து நாலு எண்கோல் நீளமும், ஒருகோல் உயரமும் உடையதாய் என்று இரு உரையாசிரியர் களும் கூறுகின்றனர்.

ந.மு.வே. அவர்கள் நிலம் வன்பால், மென்பால், இடைப் பால் என்று மூவகைப்படும் என்றும், அவற்றிற்குரிய மண்ணின் சுவைகள், கூறுவதோடும், தமிழர்கள் கண்ட தொல் அளவுப் பெயர்களையும், அணு எட்டுக் கொண்டது தேர்த்துகள், தேர்த்து கள் எட்டுக் கொண்டது இம்மி, இம்மி எட்டுக் கொண்டது எள்ளு, எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு, நெல்லு எட்டுக் கொண்டது பெருவிரலாகும் என்பதற்கு விளக்கம் இடம் நோக்கக் கூறுவது சாலப்பொருத்தம்.

பூதர் – என்பதற்கு வச்சிரதேகம், வச்சிரதந்தன், வருணன், இரத்த கேசுவரன் என்னும் நால்வரையும், உருவம், தொழில் இவற்றின் இயல்புகள் பின்னர் அழற்படு காதையுள் விரித்துரைக் கப்படும் என்று மேற்கண்ட உரையாசிரியர் கூறாதவற்றைப் புலப்படுத்தி உரைக்கின்றார்.

## 9. தலைக்கோல் அமைதி

அரசன் பகை வென்று அவனுடைய வெண்கொற்றக் குடைக்காம்பினைத் தலைக்கோலாகச் செய்து ஆடல் சிறந்த மங்கையர்க்குப் பரிசாகக் கொடுப்பது ஒரு மரபு. தலைக்கோலை ஊர்வலமாக எடுத்து வரும் காட்சியைச் செயிற்றியனார் வர்ணித் துள்ளார். வீரம், கொடை, வெற்றி என்னும் மும்முரசும் முழங்க, வாத்திய வகைகள், அமைச்சன், புரோகிதன், சேனாபதி முதலான வர் சூழ்ந்துவர, யானைகள் உடன்வர, தேரின் மீது நிற்கும் 'கவியின்' கையிலே தலைக்கோலைத் தந்து ஊரை வலமாக வரும் காட்சியைப் பூசிப்பார்கள். தலைக்கோல் மரபு சங்கத்தில் இல்லை. பாடினி, கூத்தன் முதலானவர்கள் தெரிய வருகிறது. ந.மு.வே. அவர்கள் தமக்கே உரிய உரைத்திறத்தில் மும்முரசு எழுந்து முழங்கவும், பல வாச்சியங்கள் ஒலிக்கவும், ஐம்பெருங்குழுவும் என்னுமிடத்தில் தூவர். சாரணர் என்பவரைச் சுட்டிக்காட்டுவதும் சிறப்பாகும். மண்ணிய என்பதை கழுவிய என்றும் மண்ணிய மணி என்றும், "நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழை" என்று நக்கீரர் கூற்றையும் கூறிச் செல்கின்றார்.

## 10. மாதவி அரங்கிற் புகுந்து ஆடுகின்ற இயல்பு

அரங்கேற்று காதையில் அரங்கடல் புகுந்து ஆடுகின்ற இயல்பினைக் (சிலப். 3:129 – 175) கூறுகின்றார். குயிலுவக் கருவிகள் (இனிமையாக இசைத்தல்), இசைக்க, தோரிய மகளிர், தலைக்கோல் பரிசு பெற்றவர்கள், ஆடற்கலையில் சிறந்தவர்கள். குழல்வழி யாழும், யாழ் வழித் தண்ணுமையும், தண்ணுமை வழி முழவும், முழவோடு கூடி நின்றவாச்சியக் கூறுகளை அமைந்தது "ஆமந்திரிகை" என்று கூறுகின்றார் நல்லார்.

குயிலுவக் கருவியாளர் முறைப்படி நிற்க, வலக்கால் முன் மிதித்து (மாதவி) ஏறி, வலத்தூண் சேர்தல் முறையன்று. பழைய நெறி வகையால் இடத்தூண் சேர்தல் தொல் மரபு நெறி தோரிய மடந்தையரின் செயலாகும் என்றும், தீங்குகள் நீங்க வேண்டி குயிலுவக்கருவிகள் ஈற்றில் நின்று இசைக்கவும், ஆடிமுதிர்ந்த தோரிய மடந்தையரை,

> ''தலைக்கோ லரிவை குணத்தொடு பொருந்தி
> நலத்தகு பாடலு மாடலுமிக் கோள்
> இயற்படு கோதைத் தோரிய மகளே''

எனவும் கூறுவர். மேலும், இலைப் பூங்கோதையை அரசன் பசும்பொன் – மாலையை மாதவிக்குப் பரிசாகக் கொடுத்தான். தலைக்கோல் பட்டம் குறித்து ந.மு.வே. அவர்கள் தென்னாட்டுப் பழைய கல்வெட்டுக்களில் "திருநெல்வேலி உடையார் கோயில் பதியிலாரில் நக்கன் உரிமை அழகிய பெருமாளான உரிமை அழகிய பெருமாள் தலைக்கோலி" எனவும், "பதியிலான் நக்கன் .... சோழ விச்சாறரியான ஓலோக மாதவி தலைக் கோலியும்" ஈண்டு தலைக்கோலி என்னும் பட்டமும் அதனைப் பெற்ற பதியிலார் பலர் வருதலைக் குறிப்பிட்டுள்ளமை சிறப்பாகும்.

இவ்வாறு பூம்புகார்ப் பொற்றொடி மாதவி என்னும் கணிகை அரங்கிலே வந்து எண்ணும் எழுத்தும், இயல் ஐந்தும், பண் நான்கும், கூத்துப் பதினொன்றும், தன் வாக்கினாலும், கூத்தினாலும் புவி முழுவதும் அறிந்து புகழும்படி செய்தார் என்பதை அரங்கேற்று காதை விளக்கிச் செல்கிறது. இக்காதையில் மாதவி பால் விடுதல் அறியா விருப்பங்கொண்ட கோவலன், 'தன் வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்ததாக' இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். அரும்பதனாரும், அடியார்க்கு நல்லாரும் குற்றமற்ற கற்புச் சிறப்பினையுடைய மனையும் என வாளா வெழுதா என்று குறிப்பிடுகின்றனர். நாவலர் நாட்டார் அவர்கள்

‘மனையாட்டிக் கற்பின்’ சிறப்பும், மனைக்குச் செல்வச் சிறப்பும் என விளக்கம் நல்குவது மாண்புடையமையாகும்.

ந.மு.வே. நாட்டார் அவர்கள் கீழ்க்கணக்கு நூல்களில் ‘இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது என்பனவற்றிற்கும்; ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி என்னும் பிற்கால நீதி நூல்களுக்கும் உரையை செம்மையாக அருளியவர். ஐயா அவர்களின் படைப்பாற்றலில் வரலாறு, ஆய்வு நூல் கட்டுரைகள், சங்க இலக்கியங்களுக்கு உரை எழுதுதல் முதலியவற்றில் தம் வாழ்வில் கவனம் செலுத்தினார். உரைவேந்தர், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் ‘சிலப்பதிகார ஆராய்ச்சி’ என்ற நூலில் உரை நலம் என்ற பகுதியில் நாட்டார் அவர்களின் உரை தமிழ் மக்கள் தவப்பேற்றால் கிடைத்தமை என்றும், சக்கரைக்கட்டியால் இயன்ற ஓவியம் எப்பாலும் தித்திப்பதைப் போல அவர்தம் உரையில் எப்பகுதியும் இன்பம் தருகின்றது. அவரின் அரிய தமிழ்த் தொண்டிற்குத் தமிழகம் உள்ளவரை நன்றிக்கு உரியதாகும்.

# நாட்டாரின்
# திருவிளையாடற்புராணப் பதிப்பு

முனைவர் கா.சத்தியபாமா
தஞ்சாவூர்

தமிழ் மொழிக்கு வளம் சேர்த்த அறிஞர் பலரும் தமிழ் இலக்கிய வரலாற்றில் நீங்கா இடம்பெற்று நிலையான புகழ்பெற்று விளங்குகின்றனர். அவர்களுள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியவர் தமிழ்ப் பேராசான் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள். தமிழுக்கு அரும்பெரும் பணிகள் ஆற்றியுள்ள தோடு பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றிற்கும் உரை எழுதியிருக்கின்றார். இப்பெரியாரின் திருவிளையாடல் புராணப் பதிப்பைக் குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சிறந்த உரையாசிரியர்

உரையாசிரியர்கள் பல நூல்களைக் கற்றுத் தெளிந்த பின்னர் தமக்கு உரியதாகக் கருதிய நூல்களைத் தேர்ந்தெடுத்துத் தம் புலமைத்திறன் முழுதும் காட்டி உரை கண்டு மொழி உள்ளளவும் மறையாத இறவாப் புகழ்பெற்றனர். அத்தகைய

பெரியோரில் ஒருவராக விளங்குபவர் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

"இந்நூற்குச் சிறந்தவுரை முன்னர் இல்லாததால் இலக்கணப் புலமையும், இலக்கியப் புலமையும், சமய நூற்புலமையும் வாய்ந்த தனிச் சிறப்புடைய திருவாளர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களை உரை எழுதும்படி வேண்டி அவ்வுரையோடு சேர்த்து 1927இல் அச்சியற்றி மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என மூன்று பகுதிகளாக வெளியிட்டனம்" என்று சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரின் திருவாலவாய்க் காண்டநூல் பதிப்புரை இவர்தம் உரை பெருமையைப் பறை சாற்றும்.

19ஆம் நூற்றாண்டில் பழைய உரைகளும் புதிய உரைகளும் மூல நூல்களோடு பதிப்புக் கலையுடன் இணைந்து வெளிவந்தன. உரையும் பதிப்பும், ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் போலச் சேர்ந்தே வெளிப்பட்டன. ஆதலின் உரை களைப் பற்றிய ஆய்வு பதிப்புக்கலையுடன் தொடர்புடையதாக உள்ளது (ப. 56) என்பார் 'உரையாசிரியர்கள்' நூலில் மு.வை.அரவிந்தன் அவர்கள். நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் இனிய செந்தமிழ் உரைநடை எழுதும் வன்மை உடையவராக விளங்கியவர். சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவிளையாடற் புராணம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், இன்னா நாற்பது, இனியவை நாற்பது முதலிய நூல்களுக்கு உரையெழுதியுள்ளார். இவரும் கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்களும் சேர்ந்து, 'வேங்கட விளக்கு' எனப் போற்றப்படும் அகநானூற்று உரையை எழுதினார்கள். இவையன்றி நாட்டார் அவர்கள், கபிலர், நக்கீரர், கள்ளர் சரித்திரம், வரலாறும் கற்பு மாண்பும் முதலான வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிய சிறப்பிற்கு உரியவராக விளக்குகின்றார்.

## திருவிளையாடற்புராண உரைப்பதிப்புகள்

திருவிளையாடற்புராணத்திற்கு இராமலிங்க சுவாமி பிள்ளை என்பவர் 1801இல் உரை எழுதியதாகக் குறிப்பிடுகின்றார் (ப. 594) திரு.மு.வை. அரவிந்தன் அவர்கள். இதுவே காலத்தால் முந்தியதாகக் கிடைப்பது.

இதனையடுத்து உள்ள பதிப்புகளை ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள், "இந்நூல் மூலமானது தமிழுக்கும் சைவத்திற்கு மாகத் தம் வாழ்க்கையை ஈடுபடுத்திய பெரியவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் முதலிய பலரால் முன் அச்சிடப்பெற் றுள்ளது. திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் மாணாக்கராகிய சோடசாவதானம் சுப்பராயச் செட்டியா ரவர்கள் இதற்கு ஓர் உரையெழுதி வெளிப்படுத்தியுள்ளார். பின் அவ்வுரையையே பெரிதும் தழுவி ஈக்காடு, இரத்தினவேலு முதலியார் என்பவர்களால் ஓர் பொழிப்புரை எழுதப்பட்டு வெளிவந்துள்ளது. மதுரைக் காண்டம் மட்டும் மதுரை இராம சுவாமிப்பிள்ளை என்னும் ஞானசம்பந்தப்பிள்ளை என்பவர்களால் வேறுபட்ட பலபாடங்களைக் கொண்டு ஓர் பொழிப்புரை எழுதி வெளிப்படுத்தப் பெற்றுள்ளது என்று மதுரைக் காண்ட முகவுரைப் பகுதியில் (ப.13) வரிசைப்படுத்தி உரைக்கிறார்.

இவற்றைத் தவிர வித்துவான் தி.பட்டுச்சாமி ஓதுவார் பதிப்பித்த உரையோடு கூடிய திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் 1955இல் வெளியிட்ட நூல் குறித்தும் விஷு வருடம் வீரப்ப செட்டியார் என்பவரால் பதிப்பிக்கப்பட்ட திருவிளையாடற்புராண நூல் குறித்தும் பரஞ்சோதி திருவிளையாடற் புராண இலக்கிய மதிப்பீடு என்ற நூலில் முனைவர் ப.கோபாலன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டாரின் திருவிளையாடற்புராணப் பதிப்பும் உரையும்

பாண்டி வளநாட்டில் மதுரையம்பதியில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளின் அறுபத்து நான்கு திருவிளையாடல்

களையும் கூறும் பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடலுக்கு உரையெழுதியுள்ளார் நாட்டார். மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களும் தனித் தனிப் பகுதிகளாகச் சிறந்த தமிழ் இலக்கிய நூல்களை வெளியிட்டு வரும் திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் கழக வெளியீட்டு எண்கள் 74, 95, 133 ஆகியனவாக வெளிவந்துள்ளன. மதுரைக்காண்டம், 1927ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக வெளி வந்துள்ளது. அதன்பின் 1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலும் 1965ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும் வெளிவந்துள்ளது. கூடற்காண்டம், 1928ஆம் ஆண்டு ஜீன் மாதத்தில் முதல் பதிப்பாக வும் மறுபதிப்பாக 1965 ஜீலை மாதத்திலும் வெளிவந்துள்ளது. திருவாலவாய்க் காண்டம் 1931ஆம் ஆண்டு ஜீலை மாதம் முதல் பதிப்பாகவும் 1965ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மறுபதிப்பாகவும் வெளிவந்துள்ளது.

### கழகப் பதிப்புகள்

திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் கடந்த 82 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏறத்தாழ 2,000 நூல்களை வெளியிட்டு அருந்தொண்டாற்றி வந்துள்ளது. அப்பதிப்புகளில் பெரும்பாலானவற்றை ஆய்ந்து வெளியிட்ட கழக மேனாள் ஆட்சியாளர் தாமரைச்செல்வர் வ.சு.அவர்கள், தம் பதிப்புத்துறை பட்டறிவு பலர்க்கும் பயன்படுமாறு ‘பதிப்புத்துறை பட்டறிவு’ எனக் கட்டுரைத் தொடர் ஒன்றை செந்தமிழ்ச் செல்வி இதழ்களில் (45, 46 சிலம்புகள்) எழுதினார். அதில், “கழகம் வெளியிட்ட பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் யாவும் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆய்ந்து வெளியிடப்பெறவில்லை என்பது உண்மை. ஆனால், அவை முன்னமே வெளிவந்துள்ள மூலபடி களையும் உரைப்படிகளையும் திருத்தப் பாடங்கண்டு புத்துரை விளக்கங்கள் எழுதி வெளியிடப்பட்டவை என்கிறார் (45: 556). இதனை எடுத்துக் கூறும் திரு.இரா. இளங்குமரன் அவர்கள், அச்சிட்ட நூற்படியோடு ஏட்டுப் படிகளை ஒப்பிட்டுப் பார்த்துத்

திருத்தம் செய்து வெளியிடப்பட்ட கழகப் பதிப்புகள் சில உண்டு என்பதை இயம்புகிறார்.

அந்நிலையில் இந்நூல் பல பதிப்புகளை ஒப்பு நோக்கிச் செய்யப்பட்டதாக விளங்குகிறது. மதுரைக் காண்டத்தில் முகவுரையில், பல பதிப்புகளை ஒத்து நோக்கி, மூலத்தின் வேறுபட்ட பாடங்களுள் சிறந்ததெனத் தோன்றுவதை அமைத்துக் கொண்டு, பிறவற்றைப் பாடபேதமாக அமைத்திருக்கிறேன். இந்நூல் செய்யுட்களின் இடர்ப்பட்ட சொற்பொருள் முடிவுகளை ஒழுங்குப்படுத்துவது; இன்றியமையாததாகவும் ஒத்த கருத்துள்ளவுமாகிய பிறநூல் மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளங்க வைப்பது முதலியவற்றில் எவ்வளவு அரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதும், இவ்வுரை எவ்வளவு திருத்தம் பெற்றுள்ளதென்பதும் நடுநிலை முதலிய உயர் குணங்களுடையராய், ஒத்து நோக்கும் அறிவுடையாரெவர்க்கும் நன்கு புலனாகுமாகலின் இங்கு அவைகள் எடுத்துக்காட்டப் பெற்றில (பக். *13 –14*) என்று ந.மு.வேங்கடசாமி குறிப்பிடுகிறார்.

திருவிளையாடற்புராண நூலுக்கு உரையெழுத பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்களுக்கு உதவியாக இருந்து எழுதியவர் திரு.அ.மு.சரவண முதலியார் அவர்கள் என்பதை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் *1927*ஆம் ஆண்டில் எழுதிய பதிப்புரை (ப.6) மூலம் அறியலாம்.

**உரைச்சிறப்பு**

திருவிளையாடற்புராண நூலின் உரைச்சிறப்பு குறித்து, மதுரைக் காண்டத்தின் பதிப்புரை (ப.6) வாயிலாக அறியமுடிகிறது. இதற்கு முன் இரண்டு மூன்று உரைகள் வெளிவந்திருப்பினும் அப்பதிப்புகளில் ஒன்றேனும் இப்பொழுது கிடைக்கவில்லையாதலால் இந்நூல் வெளியாகியுள்ளது என்றும், “இதன்கண் எழுதப் பட்டிருக்கும் உரை முன் உரைகளைவிட விளக்கமுடையது. இன்றியமையாத பாடபேதங்கள் காட்டப்பெற்றிருக்கின்றன. பல

இடங்களில் முன் உரையாசிரியர்கள் கொண்ட பொருளைவிடச் சிறந்த பொருள் காட்டப்பட்டிருக்கிறது. அவ்வுரைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு அஃது இனிது விளங்கும்" என்றும் கூறப்பட்டிருப்பது இதனைப் புலப்படுத்தும்.

## ஆய்வு முன்னுரை

மதுரைக் காண்டத்தில் நூலில் முகவுரைப் பகுதியில் பாண்டிநாட்டுத் திருப்பதிகளில் பதினான்கில் முதலாவதாக விளங்கும் தன்மை, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோர் அப்பதியைக் குறித்துப் பாடிய தேவாரப் பதிகங்களின் விவரம் எடுத்தோதப்பட்டுள்ளன. திருவிளையாடல் புராணக் கதைகள் சில சிலப்பதிகாரத்திலும் கல்லாடத்திலும் திருவாசகத் திலும் காணப்படுகின்ற செய்தி விளக்கப்பட்டுள்ளது. 64 திருவிளை யாடல்களை விளக்கும் திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம், கடம்பவனபுராணம், சுந்தர பாண்டியம், பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம் ஆகியன உணர்த்துகின்ற செய்திகளை விவரித்துரைக்கிறார். இவ்வாறாக நூல் தொடர்பாகவுள்ள செய்திகள் அனைத்தையும் விளக்கிச் செல்கிறார்.

மேலும், திருவாலவாய்க் காண்டத்தில் விரிவான முன்னுரை அமைத்து ஆக்கியோன், மதுரைச்சிறப்பு, திருவிளை யாடல்கள் அமைந்த நூல்கள், திருவிளையாடலை மட்டும் கூறும் சிறப்பு நூல்கள், முதல்நூல், ஆலாசிய மான்மியம் முதல் நூலாகக் காரணம், வழங்கும் நாடு, நூல் அமைப்பு முறை, பொருள், தகுதியுடையோர், நூல் பெருமை, பரஞ்சோதி முனிவர் எடுத்தாண்ட பழைய இலக்கியப் பகுதிகள், ஒவ்வொரு படலங் களுக்குமான தனித்தனி கதைச் சுருக்கம் முதலானவற்றை விளக்கு கிறார். இரண்டாவது காண்டமான கூடற் காண்டத்தில் பதிப்புரை, முகவுரை, முதலான செய்திகள் காணப்படவில்லை.

## ஆய்வு நோக்கும் நடுநிலைப் பண்பும்

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்திற்கு முதல்நூல் வடமொழியிலுள்ள ஆலாசிய மான்மியம் என்றும் இது பதினெண் புராணங்களில் ஒன்றாகிய கந்த புராணத்தின் ஒருபகுதியாகும் என்றும் கூறப்படுகிறது எனக் கூறிச் செல்லும் ந.மு.வேங்கடசாமி நாட்டார் சிறப்புற விளக்கமொன்று அளிக்கிறார்.

திருவிளையாடற்புராணம் ஆரியத்தினின்று மொழி பெயர்க்கப்பெற்றதாயினும் இதில் கூறப்படும் திருவிளை யாடல்கள் எல்லாம் செந்தமிழ்ப் பாண்டிநாட்டிலே தமிழ் மக்களிடையே தமிழ்மொழியால் பேசியும் நிகழ்த்திப் போந்தன வாகலின் இவ்வரலாறுகள் ஆரியத்தில் எழுதப்படும் முன்பே தமிழின் இருவகை வழக்கிலும் பயின்றனவாதல் வேண்டுமென்றும் இவற்றை வடநூற்புலவர் அம்மொழியில் எழுதுங்கால் தமிழ் வழக்குகளை நன்கு அறியாமை முதலிய காரணங்களால் சில பிறழ்ச்சிகள் நிகழ்ந்திருத்தல் இயல்பென்றும், இந்நூலாசிரியர் வடநூல் மேற்கோளாகக் கதைகளை எடுத்துக் கொண்டனராயினும் பழந்தமிழ் நூல்களின் கருத்துக்களையும் சொற்களையும் தொடர் களையும் எடுத்தமைத்தே இந்நூலை அழகுபெறச் செய்திருக் கின்றன வென்றும் தமிழ்மக்கள் நன்கு உணரவேண்டும் (ப. 10) என்று எடுத்தோதுவது அவர்தம் ஆய்வுச் சிந்தனைக்கும் நடு நிலைமைப் பண்பிற்கும் தக்கதோர் சான்று பகர்வதாக அமைந் துள்ளது.

## உரையில் ஆய்வு நோக்கு

“சக்தி யாய்ச்சிவ மாகி” எனத் தொடங்கும் காப்புச் செய்யுளுக்கு உரையெழுதப் புகும் நாட்டார், மதுரையம்பதி, சத்தி பீடம் அறுபத்து நான்கனுள் முதன்மையதாகலானும், அருளாகிய சத்தியை உணர்ந்தே சிவத்தை உணரவேண்டும் என்ப ஆதலானும்,

இந்நூலாசிரியர்க்கும் பராசத்தியார் காட்சி தந்து இதனைப் பாடுமாறு அருள்புரிந்தனராதலானும் சத்தியாய் எனத் தொடங்கப் பெற்றது எனச் சிறந்ததொரு ஆய்வு விளக்கத்தை அளிக்கிறார்.

## மேற்கோள் நூல்கள்

உரையாசிரியர்களில் பலர் தாம் கூறும் மேற்கோள் எந்த நூலில் உள்ளது என்று கூறுவதில்லை. 'என்றார் பிறரும்', 'என்பவை போல', 'எனவும் கூறுவன காண்க' என்று கூறி மேற்கோள் காட்டுவர். நாட்டார் அவர்கள் அடியார்க்குநல்லாரைப் போலத் தாம் கூறும் மேற்கோள் எந்த நூலைச் சேர்ந்தது என்று நூலின் பெயர் கூறி விளக்குவர். மாணிக்கம் விற்ற படலத்தில் அன்ன நாள்வயின் எனத் தொடங்கும் பாடலுக்கு உரை கூறுமிடத்து, ஐம்போகம் – ஐம்புல இன்பங்கள்;

> ''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
> ஒண்டொடி கண்ணே யுள'' (குறள். *1101*)

என முப்பானூல் கூறுவது காண்க (ம. காண்டம், பா.2) எனக் கூறுவதைச் சான்றாகக் கூறலாம். யானை உரித்த வரலாறு கூறுமிடத்து, வரலாற்றை விரித்துவைத்து கந்தபுராணத்துள் இதனைக் காண்க எனக் கூறுவது எண்ணத்தக்கது.

சிற்சில இடங்களில் மேற்கோள் பாடல்கள் எடுக்கப்பட்ட நூல்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. சான்றாக இந்திரன் பழி தீர்த்த படலத்தின் 65ஆவது பாடலுக்கு உரை கூறுமிடத்து,

> ''குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயுங் காத்த லரிது'' (குறள். 29)

என்பவாகலின் விளைத்தலோடும் ஆகியென்றார். மாசுணம் – பெரும்பாம்பு. இவ்வரலாறு,

''ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்'' (குறள். 899)

என்பதற்கு எடுத்துக் காட்டாதல் காண்க என்று கூறுவதால் உரை முடிகிறது. நாட்டார் அவர்களின் இலக்கண இலக்கிய மேற்கோள் களைக் காணுமிடத்து நுண்ணிய புலமைத்திறனும் நினைவாற்ற லும் நம்மை வியக்கச் செய்கின்றன.

## பாடவேறுபாடு

அடிக்குறிப்பில் பாடவேறுபாடுகள் சுட்டப்படுள்ளன. ஓரிரு இடங்களில் உரையின் இறுதியில் குறிக்கப்பட்டுள்ளன. திருநாட்டுச் சிறப்பில் 57ஆவது பாடலின் ஈற்றடியாகிய "எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமே" எனும் அடியில் "எண்ணிடப்படக்" என்ற பாடபேதம் குறிக்கப்பட்டுள்ளது. உரையில் எண்ணிடைப் படுதலாவது அவற்றை எண்ணுங்கால் அவற்றுடன் ஒன்றாகச் சேர்த்து எண்ணப்படுவது எண்ணிடப்பட என்பது பாடமாயின் எண்ணப்பட எனப் பொருளுரைக்க என எடுத்தோதுகிறார். வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலத்தில் 38ஆவது பாடலில், "கருமநன் னெறிவழாப் பூசை..." என்ற பாடலின் உரையில், 'உறைபரம்' என்றும், 'உறுகன்ம நெறிவழாப் பூசை' என்றும் பாடம் கொண்டார் பிறர் என்றும்தாம் கொண்டது கருமநன் னெறிவழாப் பூசை என்பது என்பதனையும் எடுத்தோதுகிறார்.

## சொல்லும் பொருளும்

சொற்களுக்குச் சிறந்த பொருள் உரைக்கின்றார். இவர்தம் உரை பல இடங்களில் இசை இன்பம் பயப்பதோடு நயமும் விளக்கமும் உடையதாக உள்ளது.

மூர்த்தி விசேடப்படலம் 28ஆவது பாடலில் (ம.கா.) தூபக்கால், தீபக்கால் எனவரும் சொற்களுக்கு தூபமும் தீபமும்

இடுதற்குரிய கலன்கள் தூபக்கால் தீபக்கால் எனப்பெறும் என்கின்றார்.

இவ்வாறாக, திருவிளையாடற் புராணப் பதிப்போடு உரையெழுதி, தமிழ் நல்லுலகு போற்றும் வகையில் ஆராய்ச்சித் தெளிவுடனும் ஆரிய உழைப்புடனும் விளக்குகின்றார். இவ்வுலகு உள்ளவரை அவர்தம் இறவாப்புகழ் நிலைபெற்றிருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

# நாட்டாரின் கல்விக் கொள்கை

பேரா. வே.சிவானந்தம்
தஞ்சாவூர்

''ஏரியும் ஏற்றத்தி னானும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம் - தேரின்
அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு''

என்பது சோழ நாட்டின் வளங்குறித்துப் பட்டினப்பாலை கூறுவதாகும். "சோழவள நாடு சோறுடைத்து" என்பது ஔவையாரின் வாழ்த்துரையாகும்.

''தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து
நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ''

என்ற கம்பராமாயணப் பாடலில் அயோத்தி மாநகரின் சிறப்பு

கூறப்படுவது போல் சோழநாடும் அப்பேர்ப்பட்ட சிறப்பிற்குரியது. இத்தகைய சோழ நாட்டில் காவிரியின் கிளையாகிய குடமுருட்டி யின் தென்மருங்கில் நடுக்காவேரி என்னும் கிராமத்தில் முத்துச் சாமி நாட்டார் – தைலம்மை என்னும் தம்பதியருக்கு ஐந்தாவது குழந்தையாக சித்திரைத் திங்கள் 2ஆம் நாள் 12.4.1884 ஆம் ஆண்டு விசாக நட்சத்திரத்தில் நாடுபோற்றும் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் பிறந்தார்.

தாமே பயின்ற தமிழ்ப் பேராசான், தமிழ்க் கடலை நிலை கண்டுணர்ந்தோர், உரைநடைக்கோர் வரை நிறுவிய நக்கீரர், கபிலர் போன்ற நூல்களின் ஆசிரியர், சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, திருவிளையாடற்புராணம்,

**''ஆத்திச்சூடி கொன்றை வேந்தன் அத்துடன் இன்னா**
**இனியவை நாற்பது**
**ஏத்தற்குரிய நல்வழி நன்னெறி இன்னும் வெற்றி வேற்கை**
**மூதுரை**
**காத்தற்குரிய களவழி நாற்பது கவினுறு நல்ல**
**கார்நாற் பதற்கும்**
**மாத்துக் குறையா உரையொடு மூதுரை மல்கிய**
**இவர்மாண்பது பெரிதே''**

### நாட்டாரின் இளமைப் பருவக் கல்வி

நாட்டார் ஐயா அவர்கள் கிராமப்பள்ளிக் கூடத்தில் தம் படிப்பைத் தொடங்கினார். அவர்கள் பயின்ற காலம் மாதக்கணக் கினவே. திண்ணைப் பள்ளியில் அக்கால வழக்கப்படி நெடுங் கணக்குப் பயின்ற பின்னர் இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, குழிமாற்று என்னும் கணக்குச் சார்பான சில சுவடி களைப் படித்து முடித்தார். திண்ணைப் பள்ளியில் குழிமாற்றுக் கற்று முடித்தபின் தம் தந்தையாரிடம் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி என்னும் நீதி நூல்களைக் கற்றார்.

## நாட்டாரின் கல்விக் கோட்பாடு

''மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்''

என்பது பெரியோன் அனுபவ வாக்கன்றோ! ஆம் பெரியோனுக்குப் பெரியோன் சொன்ன பொருத்தமான வாக்கு. இவற்றிற்கு எடுத்துக்காட்டாக, "குன்றா ஊக்கமும் சலியா உழைப்பும்" உடைய நாட்டார் கருமமே கண்ணாயிருந்து பாடங்கள் அனைத்தையும் தாமே படித்து முடித்தார். மேலும், இழுமென் மொழியால் விழுமியது நுவலுதலும் காய்தலும் உவத்தலும் இன்றி நடுநின்று ஆராய்ந்து உண்மை கண்டு கூறுதலும் இவரின் பெரும்பண்பாகும்.

''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்'' (குறள். 643)

எனக் குறிப்பிடும் அளவிற்குச் சொற்பொழிவு ஆற்றுவதிலும் வல்லவராக விளங்கினார்.

## கற்றோரைக் கற்றவரே மதிப்பர்

''தண்டாமரையின் உடன்பிறந்து தண்ட நுகரா மண்டுகம்
வண்டோ கானத்து இடைஇருந்து வந்தே கமல
மதுவுண்ணும்
பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங்கு உறவாடித் தம்மில் கலப்பார் கற்றோரே''
(விவேகசிந்தாமணி, பா. 8)

என்னும் விவேக சிந்தாமணியின் பாடலுக்கு இணங்க கல்வி யினைக் கற்பவர்கள் கசடறக் கற்க வேண்டுமென்று விரும்பினார். ஒரு பொருளின் உண்மைக் கருத்தினைக் குறிப்பிடும் பொழுது

எதிரே இருப்பவர் எவராயிருப்பினும் அஞ்சாது கூறவேண்டுமென வலியுறுத்தியவர். அதற்குஎடுத்துக்காட்டாக அவருடைய வாழ்வில் நடந்த நிகழ்ச்சி ஒன்றினைக் கூறலாம். நடுக்காவேரிக்கு வந்த ஒரு புலவர் "கற்றவரே மானாரி காயரா காசினிதேர்" என்னும் ஒரு வெண்பாவின் முதலடிக்கு உண்மைப் பொருள் உணராது கூறினார். இவ்வெண்பாவைத் தவறு என்று கூறியபோது இவர் இதனை, "கல்தவர் ஏமால் நாரிகாய் அரா காசினிதேர்" எனப் பிரித்துப் பொருள் கூறி உண்மையை உணர்த்தினார்.

**கல்வியும் அதன் பயன்களும்**

கற்றலாகிய தொழிலும், கற்கப்படுவனாகிய நூல்களும் கற்றதனால் எய்தும் அறிவும் கல்வி என்னும் பெயரால் வழங்கப்படுவனவாகும். மக்களாய்ப் பிறந்தார் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்பதும் அங்ஙனம் கற்றலின் பயனாவது அறிவு பல்குதல் என்பதும் தெளிவு. சுருங்கக் கூறின் கல்விக்குப் பயன் அறிவு எனல் அமையும். கல்விக்குப் பயன் அறிவுடைமை எனவே அறிவால் எய்தலாகாததொன்று இன்மையின், கல்வியுடையோர் எல்லா நலங்களும் எய்துதற்குரியர் என்பது குமரகுருபர அடிகள் கூறிய,

> **''அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்**
> **புறங்கடை நல்லிசையு நாட்டும் - உறுங்கவலொன்**
> **றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை**
> **சிற்றுயிர்க் குற்ற துணை''**

என்ற வெண்பாவாலும்; "தாங்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு, தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறு மறிவு" என்னும் முதுமொழிகளும் இவ் வுண்மையை அறிவுறுத்தி நிற்கின்றன. கல்வி, ஒளியையும், புகழை யும், இன்பத்தையும் விளைவிக்கின்றது. ஒப்புயர்வற்ற கல்வி யாளரின் புகழுக்கு எல்லையேது. திருவள்ளுவர், கம்பர்

முதலாயினரின் புகழ் உலகம் அழியினும் அழிவதாமோ? மேலும் கல்வி இன்பம் பயப்பது என்பதை, "கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின் கண்ணுமாகும்

''மெய்ப்பொருள் வினைக்கு நெஞ்சின் மெலிவிற்கோள்
துணையுமாகும்
பொய்ப்பொருள் பிறகன் பொன்னாம் புகழுமாம்
துணைவியாக்கும்
இப்பொருள் எய்தி நன்றீ ரிரங்குவ தென்னை யென்றான்''

என்று திருத்தக்கதேவரும்,

''கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்தவிரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென் றதிசயித்தார்''

என்னும் பெரியபுராணச் செய்யுளை வடிக்கும் பொழுது செந்தமிழ்ப் புலவர் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இன்பம் எவ்வளவு என்பது அவர்க்கே தெரியும். திருவள்ளுவரும்,

''தாமின் புறுவ துலகின் புறங்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'' (குறள். 399)

என்று கூறுகின்றார்.

## கற்றவரை வேந்தனும் கை தொழுவான்

அறிவுடைய பெரியோரை அரசனும் வணங்கித் தொழுவான். அவர்களை மனநிறைவோடு உலகில் உள்ள மக்களும் அன்புடன் போற்றித் துதிப்பர். இப்படிப்பட்ட அறிவுடைய சான்றோருக்கு, ஏதேனும் இழுக்கு நேர்ந்து விட்டால் கூட, உலகத்தார்

அதன் காரணமாக அவர்களை இகழமாட்டார்கள். எப்போதும் போலவே அன்பு காட்டுவர் என்பதை விவேக சிந்தாமணி அழகாக கூறுகின்றது.

''அறிவுளோர் தமக்கு நாளும் அரசரும்தொழுது வாழ்வார்
நிறையொடு புவியில் உள்ளோர் நேசமாய் வணக்கம்
செய்வார்
அறிவுளோர் தமக்கு யாதோர் அசடு வருமே ஆகில்
வெறியரென்று இகழார் என்றும் மேதினி உள்ளோர் தாமே''
(விவேக சிந்தாமணி, பா.64)

கல்வியில் அறம், பொருள், இன்பமாகிய பலன்கள் இம்மையில் மிக விளையாதொழியினும் வள்ளுவர் கூறியவாறு,

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து'' (குறள். 398)

என்பதால் வரும் பிறவிகளிலும் தொடர்ந்து அப்பயன்களை விளைவிக்கும் என்பது தெளிவாகிறது.

## நாட்டார் கையாண்டுள்ள மேற்கோள்கள்

நாட்டார் அவர்கள் கல்வியின் பெருமையையும், இன்பத்தையும், தம்முடைய கருத்தைக் கூறும் வகையில் பல நூல்களிலிருந்து மேற்கோள்களைக் கூறியுள்ளார்.

''அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது'' (குறள். 843)

என்றும், கல்வியால் கற்பவர் துன்பத்தைத் தாமே தேடிக்கொள்ளுவர் என்றும் கூறியுள்ளார்.

"தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்" (நாலடியார்)

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கே"
(திருவிசைப்பா)

ஆகிய பாடல்களை மேற்கோளாகக் கூறியுள்ளார். மேலும் நாட்டார் அவர்கள் தமிழைப் பொறுத்த வரையில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய இலக்கியங்களும்; திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு ஆகிய அறநூல்களும்; சமயக் குரவர் முதலாயினர் அருளிச் செய்த சைவத் திருமுறைகள் பன்னிரண்டும்; வைணவ சமயப் பெரியோர்கள் அருளிய நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகிய உண்மை நூல்களும்; தொல்காப்பியம் என்னும் கருவி நூலும் கற்க வேண்டிய தலைசிறந்த நூல்களாகும். இத்தகைய நூல்களைக் கற்கும்போது எந்தவொரு குற்றமும் இல்லாமல் கற்க வேண்டும் என்று கூறுகின்றார்.

### நாட்டாரின் கல்வித் தொண்டு

தமிழ் மொழியின்பால் காதல் கொண்ட நாட்டார் ஐயா அவர்கள் இவ்வளவு நூல்களையும் நன்கு படித்து அறிந்து கொள்வதற்கு ஒரு சிறந்த ஆசிரியர் தேவை. தாம் பண்டிதர் தேர்வுக்குப் படித்த காலை எவருடைய உதவியும் இன்றித் தாமே அரும்பாடுபட்டுப் படித்ததை நினைத்து நாட்டார் அவர்கள் தாம் பட்ட துன்பம் பிறரும் அடையக் கூடாது என்பதற்காக 'திருவருட் கல்லூரி' என்று ஒரு கல்லூரியை நிறுவ நினைத்தார்கள். அவரின் எண்ணக் கனவு நினைத்தபடியே இன்று தஞ்சாவூரில் வெண் ணாற்றங்கரையில் கபிலர் நகரில் நாவலர் ந.மு.வேங்கடசாமி

நாட்டார் திருவருள் கல்லூரி என்னும் பெயரில் தமிழ்ச் சான்றோன் பேராசிரியர் பி.விருத்தாசலம் அவர்களால் நன்முறையில் நடை பெற்று வருகின்றது. அந்த நாட்டார் ஐயா கல்லூரியின் விரிவுரை யாளர் என்ற பெருமித உணர்வோடு இந்தக் கட்டுரையைத் தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

கல்வி என்பது சில நிகழ்ச்சிகளையும் பொருள்களையும் அவற்றின் இயல்புகளையும் அறிவது மாத்திரம் அன்று. ஊக்கமும் மகிழ்ச்சியும் அளித்து உள்ளத்தைப் பயன்படுத்தி உயர்ந்த எண்ணங்களைத் தோற்றுவித்து உயர் நெறியில் செலுத்துவதே உண்மையான கல்வியாகும். தமிழ் நாட்டில் பிறந்து தமிழ் நாட்டுச் சோறு தின்று, தமிழ் நாட்டுத் தண்ணீர் குடித்து, தமிழ் நாட்டில் வீசும் காற்றை உயிர்த்து, தமிழ்நாட்டில் உயிர் வாழ்வோர் அனைவரும் தத்தம் குழந்தைகட்குத் தமிழிலேயே கல்வி புகட்டுதல் வேண்டும் என்ற உறுதியான கருத்தை உடையவராக விளங்கினார். அவரைப் போலும் நாம் தமிழ் மொழியைக் காக்கவேண்டும். அவ்வாறு காத்தால் தான் நாம் ஒவ்வொருவரும் தமிழன் என்ற உணர்வோடு வாழமுடியும்.

# கள்ளர் சரித்திரம் - ஒரு மதிப்பீடு

முனைவர் சி. சுந்தரேசன்
தஞ்சாவூர்

தமிழக வரலாற்றில் மிகத் தொன்மையான காலமுதற் கொண்டு சிறப்புற்று விளங்கும் குடிகளுள் ஒருங்கிணைந்த தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலான மாவட்டங்களில் வாழும் கள்ளர்குடி தனிச்சிறப்புடைய தாகும்.

நாடு, மக்கள், வீரம், கொடை, செல்வம், உயர்வு, அன்பு, காதல் பற்றிய உயரிய கருத்துக்களைக் கற்பனை இல்லாமல் அழகுறக் கூறிய அரிய நூல் நாட்டார் படைத்தளித்த அரிய நூல். உலகின் எந்த நாட்டிலும் எந்த மொழியிலும் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழர் வரலாற்றில் கள்ளர் பெருமக்கட்கு ஒரு மிகப்பெரிய வரலாறு உண்டு என்பதனை வரலாற்று இலக்கிய ஆதாரங்களுடன் ஆராய்ச்சிப் புலமையுடன் வெளிப்படுத்தியிருக் கிறார்.

நூலில் நுகவுரையில், 'உலகத்தில் எவ்வகையான நற்செயலுக்கும் ஊக்கமும் உணர்ச்சியும் இன்றியமையாதன. அவற்றை அடைவதற்குரிய சாதனங்கள் பலவற்றிலும் அவர்களது முன்னோரைப் பற்றிய அறிவும் நினைவும் சிறந்தவை. அந்நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெறும் தேச சரித்திரங்கள் பெரிதும் பயன்படுவனவாகும். ஒரு சாதி அல்லது வகுப்பினர் குறித்து எழுதப்பெறும் வரலாறு அவ்வகுப்பினர்க்குள் உணர்ச்சி உண்டாக்கும் அளவிலாவது பயனளித்தல் கூடும். அன்றியும் தேசிய வரலாற்றுக்கு அஃது ஓர் உறுப்பாதலும் அமையும். இக்கருத்தால் பற்பல நாட்டிலும் பல வகுப்பினர் தங்கள் சாதி சம்பந்தமான நூல்களை எழுதி வைத்திருக்கின்றனர்.

தமிழ்நாட்டு மக்களில் தொகையாலும் நிலவுரிமை முதலியவற்றாலும் பெரிதும் கருதப்பட வேண்டியவர்களை கள்ளர், மறவர், அகம்படியர் என்பவர்களைப் பற்றிய வரலாறு வெளிவந்ததில்லை. சில மாவட்ட மான்யுவிலும், ஜில்லா கெசட்டிலும் வேறிடங்களிலும் இவர்களைக் குறித்துச் சிறுபான்மையாக எழுதப்பட்டிருக்கின்றன. எனினும் அவை முற்றிலும் உண்மையறிந்தவர்களால் எழுதப்பட்டவை அல்ல. அவை மாத்திரமின்றி எழுதினோரின் சிலர், குறுகிய நோக்கமும் அசூசையும் கொண்டுள்ளோர் எனவும் கருத வேண்டியுள்ளது என்று குறிப்பிடுகிறேன். கள்ளர்கள் தொன்றுதொட்டு ஆட்சி நடத்திய வகுப்பினர் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. கடைசியாக நாடு விடுதலை அடையும் வரையில் புதுக்கோட்டை மன்னர் தொண்டைமான் ஆண்டு வந்தமையும் பல சமீன்தாரும் பெருநிலக்கிழார்களும் மிகுதியாக இருந்தமையை அரசாங்கக் குறிப்புகள் காட்டுகின்றன. சென்னை அரசாட்சிக்குட்பட்ட ஜமீன் நிலங்களைக் கூடியவரையில் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சென்னை அரசாங்கத்தினரால் *1902, 1903* ஆண்டுகளில் பங்கிடப்படாத நிலச்சொத்துக்களைக் குறித்த மசோதா சட்டம் The Madras Imparlible Estates Bill 1903 என்பது. இதன் எல்லைக்குள் அகப்பட்ட சமீன்களில் தஞ்சையில் உள்ளவை, கண்டன்கோட்டை, கல்லாக்கோட்டை,

கோனூர், சில்லத்தூர், பாலையவனம், பாப்பாநாடு, சிங்கவனம், மதுக்கூர், நெடுவாசல், சேந்தங்குடி, அத்திவெட்டி என்ற பதினான்கும். அத்திவெட்டி, கோனூர் நீங்கலாக உள்ளவை அனைத்தும் கள்ளர் சமீன்களே. பாளையக்காரர்களைப் போன்று செல்வமும் செல்வாக்கும் உடையவர்களாகவே பலர் இவ்வகுப் பினர் இருந்திருக்கின்றனர்.

இவ்வகுப்பினர் குறித்து எழுதினோர் யாரும் இவைகளைச் சிறிதும் ஓர்ந்தவரெனக் காணப்படவில்லை. இக்காரணத்தினா லேயே கள்ளர் சரித்திரம் என்னும் இவ்வுரை நூல் எழுதுமாறு நேர்ந்தது என்று நாட்டார் குறிப்பிட்ட நிலையில் தர்ஸ்டனின் தென்னிந்திய குலங்களும் குடிகளும் என்ற நூலில் கள்ளர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதனை இங்கே சில எடுத்துக் காட்டுகளாகக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

கள்ளர் – என்ற சொல் சாதி, இனம், நாடு முதலிய வேறு பாடின்றி திருடர்களைக் குறிக்கப்பயன்படும் சொல்லாகும் என்கிறார் (டர்னல், ப. 71). திருட்டு எனப் பொருள்படும் கள்ளம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்த பெயரே கள்ளன் எனப் பொதுவாக வழங்கி வருகின்றது என்கின்றனர் நெல்சனும், ஓப்பெர்டும். பல்லவர்கள் நாடான தொண்டை மண்டலமே கள்ளர்கள் தொடக்கத்தில் வாழ்ந்த நாடாக வேண்டும் என்கிறார் தர்ஸ்டன். முதலில் படைவீரர்களாக இருந்த இவர்கள் அதனைக் கைவிட வேண்டி வந்தவுடன், கொள்ளையில் ஈடுபட்டுத் தங்களு டைய திருட்டு, வழிப்பறி ஆகியவற்றால் மற்றவர் வெறுப்புக்கு மிகுதியும் ஆட்பட்டுவிட்டதால் கள்ளன் என்ற பெயருக்கு உரியவர்களான இந்தச் சாதியினருக்கு அப்பெயரே சாதிக்குரிய பட்டப் பெயராக நிலைத்துவிட்டது என்கிறார் டெய்லர். கள்ளர் களைக் குறுப்பர்கள் என்கிறார் ஸ்டுவர்ட். வீடுகளில் கன்னமிடுதல், வழிப்பறி, கூட்டுக்கொள்ளை, திருட்டு, கால்நடைகளைக் கவர்தல் முதலியன கள்ளர்கள் வழக்கமாக ஈடுபடும் குற்றச் செயல்கள் என்று தர்ஸ்டன் (ப. 88) குறிப்பிடுகின்றார். பயணிகளை இரவில்

வழிமறித்துக் கொள்ளையடிப்பது கள்ளர்களின் முக்கியத் தொழிலாகும் என்றும் (ப. 89) குறிப்பிடுகிறார். அப்பேதுபைஸ் என்பார், “திருட்டுத் தொழில் தனக்கோ தன் இனத்திற்கோ இழிவு ஏற்படுத்துவதாக இவர்கள் கருதவில்லை. இவர்கள் திருட்டினைப் பிறப்புரிமையின் அடிப்படையில் தங்களுக்குரிய கடமையாக அமைந்த தொழிலாகக் கருதுவதே இதற்குக் காரணமாகும். கள்ளன் ஒருவனை நீ எந்த சாதியினைச் சேர்ந்தவன் எனக் கேட்டால் அவன் கலக்கம் ஏதுமின்றித் தான் ஒரு கள்ளன் எனக் கூறுவான் என்கின்றார் (ப. 89)

இவ்வாறெல்லாம் படைக்கப்பட்ட வரலாற்றினை அறிந்த நாட்டார் இன்னவரின் முன்னோர் பழையநாளில் எவ்விடத்தில் எந்த நிலைமையில் இருந்தனர், இடைக்காலத்தில் அவரது நிலைமை தற்காலத்தில் எப்படி உள்ளனர் என்பதனை விளக்குமுகத்தான் இந்நூலில் ஆராய்ந்து காண்கின்றார். 1923 ஆம் ஆண்டு முதற் பதிப்பும் 1928ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பும் நூற்றாண்டு விழாவான 1984இல் மூன்றாம் பதிப்பும் வெளிவந்துள்ள கள்ளர் சரித்திரம் பழந்தமிழ் மக்கள், நாக பல்லவ சோழரும், கள்ளரும்; அரையர்களின் முற்கால நிலைமை, புதுக்கோட்டை அரசரும், குறுநில மன்னரும்; நாடு, நாட்டுக்கூட்டம் நாடுகாவல்; நன்மக்கள், தற்கால நிலைமை சீர்திருத்தம்; பட்டப்பெயர்கள் என்ற ஏழு அதிகாரங்களாக இந்நூல் அமைக்கப்பட்டு இருக்கிறது.

*1. பழந்தமிழ் மக்கள்:–* வி. கனகசபை பிள்ளையாரின் 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்ற நூலில் நாகர், திராவிடர், தமிழர், ஆரியர் என்ற நான்கு பிரிவுகள் காணப்படுகின்றன. அவரது குறிப்பிலிருந்தாவது மற்றவர்களது குறிப்பிலாவது இப்பொழுது காணப்படும் மக்களில் இன்னவர் நாகர், இன்னார் திராவிடர் என்று அறிவது அரிதாக இருக்கிறது.

நாகர் என்பார் இந்திய நாட்டிலும் இந்தியாவின் தெற்கிலும் கிழக்கிலும் உள்ள தீவுகளிலும் மிகப் பழைய நாளில் வாழ்ந்து வந்த மக்கள் என்பதும் ஆரிய, சந்திரகுலத்துப் பேரரசராயினாரும் இவ்வகுப்பினருள் திருமணத்தால் கலந்திருக்கின்றனர் என்பதும் நாகரிகத்தால் மிக மேன்மையுற்றிருந்தவர் என்பதும் உண்மை நிலையாகும். திராவிடர் என்ற சொல்லானது தமிழ் எனத் திரிந்து உள்ளது என்று ஒருசாராரும், தமிழ் என்னும் சொல்லே திராவிட மாயிற்று என்று மற்றொரு சாராரும், திராவிடம் என்பது நாட்டின் பெயர், தமிழ் என்பது மொழியின் பெயர் எனப் பிறிதொரு சாராரும் பலபடக் கூறுவர் என்கிறார். கனகசபைபிள்ளை திராவிடர் வேறு தமிழர் வேறு என்று கூறினாலும் திராவிடர் முன்னும் தமிழர் பின்னுமாக இந்நாட்டில் குடியேறினர் என்பதன்றி இவர் திராவிடர் இவர் தமிழர் என விளங்க உரைக்கவில்லை என்கிறார்.

தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழர் உறைவிடம் தமிழகம் ஆன தென்னாடே என்பதும் ஒரொருகால் வடக்கிலும் சென்று ஆண்மை காட்டியிருக்கின்றனர் என்பது இவரது முடிவு. தமிழர் என்னுஞ்சொல் தொன்று தொட்டு மொழியின் பெயராகவும் நாட்டின் பெயராகவும் வழங்கி வருகின்றது. திராவிடம் என்பதன் திரிபுதான் தமிழ் என்பது சிறிதும் பொருத்தமில்லை என்கிறார். தென்புவியில் முதன்முதல் தோன்றியோரே தமிழரென்பதும் அதன் பின்னர் பல நாடுகட்கும் முறையே குடியேறினர் என்பதும் உண்மை யாகும். முதன் மக்களின் தோற்றத்திற்கு நெடுங்காலம் பின்னரே தமிழகம் அல்லது தமிழ்நாடு என்ற வரையறை ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்கிறார்.

''சதுமறையாதியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ யனாதியென மொழிகுவம் வியப்பாமே''

என்று சுந்தரம்பிள்ளை கூற்றிலிருந்து தமிழ் இந்தியா முழுதும் விளங்கி தென்னிந்தியாவாகிப் பின்னர் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்ட தமிழகத்து மக்களைக் குறிப்பதாயிற்று.

ஆரிய மக்கள் தமிழ்வேந்தருடன் கலந்து நம்பு செய்து கொண்டு அவருதவியால் தமிழ் நாட்டிலும் நால்வருண பாகுபாட்டினை ஏற்படுத்தினர். ஒரு நாட்டினர் வேறு நாட்டிற்குச் சென்று செல்வாக்குப் பெற்றபொழுது தமது கொள்கைகளை அங்கும் நிலைநாட்ட முயல்வது இயற்கை. தமிழகத்திலும் அறிஞரும் அரசரும் வணிகரும் உழவரும் முன்னே இயல்பாக இருந்தனர் என்றும் அன்னார் வேறு வேறு வகுப்பினர் என்பதும் அவர்களுக்கு இன்னின்ன தொழில்கள் உரியன என்ற வரையறையும் இல்லை. ஆரிய மக்களே வரையறை ஏற்படுத்தினர். எனினும் ஆரிய நால்வருணத்திற்கும் தமிழ் நாற்குலத்திற்கும் வேற்றுமை பெரியது ஆகும். தமிழரின் பெரும் பகுதியினர் இதற்குக் கட்டுப்படவில்லை. இன்றைக்கும் கட்டுப்படாமலிருக் கின்றனர்.

நாக பல்லவ சோழரும் கள்ளரும்: கள்ளர் குலத்தவர் பழந்தமிழரில் எவ்வினத்தைச் சார்ந்தவர்கள் என்றும் இன்னவர் நிலைமை எத்தன்மையது என்றும் ஆராயுங்கால், சங்க நாளில் திருவேங்கடத்தை ஆண்ட புல்லி என்னும் அரசன் "கள்வர் கோமான்" (அகம்) என்று கூறப்படுகிறான். அவன் வீரத்திலும் வள்ளன்மையிலும் மிக மேம்பட்டவன் என்று தெரிகிறது. "கள்ளர் பெருமகன் தென்னவன்" (அகம்) என மதுரைக் கணக்காயனார் பாண்டியனைக் குறித்துள்ளார். சங்க நாளிலே 1800 ஆண்டுகளுக்கு முன்பு கள்வர் என்ற பெயர் வழக்கு இருந்ததென்பதும் கள்வர் குலத்தவர் அரசராயிருந்தனர் என்பதும் வெளிப்படுகிறது.

"வினை நவில் யானை விறற் போர்த் தொண்டையர்" என்ற அகப் பாடலில் வேங்கடமலையானது தொண்டையருடையதாக லின் தொண்டையர் கள்வர் என்ற பெயர்களுள் ஒரு வகுப்பினர்க்கு உரியன என்பதும் பண்டைய நாளில் வேங்கடமும் அதனைச் சார்ந்த நாடும் அவர்களது ஆட்சியிலிருந்தது என்பதும் புலனாகிறது.

விசயாலய சோழனுக்கு முன்னர் தஞ்சையை முத்தரையர் ஆண்டு வந்தனர். செந்தலைக் கல்வெட்டில் வல்லக்கோன், தஞ்சைக்கோன், கள்வர் கள்வன் பெரும்பிடுகு முத்தரையன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. நியமம் கல்வெட்டிலும் குறிக்கப்பட்டிருக் கிறது. வல்லத்தரசர், தஞ்சைராயர், செம்பியன் முத்தரையர், முத்திரியர் என்றும் பட்டப் பெயர்கள் இன்னார்கள் தஞ்சையிலும் தஞ்சையைச் சூழ்ந்த இடங்களிலும் இப்பொழுதும் இருக்கின்றனர்.

மு. இராகவையங்கார் 'நாலடியாரில் முத்தரையரைப் பற்றி இரண்டு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொண்டை நாட்டில் 7, 8 நூற்றாண்டுகளில் பிரபலம் பெற்ற கள்ளர் மரபினர் என்றும், இவ்வம்சத்தவர் சங்க காலத்திலேயே சிற்றரசர்களாக விளங்கியவர்கள் என்பது கள்வர் கோமான் புல்லி, கள்வர் கோமான் தென்னன் என்ற பெயர்கள் அகநானூற்றிலும் பயிலப் படுவதாலும் அறியலாம்' என்று செந்தமிழ் தொகுதி ப. 273இல் குறிப்பிடுகிறார்.

பழந்தமிழரில் கள்ளர் எந்தக் குலத்தில் அடங்குவர் என்பதில் பல்வேறு கருத்துக்கள் உண்டு. நாகர் வகுப்பினர் என்றும் பல்லவ வகுப்பினர் என்றும் சோழர் வகுப்பினர் என்றும் கூறு கின்றனர். கனகசபை பிள்ளை நாகர் வகுப்பினர் என்றார். இராம நாதபுரத்தரசன் பா.இராசராசசேதுபதி சோழர்களுக்கு முன் இப்போதுள்ள கள்ளர் மறவர்களின் முன்னோர்கள் நாகர் என்ற பெயரோடு சோழ ராச்சியத்தை ஆட்சி புரிந்ததாகவும் அவர்களின் தலைநகராக தஞ்சை, திருச்சி; காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இடங்கள் இருந்தன வாகவும் சரித்திரம் வாயிலாக வெளியாகிறது என்பார் வா.கோபாலசாமி ரகுநாத ராசாளியார். இந்திர குலாதிபர் சங்க 4ஆம் ஆண்டு விழாவில் தலைமையுரையில், "இந்நாட்டை ஆண்ட அரச பெருமக்களுள் சோழரைக் கள்வர் என்று டாக்டர் பர்னலும் மற்றும் வெங்காசாமிராவும் குறிப்பிட்டுள்ளனர் என்று

உரை செய்துள்ளார். சோழர் சாதியில் கள்ளரையும் பாண்டியர் சாதியில் மறவரையும் செந்தமிழ்த் தொகுதியில் ம.சீனிவாசையங் கார் தெரிவிக்கிறார். வின்சரஸ்மித் என்னும் சரித்திர அறிஞர் தமது புராதன இந்திய சரித்திரம் என்ற நூலில் பல்லவர் வரலாறு கூறும்போது கள்ளர் வகுப்பினரையும் இயைத்துக் கூறுகின்றார்.

கள்ளர்களின் தலைவர்களாகிய புதுக்கோட்டை மன்னர் கள் தம்மை இராச பல்லவனென்றும் பழைய அரச வம்சத்தின ரென்றும் சொல்லிக் கொள்கின்றனர். சர் வால்டர் எலியட் என்பார் கள்ளர்கள் கலகக் கூட்டத்தினரில் ஒரு வகுப்பினர் என்றும் ஆண்மையும் அஞ்சாமையும் வீரமும் உள்ளவர்கள் என்றும் கூறுகின்றார். வரலாற்றுப்படி பல்லவர்களும் அவர்களை ஒத்தவர் களேதான். கள்ளர்கள் பல்லவ வகுப்பினர் என்பதற்குப் பல பொருத்தங்கள் உள்ளன. பல்லவர் தொண்டையர், காடவர், சேதிபர், காடவர் கோன், காடுவெட்டி என்று திருத்தொண்டர் திருவந்தாதியும் பெரியபுராணமும் திருவண்டத்தொகையும் சுட்டுவதை,

வையநிகழ் பல்லவர்தங் குலமரபின் வழிதோன்றலை
கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவறை யடிகலின்
காடவர் கோன் கழற்சிங்கன்
பல்லவர் குலத்து வந்தார்
சேதி நன்னாட்டு நீடு திருக்கோவிலூர்

எனக் காட்டுகிறார். முத்தரையர் என்ற சொல் முதலில் பல்லவர் களுக்கு உரியதாய் பின்பு அவர்கீழ் ஆண்ட அரசர்க்கு வந்ததெனச் சிலர் கருதுகின்றனர். முதல் மகேந்திரவர்மன் முதல் பரமேச்சுர வர்மன் என்ற பல்லவ வேந்தர்கட்கு முறையே மகாப்பிடுகு, பெரும் பிடுகு (பிடுகு – இடி) என்ற பட்டங்கள் உண்டு. முத்தரையர் களுக்கும் இப்பெயர் உண்டு. திருமய்யத்தில் ‘விடேல் பிடுகு’ என்ற பெயருள்ள முத்தரையன் ஏரி ஒன்றை வெட்டி வைத்திருக்கின்றான்.

நந்திகலம்பகத்தில் நந்திவர்மனை 'விடேல்விடுகு' என்று பல பெயர்கள் ஒத்திருப்பது முத்தரையர் பல்லவ வகுப்பினர் என்றும் காட்டும் என்கிறார்.

காஞ்சியிலிருந்து ஆண்ட பல்லவ பேரரசர்கள் தம் இனத்தாரையே தஞ்சை முதலிய இடங்களில் அரசாளும்படி செய்திருக்கின்றனர். கள்ளர்கள் பல்லவ வகுப்பினர். அதாவது பல்லவரின் ஒரு கிளை என்பது பெறப்படும். கள்ளர்கள் தொண்டை நாட்டினின்றும் சோழ, பாண்டி நாடுகளில் குடியேறி அரையர் என்ற பெயருடன் தன்னரசாக ஆண்டு வந்திருக்கின்றனர். பல்லவராயர், தொண்டைமான், முத்திரையர், கள்ளர் என்னும் பெயர்கள் ஒரே வகுப்பினர். பல்லவர்கள் பின்பு தமது பேரரசாட்சியை இழந்து சிற்றரசர்களாயும் அமைச்சர்களாயும் தண்டதலைவர்களாயும் இருந்து வந்துள்ளனர் என்பதை வரலாறு காட்டுகிறது. பல்லவர் வழியினராகிய கள்ளர்களோடு சோழரும் கலந்துவிட்டமையும் தெரிகிறது. பல்லவர் வழியும் சோழர் வழியும் ஒரு வகுப்பு இஃது எனல் பொருந்தும் என்கிறார்.

கள்ளர்களுக்கு இந்திரர், இந்திரக்குலத்தார் எனப் பெயர் வந்தமைக்கான காரணத்தை வா.இராசகோபால ரகுநாத ராசாளியார், 'கள்வொனன் கிளவி கரியோனென்ப' எனத் திவாகரமும் கடகரிப் பெயரும் இருநிற மகளும் கர்க்கடக விராசியும் ஞெண்டும் கள்வன்' எனப் பிங்கலந்தையும் கூறுவதி லிருந்து கள்வன் என்னும் சொல் கருநிறமுடையோன் என்றும் பொருள். ஆரியர் தமிழரைக் கரியவர் என்று இருக்குவேத மந்திரத்தில் கூறுவர். சோழனும் கருநிறம் பற்றியே 'மால்' என அழைக்கப்படுகிறான். இவற்றால் இந்திரகுலத் தார் என்றும் கள்வர் குலத்தார் எனினும் இந்தியப் பழங்குடியின ரெனத் தமிழர் என்பதே பொருள் எனத் துணியப்படும் என்கிறார்.

கள்வர் என்னும் சொல்லுக்கும் பிறர் பொருளை வௌவு வோர் என்னும் பொருளும் பகைவர் என்றும் பொருளும் உண்டு. இதற்கு நேரான தஸ்யு என்னும் சொல்லை வடமொழி அமர கோசத்தில் சூத்திரவர்க்கத்தில் சோரன் என்னும் பொருளில் வைத் திருப்பதோடு சத்திரிய வர்க்கத்தில் பகைவன் என்னும் பொருளில் வைத்திருத்தலும் காணப்படுகிறது. ஆரியர் இந்நாட்டுப் பழங்குடி களை தஸ்யுக்கள் என வழங்குகின்றனர். இங்ஙனம் ஆரியர்களால் தமக்குப் பகைவர் என்றழைக்கப்பட்ட பழந்தமிழரே கள்வர் என்னும் சொல்லுக்குப் பொருளாய் நிற்றல் துணியப்படுகிறது. கள்ளர் என்னும் சொல்லுக்குக் கரியவர், பகைவர் என்ற இருபொருளும், இந்திர குலத்தவர் என்னுஞ் சொல்லுக்குக் கரியவர் என்ற ஒரு பொருளும் கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு சாரார் களப்பிரர் என்னும் பெயரே கள்ளர் எனத் திரிந்த தாகும் எனக் கருதுகின்றனர். சீவகசிந்தாமணியில் 741 செய்யுளில் "கள்ளரான் புலியை வேறுகாணிய" என்னும் தொடருக்கு, 'அரசரைக் கொண்டு சீவகனைப் போர் காணவேண்டி' என நச்சர் உரையெழுதுகின்றமையால் கள்ளர் என்னும் சொல்லுக்கு அரசர் எனும் பொருள் கருதப்படுகிறது. சீவகனைப் புலி என்று கூறியதற் கேற்ப அரசரைக் கள்ளர் என்றார் எனின் அப்பொழுதும் வீரத்தின் மேம்பட்டார் என்னும் பொருள் பெறப்படுகின்றது.

வீரர் என்னும் பொருள் பற்றியே கள்வர் அல்லது கள்ளர் எனும் குலப்பெயர் தோன்றியது பழைய ஆதாரங்கட்கும் யூக அனுபவங்கட்கும் ஒத்ததாக இருக்கிறது என்று துணிகிறார். இவர்கள் வீரராயினும் அரசராகவோ படையாளராகவோ சென்று மாற்றாரது நிலத்தைக் கொள்ளை கொண்டமையால் இப்பெயர் எய்தினராவார் எனில் உலக வரலாற்றில் அறியலாகும் எந்த அரச பரம்பரையினரும் கொள்ளை கொள்வோர் என்னும் பெயருக்கு உரியவரே ஆவர் என்பது பொருளாகும்.

இவ்வகுப்பினரில் களவுத் தொழில் செய்வோர் இருப்பது உண்மையே. வேறு எவ்வகுப்பிலேதான் இத்தொழில் செய்வோர் இல்லாதிருக்கின்றனர். களவுக்குக் காரணம் அவரவர் நிலைமையே அன்றி ஓர் வகுப்பினும் பிறத்தலன்று. குற்றத்திற்கு அனைவரும் பங்காளிகள் என்று உணரவேண்டும். இதுகாறும் கூறியவற்றி லிருந்து கள்வர் அல்லது கள்ளர் எனும் குலப்பெயரின் வரலாறு பலராற் பலவாறு கூறப்படினும் வீரர் எனும் பொருள் பற்றி அப்பெயர் உண்டாயிற்றென்பதே முற்றிலும் பொருந்தியது எனல் பெறப்படுமாறு காண்க என்கிறார்.

இந்திரகுலத்தார் என்பதற்கு கள்ளர், மறவர், அகம்படை யார் என்ற மூன்று வகுப்பினரையும் குறித்து பூவிந்திர புராணம் மற்றும் கள்ளகேசரி புராணங்களில் இந்திரன் அகலிகையால் விருப்பங் கொண்டிருந்ததையறிந்த இந்திராணி, அகலிகைபோல மோகனாங்கியைப் படைத்திட இந்திரன் அவளுடன் சேர்ந்து இம்மூவரையும் பெற்று அவர்கள் தமிழக மூவேந்தர்களாயினர் என்று அப்புராணங்கள் கூறுகின்றன. 1800 ஆண்டுக்கு முன் சாவக நாட்டில் நாகபுரத்தில் அரசுபுரிந்த பூமிசந்திரன் புண்ணியராசன் நாக அரசுகளை இந்திர குலத்தார் என்று மணிமேகலை கூறுகிறது. சோழன் தம் குல முதல்வனாகிய வேந்தனைத் தெய்வமாக வழிபட்டு வந்தாரெனக் கூறுவர். பழைய காலத்தில் சோழர்கள் இந்திரனுக்குப் பெருஞ்சிறப்புடன் விழா எடுத்தமை சிலம்பு காட்டு கிறது. அராதிராசன் முதலாக வரு சோழன் என்று கலிங்கத்துப் பரணி கூறுகிறது. சோழர் இந்திர குலத்தவரென்பது பெறப்படுத லால் அவர்களது வழியினராகிய கள்ளரும் இந்திர குலத்தவராவர். தேவர் என்னும் பெயர் இராசராசத்தேவர், இராசேந்திரத்தேவர், குலோத்துங்கசோழதேவர் எனச் சோழ மன்னருக்கு வழங்கியிருப்ப தும் இம்மூன்று வகுப்பாரும் தேவர் என வழங்கப்படுவதும் உண்டு.

கள்ளர் இந்திரகுலத்தார், தேவர், அரையர், நாடாள்வார் என்னும் இவ்வைந்தும் இவ்வகுப்பினரைக் குறிக்கும் பொதுவான

பெயர்களாகும். இவற்றுள் அரையர் என்பது பட்டங்களோடும் கலந்திருந்தமையாலும் சரித்திர ஆதாரவுடைமையாலும் முற்றிலும் பொருந்தியதோர் பொதுப் பெயராகக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வருகிறார். கள்ளர் அல்லது அரையர் என்பார் பல்லவரும் சோழரும் கலந்த ஓர் வகுப்பினர் என்பது தக்க மேற்கோள் உணர்த்தபெற்றது. இக்குடியினர் தம் இயற்பெயரோடு யாதனுமொரு பட்டப்பெயரைக் கொண்டு விளங்குகின்றனர். இத்தகைய வகையில் 348 பட்டங்களை நாட்டார் தொகுத்துத் தந்துள்ளார். இடைக்காலச் சோழ கல்வெட்டுக்களில் கள்ளர் பட்டப்பெயர்கள் என்று டாக்டர் அ.தட்சணாமூர்த்தி அவர்கள் 123 பட்டப் பெயர்களை ஆய்வு செய்து தந்துள்ளார்கள். ஆரிய குலக்கள்ளர் சரித்திரத்தைப் படைத்தளித்த மு.சுவாமிநாத மாதவராயர் தமது நூலில் 645 பட்டப் பெயர்களையும் யு. சுப்பிரமணியம் அவர்களின் கள்ளர் சமூகத்தினரின் பட்டப் பெயர்கள் என்ற நூலில் 2588 பட்டப்பெயர்களையும் வழக்கறிஞர் புலமை வேங்கடாசலம் வன்னியரின் கள்ளர் வரலாறு என்ற நூலில் 1907 பட்டப்பெயர்களையும் தொகுத்தளித்துள்ளார். இப்பட்டங்கள் வரலாற்றுத் தன்மை கொண்டவையாகும். இவ்வினப் பெருமக்கள் தமிழகத்தின் பகுதிகளை ஆண்ட பல்வேறு அரச மரபினரோடும் தொடர்புடையார் என்பதனை இப்பட்டப் பெயர்கள் ஐயத்திற்கு இடமின்றி நிறுவுகின்றன.

கள்ளர் பெருமக்கட்கு இந்நாளில் வழங்கும் பட்டங்களில் பல சோழ மன்னர்கள் வெளியிட்ட கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. பல பட்டங்கள் சிறிதும் மாற்றமின்றியும் சில பட்டங்கள் சிறிது மாற்றத்தோடும் காணப்படுகின்றன. தம் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களைத் தம் அரசியலில் உயரதிகாரிகளாகக் கொண்டிருந்தனர். அவர்களே கல்வெட்டுக்களில் கையொப்பமும் மேலொப்பமும் இட்டுள்ளனர். தம் கீழ் பணியாற்றிய அதிகாரிகளின் அருஞ்செயல்களைப் பாராட்டி அவர்கட்கு உரிய பட்டங்கள் வழங்குவது மரபாகக் கடைபிடிக்கப்பட்டது.

அங்கராயர், அரசாண்டார், ஈழத்தரையர், உலகங்காத்தார், உறந்தைராயர், காலிங்கராயர், கொங்கரையர், சேதிராயர், பாண்டியர், மழவராயர், முனையரையர், வில்லவராயர் முதலிய பெயர்களெல்லாம் நில ஆட்சியில் இவர்களுக்குள்ள சம்பந்தத்தைப் புலப்படுத்துகின்றன. சோழ மன்னர்கள் ஈழநாட்டையும் கொங்கு நாட்டையும் கங்க நாட்டையும் கலிங்கம், கடாரம், கொல்லம், மண்ணைக் கடக்கம் முதலான நாட்டுப் பகுதிகளையும் வென்று தன்னாட்சிக்குக் கொண்டு வந்தமையை வரலாறு கூறி நிற்கிறது. ஈழத்தரையர், ஈழமுண்டார், கொல்லத்தரையர், கொல்லமுண்டார், கொங்கரையார், கங்கா நாட்டார், சோழகங்கா நாட்டார், சோழங்கத் தேவர், கலிங்கராயர், கடாரத் தாங்கியார், மண்ணையார் என்னும் பட்டங்கள் கள்ளர் குடியார்க்கும் மேற்கண்ட வெற்றிகட்கும் உள்ள உறவைக் காட்டுகின்றன. முதலாம் ராசராசன் சிங்களரை வென்று சிங்களாந்தகன் என்றும், கேரளரை வென்று கேரளாந்தகன் என்றும் பெயர் பெற்றான். சிங்களராயர், சிங்களேந்தியார், கேளராயர் என்னும் கள்ளர் பட்டப் பெயர்கள் இராசராசன் காலத்தில் வழங்கப்பட்ட பட்டங்கள் என்பதில் ஐயமில்லை. பல்லவராயர், பல்லவ வாண்டார், கச்சிராயர், காடவராயர், காடு வெட்டியார் முதலான பட்டங்கள் கள்ளர்களைப் பல்லவரோடு உறவுபடுத்துகின்றன. கொடும்புராயர் என்னும் பட்டமும் அண்ணவாசல்ராயர் என்பது இருகோளர் என்பதும் கொடும்பாளூர் என்னும் கொடும்பையை ஆண்ட வேளிர்களோடு இவர்களை உறவுப்படுத்துகின்றன. கோவலூர் என்பது இன்று திருக்கோவலூர் என்று வழங்குகிறது. இது ஈராயிரமாண்டுகட்கு முன்பு மலையமான்களால் ஆளப்பட்டது. மலையமான் திருமுடிக்காரி இக்குடியிற் பிறந்த வள்ளலாவான். கோவலராயன் என்று இப்பகுதியை ஆண்டோர் குறிக்கப்பட்டுள்ளனர். கள்ளரில் கோபாலர் என்னும் பட்டமுடையாரும் மலையமான் பட்டம் உடையாரும் இக்குடியினரால் தெளிவு.

கள்ளர்கள் சிற்றரசராக இருந்தபோது பல இடங்களில் அரண்கள் கட்டியிருந்தமையைப் பனையக்கோட்டை, நெடுவாக் கோட்டை, அருமலைக்கோட்டை, வாழவந்தான்கோட்டை, வரவுக் கோட்டை, வத்தனாக்கோட்டை, பரிதிக்கோட்டை, கிள்ளிக் கோட்டை, புதுக்கோட்டை, வாளமரக்கோட்டை முதலான கள்ளர்கள் மட்டும் வாழும் எண்ணற்ற ஊர்கள் கோட்டை என்று அமைந்துள்ளன. சில ஊர்களில் கோட்டைகள் இருந்தன. அவைகள் அழிந்த இடங்களில் வீடுகள் கட்டப்பட்டிருப்பதால் வீடுகளுக்கும் கோட்டை என்று பெயர் வழங்குகிறது. சில ஊர்களில் கோட்டை அழிந்த விடங்களில் திடல்களும் நிலங்களும் கோட்டை மேடு, பீரங்கிமேடு என்னும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

# நாட்டார் ஐயாவின் கோயில்

திரு. க. திருநாவுக்கரசு
தஞ்சாவூர்

''பெருக்காறு, சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாலற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே''
(திருநாவுக்கரசர் தேவாரம்)

பார் போற்றும் பழைய விளம்பதியாம் தஞ்சை மாவட்டத்தில் கங்கையில் புனிதம் மிக்கக் காவேரியின் கிளைநதியாம் குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் அமைந்த நடுக்காவேரி என்னும் திருப்பதியில் தாரண ஆண்டுச் சித்திரைத் திங்கள் இரண்டாம் நாளில் (12. 4. 1884) திருவவதாரம் செய்த சிவப்பிரகாசப்

பேரொளியாம் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களைக் கருதுகோளாகக் கொண்டு காலை முதல் இந்நேரம் வரை நிகழ் வுறும் இக்கற்றறிவாளர்கள் சூழ்ந்த கவின் சேர் கருத்தரங்கில் நானும் கலந்துக்கொள்ளும் வாய்ப்பினை நல்கிய திருவருளை எண்ணிச் சிரந்தாழ்ந்தி வணங்குகிறேன்.

வினையின் நீங்கி விளங்கிய அறிவன் விண்ணின் நீங்கி மண்ணுலகில் தோற்றம் கொண்டது போல் மானிட வடிவம் தாங்கிய அறிவுருவாம் ஐயா அவர்கள் பிறந்த பதியிற் பிறந்ததைத் தவிரப் பெருமை ஏதுமிலாத அடியேனையும் ஒருபொருளாக எண்ணி "நாட்டார் ஐயாவின் கோயில்" என்னும் பொருள் சேர் புகழுடைய பொருளில் ஆயும்படிப் பணித்த விழாக்குழுவினர்க்கு என் நன்றியும் வணக்கமும் உரித்தாகின்றன.

''உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானாற்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே''
– திருமந்திரம்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'' –திருக்குறள்

''புலவர் பாடும் புகழுடையோர் விசும்பில்
வலவன் ஏவா வான்வூர்தி எய்துப'' –புறநானூறு

''நடுகல் அல்லது நெல்லு குத்துப்
பரவும் கடவுளும் இல்'' – புறநானூறு

''நடமாடும் கோயில் நம்பர்'' – திருமந்திரம்

''உள்ளம் ஒருகோயில் உன்னுருவம் அதில் தெய்வம்
கண்கள் அதன் வாசல்'' –திரைப்பாட்டு

போன்றவை எழுதப்பட்டுள்ள இலக்கியச் சான்றாதாரங்களின் மூலம் இந் நிலவுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமக்கள் தம் வாழ்வு முடிந்த பின்னர் கடவுளர் ஆகின்றனர் என்பது மாந்த இன நம்பிக்கை எனத் தெரியவருகிறது. இந்தக் கொள்கை நாடு, மொழி, மத, இன வேறுபாடுகள் எல்லாவற்றையும் கடந்த நிலையில் எல்லா மக்களிடமும் இற்றை நாளிலும் இருந்துவருவது தெற்றென அறியலாகும் உண்மையாம். அத்துடன் மட்டுமின்றி அவர்களின் நல்லுடல் புதைக்கப்பட்ட அல்லது எரியூட்டப்பட்ட இடங்களும் வழிபாட்டுத் தலங்களாக மதித்துத் துதிக்கப் பெறுகின்றன.

சங்க நாளில் 'பெயரும் பீடும் எழுதி' நடப்பெற்ற நடுகற்கள், இடைக்காலத்தில் எழுப்பப்பட்ட கண்ணகிக் கோட்டம் போன்றவை அண்மைக் காலங்களில் நிறுவப்படுகின்ற நினைவிடங்கள் ஆகியன இக்கொள்கைக்கு மேலும் அரண் சேர்த்து வலுவூட்டு கின்றன. அப்பெரியோர் திருவவதாரம் செய்த இடங்களும், வழிபாட்டுக்குரிய திருத்தலங்கள் ஆகின்றன. இராமர் பிறந்த இடம், கண்ணனின் பிருந்தாவனம், மூவர் முதலிகளின் திருப்புக்லூர், சீர்காழி, திருநாவலூர், ஏசு பிறந்த எருசலேம், நம்பெருமானாரின் மக்காத் திருத்தலம் போன்றவை இதற்கு எடுத்துக் காட்டாகின்றன.

இந்த வகையில் நின்று நாம் சிந்திக்கும்போது ஐயா அவர்கள் பிறந்த மண்ணிலேயே அடக்கம் செய்யப்பட்டார் என்பதும் அவர்களின் ஆவி தானும் வினையாற்றிடத்திலேயே பிரிந்திருக்கிறது என்பதும், அதுவும் ஒரு மாணவன் தோளிலேயே பிரிந்திருக்கிறது என்பதும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. மாணவன் தோளிலே ஆசிரியன் சாவதல்லவோ இரந்து கோவுக் குரிய சாவு. உயிர் விட்டு உறுபுகழ் கொண்ட அவ்வுத்தமன் சாவு உலகில் யாருக்கும் கிட்டாத சாவாம். அத்துடன் மட்டுமில்லாது இன்றை நாள் வரை வாழ்ந்து மறைந்த எந்தப் புலவருக்கும்

இல்லாத வகையில் ஐயா அவர்களுக்குக் கற்றளி ஒன்று நடுக்காவேரியில் நிறுவப்பட்டுள்ளது என்பதை எண்ணுந்தோறும் நம் உள்ளம் விம்முகிறது.

''தங்குபுகழ் செந்தமிழ்க்கோர் அன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே''

என்பது சத்தியமாயின் அக்கடவுள் உறைகின்ற இடமும் கோயில் தானே! சத்தியம் நித்தியமல்லவா? இதில் ஐயத்திற்கிடமேது? உலகிலேயே இந்தியா, இந்தியாவில் தென்னிந்தியா, தென்னிந் தியாவில் தமிழ்நாடு, தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டம் என்று கோயில்கட்கும் கலைகட்கும் பெயர் பெற்று விளங்கும் தஞ்சை மண்ணில் அமைக்கப் பெற்றுள்ள ஐயா அவர்களின் கோயிலே நம் அன்றாட வழிப்பாட்டிற்குரிய திருக்கோயில் என்பதில் ஐயமில்லை. ஒன்றினைச் சுட்டிக் கட்டுரையை முடிக்கத் துணிவேன். "நன்றா என்னும் குன்றேறித் தன் கண்களில் கண்ட அளவு தன் நாட்டை எல்லாம் புலவர் பெருமானாகிய கபிலருக்குக் காட்டிக் கொடுத்த சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் இன்றிருந்தானாயின் இவர்களின் தலையில் செழும் பொன்னைப் பெய்து இச் செம்மலைப் போற்றா திருப்பனோ? பண்டு பதினாறு நூறாயிரம் பொன் கொடுத்துப் பட்டினப்பாலையை ஏற்று மகிழ்ந்த மன்னன் கரிகாற்பெருவளத் தான் இச்சோழ நாட்டிலிருந்து இன்று ஆட்சி புரிவனாயின் இவர்களின் மீது மணிகளைப் பெய்து மாண்புறத் தழீஇக் கண்ணீர் வடிக்காதிருப்பனோ?

''ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன்தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாஅது வரைக என்நிலவரை''

எனப் புலவரைச் சிறப்பித்து வஞ்சினங் கூறிய பெருமன்னனான பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இன்றிருந்தானாயின் கொற்கைத் துறைமுகத்தைக் கொணர்ந்து பெய்து தன் கண்ணீர் முத்தையும் சிந்தாதொழிவானோ?

நம் மன்னர்களை இழந்தோம்! புலவர்களைப் போற்றும் புரவலரை இழந்தோம்! புலம்புகின்றோம். மேனாட்டில் சிறந்த புலவர்கள் இருந்து வாழ்ந்து வந்த இல்லங்களை அவ்வரசினர் பொருள் கொடுத்து வாங்கிப் பெரிய எழுத்துக்களால் இவ்விப்புல வர்கள் இவ்விவ்வில்லங்களில் இவ்விவ்வாண்டில் வாழ்ந்து வந்தனர் என எல்லாருமறியப் பெரும் எழுத்துக்களில் பொறித்துப் போற்றி ஓம்படை புரிகின்றனர். தமிழ்நாட்டில் மொழிவளன் படைத்த புலவர் மாட்டுப் பெரும் பற்றுடைய செல்வர்களும் புலவர்களும் இக்கல்லறையினைப் போற்றிக் காத்தல் கடனென அறிவிக்க விரும்புகிறேன்.

வேற்றுநாட்டு மன்னன் ஒருவன் ஆங்கில நாட்டு மன்னனைக் காண அந் நாட்டிற்கு வந்தபோது முதன்முதலாக உலகப்பெருங்கவியாகிய செகப்பிரியர் கல்லறை எங்கேயுளது என வினவி அப்புலவர் பெருமான் கல்லறையின் முன் நின்று அக்கல் லறைக்கு வணக்கம் செலுத்திய பின்னரே அந்நாட்டு மன்னனைக் காணச் சென்றான் என்று பெரியோர் கூறக் கேட்கின்றோம். நம் நாட்டார் ஐயா அடங்கியுள்ள இக்கல்லறையும் பிற்காலத்தில் தமிழக மன்னர்களால், புலவர்களால், பொதுமக்களால் போற்றி வணங்குதற்குரிய கோயிலாக விளங்கலாம். ஐயா அவர்களின் நினைவிடத்தில் எழுப்பப்பெற்றுள்ள கோயில் தமிழர் என்னும் பெயரில் அடங்கும் அனைவராலும் வந்தித்து வாழ்த்தி வணங்குதற் குரிய திருக்கோயிலாகப் பொலிவுறுவதாக!

தன் மொழியைப் போற்றி வளர்க்காத எந்த இனமும் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. எனவே, இந்நாள் தமிழர்கள்

கடைத்தேற உள்ள ஒரே வழி, மொழியும் காத்து, மொழிக்கென வாழ்ந்த புலவர்களைப் போற்றுவதொன்றேயாம். எனவே, இத்தாய்த் தமிழகத்தில் வாழும் மாந்தர் அனைவரும் தமக்குள் உள்ள எல்லா வேற்றுமைகளையும், பாகுபாடுகளையும் விட்டொழித்து நாட்டார் அவர்களைத் தெய்வமாக எண்ணி அவருக்கென எழுப்பப்பெற்றுள்ள கற்றளியினை ஆண்டுக்கொருமுறையாவது சென்று கண்டு வணங்கித் தம் பிறவிப் பிணியறுத்துக் கொள்ள முற்படுவார்களாக!

# நாட்டாரின் கட்டுரைத்திறன்

முனைவர் கோ.ப.நல்லசிவம்
தஞ்சாவூர்

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் "நாவலர்" மட்டுமல்லர்; கைபுனைந்தியற்றும் கவின்பெறு கட்டுரை வல்லரும் ஆவர். இன்று கட்டுரை எழுதுவோர்க்கும் ஆய்வு செய்வோர்க்கும் எத்துணையோ நூல்கள் வழிகாட்டியாக அமைந்துள்ளன. எப்படி கட்டுரை எழுத வேண்டும்? எப்படி மேற்கோளாட்சிகள் அமைய வேண்டும்? பிறன்கோட் கூறல், உடன்படல், மறுத்தல், தானனாட்டித் தனாது நிறுத்தல், எடுத்து மொழிதல் போன்ற உத்திகள் எவ்வாறு ஆய்வில் இடம்பெற வேண்டும் என்று அவை இலக்கணம் பகருகின்றன. ஆயின் நம் நாட்டாரய்யாவின் ஆய்வுக்கட்டுரை களோ அன்றே இத்தகைய அமைப்புகளுடன் திகழ்வது ஈண்டு வியத்தற்குரியன; போற்றற்குரியன.

நாட்டாரய்யாவின் மொழிப்புலமையும், எடுத்துமொழியும் ஆற்றலும், கூறும் கருத்தைத் தெளிவுறக் கூறலும், வெளிப்படுத் தும் பாங்கும், மறுத்துரைக்கும் அழகும் அவர்தம் கட்டுரைகளில் ஒருங்கே அமையப்பெற்றுள்ளன எனில் அது மிகையாகாது.

கட்டுரை என்பது வேறு; ஆய்வுக்கட்டுரை என்பது வேறு. கட்டி உரைப்பது கட்டுரை என்பர். ஆய்வுக்கட்டுரைக்கு நாட்டார் விளக்கம் தரும்போது காயதல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்ந்து உரைப்பது ஆய்வுக் கட்டுரை என்கிறார். மேலும்,

> **''உண்மைப் பொருள் காண வேண்டுமென்பதே ஆராய்ச்சி செய்வாரின் நோக்கமாக இருக்கவேண்டும். இதனோடு இவ்வாராய்ச்சியினால் மக்களுக்கு நன்மை விளையுமா? தீமை விளையுமா? என்றும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தமிழாராய்ச்சி செய்வோர்கள் தமிழைப் புறம்பழித்தும் தமிழ் மக்களை இழிவு படுத்தியும் காட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆராய்ந்தால் அது மிகவும் கொடுமையானதாகும்''**

என்று குறிப்பிடுகிறார்.

## நாட்டார் கட்டுரைகளில் மேற்கோளாட்சிகள்

மேற்கோளாட்சிகள் என்பது ஒரு கட்டுரைக்கு வலிவும் பொலிவும் தருவன. கட்டுரையாசிரியன் தன் கருத்தை நிறுவுவதற்கும், பிறர் கருத்தை மறுப்பதற்கும் அல்லது உடன்படுவதற்கும் இம்மேற்கோளாட்சிகள் மிக இன்றியமையாத உறுப்பாகின்றன. ஆய்வு உலகில் மேற்கோளாட்சிகளை எந்த அளவு ஒரு ஆய்வாளர் பயன்படுத்துகின்றார்; கையாள்கின்றார் என்பதைப் பார்த்தே அவரது ஆய்வின் தரம் மதிப்பிடப்படுகின்றது. இவ்வகையில் நம் நாட்டாரய்யாவின் கட்டுரைகளில் மேற்கோளாட்சிகள் சிறந்த இடத்தைப் பெறுவதோடு தக்க இடங்களில் பயன்படுத்தப் பெறுகின்றன. சான்றாக, "கல்வி" என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில்,

> **''தாங்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு''**

''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு''

''இருளே உலகத்து இயற்கை இருளகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை''

''கைப்பொருள் கொடுத்துங் கற்றல்
கற்றபின் கண்ணுமாகும்
மெய்ப்பொருள் விளைக்கு நெஞ்சின்
மெலிவிற்கோர் துணையுமாகும்''

''அறம் பொருள் இன்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னுங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை''

''ஆயும் தொறுந்தொறும் இன்பம் தரும் கல்வி''

''அறிவிலார் தாந்தன்மைப் பீழிக்கும் பிழை
செறுவார்க்கும் செய்தல் அரிது''

''நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு''

''செஞ்சொற் கவியின்பம்''

''கல்லாதார் நெஞ்சத்துள் காணவொண்ணாதே''

''கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை''

''கற்றில னாயினுங் கேட்க''

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து''

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

''நுண்மாண் நுழைபுல மில்லான் எழில்நலம்
மண்மான் புனைபாவை யற்று''

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

இப்படி 30க்கும் மேற்பட்ட மேற்கோள்களைக் காட்டி, கல்வியின் பெருமையை, அவசியத்தையுணர்த்துகிறார்.

## கட்டுரையின் அறிமுகவுரைப்பகுதி

நாட்டாரய்யா அவர்கள் ஒரு கட்டுரை எழுதத் தொடங்கு முன்னர் அக்கட்டுரைத் தலைப்பை விளக்குமாற்றான் ஒரு சுருக்கமான அறிமுகவுரையைக் கூறிவிட்டுத்தான் பின் கட்டுரைக் குள் செல்வார். இம்முறை இத்துறையில் புதிதாகக் காலூன்று பவர்களுக்கும் ஏனையோர்க்கும் அத்தலைப்பைப் புரிந்து கொள்வதற்கும் அதனைத் தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதற்கும் ஓர் உபாயமாகவே நாட்டாரய்யா அவர்கள் கொண்டிருந்தார் எனில் அது மிகையாகாது. சான்றாக,

"வள்ளுவாய்மொழி" என்ற தலைப்பிட்ட கட்டுரையில், "வள்ளுவர் வாய்மொழி என்னும் தொடர் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறள் என்னும் பொருளாதாகும். திருவள்ளுவ மாலையில் வள்ளுவர் வாய்மொழி மாண்பு வள்ளுவர் வாய்மொழி மாட்டு என வருதலுங் காண்க. வாய்மொழி என்பது மெய்யுரை என்னும் பொருளதுமாம். திருவள்ளுவரைப் பொய்யில் புலவரென்றும், அவரியற்றிய திருக்குறளைப் பொய்யாமொழி

என்றும் சான்றோர்கள் போற்றி வந்திருக்கின்றனர், நல்லிசைப் புலவராகிய கூலவாணிகன் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தில்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

எனத் திருவள்ளுவரைப் பொய்யில் புலவர் என்றும் திருக்குறளைப் பொருளுரை என்றும் கூறியிருத்தலும் காண்க.

இப்படியாக வள்ளுவர் வாய்மொழி என்ற தலைப்பை முதலில் விளக்கி அதிலும் வாய்மொழி என்பதற்குப் பல்வேறு ஏதுக்களான் விளக்கமளித்து மேற்கோள் வழி நிறுவிய பின்னரே கட்டுரைக்குள் செல்லுகிறார் நாட்டார்.

இதுபோன்றே அகத்தியர் வரலாறு, பொய்கையார், ஆளுடைப்பிள்ளையார், முடங்கல், சுந்தரர் செந்தமிழ், மூவகை ரஸங்கள் போன்ற தலைப்பில் அமைந்த கட்டுரைகளையும் விளக்கி வரைகின்றார்.

## தலைப்பினை அமைக்கும் திறம்

ஓர் ஆய்வுக் கட்டுரைக்கு அடிப்படையாக அமைவது தலைப்பாகும். இத்தலைப்பே ஆய்வின் நோக்கம், ஆய்வின் ஆழம், ஆய்வின் ஒட்டுமொத்த பரிமாணம் ஆகியவற்றின் குறியீடாக அமைய வேண்டும் என்பர். சிறுகதையின் தொடக்கத் தைப் பார்த்த வுடன் அதனை முழுமையாகப் படித்துவிட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுமாறு அமைய வேண்டும் என்பார் எட்கார் ஆலன்போ. அதுபோல தலைப்பைக் கண்டவுடன் அதனைப் படித்துவிட வேண்டும், சுவைக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாக தலைப்பு அமைய வேண்டும்.

இவ்வகையில் அமைந்து நாட்டாரய்யாவின் ஆழ்ந்த புலமைத் திறனைப் பறைசாற்றுவன அவரது ஆய்வுக்கட்டுரைத் தலைப்புகள். சான்றாக,

1. முடங்கல்
2. பசிப்பிணி மருத்துவன்
3. மயக்க மறுப்பின் மேற்குறிப்பு
4. வள்ளுவர் கலித்துறை
5. தெய்வமணக்கும் செய்யுளெலாம்
6. சிந்தாமணியுள் நந்தா வொளிகள்
7. மார்க்கண்டேயர் அல்லது முயற்சியின் வெற்றி
8. பிற்காலப் புலவர்களின் "சுடுசொல் ஆட்சி"
9. இளவேனிற் கவியின்பம்
10. சங்க நூல்களும் சைவமும்
11. சமய அணிகலன்

போன்ற தலைப்புகளைக் காணலாம். இத்தலைப்புகளைக் கண்டோர் அதனுள் பொதிந்திருக்கும் கருத்தைக் காண விழைவர் என்பதில் ஐயமில்லை.

**மறுத்தல்**

32 உத்திகளில் மறுத்தல் என்பது ஓர் உத்தி. முன் செய்யப் பெற்ற ஆய்வின் முடிவுகளையோ அல்லது முன் கூறப்பெற்ற அறிஞர்கள் கருத்துரைகளையோ தக்க சான்றுகள் காட்டி மறுத்தல், புதிய கருத்தை நாட்டல் மறுத்தல் என்றாகும். அவ்வகையில் நாட்டாரய்யா அவர்கள் ஆய்வுக்கட்டுரைகளில் பல இடங்களில் பிறர்தம் கருத்துக்களை மறுப்பதோடு மட்டுமல்லாமல் அதற்குத் தக்க காரணங்களை எடுத்து நிறுவுகின்றார். உதாரணமாக, தமிழ் அகராதியில் "இளங்கிளை" என்ற சொல்லுக்குத் தங்கை என்ற பொருள் கொள்ளப் பெற்றுள்ளது. ஆயின், இதற்குத் தங்கை என்பது மட்டுமே பொருளன்று என்பது நாட்டாரய்யா கருத்து. தம்பி,

தங்கை, மகன், மகள், மைத்துனன், தோழன், மாணாக்கன் போன்ற இளஞ்சுற்றத்தினர் பலரை இச்சொல் குறிக்கும் என்பது இவரின் கருதுகோள். இதனைச் சான்றாதாரங்களைக் கொண்டு "கோளாக" நிறுவும் திறன் இன்றைய ஆய்வாளர்களுக்குச் சிறந்ததோர் கைவிளக்கு! அதனைப் பின்வருமாறு உணரலாம்.

1. இளங்கிளை – மக்கள், தம்பி என்ற பொருளில்
*''ஏவாது மாற்று மிளங்கிளையும்''*

2. இளங்கிளை – மாணாக்கன் என்ற பொருளில்
*''சில மறியா விளங்கிளை''* – திரிகடுகம்

3. இளங்கிளை – தங்கை என்ற பொருளில்
*''மாலவற் கிளங்கிளை''* – சிலம்பு

4. இளங்கிளை – மைத்துனன் என்ற பொருளில்
*''எழுமையும் பெறுவின்ன இளங்கிளைச் சுற்றமென்றாள்''* – சிந்தாமணி

5. இளங்கிளை – தோழன், தொண்டன் என்ற பொருளில்
*''இளங்கிளை யாரூரன்''* – சுந்தரர் தேவாரம்

என்று பல்வேறு ஏதுக்களான் நிறுவி இளங்கிளை என்பதன் விரிந்த பொருளை விளக்குகிறார். அதுமட்டுமல்லாது குறுகிய பொருள் கொண்டோரையும் நயமாக இடித்துரைக்கவும் நாட்டார் அவர்கள் தயங்கவில்லை என்பது கருதத் தக்கது.

"தமிழ் இலக்கியங்களின் இங்ஙனம் விரிந்த பொருளுடையதாகப் பயின்றுவரும் தொடரைக் குறுகிய பொருளுடையதாகக் கொண்டு பெரும் பொருட்செலவானும் பல பேரறிவாளர்களின் உழைப்பானும் வெளிவரும் அரசாங்கம் வெளியிட்ட அகராதியில் தங்கை என்று மட்டும் பொருள் குறித்திருப்பது மிக்க

வியப்பைத் தருகின்றது. குறுகிய கால வெல்லையில் விரைந்து முடிக்குங் கருத்தால் இத்தகைய தவறுகள் நேர்வன போலும்" என்று குறிப்பிட்டுச் செல்கிறார்.

எனவே, நாட்டாரய்யாவின் கட்டுரைத் திறனை உரைக்கின் விரிந்து கொண்டே செல்லும். அவரது புலமையும் நுண்மாண் நுழைபுலனறியும், வெளிப்பாட்டு உத்திகளும் வெளிப்படும் சில இடங்களே ஈண்டு காட்டப்பெற்றன. காலச் சூழல் இவை கைகூடி வரும்போது இத்தகைய விரிந்த தலைப்பில் மேலும் ஆழங்காற் பட்டு ஆராயலாம். எனவே, நாட்டாரய்யாவின் கட்டுரைத் திறன் பற்றி ஈண்டு விளம்பியது கடுகளவு, விட்டது கடலளவு.

# நாட்டாரின்
# அகநானூறு உரைத்திறன்

முனைவர் த.கோ.பரமசிவம்
தஞ்சாவூர்

நாவலர் நாட்டார் ஐயா அவர்கள் சங்க இலக்கியம் முதலாகப் பிற்கால ஔவை பாடல்கள் வரை பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய நூல்களுக்கு உரை கண்டவர். ஒவ்வொரு நூலுக்கும் அந்நூலின் காலம், மொழிநடை, பின்புலங்களை உணர்ந்து வரைவதில் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார். நச்சினார்க்கினியர் போன்ற உரைவேந்தர்களின் உரைகளுக்குக் குறையாமல் கொண்டு கூட்டிப் பாடினார் உள்ளத்தை உணர்ந்து, பாடினார் உணர்வைப் பிழிந்து காட்டுவதாகவே அவர்தம் உரைகள் காணப் படுகின்றன. நீதி நூல்களுக்கு உரை வரையும் நாட்டாரை, சங்க இலக்கிய உரையிலும் காணலாம். ஆனால், சங்கச் செருக்குடனே காண முடியும். காலத்தையொட்டிய தோய்தலுக்கு அவர்தம் அகநானூறு உரையைச் சான்றாக்கலாம். நாவலரின் தமிழ்த் தோய்வு பன்முகப்பட்டது. அப்பன்முகத் தோய்வே பலதரப்பட்ட நூல்களுக்கும் உரையெழுத வைத்தது என்றால் அது

மிகையாகாது. இதனை உணர்ந்தே,

"பாட்டாலும் உரையாலும் பயன்மிகுந்த
பைந்தமிழைப் பயின்ற நாளும்
ஏட்டாலும் எழுத்தாலும் இனியகனி
மொழியாலும் இயம்பி நாளும்
காட்டாறு போல்உதவும் கலையின்பம்
புலவர்மணி"

எனக் கவியோகி சுத்தானந்த பாரதியார் பாடுகின்றார். அவரே நாட்டாரின் சங்க இலக்கிய உரைகளைக் கண்ணுற்றபின் பின்வருமாறு பாடுகின்றார்.

"சங்கநூற் குவையனைத்தும் தனதாக்கிக் கொண்ட
சிங்கமணிப் புலவரெல்லாம் சிறந்தபுகழ் - செப்பும்
தங்கமணிப் புலவனவன் தமிழினிக்கும் தமிழன்"

**சங்க இலக்கியங்கள்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் காலத்தாலும் கருத்தாலும் முதல்இடம் என்னும் சிறப்பைப் பெறுவன சங்க இலக்கியங்களே என்பதில் கருத்துவேற்றுமை இருக்க முடியாது. தமிழினிமையில் அவை முன்னிற்பன. காலத்தால் முந்திய நூல்கள் என்பதால் புரிந்து கொள்ள கடினமாக இருக்குமோ என்பார்க்கு பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் கூற்றே ஒரு தெளிவு உண்டாக்கும்.

"புரியாத நடையுடையது சங்க இலக்கியம் என்ற ஒரு சாராரின் அவலக் கருத்து நீர்சுடும் என்பது போன்ற மயக்க மருளாகும். இலக்கண வழக்கு முரண்பட்ட அயல்மொழிகளைப் புரியும் என்று பொருள்கொட்டிப் படிக்கும் தமிழர்கள் தம் தாயிலக்கியம் புரியாது என்று புலம்புவது பேதைமையுள் எல்லாம் கலப்பற்ற பேதைமை

> யாகும். சங்கத் தமிழை நீர் தெளிந்த கோதா வரிக்குக் கம்பர் ஒப்பிடுவதைச் சிறிதேனும் எண்ணுங்கள் புரியும்''

மாணிக்கனாரின் இக்கூற்று முற்றிலும் பொருந்துவதை, புரியாத இக்காலச் சினிமாப் பாடல்களையும், பிற்காலத்துச் சிற்றிலக்கிய வண்ணங்களையும் பயில்வார் உணர்வர். இதனை நன்குணர்ந்தவர் நம் நாட்டார் ஐயா அவர்கள். அதனால்தான் அவர்கள் பிற்கால நீதி நூல்களுக்கு உரையெழுதிய வண்ணமே சங்க இலக்கியங்கட்கும் உரை எழுதத் தலைப்பட்டார்கள்.

## உரை மாண்பு

சங்க இலக்கியங்கள் காலத்தாலும் கருத்தாலும் இன்றைய வாழ்க்கையமைப்புகளிலிருந்து மாறுபட்டு நிற்பன. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகச் செம்மையை உணர்ந்தால்தான் அவற்றை இனங்காண முடியும். இடைக்காலத்தும் பிற்காலத்தும் புகுந்த மாற்றங்கள், வழூக்கள், பிற தலையீடுகளை முற்றிலும் புறங்கணித்த பார்வையிருந்தால்தான் அவற்றில் ஈடுபட்டுத் திளைக்கமுடியும். இவற்றை மிகச் சரியாக உணர்ந்து நின்றவர்கள் நாட்டார் அவர்கள். அவர்கள் தாம் பெற்ற பேற்றைப் பிறரும் குறிப்பாக, வருங்கால சந்ததியினரும் பெற வேண்டும் எனும் நோக்கிலேயே அவற்றினுக்கு உரையெழுதும் அரிய பெரிய பணியில் இறங்கினார்.

சங்க நூல்களுக்கு உரையெழுதுவது என்பது எளிதான ஒன்றல்ல. இலக்கண இலக்கிய அறிவு மட்டுமே அதற்குத் துணை செய்துவிட முடியாது. தொல்காப்பியமும் சங்க இலக்கியப் புலமையும் மட்டும் அடிப்படையாகிவிட முடியாது. புலவரின் பன்முகப் பார்வை போன்ற பன்முகப் பார்வையை உளத்துள் கொண்டுவந்தால்தான் பாடலை உணர முடியும். இயற்கை வரலாறு, இசை, சமூக உணர்வு, காலகணிப்பு, காலச்சூழல், பாவும் பாவியலும், அரசியலும், சமூக வரலாறும், தொழிலியலும் இன

வேறுபாடும், தொல்லியலும் பிற சான்றுகளும் எனப் பன்முகப்பட்ட பொருள்களில் புலமையும் தோய்வும் பெற்றிருக்க வேண்டும். மேலாக சங்க இலக்கியங்கள் சங்கச் செய்யுள்களின் கட்டுமானம் அறிவுப்பிணையல்களால் ஆக்கப் பெற்றது. இவற்றைறெல்லாம் நாட்டார் ஐயா அவர்கள் உணர்ந்து கைவரப் பெற்றமையால்தான் சங்க இலக்கியங்கட்கு உரையெழுதப் புகுந்தார்கள். இவ்வாறு திறனாய்வுக் கருத்தாகக் கூற முடிந்தாலும் நாட்டார் ஐயாவின் துணிவுக்கும் தெளிவுக்கும் இவற்றுக்கெல்லாம் மேற்பட்ட ஒன்று காணப்படுகிறது. அவரைப் பயில்வார் உணர்வர். ஆம், நாட்டார் ஐயாவின் தமிழ்க்காதல்தான் இவ்வளவு தகுதிகளையும் ஒருங்கே திரட்டியது என்றால் அது மிகையாகாது. அவர்கள் தமிழை உணர்ந்து சுவைத்தார்கள். தாம்பெற்ற இவ்விலக்கிய இன்பத்தைப் பிறரும் பெற்றுய்ய வேண்டும் என்னும் தூய தமிழ்க்காதலே இத்தகு முற்பட்ட இலக்கியங்களுக்கும் உரையெழுத வைத்தது எனலாம். மற்றொரு வகையில் கூற வேண்டுமானால் நம்மிடம், நம்சந்ததியினரிடம் தமிழ் வளம் பெற்ற மொழியென்பதை ஆணித்தரமாக உணர்த்த வேண்டும் என்னும் பொறுப்புணர்வே இத்தகு உரைகளுக்கு வித்திட்டன எனலாம்.

### அகநானூறு

அக இலக்கியங்களில் குறுந்தொகை, நற்றிணை போன்ற பொருட்செறிவும் இன்தமிழ் நடையும் கொண்ட பாடல்களே அகநானூறு என்றாலும் அடியளவாலும் கருத்தாழத்தாலும் பெருமையுடன் திகழ்வன அகநானூற்றுப் பாடல்கள். அந்நூலுக்கு ஆங்காங்கே பழைய உரை, விளக்கங்கள் இருந்தபோதிலும் முழுமையான உரை விளக்கத்துடன் அப்பாடல்கள் காணப்பட வில்லை. இக்குறையைக் களையவே நாட்டார் ஐயா அவர்கள் நூல் முழுமைக்கும், கவியரசு வேங்கடாசலம் பிள்ளையவர்களைத் துணையாக்கிக் கொண்டு நல்லுரை வரைந்தார்கள். உரை யமைப்பை அவர்கள் பின்வருமாறு அமைத்துக் கொள்கிறார்கள்.

பாட்டு எண், பாட்டின் தலைப்பு, பாட்டின் பழைய குறிப்பு, பாட்டு, சொல் பொருள், முடிவு, விளக்கவுரை, உள்ளுறை, மேற்கோள்.

என ஒன்பது வகையான தலைப்புகளில் அடக்கிப் பொருள் காண்கின்றனர். பாட்டில் பாட வேறுபாடுகள் காணப்பெறின், தொல்காப்பியம், பிற சங்க நூல்கள் மேற்கோள் தரவேண்டின் அவற்றை அடிக்குறிப்பில் காட்டுகின்ற பாங்கையும் கைக் கொண்டிருந்தனர். பாடலாசிரியரைப் பாட்டின் இறுதியில் குறிப்பிடு வதைத் தவறாது மேற்கொள்கின்றார். அவரது உரைத்திறனை, தமிழ் நடையை, பின்வரும் ஒருபாடல் வழி உணரலாம்.

**242. குறிஞ்சி**

(தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது)

''அரும்புமுதிர் வேங்கை அலங்கல் மென்சினைச்
சுரும்புவாய் திறந்த பொன்புரை நுண்தாது
மணிமருள் கலவத் துறைப்ப அணிமிக்கு
அவிர்பொறி மஞ்ஞை யாடுஞ் சோலைப்
பைந்தாட் செந்தினைக் கொடுக்குரல் வியன்புனம்
செந்தார்க் கிள்ளை நம்மொடு கடிந்தோன்
பண்புதர வந்தமை அறியான் நுண்கேழ்
முறிபுரை யெழிலைத் தென்மகள் துயர்மருங்கு
அறிதல் வேண்டுமெனப் பல்பிரப் புரீஇ
அறியா வேலன் தரீஇ அன்னை
வெறியயர் வியன்களம் பொலிய ஏத்தி
மறியுயிர் வழங்கா அளவைச் சென்றியாம
செலவரத் துணிந்த சேண்விளங்கு எல்வளை
நெகிழ்ந்த முன்கை நேரிறைப் பணைத்தோள்
நல்லெழில் அழிவில் தொல்கவின் பெறீஇய
முகிழ்த்துவரல் இளமுலை மூழ்கப் பல்லூழ்

முயங்கல் இயைவது மன்னோ தோழி
நறைகால் யாத்த நளிர்முகைச் சிலம்பின்
பெருமலை விடரகம் நீடிய சிறியிலைச்
சாந்த மென்சிலை தீண்டி மேவது
பிரசந் தூங்கு சேட்சிமை
வரையக வெற்பன் மணந்த மார்பே.''

– பேரி சாத்தனார்.

(சொ – ள்.) 1–7. தோழி –, 1–7. அரும்பு முதிர் வேங்கைஅலங்கல் மெல் சினை – அரும்புகள் முதிர்ந்த வேங்கைமரத்தின் அசையும் மெல்லிய கிளைகளில் கரும்பு வயல் திறந்த பொன்புரை நுண்தாது – வண்டுகள் பூவின் வாயைத் திறத்தலால் பொன்னை யொத்த நுண்ணிய பொடிகள், மணி மருள் கலவத்து உறைப்ப - நீலமணியை யொத்த தோகையில் உதிர்ந்திட, அணிமிக்கு – அழகு மிகுந்து, அவிர் மொழி மஞ்ஞை ஆடும் சோலை – விளங்கும் பொறிகளை யுடைய மயில் ஆடும் சோலையின் பக்கத்தே, பைந்தாள் சென் தினை கொடுங்குரல் – பசிய தாளினையுடைய சிவந்த தினையின் வளைந்த கதிர்களையுடைய வியன்னம். பெரிய கொல்லையில் வரும், செந்தார்க்கிள்ளை நம்மொடு கடிந்தோன் – சிவந்த இரேகையையுடைய கிளிகளை நம்முடனிருந்து ஓட்டிய தலைவனது பண்பு தர வந்தமை அறியாள் – நல்லியல்புகள் தருதலால் வந்த வருத்தத்தினை அறியாதவளாகி;

7–12. அன்னை – நம் அன்னை, நுண் கேழ் மறிபுரை எழில் நலத்து என் மகள் – நுண்ணிய நிறம் பொருந்திய தளிரையொத்த எழுச்சி வாய்ந்த அழகினையுடைய என் மகளது, துயர் மருங்கு அறிதல் வேண்டும் என – துயர்வந்த பரிசினை அறிதல் வேண்டும் என்று, பல் பிரப்பு இரீஇ– பல பிரப்பினைப் பலியாகவைத்து, அறியா வேலன் தரீஇ. உண்மை உணரமாட்டாத வேலனை அழைத்து, வெறி அயர் வியன் களம் பொலிய ஏத்தி – வெறி ஆடும் பெரிய களம் பொலிவுறுமாறு துதித்து, மறி உயிர் வழங்கா அளவை – ஆட்டுக்குட்டியின் உயிரைப் பலியிடா முன்னலே;

12–5. செலவரத் துணிந்த – ஏறி இறங்கும் அளவில் எண்ணிச் சேர்த்த, சேண் விளங்கு எல்வளை – சேய்மைக்கண் சென்று விளங்கும் ஒளியினையுடைய வளை, நெகிழ்ந்த முன்கை கழன்ற முன்கையும், நேர் ஒளியினையுடைய வளை, நேர் இறை – நேரிய சந்தினையுடைய, பணைத்தோள் – பெரிய தோளும், நல் எழில் அழிவில் – நல்ல அழகு ஒழிவினின்றும் நீங்கி, தொல்கவின் பெறீஇய – பழைய அழகினைப் பெறுமாறு, யாம் சென்று – யாம் சென்று;

18–22. நறை கால் யாத்த நளிர் முகை சிலம்பின் – தேன் கூடுகள் நிரம்பிய குளிர்க் குகைகளையுடைய பக்க மலைகளைக் கொண்ட பெருமலை விடர் அகம் – பெரிய மலையின் பிளப்புக் களிடத்தே, நீடிய சிறிஇலை சாந்த மெல் சினை தீண்டி – நீண்டு வளர்ந்த சிறிய இலைகளையுடைய சந்தனமரத்தின் மெல்லிய கிளைகள் தீண்ட, மேலது பிரசம் தூங்கும் மேலிடத்ததாகிய தேனிறால் தொங்கும், சேண் சிகை வரையக வெற்பன் – நெடிய உச்சியினையுடைய மூங்கிலைத் தன்னகத்தே கொண்ட மலை நாடனது, மணந்த மார்பு – முன்பு கூடிய மார்பினை;

16–7. முகிழ்த்து வரல் இளமுலை மூழ்க – அரும்பி வருதலுடைய இளைய முலை மூழ்கிட, பல்ஊழ் முயங்கல் இயைவது – பலமுறை தழுவுதல் தக்கது.

(முடிபு) தோழீ (நமது இடும்பை) கிள்ளை நம்மொடு னடிந்தோன் பண்பு தர வந்தமை அறியாள், அன்னை துயர்மருங்கு அறிதல் வேண்டுமென வேலன் தரீஇ, பிரப்பு இரீஇ. களம் பொலிய ஏத்தி, மறியுயிர் வழங்கா அளவை, யாம் சென்று வெற்பன் மணந்த மார்பு முலைமூழ்க முயங்கல் இனியது.

(வி –ரை) வாய் திறந்த – பூவின் வாயைத் திறந்த என விரித்துக் கொள்க. திறந்த என்னும் பெயரெச்சம் காரணப் பொருட்டு, கிள்ளை நம்மொடு கடிந்தோன் என்றது எளியனாய்

நம்முடனிருந்து கிளியை ஒட்டி உதவிபுரிந்த நன்மையாளன் என்றபடி. பண்பு தர வந்தது என்றது, அவனது உயர்ந்த குண வொழுக்கங்களால் தலைவிக்கு மெலிவுண்டாயிற்று என்று கூறும் வாயிலாகத் தலைவி அவனைக் காதலித்தது தகவுடையதே என்றும், அவனுடன் இடையறாது கூடியிருக்கப் பொறாமையால் மெலிவுறுகின்றாள் என்றும் தோழி கூறியபடியாம். இவ் வுண்மையை அறியாத அன்னை தன் மகளுற்ற மெலிவு அணங்கு முதலியவற்றால் உண்டாயதோ என ஐயுற்று, அதனை அறிந்து களைதற்கு வேலனை யழைத்து வெறியாட்டெடுத்து மறியைப் பலியிட முந்துகின்றாளாகலின், அவள் அங்ஙனம் செய்தற்கு முன் நமது மேனி பழைய அழகினைப் பெறும்படி, தலைவனைப் பல்லூழ் முயங்கல் வேண்டுமென்று தலைமகன் சிறைப்புறத்தி னின்று கேட்பத், தோழி தலைமகட்குக் கூறினாளென்க. அதனைத் தலை மகன் கேட்டு விரைய வரை கொள்ளுவானாதல் பயன். அறியா வேலன் என்றது உண்மையை அறியாமலே எதனையும் தெய்வத் தால் வந்ததென்று கூறுபவன் என்றபடி. முன்கையும் பணைத் தோளும் தொல்கவின் பெறீஇய என்றுரைத்தாளேனும் மேனி தொல்கவின் பெறீஇய என்பது கருத்தாகக் கொள்க. பழைய கவின் பெற்றமையைக் காணின், அன்னை வெறியாட்டெடுத்தலை நிறுத்துவள் என்க, செலவற (கசு) என்று பாடம் கொள்ளின் வளை கழலாவாறு என்றும் மலர்ந்த மார்பு என்பது பாடமாயின் பரந்த மார்பு என்றும் பொருள் கொள்க.

(உ-றை) வேங்கை நுண்தாது கலவத்து உறைப்ப, மஞ்ஞை அணிமிக்கு ஆடும் என்றது, தலைவனது சாந்தம் நம் ஆகத்திற் பொருந்துமாறு முயங்குதல் கூடின், நாம் எழில் சிறந்து மகிழ்ச்சியுறுவேம் என்றவாறு. உயர்ந்த சந்தனத்தின் கிளை தீண்டத் தேனிறால் தொங்கும் என்றது, பல்லாற்றானும் ஒப்புமையுடைய உயர்ந்த தலைவனும் தலைவியும் கூடி இல்லறம் புரிதல் யாவர்க்கும் இன்பம் பயப்பதாம் என்றபடி.

இவ் உரை அமைப்பில் அவர்தம் தமிழ்நடை சங்க இலக்கிய காலத்துக்கு நம்மை அழைத்துச் செல்வது போலவே அமைந்திருக்கக் காணலாம். என்றாலும் இவ்வுரையில் அமைந்துள்ள எளிய நடையும் பழகு மொழியும் நம்மைச் சங்க இலக்கியத்துடன் ஒன்றுபட வைப்பதையும் உணர முடியும். இது நாட்டார் ஐயாவின் தனிச்சிறப்பு என்றால் அது மிகையாகாது. விளியை முன்னிறுத்தி ஆற்றொழுக்காகத் தலைமகளுக்குத் தோழி கூறுவதாகப் பொருள் வரைந்திருப்பது தெள்ளிய உரையாட லாகவே அமைந்திருத்தல் காணலாம். விளக்க உரையில் வெளி யாடல், பண்புதர வந்தது எனும் தொடர்களுக்கு பண்புதர வந்தது என்றது அவனது உயர்ந்த குணவொழுக்கங்களால் தலைவிக்கு மெலிவுண்டாயிற்று என்று கூறும் வாயிலாகத் தலைவி அவனைக் காதலித்தது தகவுடையதே என்றும், அவனுடன் இடையறாது கூடியிருக்கப் பொறாமையால் மெலிவுறுகின்றான் என்றும் தோழி கூறிய படியாம்" என்று விளக்கமாகவும், பண்பாகவும் அவர்கள் உரை எழுதியிருப்பது நினைந்து நினைந்து மகிழ்தற்குரியதாம். அவ்வாறே இப்பாடலில் அமைந்த உள்ளுறையை அவர் விளக்கியிருப்பது சுவைத்து மகிழத்தகும் இலக்கிய இன்பமாகும் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு நாவலர் நாட்டார் ஐயாவின் அகநானூறு உரை எளிமை, இனிமை, படிக்கத் தூண்டும் ஆர்வம், தமிழ் நாகரிகத்தைப் போற்றும் மாண்பு எனப் பலவகையிலும் முன்னிற்பதை நாம் உணரலாம். ஒருபானை சோற்றுக்கு ஒரு பதம் போல ஒரு பாடலை மட்டுமே இக்கட்டுரையில் எடுத்துக்காட்டி அறிமுகமாக்க முடிந்தது.

வாழ்க நாட்டாரின் தமிழ்க் காதல். வளர்க அவர்தம் தமிழ் உணர்வு.

# ஆசிரியரும் மாணாக்கரும்

திருமதி க.புனிதாதேவி
தஞ்சாவூர்

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் 1884 முதல் 1944 வரையிலான அறுபது ஆண்டுகள் வாழ்ந்த தமிழ்ப் பெரியார் ஆவார். இவர் தமிழாசிரியராகவும் பல நூல்களுக்கு உரையாசிரிய ராகவும் திகழ்ந்தவர். ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியுள்ள இப்புலவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற பல்வேறு நூல்கட்கும், கீழ்க்கணக்கு நூல்கட்கும், காப்பியங்கள் போன்ற பெரு நூல்கட்கும் சிறந்த தெள்ளிய உரையெழுதியுள்ளார். இவரது ஆராய்ச்சித் திறத்திற்குக் கள்ளர் சரித்திரம், சோழர் சரித்திரம் (முதற்பாகம்), வேளிர் வரலாறு, நக்கீரர், கபிலர், கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும் போன்றன சான்றாகும். கட்டுரை வரையும் திறன் மிக்க இவருடைய "ஆசிரியரும் மாணாக்கரும்" (செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 11, பரல் 5) பற்றிய கட்டுரையில் காணப்பெறும் சிந்தனைகள் இவண் தொகுத்துரைக்கப் பெறுகின்றன.

**ஆசிரியர் யார்?**

பல கலைகளையும் கற்றறிந்தவர்கள் தாம் அறிந்தவை களைப் பிறரும் அறிந்து பயன்பெறுமாறு அருள் சுரந்தூட்டு பவர்கள் 'ஆசிரியர்' என்னும் சிறப்புப் பெயர்க்கு உரியராகின்றனர் என்று இவர் இக்கட்டுரையில் சுட்டுகின்றார். மேலும், "உலகில் தீவினை தலையெடுக்குங் காலங்களிற் தோன்றி, அதனை அழித்துத் தருமத்தை நிலைநிறுத்துவோர்களும், சமய ஸ்தாபனஞ் செய்து ஆன்மஞானம் அல்லது பதிஞானத்தைப் பரவச் செய்வோர் களும், தனித்தனி ஆன்மாக்களின் பரிபாக காலத்தில் வெளிப் பட்டுத், தீஷையானும் உபதேசத்தானும் ஆன்ம சக்திகளையும் ஆன்ம லாபத்தையும் அருளுவோர்களும் கடவுட்தன்மை வாய்ந்த 'ஆசிரியராகின்றனர்' என்று இக்கட்டுரையில் இவர் குறிப்பிடு கின்றார்.

**போதகாசிரியர்**

நெடுங்கணக்கு முதல் பெருங்கலைகள் வரை எப்பாடத்தையும் ஒவ்வொருவருக்கும் அல்லது ஒவ்வொரு தொகுதியாயுள்ளவருக்கும் கற்பிக்கும் அனைவரும் போத காசிரியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் 'உபாத்தி யாயர்' என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றனர். "இளமை யிற் கல்', 'வித்தை விரும்பு', 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பன போல்வன நம்நாட்டு மூதுரைகளாகும்" எனவும் இவர் குறிக்கின்றார். மேலும், அக்காலத்தில் உபாத்தியாயர் 'கணக்காயர்' என்னும் பெயரால் வழங்கப்பட்டனர் என்பதையும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சிறு பள்ளிக்கூடங்களும், பெரிய கலைசாலைகளும், கல்விச் சங்கங்களும் இருந்து இருக்கின்றன என்பதையும் இவர் சான்றுகளோடு கூறுகின்றார்.

**இலக்கண ஆசிரியர் கூறும் ஆசிரியர் இயல்பு**

நன்னூல் போன்ற இலக்கண நூல்களும் ஆசிரியர் இயல்புகளைப் பற்றிக் கூறியிருப்பதை இவர் காட்டுகின்றார்.

நன்னூலாசிரியர் 'நற்குடிப் பிறப்பு, சீவகாருண்யம், கடவுள் வழிபாடு, பல நூல்களையும் கற்றுத் தேர்ந்த அறிவின் தெளிவு, போதனாசக்தி, உலகியலறிவு முதலாகிய உயர் குணங்களை உடையனாதலோடு, பொறை முதலியவற்றால் புவியினையும், உயர்ச்சி முதலியவற்றால் மலையினையும், நடுநிலை முதலிய வற்றால் நிறைகோலையும், முகமலர்ச்சி முதலியவற்றால் மலரினையும் ஒத்து விளங்குபவனே ஆசிரியனானவான்' என்று கூறுகின்றார் என்பதை நாட்டாரவர்கள் சுட்டி உரைக்கின்றார்.

மேலும், புறத்திணையியலில் நச்சினார்க்கினியர் காட்டி யுள்ள ஓர் செய்யுளானது, ஐயன் ஆரிதனார் கூறிய அவைய மாந்தரிக்கணத்தோடும், ஆத்திரேயன் பேராசிரியன் கூறிய இலக்கணத்தோடும் கருத்தொருமையுற்று இருப்பதன் உண்மையை இவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "குடிப் பிறப்பாகிய உடையையுடுத்து, நூலுணர்வாகிய மலரைச் சூடி, நல்லொழுக்கமாகிய அணியைப் பூண்டு, சத்தியமாகிய உணவை யுண்டு, தூய்மையாகிய ஆதனத்தமர்ந்து, நடுவுநிலையாகிய நகரிற்றங்கி, அழுக்காறின்மை அவாவின்மையென்கிற இருபெரு நிதியத்தையும் மேன்மேலும் ஈட்டுகின்ற தோலா நாவினையுடைய மேலோரின் பேரவைக்கண் ஒரு நாள் சேர்ந்திருத்தல் கிட்டுமாயின் யான் மகிழ்வுடன் பெறுவேனாக, புலவு நாறுவதாய் நிலையற்ற தாயுள்ள யாக்கையுடன் பொருந்தி, உலகின் கண் சுழலா நின்ற இப்பிறவியினை" என்பது அப்பகுதி. இவற்றின் வாயிலாக ஆசிரியரென்பவர் வணிகர், கூலித்தொழிலாளர் அல்லது உத்தி யோகஸ்தர் போன்றவர் அல்லர் என்பதும், புனித சிந்தனையும், புனித ஒழுக்கத்தையும் உடையவராகத் தம்மைச் சார்ந்தவரை யெல்லாம் புனிதராக்கி வாழ்விக்கும் பேரருளாளர் என்பதும் பெறப்படும் என இவர் வலியுறுத்திக் கூறுகின்றார்.

## ஆசிரியர் கடமையும் கற்பித்தல் முறையும்

ஆசிரியராவார் தாம் கற்றுணர்ந்ததைப் பிறர் எளிதில் உணருமாறு கற்பிக்கும் திறமையுடையவராக இருத்தல் வேண்டும்.

இல்லையென்றால், அவர் கொம்பினிடத்து நன்றாகப் பூத்திருந்தும், மணம் வீசாத மலரைப் போன்றவர் எனச் செந்நாப்போதார் கூறுகின்றார். ஆசிரியர் பாடம் கற்பிக்குங்கால் தாம் கற்பிக்கப் போகும் செய்தியினை மனத்தில் வரையறை செய்து கொண்டு விரைவாகக் கூறாமலும், தடுமாற்றம் இல்லாமலும், அன்போடும், முகமலர்ச்சியோடும் கற்பித்தல் வேண்டும். தம்முடைய தெளிவான, இனிமையான, குற்றமற்ற சொற்களினால் மாணாக்கர்களைக் கவர்ந்து அவர்களுக்கு மேலும் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாய் ஆசிரியரின் உரை அமைதல் வேண்டும்.

ஆசிரியர் தமது பேச்சுத்திறமை ஒன்றையே நோக்காது, கேட்பவர்களின் சூழலையறிந்து சொல்லுதல் வேண்டும். தாம் சொல்லும் கருத்தை ஏற்றுக் கொள்ளுகின்றார்களா என்பதைக் கவனித்தல் வேண்டும். அப்படி ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிந்தால், அதற்கான காரணத்தை அறிந்து, அவர்கள் ஏற்கும் முறையில் மீண்டும் சொல்லுதல் வேண்டும். மாணாக்கர் ஐயமுற்று கேட்கும் வினாக்களுக்கு விடை கூறாமல் தமது கோரமான தோற்றத்தாலும் வன்சொல்லாலும் அச்சுறுத்தி அவர்களுக்குத் தண்டனைகளைக் கொடுத்தும் தண்டிப்பவர்கள் ஆசிரியர்களாகக் கருதப்பட மாட்டார்கள். மாணாக்கர்களில் சிலர் ஆசிரியரை விட அறிவு மிகுதியுடையவராய் இருப்பின் ஆசிரியரானவர் அம் மாணாக்கர்களுடைய அறிவினை வியந்து மகிழ்ந்து போற்றுதல் வேண்டும். மாணாக்கரிடத்தில் அன்பும் இரக்கமுடையராய், அவர்களது கல்விநிலையிலும் பொதுநலவாழ்க்கை நிலையிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்பவரே உண்மையான ஆசிரியராவார் என்பதையும் நாட்டாரவர்கள் தொடர்ந்து கூறுகிறார்.

### ஆசிரியருக்கான நல்லொழுக்க நெறிகள்

ஆசிரியர்கள் நல்லொழுக்க நெறியில் இருந்து விலகாமல் தம்மைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும். அவர், போதனை

களால் மட்டுமல்லாமல், தமது நடத்தைகளினாலும், தம்மைச் சார்ந்துள்ள மாணவர்களையும் பிறரையும் நல்வழிப்படுத்துதல் வேண்டும். ‘சிரேஷ்டனானவன் எதனை ஆசரிக்கின்றானோ அதனை இதரர்களும் ஆசரிக்கின்றார்கள். அவன் எதனைப் பிரணமாகக் கொள்ளுகின்றானோ அதனை உலகமும் கொள்ளு கின்றது’ எனக் கண்ணபிரான் கூறியபடி ஆசிரியரைச் சார்ந்தவர்கள் அவரைப் பின்பற்றி நடக்க முயல்கின்றார்கள். ஆதலால் ஒரு ஆசிரியன் வழி தவறி நடப்பானாயின், அவன்தான் கெடுவதன்றி உலகத்தையும் கெடுப்பவனாகின்றான் என்பதையும் இவர் உறுதிபடக் கூறுகின்றார்.

### குருபக்தி

முற்காலத்து ஆசிரியர்கள் அன்புள்ளம் கொண்டவ ராகவும், குன்றா ஒழுக்கம் உடையவராக இருந்ததால் பெற்றோர் கள் தம் பிள்ளைகளை நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் குருக்களிடம் ஒப்படைத்தனர். குருக்களும் மாணாக்கருக்குத் தாய் தந்தையாகவும், மருத்துவனாகவும், தெய்வமாகவும் விளங்கினார் கள். மாணாக்கர்களுக்குக் குரு பக்தியானது எல்லாவற்றிலும் சிறந்ததாகும். ‘மாதா, பிதா, குரு’ என்ற மூவரும் தெய்வமாவர் என்று பொருள் சொல்லினும் பொருந்தும் என்றும் இவர் குறிப்பிடு கின்றார். மேலும், நம் நாட்டுச் சிறுவர்கள் சுவடியைப் படிக்கத் தொடங்கும் பொழுதும், படித்து முடித்த பிறகும் ‘குருவாழ்க, குருவே துணை’ என்று கூறும் வழக்கம் இருந்ததையும் இவர் சுட்டியுரைப்பது நம் சிந்தனைக்குரியது. மேலும்,

> **“ஓரெழுத் தொருபொருள் உரைக்கக் கூடிய**
> **சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்**
> **ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்துஅங்(கு) ஓர்உகம்**
> **பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே”**

(திருமந்திரம், 514)

என்று திருமூலர் கூறுவதையும் குறிப்பிடுகின்றார். ஆசிரியர் ஒவ்வொன்றையும் கற்பிக்காமல் இருப்பினும் மாணாக்கர் ஆசிரியர் மேல் செலுத்தும் அன்பின் காரணமாக எல்லாக் கலை யுணர்வும் மாணாக்கருக்கு எளிதில் வந்துவிடும் என்று குறிப்பிடு கின்றார்.

இராமாயணத்தில் இராமலெட்சுமணர் குருபக்தியும், மகாபாரதத்தில் அருச்சுனன் குருபக்தியும் பற்றி இவர் இக்கட்டுரை யில் விளக்குகிறார். இவ்வகையில் டாக்டர் உ.வே. சாமிநாதையரை அவரது தந்தையார் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் கல்வி கற்க ஒப்படைத்ததை நாம் அண்மைக்கால வரலாற்றின் மூலம் அறிகிறோம். அதனால் தமிழுக்குக் கிடைத்த அருமை பெருமைகளையும் உணர்கிறோம்.

**மாணாக்கர் கடமையும் கற்கும் முறையும்**

ஆசிரியருக்கு எவ்வளவு கீழ்ப்படிந்து நடந்தாலும் அவையெல்லாம் மாணாக்கரது உயர்ச்சிக்குக் காரணமே அன்றி வேறில்லை. சோம்பல், மறதி, மாறுபாடு, வஞ்சம், மானம், சினம் போன்ற தீக்குணம் உடையோரும், தீத்தொழில் புரிவோரும் மாணாக்கராக மாட்டார்கள். மாணாக்கர் கல்வியும் நிறைந்த விருப்பமும் ஊக்கமும் உடையராக இருத்தல் வேண்டும். உதாரணத்திற்கு, மழையானது முத்துச் சிப்பியின் வாயில் விழுந்தால் முத்தாக மாறுகின்றது. அதுபோன்று ஆசிரியர் கற்பிக்கும் நூற்பொருள் உத்தம மாணாக்கரைச் சார்ந்தால் சிறப்பான நலத்துடன் வெளிப்படுகின்றது. மழைத்துளியானது தாமரை இலையில் விழுந்தால் விழுந்த அளவினதாக இருக்கின் றது. அதுபோல் ஆசிரியர் கற்பிக்கும் நூற்பொருள் மத்திமரைச் சார்ந்தால் அவ்வளவில் நிற்கிறது. மழைத்துளியானது பழுக்கக் காய்ச்சிய இரும்பில் விழுந்தால் சுவறிவிடுகின்றது. அதுபோல் ஆசிரியர் கற்பிக்கும் நூற்பொருள் அதமரைச் சார்ந்தால் பயனின்றி அழிந்து விடுகின்றது என இவ்வாறு நாட்டாரவர்கள் கூறும் எடுத்துக்காட்டுகள் யாவும் அருமையானவையாகும்.

நீரைப் பிரித்துப் பாலை பருகும் அன்னத்தைப் போன்று ஆசிரியர் கற்பித்தவற்றில் நல்ல செய்திகளைப் பகுத்து மனதில் கொள்வோரும், உணவு கிடைத்தபோது வயிறார மேய்ந்து பின்னர் சிறிது சிறிதாக வாயிற்கொண்டு வந்து சீரணிப்பிக்கும் பசுவைப் போன்று மிகுதியான செய்திகளைக் கேட்டு பின்னர் அவற்றைச் சிறிது சிறிதாகத் தம் கவனத்திற்குக் கொண்டு வருவோரும் சிறந்த மாணாக்கராவர். மாணாக்கர்கள் ஆசிரியர் திருமுன் உண்மையுடனும் ஆசாரத்துடனும் ஒழுகுதல் வேண்டும். மாணாக்கர் கல்வி பயின்ற பின்னரும், அவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கும் காலத்தும் தம் ஆசிரியரை நினைத்தல் வேண்டும். அவர்களைக் காணும்போது அன்போடு உபசரித்தலும், தம் நல்வாழ்விற்குக் காரணமான அவரைப் போற்றுதலும் வேண்டும் என்பன போன்ற நெறிமுறைகளையும் இக்கட்டுரையில் இவர் உரைக்கின்றார்.

**இலக்கண ஆசிரியர் கூறும் மாணாக்கர் இயல்பு**

பாடங்கேட்கும் முறையைப் பற்றி நன்னூலாசிரியர் கூறுவதையும் இவர் குறிப்பர். மாணாக்கர்கள் கேட்ட பாடங்களைச் சிந்தித்துப் போற்றலும், நூல் வழக்கு, உலக வழக்குகளை ஆராய்ந்தறிதல் அவசியமாகும். கற்றாரிடம் தாம் கற்றதை அவர்கள் புரிந்து கொள்ளும்படி சொல்லுதலும், தம்மை விட மிகுதியாகக் கற்றவரிடத்திலிருந்து மிகுதியான பொருள்களைத் தெரிந்து கொள்ளுதலும் வேண்டும். ஆசிரியரிடம் அன்பும் அச்சமும் உடையவராய், மிக நெருங்காமலும், நிழல் போல் தொடர்ந்து, மரியாதையுடன் இருத்தல் வேண்டும். தம்மிடத்தில் உள்ள பிழைகளை நீக்கும் பொருட்டும், தமக்கு நல்லறிவு கொடுக்கும் பொருட்டும் ஆசிரியர் இடித்துக் கூறுதலும், தண்டித்தலும் கூடும். அப்பொழுது மாணாக்கர் அவையாவும் தம்முடைய நன்மைக்காக எனக் கருதிக் கொள்ளுதல் வேண்டும் என்றும் இவர்தம் எண்ணங்களைக் கூறுகின்றார்.

## அன்னியர் போற்றும் மாணாக்கர் இயல்பு

நாட்டார் வாழ்ந்திருந்த காலம் அன்னியர் ஆட்சிக் காலமாகும். ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கொண்டிருந்த ஆசிரியர் மாணாக்கர் சிந்தனைகளையும் இவர் இக்கட்டுரையில் சுட்டு கின்றார். "சில ஆண்டுகட்கு முன் நடைபெற்ற கல்கத்தா யூனிவர் ஸிடியின் பட்டமளிப்புத் திருநாளில் வங்காள கவர்னராகிய லார்டு கார்மிக்கேல், மாணாக்கர்களுக்குக் குரு நிந்தையால் வரும் தீங்கையும் குருபக்தியின் மேன்மையையும் நமது மநுதர்ம சாஸ்திரத்தில் இருந்து எடுத்துக்காட்டி வற்புறுத்தியதும், நமது இராஜப்பிரதிநிதியாயிருந்து இங்கிலாந்து சென்ற லார்டு உறார்டிஞ்சு, பம்பாய் யூனிவர்ஸிடியார் தனக்கு எல்எல்டி பட்டம் சூட்டிய பொழுது மாணாக்கர்கள் தன்னடக்கமும் தன்னல மறுப்பும் உடையவராய் விளங்க வேண்டுமென்று பரிந்து பேசியதும் நம் தேயத்து மாணாக்கர் ஒவ்வொருவர் மனத்திலும் பேரூன்றி யிருத்தல் வேண்டும். இப்பொழுது மாணாக்கர்களாயிருப் போர்களே இனிப் பெரியோர்களாதலின் இத்தேசத்தின் உன்னத வாழ்விற்குக் காரணமாக இருப்பவர்கள் இவர்களே" என்று தாம் பிறரிடம் கேட்ட நல்லுரைகளை இவர் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக, ஆசிரியர்களும் மாணாக்கர்களும் ஒருவருக் கொருவர் அன்புடையவராகவும், உதவி செய்யும் சிந்தனை யுடையவராகவும் இருந்தால் இவ்வுலகம் மேனிலை அடைந்து விடும். ஒவ்வொரு சிறந்த முயற்சியும் தம் பொருட்டாக இல்லாமல் பிறர் பொருட்டாகவே முயலும் பெருமையுடையோர் இருப்பதி னால்தான் இவ்வுலகம் நிலைபெற்று வருகின்றது என்பதை நம் பழந்தமிழ் இலக்கியமான புறநானூற்றில் காண்கிறோம்.

"உண்டா லம்மவின் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்

உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே'' (புறம். 182)

என இவ்வாறு கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி கூறுவதை நாவலர் அவர்கள் இக்கட்டுரையில் முடிவாகச் சுட்டுகின்றார்.

நாட்டாரவர்கள் 69 ஆண்டுகட்கு முன்பு எழுதிய இக் கட்டுரையை ஆராய்ந்த வகையில் ஆசிரியரும் மாணாக்கரும் பற்றிய அவருடைய தெளிவான எண்ணங்களை விளக்குகின்றன. குருபக்தி மேன்மை, ஆசிரியருக்கான நல்லொழுக்க நெறிகள், மாணாக்கருக்குரிய நல்லியல்புகள் ஆகியவற்றைப் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் வாயிலாகச் சுட்டும் நாட்டார் அவர்கள் தமிழருக்கே உரிய கல்வியியற் சிந்தனைகளையும் இக்கட்டுரை யின் வாயிலாக உலகிற்கு அன்றே எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் இது போன்ற இவருடைய சிந்தனைகளை ஒன்றாகத் தொகுத்து நோன்கின் தொன்மை மிக்க தமிழரின் கல்வியியற் சிந்தனைகள் பல நன்கு புலனாகும்.

# உமாமகேசுவரனாரும் நாட்டாரும்

முனைவர் தி.புஷ்கலா
சென்னை

சிந்தனையும், சொல்லும், செயலும் தமிழாக, தமிழருக்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றிய தமிழ்ச் சான்றோர் வரிசையில் செந்தமிழ்ப் புரவலர் தமிழவேள் த.வே.உமாமகேசுவரனாரும் நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் சிறப்பான இடத்தைப் பெறுவர். இவ்விருவரும் நம் மொழியும் சமயமும் அன்னியராட்சியில் செல்வாக்கிழந்து விளங்கிய கால கட்டத்தில் தோன்றி, தமிழும் சைவமும் தம் இருகண்களாய்க் கொண்டு அருந்தொண்டாற்றிய பெருமக்களாவர்.

நாவலராய், நற்றமிழாசானாய், இணையற்ற உரையாசிரியராய், நூலாசிரியராய், வரலாற்று ஆய்வாளராய், ஆய்வறிஞராய்த் திகழ்ந்த நாட்டார் அவர்களும், எண்ணற்ற தமிழ்ப்புலவர்களை உருவாக்கிய கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவராய், செந்தமிழ்ப் புலவராய், பொதுநலத் தொண்டராய் விளங்கிய தமிழவேள் உமாமகேசுவரனார் அவர்களும் தத்தம் வழியில் நின்றும், இணைந்தும் ஆற்றிய தமிழ்த்தொண்டுகள் பலவாகும். இவ்விரு

அறிஞர் பெருமக்களிடையே நிலவிய நட்பின் திறத்தையும் தமிழ்வளர்ச்சிக் குறித்து இவர்கள் கொண்டிருந்த ஆக்க பூர்வமான சிந்தனைகளையும் ஒத்தக் கருத்துக்களையும் நோக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**நாட்டார் திறம்**

பெரும்புலவர் வரிசையில் வைத்துப் போற்றத்தகும் சிறப்பு வாய்ந்த நாட்டார் அவர்களின் ஆழ்ந்த புலமையும், சங்கத் தோய்வும், சங்கப்பண்பும், பேச்சிலும் எழுத்திலும் ஒளிர்ந்த தனித்தமிழ் நடையும், ஆய்வுத்திறனும், பயிற்றுவிக்குந் திறனும், அன்பும் அமைதியும் கூடிய இனிமையான பண்பும் அவருடன் நண்பராயும் மாணாக்கராயும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்ற நற்றமிழ் அறிஞர் பலரால் பெரிதும் போற்றப்பெற்ற பண்புகளாம். இத்தகு சிறப்புகள் தமிழ் வளர்ப்பதையே வாழ்நாள் கடமையாகக் கொண்டு விளங்கிய தமிழவேள் அவர்களையும் ஈர்த்ததில் வியப்பேதுமில்லை.

அதுபோலவே அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், இவற்றின் மொத்த உருவாய், தமிழ்க்காதலராய், காவலராய், தமிழறிஞர்களின் அருந்தோழராய், செயல்வீரராய், எண்ணற்ற தமிழ் இளைஞர்கட்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்த தமிழவேளின் நற்பண்பு களும் நாட்டாரைக் கவர்ந்ததும் இயல்பான ஒன்றேயாம். தமிழவேள் அவர்கள் நாவலரை கரந்தைப்புலவர் கல்லூரித் தலைவராய்த் தேர்ந்தெடுத்தமையும், சங்க விழாக்களின் போது தலைமையேற்று பேருரைகள் ஆற்றும்படி செய்தமையும், மேலும் அவரைக் கொண்டு, ஆங்கிலத்தில் உள்ள ஆங்கிலப்புலவர் வரிசை போன்றதொரு நூலைத் தமிழில் 'நக்கீரர்' எனும் பெயரில் இயற்றச் செய்தமையும் நாவலர்பால் தமிழவேள் கொண்டிருந்த நன்மதிப்பினை உணர்த்துவன.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியப் பணியினின்று ஓய்வுபெற்ற நிலையில் ஒருநாள் சங்கத்தில் நிகழ்வுற்ற கழகக்

கூட்டத்திற்கு வந்திருந்த நாவலரிடம் கரந்தைப்புலவர் கல்லூரியின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி வேண்டிய நிகழ்ச்சி இவர்தம் நட்பின் திறத்தை உணர்த்தவல்லது. இதனை, 'தமிழவேள் உமாமகேசுவரனார்' எனும் நூலில் புலவர் சாம்பசிவனார் அவர்கள் விவரித்திருப்பதைக் காணலாம். சங்கக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக வந்தமர்ந்திருந்த நாவலரைக் கண்ட தமிழவேள் அருகில் சென்று நாவலரை மார்புறத் தழுவி கண்ணீர் மல்க, "தங்களைப் பல்லாண்டுகட்கு முன்பாகவே சங்கத்திற்கு வந்து பணிபுரிய வேண்டினேன். தங்கட்குரிய பதவி இதுபோழ்து காத்திருக்கிறது." கரந்தைப் புலவர் கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணைப்பைப் பெற்றுவிட்டது. இக்கல்லூரிக்குத் தலைமை தாங்கத் தக்கார் தமிழ்நாட்டில் தங்களையன்றி யாருளர்? தாங்கள் கருத்துரையாது இப்பதவியினை ஏற்றருளல் வேண்டும்" என உளங் கசிந்துரைத்தார்.

அதற்கு நாவலர் யான் ஏறக்குறைய 30 ஆண்டுகட்கு மேல் கல்லூரியிலேயே நீளத்தொடர்பு கொண்டிருந்தேன். என் வாழ் நாளின் பிற்பகுதியிலும் கல்லூரியிலேயே தொடர்பு கொள்ள வேண்டுமெனத் திருவுளக் குறிப்பிருந்தால் யான் என் செயக் கடவேன்? தாங்கள் கூறிய மொழிகளைத் தடுத்துரைக்க அஞ்சு கிறேன். சிறிது காலம் யான் நடுக்காவேரி சென்று ஓய்வு எடுக்க எண்ணியிருந்தேன். வண்தொண்டராகிய தாங்கள் வழியில் வளைக்கிறீர்கள். சில ஆண்டுகள் எனக்கு ஓய்வு தரல் ஆகாதா என மறுமொழி கூறினார்.

அதற்குத் தமிழவேள் "ஐயா அவர்களே தடுத்துரைத்தால் யான் கல்லூரித் தலைவராக யாரைத் தேடிச் செல்வது? யான் வன் தொண்டன் அல்லேன், இன்தொண்டிற்கு உங்களை வேண்டு கிறேன் ........." எனப் பிணைத்த கையுடன் நாவலரை அழைத்துச் சென்றார். அது கண்டு நாவலர் தமிழவேளைப் பார்த்து, "இஃது என்ன? என்றுமிலாப் பரிவுடன் இன்று செல்வக் கருங்கோ வாழியாதன் கபிலர் கையை இறுகப் பற்றினார் போல் பற்றிக்

கொண்டுள்ளீர்களே" எனப் புன்முறுவல் தோன்றக் கூறினார். அதற்குத் தமிழவேள், "பழந்தனம் இழந்ததைப் பெற்றால் யான் பற்றிக் கொள்ளாது விட்டுவிடுவேனோ?" என்றார். பின்னர் தமிழ வேள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பிற நண்பர்கள் முன்னிலையில் நாவலரின் புலமைத்திறன் ஆராய்ச்சித்திறன் ஆகியவற்றை எடுத்துக்கூறி, கல்லூரித் தலைமைப் பொறுப்பினை அவர் ஏற்றுக்கொள்ளும்படி செய்துவிட்டார் எனின் இவ்விருவர் தம் நட்பின் திறத்தை எங்ஙனம் இயல்வது?

மேலும், இந்நிகழ்ச்சி தமிழ்நாட்டில் அருகிக் காணப்பெறும் நல்லாசிரியர்களைத் தேடிக் கொணர்ந்து பேணியும், போற்றியும் வைத்துக்கொள்வதைத் தமிழ் வளர்ச்சி பேணுவோரின் முக்கிய கடமையாகும் என்பதை மேடைகளில் முழங்கியதுடன் அதனைச் செயலிலும் செய்துகாட்டியமை தமிழவேளின் செயல் திறத்தையும் உணர்த்துவதாகும்.

நாட்டார் அவர்களும் தமிழ்வளர்ச்சி குறித்து உரையாற்றும் போதும் மற்றவிடத்தும் தமிழவேளின் சீரிய சங்கப்பணிகளையும் அவரது பண்பு நலன்களையும் போற்றத் தவறியதில்லை. தமிழவேளின் மறைவுக்குப் பின்னர் கல்லூரித் தலைவர், ஆசிரியர் என்ற அளவில் மட்டும் நில்லாது புரவலராகவும் மாறி தொண்டாற்றி னார். தமிழவேளால் நாட்டப்பெற்றக் கல்லூரி நாட்டில் நிலைபெற்று விளங்கி நற்றொண்டு புரியவேண்டும் என்பதையே கருத்திற் கொண்டு உடல் நோயுற்ற போதும் அயராது உழைத்து கல்லூரி யின் உயர்வுக்காகப் பாடுபட்டார் எனின் இவர் தமிழவேள்பால் கொண்ட அன்பு நன்கு புலப்படும். தமிழவேள் அவர்கள் மறைந்தகாலை இவர் வரைந்த 'தமிழவேளின் தனிமாண்பு' எனும் கட்டுரை அவர்பால் நாவலர் கொண்டிருந்த நன்மதிப்பினையும், நட்பையும், அன்பையும் உணர்த்தவல்லது. அதன் சுருக்கம் வருமாறு:

"செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், திரு.த.வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் அரசர்க்குரிய பண்புகள் இயல்பிலே அமைவரப் பெற்றவர். அவர் செல்வம், பதவி ஆணை என்பவற்றிற் பிறர் எத்துணைச் சிறந்தோராயினும் அவை கருதியே அவர்க்கு வழிமொழிதலுடையரல்லர்; செய்தக்க செய்யாக் குறையோ, செய்தக்க வல்லன செய்யுங்குற்றமோ அவர்பாற் காணின் அவர் கண்ணெதிரே கழற்றுரை கூறித் தெருட்டு நீர்மையர்; முற்கூறிய மூன்றுமில்லாரை அவையின்மை யேதுவது மீக்கூறுலுடையரு மல்லர்; அவர்பாற் கடப்பாடறியும் பண்புடமை காணின் அவர்க்கு வழி மொழிதலுஞ் செய்வர்.

மற்று, எனக்கிது செய்கவென எக்காலத்தும் யாரொருவர் கண்ணும் யாதொன்றனையும் இரத்தலறியார்; ஒல்லுவதொன் றனைப் பிறர் இரந்த வழி அதனை மறுத்தலுமறியார்; இன்ன வாற்றால் புறப்பாட்டிலே, நம்பி நெடுஞ்செழியனைப் பேரெயின் முறுவலர் கூறிய " வலியரென வழி மொழியலன், மெலியரென மீக் கூறலான், பிறரைத் தான் இரப்பறியலன், இரந்தோர்க்கு மறுப் பறியலின்" என்றும் ஒத்துரைகள் நம் தமிழவேளுக்கு நன்கியையு மென்க.

மற்று சால்பு என்றும் பொறையினைத் தாங்கிய தூண்க ளென வள்ளுவனார் தெள்ளிவுரைத்த அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐங்குணங்களும் அணிசெய்யா நின்றன. "பெருமை பெருமிதமின்மை" என்னும் அறிவுறாக் கண்டு அவர் அடங்கினரோ, அவரது தருக்கின்மையானாம் பெருமையை நோக்கி அவ்வுரை எழுந்ததோ என்னுமாறு அவரது அடக்கம் சிறந்து மகிழ்ந்தது. தெய்வப் புலவர் கூறிய வரைவின்மகளிர், கள், சூது என்பன அவரிருந்த திசையினும் சென்றறியாதன. மற்றும், "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்", "அறிவறிந்தான் வினை யின்மை பழி" என்னும் மறைமொழிகளைக் கடைபிடித்து, இஃது

அருமையுடைத்தென்று அசராது, வினை செய்தலாலாம் இன்னாமையை இன்பமெனக் கொண்டு இடையறாது முயலும் அவரது மிக்கோளும் ஊக்கமும் விளம்புதற்குரியன. அவர் அங்ஙனம் முயற்றற்கு மேற்கொண்ட வினைதான் தண்டமிழ் புரத்தலே. இரவின் மனையில் எழுந்த குழவியாம் கரந்தைத் தமிழ்ச்சங்கம் இப்பொழுது கந்தனையினைபவர் கலை பயில் கழகமும் பந்தினையிளையவர் பயிலிடமும், மன்றமும் பொதியிலும் மருத்துவக் கூடமும், ஆர்தமரற்றொர் சேர்தரு மில்லமும், பட்டிமண்டபமும், பரந்த நூல் நிலையமும், பிறவுமாம் உறுப்புகள் திறவிதிற் பெற்ற பேரரசன் உற்ற பெற்றிதான் செந்தமிழ்ப்புரவலர் நந்தா முயற்சியுள் வந்ததோர் பயனன்றோ? அவர் எவ்வழி செல்லினும், யாருடன் பேசினும் யாது பரியினும் யாவும் தமிழர் பொருட்டேயாகும். இங்ஙனம் சிந்தையும் உரையும் செய்கையுமெல்லாம் செந்தமிழ்க் காக்கிய திண்டிறற் குரிசில் செந்தமிழ்ப் பயனாம் சிவநெறி பேணுந் தவமுடையாருமாயினர். கனிந்த அன்பின் நனைந்த உள்ளமொடு திருப்பதிதோறும் விருப்பமுடன் நடந்து கண்ணுதற் கடவுளை நண்ணி வழிபடும் ஆர்வம் இவர்பால் அளவன்றாயது. ஐயாறப்பர் திருவுலாப்போதும் ஏழ்பதி விழாவில் மெய்ப்பை யின்றியும் மேலுடையின்றியும் வெம்மை மீதுறத் தண்மையின் நடக்கும் இவரது எளிய தகைமையைப் பல்லாயிரவர் பார்த்துளம் நெகிழ்வர். மற்றும், யாவர்க்கும் இன்னா செய்யாமையும், எளியார்பால் இரங்கங்கோடலும், கற்றாரைக் காதலித்தலும், நட்டாரை உயர்வு கூறலும், பெரியோரைப் பேணியொழுகலும் முதலிய இவர் பண்பனைத்தும் உரைக்குள் இவரது வாழ்க்கை ஆறு கல்விக் கூடம்; உயர்நிலை விரும்புமொருவன் அதனிற் புகுந்து பயிறல் வேண்டும். ஆ! இப்பெருந்தகையாம் அருந்துணையைப் புரிந்தேயும் இருந்தேம் யாம்! எம் அன்பிருந்தவாறென்னே!"

மேற்கூறியவற்றின் அடிப்படையில் நோக்கின் இவ்விரு பெருமக்களிடையே நிலவிய உயர்ந்த நட்பானது நாட்டார் அவர்கள் வியந்து போற்றும் செந்தமிழ்ப் புரவலர்களாய்த் திகழ்ந்த

பழந்தமிழ் அரசர்களுக்கும் அவர்களால் பெரிதும் மதித்துப் போற்றப்பெற்ற புலவர் பெருமக்களுக்குமிடையே நிலவிய நட்பின் தன்மையை ஒத்தது எனில் அது மிகையாகாது.

## தமிழ் வளர்ச்சி குறித்த இவர்களது ஒத்த சிந்தனைகள்

நாட்டார் அவர்கள் ஆற்றிய பேருரைகளும், சங்கத் தலைவராய் விளங்கிய தமிழவேள் அவர்கள் தமிழகத்தில் அச்சமயம் நிகழ்ந்த பல்வேறு மாநாடுகளிலும் ஆற்றிய பேருரை களும் தமிழ் வளர்ச்சி குறித்த அறிவியல் மற்றும் ஆக்கப்பூர்வமான ஒருமித்த கருத்துக்களை வெளிப்படுத்துவதாகவே அமைந்திருத் தலை உணர முடிகிறது.

கல்வியின் சிறப்பு, தாய்மொழிவழிக் கல்வியின் இன்றியமையாமை, தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்பு, வளம், இலக்கண, இலக்கியச் செறிவு, பழந்தமிழ் அரசர்களால் தமிழ் போற்றப்பெற்ற நிலை, தமிழ் மொழிப் பயிற்சியுடன் இசை, நாடகம் ஓவியம் மற்றும் தொழிற் பயிற்சியினையும் பெறுதலின் அவசியம், பிறமொழி நூல்களையும், அறிவியல், கலை நூல்களையும் தமிழில் இயற்றவேண்டியதன் அவசியம், அதற்கென தமிழில் கலைச்சொற்களை உருவாக்குதல், அவ்வாறு செய்யுமிடத்து தமிழின் தூய்மையைப் பாதுகாத்தலின் இன்றியமையாமை, தமிழில் அறிவியல் கலைச்சொற்களைக் காண்பதரிது என்போரை முயற்சியும், ஊக்கமும் குறைந்தோராக மதிப்பிடுவதுடன் பன்மொழிப் புலமை வாய்ந்தோர் ஒன்று கூடி கலைச்சொற்கள் காண உதவ வேண்டும் என்பதை வலியுறுத்தல், ஒருவேளை தமிழில் கலைச்சொற்களை உருவாக்க இயலாதவிடத்து பிற மொழிச் சொற்களைத் தமிழ் மரபுக்கேற்ப, வரம்பிற்குட்பட்டு திரித்துக் கொள்ளலாம் என்று கருத்துரைத்தல், தமிழ் வளர்ச்சிக் கான முறைகளை ஆய்ந்தறிந்து அவற்றை மேற்கொள்ளும்படி பல்கலைக்கழகங்களைத் தூண்டுதல், தமிழ்ப்பற்றுள்ள அனைவரின் கடமை என்பதை எடுத்துரைத்தல், மற்ற மாநிலத்தவர்

தம் மொழிக்கெனத் தனியே பல்கலைக்கழகங்களை உருவாக்கி யிருப்பதைப் போன்று தமிழுக்கெனத் தனிப்பல்கலைக்கழகம் அமைப்பதை வலியுறுத்தல், முறையான தேர்வு மற்றும் பாடத் திட்டங்களை அமைத்தல், தமிழ் நாட்டில் அருகிக் காணப்படும் நல்லாசிரியர்களைத் தேடிக் கொணர்ந்து பேணியும் போற்றியும் வைத்துக் கொள்ளுதல், சிறந்த நூல் நிலையங்கள் நிறுவுதல், தொடக்க நடுத்தர மற்றும் உயர்தரக் கல்லூரிகளை நாட்டுதல், மேலும் மொழிவளர்ச்சிக்கு அடிப்படையான கூறுகளை ஆய்ந் தறிந்து அவற்றில் ஒரு சிலவற்றையேனும் செயல்படுத்த சங்கங் களை நிறுவி உண்மைத் தமிழ்ப் பற்றுடனும் தோழமையுடனும் உழைக்கும் ஒருமைப்பாடுடைய தமிழன்பர்களையே அதில் உறுப் பினராக்குதல், சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கிவரும் இதழ்களை வெளிக்கொணர்தல் என இவை போன்ற இன்ன பல கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு இவர்களது பேருரைகள் அமைந்திருக்கின்றன.

இத்தகு ஆக்கப்பூர்வ சிந்தனைகளை மேடைகளில் முழங்கியதோடன்றி செயலிலும் காட்டிச் சென்றிருப்பதை இவர்களது சீரிய தமிழ்ப்பணிகள் உணர்த்துவன. இவர்கள் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து அவர்கள் விடுத்த பாதையில் நடப்போமாயின் தமிழும் தமிழரும் நலமும் வளமும் பெறுவர் என்பது உறுதி.

# தமிழ்ப் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு நாட்டாரின் பங்கு

பேரா. சி. பெரியசாமி
தஞ்சாவூர்

உளியால் செதுக்கப்படாத இலிங்கத்தை விடங்கர் என்று கூறுவது சைவ சமய மரபு. 'தான் தோன்றி' என்பது விடங்கரின் மறுபெயர். சைவத்தில் ஏழு தான்தோன்றிகள். ஆனால், தமிழில் ஒரே ஒரு தான்தோன்றி, அவர் தான். நடுக்காவேரி வேங்கடசாமி நாட்டார். 'நாட்டாரையா' எனத் தமிழ்ச் சான்றோரால் வாய்மணக்க அழைக்கப்பெற்ற தமிழ்த்தாய் மகன்; நெறிப்படுத்தும் ஆசானின்றித் தாமே கற்று ஒளிர்ந்த தமிழ்ச் சிவப்பிரகாசம்; தமிழ் மலையாய் உயர்ந்த வேங்கடம்; முக்கட் செல்வர்; தமிழ், சிவனியம், சித்த மருத்துவம் எனும் முக்கண்ணுடைய முத்தமிழ்ச் செல்வர்.

காவேரி வளத்தின் திரட்சியை நடுக்காவேரியில் காணலாம். தமிழ் வளத்தின் திரட்சியை நாட்டாரிடத்தில் காணலாம். நாட்டாரையா வளர்ந்த காலகட்டத்தில் தமிழகம் அந்நிய மோகத்துக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததால் தமிழ் மெலிந்தது

சைவம் நலிந்தது. அக்காலத்தே ஆங்காங்கே முகிழ்ந்த தமிழ்ச் சங்கங்களும், சைவ மன்றங்களுமே இதற்குச் சான்றாக நிற்கின்றன.

கல்வியைச் சிறுபான்மையினரே 'பிரார்ஜித' மாக்கிக் கொண்டனர். பெரும்பான்மையினரிடமிருந்து தம்மை வேறாக்கிக் கொண்டு, ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றுவதும், அடக்கி ஆள்வதுமான நடவடிக்கைகளில் இறங்குவராயினர். மகளிர் கல்வி யென்பது கள்ளியில் மாங்கனி பறிக்கும் கதை யொப்ப விருந்தது. வழிவழி வந்த வேளாண்மை நலிந்து கொண்டே வந்தது; வேலி ஆயிரம் விளைந்ததும் கலிங்க நுண்ணாடை நெய்ததும் பொய் என்று கூறுமளவுக்குப் போயின.

அன்னிய மொழிவழிப் பாடம் பயில்வோர் பாடப் பொருளைப் புரிந்து கொள்வதைவிட, மொழிப் பயிற்சிலேயே பெரும்பகுதிக் காலத்தை விரயமாக்க நேர்ந்தது. மாணவரிடையே ஒழுக்கச் சிதைவு பரவலானது. ஆசிரியர் – மாணவர் உறவு குன்றத் தொடங்கியது. சமூக ஒற்றுமை குலைய ஆரம்பித்தது. கொடுக்கப் பட்ட ஒன்றிரண்டு அரசியல் உரிமைகளும் பெரும்பான்மை மக்களைச் சென்றடையவில்லை; சென்றடைந்த உரிமைகளும் இத்தன்மைத்தன என்று புரிந்துகொள்ளும் அளவுக்குத் தெளி வில்லை. மரபுவழிக் கலைகளும் சிறிது சிறிதாக மறக்கப்பட்டு வந்தன.

சர் வெள்ளுடைவேந்தர் தியாகராசர், சிங்காரவேலர், தந்தை பெரியார் போன்றவர்கள் அரசியல் தளத்தில் நின்று களம் அமைத்தனர். ஆபிரகாம் பண்டிதர் இசைத்தளத்தில் களம் அமைத்தார். நாட்டாரையா தமிழ்த்தளத்தில் களம் அமைத்தார். ஆனால் என்ன ஒற்றுமை! மூன்று தளத்திற்கும் குறி ஒன்றே!

இந்த நிகழ்வுகளால் தாக்கப்பட்ட நாட்டாரையா ஒரு தொடக்கப் போருக்குத் திட்டமிட்டார். ஆசிரியரல்லவா? மாணவப்

பயிர்களின் வளர்ச்சியை அன்றாடம் நோட்டம் விட்டவர் அல்லவா? அதனால் அவருக்கு நோயும் தெரிந்தது; தீர்வும் தெரிந்தது. அதுதான் 'தனித்தமிழ்க் கல்லூரி' சிறுகத் தொடங்கி பெருக நினைத்தார். 1901இல் மலர்ந்த மதுரைத் தமிழ்ச் சங்கமும், அதனைத் தொடர்ந்து தோன்றிய தஞ்சைத் தமிழ்ச்சங்கமும் (இதனில் நாட்டாரையாவின் தந்தையார் உறுப்பினர்), கரந்தைத் தமிழ்ச் சங்கமும், அதன் திருச்சிராப்பள்ளி கிளைச் சங்கமும், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கமும் ஆற்றிய பணிகளிலெல்லாம் தம்மையும் நாட்டார் இணைத்துக் கொண்டார். எனினும் நாட்டாரின் உள்ளுணர்வுகளுக்குத் தமிழ்க்குடியின் தேவையை அவை நிறைவு செய்யும் என்று தோன்றவில்லை. அதனால்தான் அவர் தமிழ் வழிக்கல்வியைத் தொடங்கவேண்டுமென்ற குறிக்கோளில் தனித்தமிழ்க் கல்லூரித் திட்டத்தை மனத்தகத்தே உருவகப்படுத்திக் கொண்டு அடிப்படை வேலைகளில் இறங்கினார்.

ஒருபுறம் செயற்பட்டு வந்த சைவசமய மன்றங்களுடனும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டாலும் அவையின் சேவை, தேவைக்கேற்ப இராதென்று கருதிப்போலும், சமயக் கல்வியையும் தனித்தமிழ்க் கல்லூரி பாடத்திட்டத்தில் சேர்க்க விரும்பினார். இந்த உந்து ஆற்றலால் களமிறங்கித் தனித்தமிழ்க் கல்லூரியைக் 'குருகுல'ச் சாயலில் அமைக்க நிதியும் சேர்க்க முனைந்தார். அதன் நோக்கத்தை விளக்கி 1921இல் அறிக்கை ஒன்றும் வெளியிட்டார்.

"இந்நாட்டில் இக்காலத்தில் இருந்துவரும் கல்விமுறை பெரிதும் பிழைபாடுடையதென்று அறிஞர் பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. தமது தாய்மொழியைக் கைவிடுத்து வேற்றுநாட்டு மொழியாற் கல்வி கற்றுவரும் புதுமை இவ்விந்திய நாட்டில் மாத்திரமே காணப்படுகிறது. பல கலையுணர்வும் பெற்று அரிய செயல்கள் செய்தற் பொருட்டன்றோ கல்வி கற்பது? இப் பொழுதோ மாணவர்கள் வெறும் மொழிப்பயிற்சியின் பொருட்டே தமது கட்டிளமைப் பருவமெல்லாம் செலவிட்டுக் கலையுணர்வு பெறுதலின்றி உடலுரமும் குன்றுகின்றனர். மாணவர்கட்கு

இருக்கவேண்டிய நற்குண நல்லொழுக்கங்கள் அருகி வந்து கொண்டிருக்கின்றன. மதவுணர்வு சிறிதும் பெறுதலின்மையால் அவர்கட்குத் தெய்வநம்பிக்கையும் குன்றிவிட்டது. ஆசிரிய–மாணவர்களின் சம்பந்தம் பெரும்பாலும் உருக்குலைந்து நிற்கிறது. இவ்வாறாக நிகழ்ந்துள்ள குறைபாடுகளுக்கு ஓர் எல்லையில்லை. இந்நிலைமையில் வறிதே காலந்தாழ்த்தாது நம்நாட்டுக் கல்வி முறையைத் திருத்துவது இந்திய நன்மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுள்ள கடனாகும்.”

இந்திய நன்மகனான நாட்டார், தாம் நிறுவ விரும்பும் தனித்தமிழ்க் கல்லூரிக்குத் “திருவருட் கல்லூரி” என்னும் பெயரிட்டு நிதிதிரட்ட முனைந்தார். தமிழகத்தின் சில பகுதிகளில் உரூபா ஏழாயிரம் வரையில் பல அன்பர்கள் ஒப்பமிட்டுத் தந்தனர். மென்மேலும் முயன்றிருந்தால் நூறாயிரத்தையும் தொட்டிருக்கும். கல்லூரிப் பணியும், குடும்பப் பொறுப்பும் இப்பணிக்குச் செலவிட வேண்டிய அளவுக்கு நேரம் கிடைக்க இடந்தரவில்லை. தவிரவும் அந்நாளில் கல்லிடைக்குறிச்சியில் வ.வே.சு. அய்யரால் ஏற்படுத்தப் பெற்ற குருகுலம் நடைபெற இடர்ப்பாடுகள் நேர்ந்தன. வருணா சிரம கொள்கையைக் கடைப்பிடித்ததால் அந்நிகழ்ச்சிகள் நாட்டாரின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் ஒன்றை நான் இங்கே பதிய வைத்தாக வேண்டும். வ.வே.சு. ஐயர் பாணியில் வருணாசிரம தர்ம அடிப்படையில் நாட்டார் தமது தனித்தமிழ் திருவருட் கல்லூரியை அமைக்கத் திட்டமிட்டார் இல்லை. நாட்டாருடையது சமரச நோக்குடையது. எனவே நாட்டார் கல்லிடைக்குறிச்சி நிகழ்வுகளால் மனந்தளர்ந் திருக்கத் தேவையில்லை. முன்னர்க் குறிப்பிட்டதுபோல் கல்லூரிப் பணியும் குடும்பப் பொறுப்புமே மறுசிந்தனைக்குப் பெரும் பங்கு வகித் திருக்க வேண்டும்.

ஒரு குழுவிடம் பொறுப்பை ஒப்படைத்து, தான் தூண்டு ஆற்றலாக இருந்து செயற்பட்டிருந்தால், தமிழகத்தில் நாட்டாருக் கிருந்த நன்மதிப்பே வியக்கத்தக்க விளைவுகளை ஏற்படுத்தி

யிருக்கும். எனினும், இந்தச் சிறிய ஆலம் வித்து அவரது மனப் படுகையில் பெரிய வித்தாகப் பருத்து முளைத்து வெளிவர மண்ணை முட்டிக் கொண்டிருந்தது. அதனுடைய கருப்பைக் காலம் 5 ஆண்டுகள். 23. 8. 1925ஆம் நாளில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்நாட்டு வளர்ச்சி நெறி அமைச்சர் திவான்பகதூர் டி.என்.சிவ ஞானம் பிள்ளை அவர்களுடைய தலைமையிற் கூடிய ஒரு கூட்டத் தில் கலையறிவு, நாகரிகம், பொருட்டுறை, கைத்தொழில், வேளாண்மை முதலியவைகளில் தம் பழம்பெருமைக்கேற்ப மேம்படுதற் பொருட்டாகத் தமிழர்கட்குத் தனியே ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பெறல் வேண்டும் என முடிவு செய்யப் பெற்றது. அம்முயற்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கெனப் பன்னிருவர் அடங்கிய கழகம் ஒன்று அமைக்கப் பெற்றது. பன்னிருவரில் நாட்டாரும் ஒருவர்.

மேற்சுட்டிய நிறைவேற்றுக் கழகம் திருச்சிராப்பள்ளியில் திருவாளர் சிவஞானம் பிள்ளை தலைமையில் மீண்டும் கூடி மேலும் சிலரைக் கழக உறுப்பினராக இணைத்துக் கொண்டது. கழக அமைச்சராக திருவாளர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, பி.ஏ.எல்.டி. அவர்களைத் தெரிவு செய்தது. அமைச்சரால் பல்கலைக்கழகத்தின் இன்றியமையாமை கருதிப் பொது வினாப் பட்டியல் தயாரித்து பலருக்கும் அனுப்பப்பெற்று விடைகளும் பெறப்பட்டன. பின்னர்த் திருச்சிராப்பள்ளிலேயே இதன்பொருட்டு இன்னொரு மாநாடும் நடத்தது.

இந்த முயற்சிக்கு உறுதுணையாக 24.10.1925ஆம் நாளில் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு கூடி, "தமிழகத் துக்கு உடனடியாக ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகமாவது தேவை யென்றும் அதற்கு அரசினர் அவசர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் திரு.டி.வி.சேஷகிரி ஐயர் என்பவரால் கொண்டுவரப் பெற்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இதன் விளைவாகத் தமிழக அரசு விரைந்து செயற்பட்டது. மாட்சிமைமிக்க இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்க சேதுபதி அவர்களைத் தலைவராகக் கொண்டு

ஒரு குழு அமைத்து, அக்குழுவுக்குத் தமிழவேள் பி.டிஇராசன் அவர்களைச் செயலாளராக நியமித்தது. இக்குழு பல்கலைக் கழகம் குறித்து ஆய்ந்து முடிவு செய்யும் அதிகாரம் பெற்றிருந்தது.

தொடர் நடவடிக்கையாக அக்குழு வினாப்பட்டியல் தயாரித்துப் பலருக்கும் அனுப்பி மறுமொழிகளும் பெற்றதுடன் பல ஊர்களுக்கும் பயணம் செய்து தக்காருடன் உரையாடல் நிகழ்த்தித் தெளிவுரைகளும் பெற்றது. தமக்கு வரப்பெற்ற வினாக்களுக்குத் தக்க மறுமொழிகளை நாட்டார் அனுப்பியதுடன் 8.4.1927அன்று திருச்சிராப்பள்ளிக்கு வந்த அக்குழுவினருடன் உரையாடி அறிக்கையும் அளித்தார். அரசின் குழு செயற்படத் தொடங்கிய தால் நாட்டார் அடங்கிய தனியார் குழு தனது முயற்சியை நிறுத்திக்கொண்டது.

அந்நிய மொழிவழிக் கல்வியால் தமிழினம் எவ்வாறு தாழ்ந்து போகிறது எனக்கண்ட நாட்டாரின் உள்ளம், அந்தச் சரிவைத் தடுத்து நிறுத்துவதோடல்லாமல் நிமிர்ந்து நிற்கும் வழியையும் ஆய்ந்து கண்டு நடைமுறைப்படுத்த எடுத்த முயற்சி கள், அரசின் முயற்சியாக பரிணாம வளர்ச்சி பெற்றது. அவரது தனித்தமிழ் வழிக்கல்வி விதை அற்றுப் போகாமல் பலவாண்டு களாகப் பாதுகாத்து வந்த உணர்வு எத்தன்மையது! அந்த உணர்வின் வெளிப்பாடு தமிழனுக்கு இன்றைக்கும் தேவையான கட்டளைக் கல்லாகத் துலங்குகின்றது.

“தமிழ் நாடானது மற்றைய நாடுகளுடன் (மாநிலங்களுடன்) ஒத்துப் பார்க்குமிடத்தில் இப்பொழுது பொருள்நிலை, மன்பதை ஒற்றுமை முதலியவற்றில் மிகவும் பிற்போக்கடைந்துள்ளது. தமிழ் நாட்டிலே இரண்டொரு வகுப்பினர் தவிர மற்றைய பெரும்பாலோர் கல்வியிலும் மிகுந்த கீழ்நிலையில் இருக்கின்றனர். சில வகுப்பினர் அரசியல், மதம் என்பவற்றில் சிறிதும் உரிமையில்லாதவராய் இருக்கின்றனர். அரசியல் உரிமை ஏற்பட்டு வருகின்ற இந்நாளில்

பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தற்குரிய சொல்லுரிமையாளர்களில் நான்கில் ஒரு பங்கினராவது தங்கள் சொல்லுரிமையின் கருத்தை அறிந்திருப்பார்கள் என எண்ண இடமில்லை. கற்றவர்களுக் குள்ளும் வேலையில்லாக் குழப்பம் மிகுந்து வருகின்றது. இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துச் சூழும்போது கல்வியை எளியவர்களும் பெறத்தக்க வகையிலும், கற்றவர்கள் தங்கள் வாழ்க்கையைப் பிறர் உதவியின்றி நடத்தத் திறமையுள்ளவர்கள் ஆகும் வகையிலும் திருத்தியமைத்துப் பரவச் செய்தற்கு ஒருவந்தம் ஏற்பட்டுள்ளமை புலனாகும். மேலும், கல்வி கற்பது வயிற்றுப் பிழைப்புக்கே என்னும் எண்ணம் மாறி அறிவை வளர்த்து மக்கட் பிறப்பைப் பயனடையச் செய்வதற்காக என்னும் எண்ணம் ஓங்கும் படியும் கல்விமுறை திருத்தப்பெறவேண்டும்.

“தமிழ் நாடானது மிகப் பழைய காலத்திலேயே நாகரிகத் தில் சிறந்திருந்ததென்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் பலராலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு முதலிய தமிழ் இலக்கியங்களிலிருந்தும் பிற நாட்டிலிருந்து நாடு சுற்றிப் பார்க்கும் வேட்கையில் வந்தோர்களின் குறிப்புக்கள் முதலியவற் றிலிருந்தும் தமிழர்கள் பழங்காலத்தில் வேளாண்மை, கைத் தொழில், வாணிகம், சிற்பம் முதலியவற்றில் மேன்மையடைந் திருந்த செய்தி நன்கு புலப்படுகிறது. இப்பொழுது கேட்போர் முடியாதது ‘பொய்’ என்று நினைக்கத் தகுந்த அருமையான மெல்லிய ஆசைகள் அப்பொழுது தமிழரால் நெய்யப்பட்டன. கி.மு. பத்துப் பன்னிரண்டு நூற்றாண்டுகளின் முன்பே தமிழர்கள் கடல்வழியாகக் கிரேக்கர், எகிப்தியர் முதலானவர்களோடு வாணிகம் செய்து தமிழ் நாட்டின் செல்வத்தைப் பெருகச் செய் தனர். அக்காலத்தில் அரசியல் உள்ளிட்ட எல்லாச் செயல்களும் தமிழ் மூலம் நடைபெற்றமையாலும் தமிழ் வேந்தர்கள் சங்கங்கள் முதலியவற்றின் வாயிலாகத் தமிழைப் போற்றி வளர்த்தமையாலும் தமிழ்மொழி மிக்க திருத்தமும் வளர்ச்சியும் அடைந்திருந்தது. சமய நெறியிலும் தமிழ்நாடு தலைமையுற்றிருந்ததென்பது சைவ

வைணவப் பெரியார்கள் ஆசிரியர்கள் என்போரின் தோற்றத்தாலும் தமிழ்நாட்டிலுள்ள எண்ணிறந்த திருக்கோயில்களாலும் வெளிப் படும்.

"இப்பொழுது ஆந்திரநாடு தனக்கென ஒரு கழகம் ஏற்படுத்திக் கொண்டுவிட்டது. கேரளநாடும் விரைவில் ஏற்படுத்திக் கொள்ளும் நிலையில் உள்ளது. 24. 10. 1925இல் நடந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் செனட்சபைக் கூட்டத்தில், காலஞ்சென்ற மதிப்புக்குரிய டி.வி.சேசகிரி ஐயர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதன் பொருட்டாகத் தீர்மானம் கொண்டுவந்து பேசியபொழுது எடுத்துக்காட்டியவாறு ஆந்திரநாடு, கேரள நாடுகளைவிடத் தமிழ்நாட்டில் கல்லூரிகளின் தொகையும் மாணாக்கர்களின் தொகையும் இரண்டு பங்கிற்கு மேலாக உள்ளன. இக்காரணங்களால், தமிழ் நாடானது பிறவற்றிலும் முற்படத் தனக்கெனக் கழகம் ஏற்படுத்திக் கொண்டிருப்பின் அது மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும். இப்பொழுது ஆந்திர நாடு வழிகாட்டிய பின்பேனும் இதனை நிறைவேற்ற வேண்டியது தமிழ்நாட்டின் இன்றியமையாக் கடமையுமாகும்.

இப்பொழுதுள்ள பல்கலைக்கழகத்தைக் கொண்டே நான் மேலே சுட்டிய குறைகளையெல்லாம் நீக்கித் தமிழ்நாட்டுக்கு நன்மை செய்துவிடலாம் என நினைப்பது பகற்கனவாகும். அதற்கு அத்தகைய ஆற்றல் இருக்குமாயின் அது இதற்கு முன்பே வெளிப்பட்டிருக்கவேண்டும். சென்னைக் கழகமானது தமிழை எவ்வளவு புறக்கணித்துத் தாழ்த்தியும் அதன் வளர்ச்சியைத் தடுத்து வந்திருக்கிறது என்பதனை இப்பொழுது நான் எடுத்துக்காட்டுவது அத்துணை நாகரிகமாயிராது. அன்றியும் தமிழ்நாட்டினர்க்கு "யாம் தமிழர்" என்ற உணர்ச்சியும் நாட்டுப்பற்றும் உண்டாவதற்குத் தமிழின் பேரால் தனித்த கழகம் ஏற்படுவது இன்றியமையாதது. "தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுவதனால் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்குத் தடையுண்டாகு மென்றாவது, இருகழகத்

திற்கும் முரண்பாடு உண்டாகுமென்றாவது நினைக்கக் காரண மில்லை. இரு கழகங்களின் வளர்ச்சிக்கும் வெவ்வேறான நோக்கங் கள் உள்ளன. எல்லா நாடுகளுக்கும் பொதுவான உயர்ந்த நூலாராய்ச்சிகளும், சட்டத் தேர்வுகளும், பொறிக்கலை, கைத் தொழிற் கல்வி முதலியனவும், சென்னைக் கழகத்தின் நோக்கங் களாக இருத்தல் கூடும்.

## தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள்

தமிழ்மொழி, தமிழரின் வரலாறு, நாகரிகம், வினைத்திறம் என்பவற்றின் வளர்ச்சி இதன் தலைமையான நோக்கங்களில் ஒன்றாதல் வேண்டும். இதன் பொருட்டுத் தமிழானது எல்லா வகுப்புகளிலும் கட்டாய முதன்மொழியாக வைக்கப்பெற்று, தமிழ் இலக்கிய இலக்கணங்களும் கல்வெட்டுகளும் அவற்றின் ஆராய்ச்சிகளும் விரிவாகக் கற்பிக்கப் பெறவேண்டும்.

வரலாறு, கணிதம் முதலிய எல்லாக் கலைகளும் தமிழ் வாயிலாகக் கற்பிக்கப் பெறல் வேண்டும். கற்கும் கால அளவையும், பொருட் செலவையும் சுருங்கச் செய்து கல்வியை மிகுதியாகப் பரப்புவதற்கு இஃது இன்றியமையாதது. இக் கொள்கையே இக்கழகத்திற்கு உயிர்நிலையாகற்பாலது. கற்பிக்கப்பெற வேண்டிய எல்லாக் கலைகட்கும் இப்பொழுது தமிழில் நூல்கள் இல்லையாயினும் தமிழ் வாயிலாகக் கற்பிப்பது என்னும் கொள்கை உறுதியாகிவிட்டால் மிக விரைவில் நூல்கள் ஏற்பட்டுவிடும். அன்றியும் அதன்பொருட்டு ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமையுடையோர்களைக் கொண்ட ஒருகுழு ஏற்படுத்தி நாலைந்து ஆண்டுகளுக்குள் நூல்கள் எழுதி வெளிப்படுத்துதல் செய்யலாம். இத்துணை ஆண்டுகளுக்குள் எல்லாம் தமிழ் வாயிலாகக் கற்பிப்பது என்று வரையறை செய்துவிட்டு, அது வரையில் ஒவ்வொன்றாகக் கற்பித்து வரலாம். ஆங்கிலத்திலுள்ள கலைகளையெல்லாம் தமிழில் மொழிபெயர்க்க முடியா தென்றாவது, தமிழில் ஏற்ற சொற்கள் இல்லையென்றாவது

கூறுதல் சரியன்று. தமிழில் வேண்டிய சொற்கள் உள்ளன. தக்கோர்கள் மொழிபெயர்த்தால் எளிதில் முடியும்.

விருப்பப் பாடங்களில் சமயக் கல்வியும் மருத்துவமும் சேர்க்கப் பெறல் வேண்டும். சமயக் கல்விக்குச் சைவத் திருமுறைகளும், வைணவப் பிரபந்தங்களும், சைவ சித்தாந்த நூல்களும் ஆராய்ச்சி செய்யப்பெறவும், மருத்துவக் கல்விக்குத் தமிழ்ச் சித்தர் நூல்கள் ஆராயப்பெறவும் வேண்டும். கல்வியில்லாத வகுப்பினரும், பெண்பாலாரும் கற்பதற்கு மிகுதியான வசதிகள் செய்யப் பெற வேண்டும்.

## பிற மொழிகளின் நிலைமை

ஆங்கில மொழியானது தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவெய்திய ஆறாண்டுகள் வரை கட்டாய இரண்டாவது மொழியாக இருக்கலாம். அதன்பின் விருப்பப் பாடமாக அமைதல் வேண்டும். வடமொழியும் விருப்பப் பாடங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பெறல் வேண்டும். அன்றியும் நாட்டுமொழிப் பட்டத் தேர்வுகட்கு இப்பொழுது போன்றே அதுவைத்து நடத்தப்பட வேண்டும். வடமொழியும் கட்டாயப் பாடமாக எல்லா வகுப்புகளிலும் வைப்பதென்பது இயற்கைக்கு ஒத்ததன்று. அது கல்வியை மிகுத்தல் என்னும் நோக்கத்திற்கு மாறாகக் குறைத்தலையே செய்யும். மக்களால் பேசப்படுவதாகவோ, அரசியல் நடவடிக்கைக்குரியதாகவோ இல்லாத அம்மொழியை அங்ஙனம் வைப்பதற்குக் காரணம் இல்லை. கட்டாயப் பாடமாக இல்லாததனால் அதன் மதிப்புக்கும், இப்பொழுதுள்ள பயிற்சிக்கும் குறைவு வருதற்கிடமில்லை. மற்றைய திராவிட மொழிகளும் விருப்பப் பாடத்தில் சேர்க்கப் படலாம்.

## கழகத்தின் தலைமையிடம்

திருச்சிராப்பள்ளியில் முதல் வகுப்புக் கல்லூரி மூன்றும், இரண்டாவது வகுப்பு மாதர் கல்லூரி ஒன்றும் இருக்கின்றன.

முதன்மையான தொழிற்சாலை ஒன்றும் உளது. தமிழ்நாட்டின் நடுவாகவும், நாற்புறமும் போக்குவரவு வசதியமைந்ததாகவும் இந்நகர் உளது. இவ்வளவு பொருத்தம் வேறெந்த இடத்திலும் காணப்பெறவில்லை. முன்பு தமிழ்ச்சங்கம் இருந்தது என்னும் உலகுரையானது மதுரைக்கு இதைவிட ஏற்றங் கொடுக்கக் கூடும். திருச்சிராப்பள்ளியும் தொன்றுதொட்டு அரசர்களின் தலைமையிட மாகவும், தமிழை வளர்த்த இடமாகவும் இருந்து வருகிறது; கிறித்தவர்களுக்கும், முகம்மதியர்களுக்கும் முக்கிய இடமாகவும் இருக்கிறது. இக்காரணங்களால் திருச்சிராப்பள்ளியே தலைமை யிடமாக நான் கருதுகிறேன் என்பர்.

# நாட்டாரின் நீதிநூல் உரைகள்

முனைவர் ய. மணிகண்டன்
சென்னை

பிற்கால நீதிநுல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகியன மிகப்பல அறிஞர்களின் உரைகளைப் பெற்று மிளிர்வன. அவை பேரறிஞர் பெருந்தகை ந.மு.வே. நாட்டார் அவர்களின் நனிசிறந்த உரையினையும் பெற்றுத் திகழுகின்றன. இக்கட்டுரை, நாட்டார் பெருந்தகை சிறந்த நீதிநூல் உரையாசிரியராகவும் சீர்த்திமிகு பதிப்பாசிரியாராகவும் ஒளிர்கின்ற பெற்றிமையைக் கோடிட்டுக் காட்டும் குறிக்கோளை உடையது.

**நீதிநூற்கொத்து**

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய ஏழு நூல்களும் "நீதிநூற்கொத்து" முதற்பாகம் எனும் பெயரில் நாட்டாரவர்களின் உரையுடன் திரட்டாக வெளிப்பட்டுள்ளது. இத்திரட்டு நூலில் பதிப்பாண்டு குறிப்பிடப்பெறவில்லை. திரட்டுள் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு நூலும் தனித்தனியே பதிப்பாண்டுகளைப்

பெற்றுள்ளன. அவை, ஆத்திசூடி – மு.ப. 1950 மறுபதிப்புகள் 1953, 1956; கொன்றைவேந்தன் – ஐ.ப. 1949 மறுபதிப்புகள் 1952, 1955; உலகநீதி – ஐ.ப. 1949 ஆ.ப. 1953; வெற்றிவேற்கை – நா.ப. 1941 மறுபதிப்புகள் 1944, 1947, 1950, 1954, 1956; மூதுரை – ஒன்பதாம் பதிப்பு 1950 மறுபதிப்புகள் 1952, 1956; நல்வழி – எட்டாம் பதிப்பு 1950 மறுபதிப்புகள் 1952, 1956; நன்னெறி – பத்தாம் பதிப்பு 1952 மறுபதிப்புகள் 1952, 1956. தனித்தனியே வெளிவந்த நூல்களில் பிரதிகளை ஒருங்குசேர்த்துக் கட்டடம் கட்டி முகவுரை முதலியன பொறித்துத் திரட்டு நூலாகவும் கழகம் ஆக்கியுள்ளது என்பதை நூலமைப்பால் அறியமுடிகின்றது.

**பதிப்பு - உரைச் சிறப்புக் குறித்து வெளியீட்டாளர் குறிப்பு**

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இத்திரட்டு நூலின் முகவுரையில் குறிப்பிட்டுள்ள பின்வரும் செய்தி, ந.மு.வே அய்யாவின் புலமைத்திறத்தால் இந்நூல்கள் பெற்றுள்ள பதிப்புப் பாங்கையும் உரையுயர்வையும் தெற்றெனத் தெரிவிக்கின்றது. “இஃது இதுகாறும் வெளிவராத பாடபேதங்களுடன் தமிழ்ப் பெரும்புலவரான திருவாளர் பண்டித நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்களைக் கொண்டு அரிய பதவுரை, பொழிப்புரை, இன்றியமையாத இடங்களில் விளக்கவுரை முதலியன இனிய எளிய நடையில் எழுதுவித்து அழகிய முறையில் அச்சிடப் பெற்றிருக்கின்றது”.

**பதிப்பு -உரை இயல்பு குறித்த ந.மு.வே. அவர்களின் கூற்று**

இத்தொகை நூலில், ஆத்திசூடி, வெற்றிவேற்கை ஆகிய இரு நூல்களுக்கான தம் முகவுரைகளில் மட்டும் அவற்றின் பதிப்பு – உரை இயல்பு, ஏற்றங்குறித்து நாட்டாரவர்கள் குறிப்பிட்டுள்ளார். அப்பகுதிகள் வருமாறு:

"ஆத்திசூடி உரைப் பதிப்புகள் வேறு பல இருப்பினும், இப்பதிப்பு மூலபாடம் தனியே சேர்க்கப்பெற்றும், பதவுரையும் பொழிப்புரையும் திருத்தமாக எழுதப்பெற்றும் சிறந்து விளங்குவது காணலாம்" – ந.மு.வே. (முகவுரை, ஆத்திசூடி). "இந்நூல் முன் பலரால் பதிக்கப்பட்டிருக்கிறது. அப்பதிப்புகள் ஒன்று ஒன்றனோடு பெரிதும் வேறுபட்டுள்ளன. அவற்றிற் காணப்படும் பாடபேதங்கள் எண்ணிறந்தன. வாக்கியங்களின் முறையும் பலவாறாகப் பிறழ்ச்சி யடைந்துள்ளது. 'அதனால்' என்பதுபோலுஞ் சொற்கள் தனிச்சீராக வேண்டாத இடங்களிலெல்லாம் வைக்கப்பட்டுள்ளன. இப்பதிப் பில் இவை பலவற்றையும் கூடியவரையில் திருத்தம் செய்து, இன்றியமையாத பாட பேதங்களையும் காட்டி, பதவுரை பொழிப் புரைகளுடன் விசேடக் குறிப்புக்களும் திருந்த எழுதியிருப்பது காணலாகும். 'வாழிய நலனே வாழிய நலனே' என்னும் வாக்கியம் சில பதிப்புகளில் ஓரியையுமின்றி நூலின் நடுவே வைக்கப்பட்டுள் ளது. ஒரு பதிப்பில் அஃது இறுதியில் அமைக்கப்பட்டுள்ளது. கோயினான்மணிமாலையிற் பட்டினத்தடிகள் 'அருளு வாழி அருளு வாழி' என ஒரு பாட்டின் முதலில் வாழ்த்தியிருப்பதும், மற்றும் முதற்கண் வாழ்த்துக் கூறுதல் மரபாயிருந்து வருவதுங் கொண்டு இப்பதிப்பில் வாழ்த்தினை முதலில் அமைத்துளேம்" (ந.மு.வேங்கடசாமி, முகவுரை, வெற்றிவேற்கை).

**பதிப்பு, உரையமைதி (ஆத்திசூடி நூலின் வழி)**

இந்நூலில் முதற்பகுதியில் 108 ஆத்திசூடிச் செய்யுட்களும் மூலம் மட்டுமாகத் தரப்பட்டுள்ளன. அதன்பின்னர் மூலமும் உரையுமாகிய பகுதி இடம்பெற்றுள்ளது. உரை, பதவுரை, பொழிப்புரை, விளக்கப் பகுதி ஆகிய அமைப்பில் ஒளிர்கின்றது. இன்றியமையாதனவாய இலக்கணக் குறிப்புகளும் ஆங்காங்குச் சுட்டப்பெற்றுள்ளன. சிற்சில இடங்களில் ஆத்திசூடியோடு தொடர்புடைய பழமொழிகளையும் இவ்வுரை எடுத்துக்காட்டு

கின்றது. வேறுபட்ட பாடத்தால் வேறுபட்ட பொருள்கொள்ள வாய்ப்பிருப்பதையும் உரை குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டு,

"மண்பறித் துண்ணேல்'' என்று பாடமிருந்தால் பிறர் நிலத்தை அபகரித்துச் சீவிக்காதே என்று அருத்தமாம்" (மன்றுபறித் துண்ணேல் – உரை)

## வேறுபட்ட பாடங்களைக் காண்டல்

(எ.டு) 'மெலியா டோள்சேர்' – என்றும் பாடம்.
(மெல்லினல்லாள் தோள்சேர் – அடிக்குறிப்பு)
'ஒன்னாரைச் சேரேல்' என்றும் பாடமுண்டு
(ஒன்னாரைத் தேரேல் – உரை)

## அடிக்குறிப்புச் செய்தி

'கோதாட் டொழி' எனும் செய்யுட்கு அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள பின்வருஞ் செய்தி கவனத்திற் கொள்ளத்தக்கது. "கோதாட் டொழி என்பதன்பின் 'கௌவையகற்று' என்று ஒரு கட்டுரை சில புத்தகங்களில் உள்ளது. 'துன்பத்தை நீக்கு' என்பது இதன் பொருள்." நாட்டாரவர்களின் உரைத்திறனை 'ஙப்போல் வளை' என்பதற்கான உரையின் வழிப் பருக்கைப் பதமாய்க் கண்டு மகிழலாம். "ங என்னும் எழுத்தானது தான் பயனுடையதாகயிருந்து பயனில்லாத ஙா முதலிய தன் வருக்க எழுத்துக்களைத் தழுவிக் கொள்ளுதல் போல, நீ பயனுடையவனாயிருந்து உன் இனத்தார் பயனில்லாதவராயினும் அவரைத் தழுவிக்கொள்.

ஙா முதலிய பதினோரெழுத்தும் எந்தச் சொல்லிலும் வருவதில்லை. ஙகரத்தின் பொருட்டே அவைகளையும் சுவடியில் எழுதுகிறார்கள். இனி இதற்கு ஙகர வொற்றானது அகரவுயிர் ஒன்றையே தழுவுவது போல நீ ஒருவகையே தழுவு என மாதர்க்குக் கூறியதாகவும் அருத்தம் சொல்லலாம்." (ஙப்போல் வளை – உரை)

## நூல் முகவுரைகள்

நீதிநூற்கொத்தில் இடம்பெற்றுள்ள ஏழு நூல்களுக்கும் நாட்டாரவர்கள் வரைந்துள்ள முகவுரைகள் அருமைவாய்ந்தன வாய்த் திகழுகின்றன. பல அருஞ்செய்திகளைத் தம்மகத்தே கொண்டுள்ளன. நூல்களின் காலம், இயற்றியோர் பற்றிய குறிப்பு, நூலின் பெருமை, பழமை, தனித்தன்மை முதலிய பலவற்றை முகவுரைகள் எடுத்துரைக்கின்றன.

'கொன்றைவேந்தன்' நூற்கான முகவுரையில்,

> **''கொன்றை வேய்ந்த செல்வ னடியினை**
> **யென்று மேத்தித் தொழுவோ நாமே''**

என்னும் உருவில், 'கொன்றைவேந்தன்' நூலின் கடவுள்வாழ்த்து பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் தொல்காப்பியச் செய்யுளியல் உரைகளில் இடம்பெற்றுள்ளமையை அவர் எடுத்துக் காட்டுகின்றார். 'ஆத்திசூடி' முகவுரையில், "சங்க காலத்து ஔவை யாரும் வேறு; கம்பர் காலத்து ஔவையாரும் வேறு என்பது இற்றைநாள் ஆராய்ச்சியாளர் கொள்கையாகும்" என்று குறிப்பிடு கின்றார். 'உலகநீதி' யின் முகவுரையில், உலகநீதியை இயற்றியவர் உலகநாதர்; சிலர் ஔவையார் என எழுதியிருப்பது தவறு என்பதைக் குறிப்பிடுகின்றார். பாடலுள்ளேயே உலகநாதர் பெயர் இடம்பெற்றிருப்பினும் ஔவையார் இயற்றியதெனக் கருதும் நிலையும் அக்காலத்தில் இருந்தமையை இக்குறிப்பால் அறிய முடிகிறது. 'உலகநீதி' யின் தனிச்சிறப்பியல்பை, "பாவலர்களும் எளிதாகப் படித்துப் பாடம் பண்ணக் கூடியவாறு எளிய நடையில் சந்த நலத்தோடு விளக்குவது இதற்குத் தனியாகவுள்ள சிறப் பியல்பு ஆகும்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

'வெற்றிவேற்கை' நூலின் முகவுரையில், அதிவீரராம பாண்டியனின் காலம், அவரியற்றிய பிற நூல்கள் முதலியவற்றை

விளக்கமாக நாட்டார் அவர்கள் எடுத்துரைத்துள்ளார். வெற்றி வேற்கையின் நீதிகளில் பல தொன்னூல்களில் காணப்படுகின் றவை என்பதையும், சில புறநானூறு, நாலடியார் முதலியவற்றின் செய்யுட்களோடு சொல்லினும் பொருளினும் பெரிதும் ஒற்றுமை யுற்று விளங்குகின்றன என்பதையும் அம்முகவுரையில் குறித் துள்ளார்.

நீதிநூற்கொத்தின் நூல்களிலேயே 'நன்னெறி'க்குத்தான் விரிவான நிலையில் நாட்டரவர்கள் முகவுரை வரைந்துள்ளார். சிவப்பிரகாசர் மீது நாட்டாரவர்கட்கு இருந்த அளப்பரிய ஈடுபாட்டை இம்முகவுரையினால் அறியலாம். பின்வரும் முகவுரைப் பகுதி இந்நோக்கில் மனங்கொள்ளத்தக்கது. "சிவப்பிரகாசர் தமது முப்பத்திரண்டாம் ஆண்டிற் சிவப் பேறெய்தினரெனக் கூறப்படு கின்றது. அவருடைய பாடல்களெல்லாம் கொள்ளை கொள்ளும் பான்மையன. அவர் பாடலின் சுவையில் ஈடுபடாத உள்ளமுடையார் அவிழ்ச் சுவையின்றித் தமிழ்ச்சுவை யறியாதவரே யாவர்".

### பாடவேறுபாடுகள், பாடல் முதற்குறிப்பு முதலியன

ஆத்திசூடியில் பாடவேறுபாடுகளைக் காட்டியமை போலவே 'நறுந்தொகை' எனும் வெற்றிவேற்கையில் பாடவேறு பாடுகள் பலவற்றைப் பக்கந்தோறும் அடிக்குறிப்பில் நாட்டார் அளித்துள்ளார். ஆத்திசூடி நூலில் தரப்பட்டதைப் போலவே வெற்றிவேற்கையில் முதலில் தனியே மூலச் செய்யுட்களும், பின்னர் மூலமும் உரையுமான பகுதியும் தரப்பட்டுள்ளன. 'உலக நீதி'யில் ஒத்த நீதிச்செய்யுட்கள் உரையில் மேற்கோள் காட்டப் பெற்றுள்ளன. மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய நூல்களுக்குச் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசைகள் தரப்பட்டுள்ளன. மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகியன பதவுரை, கருத்து எனும் உரைப் பகுதிகளைக் கொண்டுள்ளன.

முதிர்ந்த புலமையும் பட்டறிவும் வாய்க்கப்பெற்ற நாட்டாரவர்கள் நீதிநூல்களுக்கு வரைந்த உரை, இளையோரும் மனங்கொளத்தகும் வண்ணம் எளிமையும் இனிமையும் கொண்டு விளங்குகின்றது. ஆய்வுநோக்கிலான முகவுரைகளைப் பெற்று இந்நூல்கள் இலங்குகின்றன. நுட்பநோக்கில் கண்டு காட்டப்பெற்ற பாடவேறுபாடுகள், இலக்கணக் குறிப்புகள், பாடல் முதற்குறிப்பு முதலிய பகுதிகளைப் பெற்று விளங்கும் இந்நீதிநூல்கள், நாட்டாரவர்கள் சிறந்த பதிப்பாசிரியராகவும் உரைகாரராகவும் திகழ்ந்தமையைக் காட்டி நிற்கின்றன.

# நாட்டார் கட்டுரைகளில் தமிழர்ப் பண்பாடு

முதுமுனைவர் அரு.மருததுரை
திருச்சிராப்பள்ளி

நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களின் கட்டுரைகள் பல்பொருள் தாங்கி ஆய்வுக் கருத்துக்கள் பலவற்றை வழங்கி நிலைபெற்றுள்ளன. மேலும் வேண்டுவார்க்கு வேண்டும் பொருள் தந்து விளக்கம் தருவன. இக்கட்டுரைகள் அவர்தம் ஆய்வுப்புலமையையும் நடுநிலை நோக்கினையும் நாட்டுக்கு வெளியிட்டுள்ளன. தமிழர்ப் பண்பாட்டினைப் பலபடியாக விரித்துரைக்கினும் சில வாழ்வியல் கூறுகளை மட்டும் இக்கட்டுரை நோக்கியமைகிறது.

**சமயம்**

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி நாகரிகத்தில் நனிசிறந்துள்ள தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளில் சமயம் சிறப்பிடத்தை வகிக்கின்றது. மனிதனைச் செம்மைப்படுத்தி நேரிய வழியமைத்து மனிதப் பண்பில் உயர்ந்திடச் செய்வது

சமயம். தமிழகத்தில் பண்டு பல சமயங்கள் நிலவினும் சிவசமயத்தையே மக்கள் முதன்மையாகக் கொண்டு போற்றியதாக அய்யா வலியுறுத்துகிறார். "பல சமயங்களும் மலிந்துகிடந்தன வாயினும் சிவ சமயமானது முதன்மையுடையதாகக் கொள்ளப்பெற்று வந்ததென்பதும் மேற்காட்டியவற்றிலிருந்து நன்கு புலனாகும். யாண்டும் சிவன் முதலில் வைத்துக் கூறப்படுதலேயன்றி, 'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்' என முதற்கடவுளுக்கு இன்றியமையாத இலக்கணத்தை வேறுபிரித்துக் கூறப்படுதலும் காண்க (ப. 384) என்ற கருத்து சிந்தனைக்குரியது.

பழந்தமிழகத்தில் சிவனை வழிப்பட்டவர்கள் திருமாலையும் வழிபட்டு வந்திருக்கின்றனர். இதற்கு நல்ல காட்டாகத் திகழ்வது ஐம்படைத்தாலியாகும் என்பது அய்யாவின் கருத்து. காக்கும் கடவுளாகத் திருமாலைக் குறிக்கும் சிந்தனையின் அடிப்படையில் திருமாலின் வளை, திகிரி, தண்டு, வாள், வில் எனும் ஐந்து படைகளின் உருவமைத்த ஐம்படைத்தாலியை அணிந்தனர். சிவபெருமானுடன் இயைபுடைய ஆனேறு அதன் இரண்டு பக்கத்திலும் வாள், மழு ஆகிய உருவங்கள் அமைக்கப் பெற்றிருந்த அணிகலன் அணிந்தமையையும் விளக்குகின்றார். எனினும் சிவசமயத்தவர்களும் குழந்தைகளுக்குக் காப்பு அணியாகத் திருமாலின் ஐம்படைத்தாலி எனும் அணிகலனை அணிந்த செய்தியை விவரிக்கின்றார். பக்தி இலக்கியங்களில் பதிவாகியுள்ளவற்றை மேற்கோள்களாக எடுத்தாண்டு இக்கருத்தினை நிறுவியுள்ளார். "சைவ மக்கள் எல்லாரும் திருமாலிடத்தும் அன்புடையாரகவே ஒழுகி வந்தனர். அது சமயப்பற்றிற்கு மெலிவு தருவதாகக் கருதப்படவில்லை" (ப. 531) என்று கூறுகிறார். சமயத்தில் மக்கள் கொண்டிருந்த பண்பாட்டுச் சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

**உருவ வழிபாடு**

சமயங்களில் உருவ வழிபாடு குறித்து எழுந்த வினாக்களுக்கு விரிவாகவும் நுட்பமாகவும் விடையளித்துள்ளார். வழிபாட்

டில் உருவவழிபாடு மிகமிக இன்றியமையாதது. வழிபாட்டிடங்களில் கடவுள் உரு எழுதியமையும் படிமங்களைப் போற்றியமையையும் பழந்தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். ஆகவே, உருவவழிபாடு மிகத் தொன்மையானது. உருவ வழிபாட்டினைக் குறிக்கும் போழ்து, "இதனை மிகமிக வற்புறுத்தியவர்கள் சமயக் குரவர்கள். மெய்யுணர்வில் முற்றுப் பேறுடையராய் இறைவனால் வலிதின் விரும்பி ஆட்கொள்ளப்பெற்றோராய் அவனது எல்லையில்லாத பேரருளைப் பெற்று யாவர்களும் செய்யவொன்னாத செயல்களைச் செய்தோராய் விளங்கி நமது சமயத்தை நிலைநாட்டிய அருட்குரவர்கள் தங்கள் பதிகங்களில் உருவவழிபாட்டை வற்புறுத்தியதனோடு அமையாது தாங்களும் பதிகள்தோறுஞ் சென்று வழிபாடு செய்து போந்தனரென்றால் அவர்கள் காட்டிய வழியே நாம் உய்யும் நெறியாகக் கடைபிடித்து ஒழுகலே நமது கடமையாம் அது தாழ்ந்த நிலையென்று நினைப்பது அறியாமையாம் (ப. 103) என்ற கருத்து இவண் சுட்டுதற்குரியது.

இறையருட் சான்றோர்கள் தாங்கள் கண்டவற்றைப் பிறர்க்குக் காட்டிப் போந்தனர். அவர் நெறிபற்றி உய்தல் ஒன்றே உயர்வுக்கு வழியாகும். நெடிய மரபுப் பின்புலம் கொண்ட தமிழர்கள் உருவவழிபாட்டினைக் கொண்ட தமிழர்கள் உருவ வழிபாட்டினைக் கைக்கொண்டுள்ள சிறப்பினைப் பல வகையாக வலியுறுத்திக் கூறியுள்ளார்.

### திருவிழாக்கள்

திருவிழாக்கள் மக்களின் பண்பாட்டினைத் தெள்ளிதின் புலப்படுத்தவல்லன. மக்கள் ஒன்றுகூடி மகிழ்ச்சியாக இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் வழிபாட்டு முறையாக விழாக்களில் குறிப்பாகத் திருவிழாக்களை மக்கள் கொண்டுள்ளனர். நாட்டாரய்யா பழந்தமிழ் நூல்களில் திருவிழா குறித்து இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்தாய்ந்து திருவிழாவின் நடைமுறைகளையும் நோக்கத்தினையும் பரிந்துரையையும் கொடுத்

துள்ளமை குறிக்கத்தக்கதாகும். "ஓர் பெரிய திருவிழாச் செய்வ தென்றால் நகரத்திலுள்ள பலவகை மாந்தர்களும் ஒருங்கு கூடியிருந்து ஆராய்ந்து முடிவு செய்வதென்ற வழக்கம் அக் காலத்து மக்களின் ஒற்றுமையையும் ஆளுந்திறத்தையும் நன்கு விளக்குகின்றதன்றோ? திருவிழா நடக்கும் ஒவ்வொரு நாளிலும் நகரத்தின் பல பக்கங்களிலும் அறவுரைக் கட்டுரைகளும் சமய வரலாற்று ஆராய்ச்சிகளும் நிகழுமென்பது திருவிழாவின் பயனை எவ்வளவு மிகுதிப்படுத்திக் காட்டுகின்றது! கல்வியும் சமய அறிவும் குறைந்துள்ள இக்காலத்தில் திருவிழாக்கள் நடைபெறும் பொழுது இத்தகைய செயல்கள் நிகழுமேல் எவ்வளவு பெரும் பயனுண் டாகும். இக்காலத்தில் திருவிழாக்களை நடத்திவைக்கும் அற நிலையத் தலைவர்களும் அறப்புலவர்களும் பிறரும் இரண்டா யிரம் ஆண்டுகளின் முன்பு நம் முன்னோர் செய்து காட்டிய வழிகளை இனியேனும் பின்பற்றி ஒழுகுமாறு பெருமான் திருவருள் பாலிப்பானாக" (பக். 397 – 398) என்று நாட்டாரய்யா சிறப்பினையும் தெற்றென வெளிக்காட்டும் தன்மையனவாகத் திகழ்கின்றது. விழாக்களின் நோக்கும் போக்கும் திசைமாறிச் செல்லும் நிலையில் அன்னாரது கருத்து காலத் தேவையாகவும் விளங்குகின்றது.

**குலப்பாகுபாடு**

சமயத்தைப் பற்றி முற்ற உணராதார்களிடையே உருவான கொள்கை மனிதரிடையே ஏற்றத்தாழ்வு காண்பது. சாதி என்று மக்களைப் பிரித்தாளும் போக்கினை நாட்டாரய்யா நடைபேற்று முறையில் ஏற்பட்ட சில கட்டுப்பாடுகள் அல்லது சட்டதிட்டங்கள் சமயங்களோ உயிர்களின் கடைத்தேற்றத்திற்குரிய நெறிகள், உடல் பற்றுக்கோடாகத் தோன்றிய சாதி உயிரின் ஈடேற்றத்தைக் குறிக் கோளாகவுடைய சமயத்திற் புகுந்து சில மக்களை அதற்குரிய ரல்லாராக்குதல் முறையாகுமா? (ப.108) என்று வினவுகிறார். உலகியல் நடைபேற்று முறையில் தொழிற் பிரிவுகள் தோன்றின. ஒவ்வொரு தொழிலும் அதனதன் அளவில் மக்கள் வாழ்வுத் தேவைக்கு அடிப்படையாகின்றது. ஒன்றினை உயர்த்தியும் ஒன்றினைத் தாழ்த்தியும் கூறுதல் முறையன்று, ஆகவே, தொழில்

அடிப்படையாகப் பிரிந்த குலங்களும் சாதிகளும் உயிரின் கடைத்தேற்றத்திற்கு எவ்வகையில் தடையாகும் என்று நாட்டா ரய்யாவின் வினா பலரது சிந்தனைகளைத் தெளிவுபடுத்தி யிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவரது காலத்தில் கோயில் நுழைவு போராட்டம் நடந்துகொண்டிருந்தது. அன்று தொடங்கி இன்று பல்வேறு கோணங்களில் பல விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

தமிழர்களின் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் புறம்பாகத் தோன்றியவர்களின் சூழ்ச்சியினால் தமிழர் பண்பாடு நாணத் தக்க வகையில் தமிழர்களால் உருவாக்கப்பெற்ற பெருந் திருக்கோயில் களில் பிற புலத்தவர்கள் தமிழரைப் பிளவுபடுத்தி அவர்களது கோயில்களில் அவர்களையே நுழையவிடாமல் தடுத்துவரும் தீம்பு இன்றுவரை தொடர்கின்றது. இன்று நாட்டுப்புறக் கோயில்கள்வரை அவர்களின் ஆதிக்கம் நீண்டு கொண்டே செல்கிறது. விழிப் படையும் காலம் எப்போழ்து என்பது இன்றுவரையில் தமிழ்நலம் நாடுவோர் கவன்று வருகின்றனர்.

இன்றிருப்பதைப் போன்று பண்டை நாளிற் கோயில் அமைப்பில்லை. இயற்கையாக மரம், வெட்டவெளி என்று கோயில்கள் அமைந்திருந்த நாள்களில் இப்படி ஏதேனும் தடை இருந்ததா? (ப. 108) என்று கேள்வியை எழுப்பி மக்களைச் சிந் திக்கத் தூண்டியுள்ளார். தமிழர்களுடைய சிறந்த பண்பாட்டுப் பங்களிப்பு அல்லது கொள்கை பிறப்பினால் உயர்வுதாழ்வு இல்லை என்பது. இதனைத் தமிழர்களின் அடிப்படையான உயிர் நாடியான கொள்கை என்று நாட்டாரய்யா விளக்குகிறார்.

அதுமட்டுமின்றி எழுத்தெழுத்தாகத் திருமுறை போன்ற சமய நூல்களைச் சோதித்துப் பார்த்தாலும் சைவசமயத்தின் அடிப்படைக் கொள்கையாக அனைவரும் சமம் என்ற கொள்கை யைக் குறிப்பிடுகின்றார். வழிபடுதற்கும் இறைவனிடம் அருட்பேறு பெறுதற்கும் வேற்றுமைகள் தடையில்லை என்பது தக்க விளக்கம்

தந்து நிறுவுகிறார். பண்டைத் தமிழர்களின் கருத்தும் மனிதரிடையே உயர்வு தாழ்வு இல்லை என்பதாம். அதையே தமிழ்ச் சைவமும் போற்றும் பாங்கினைப் பலவாறாக விளக்கியுள்ளார்.

ஏற்றத்தாழ்வுகளைக் கற்பியாது மக்களிடையே உயர்வு தாழ்வு கருதாது அனைவரையும் ஒப்ப மதித்தும் பிறப்பற்ற பெருநெறிக்கு அழைத்துச் செல்லும் சிறந்த சமயமாகத் தமிழர் பண்பாட்டில் சிவசமயம் திகழ்வதாக நாட்டாரய்யா நயம்பட நவின்றுள்ளமை நினையத்தக்கது.

தமிழ்மொழியின் பெருமையை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார். குறிப்பாக இலக்கணத் தனித்தன்மையினையும் சிறப்புகளையும் மற்றும் இலக்கியங்களின் மரபுச் சிறப்புகளையும் தக்காங்கு விளக்கியுள்ள திறம் ஆய்வாளர்களுக்கு ஆய்வுவழிகாட்டியாக விளங்குகின்றது எனலாம். “மொழியானது நெடுங்காலத்திற்கு முன்பே திருத்தமான நிலையை அடைந்துள்ளது. திருத்தமாவது இலக்கண வரையறை செய்யப்பெற்று பெரும்பாலும் அவ்விதிகளுக்கு இணங்கி நடைபெற்று வருகிறது. மொழியானது ஆதியில் வழக்கும் செய்யுளுமாக வளர்ச்சியுற்று வரும்பொழுது அவற்றின் சொற்கள் இடந்தோறும் நாள்தோறும் வடிவு திரிந்தும் பொருள் வேறுபட்டும் செல்வது இயல்பாகலின் அவற்றை அங்ஙனமே விட்டுவிடின் எண்ணிலாத மாற்றங்களுக்குட்பட்டு முன்பின் தொடர்பின்றி மொழியுமென்பது கருதி அக்காலத்து நன்மக்களின் வழக்கின் செய்யுளையும் நன்கு ஆராய்ந்து பேரறிஞர்கள் இலக்கணம் வகுப்பராயினர்” (ப.112 – 113) என்று இலக்கணம் வகுத்ததன் நோக்கினையும் இலக்கியத்தின் குறிக்கோளினையும் விளக்கியுள்ளார். விழுமியது பயத்தல் நூற்பயன் என்பதற்கேற்ப அமைந்து சிறந்துள்ள தமிழர்தம் இலக்கியங்களும் இலக்கணங்களுமாகும்.

## தமிழிசை

தமிழர்தம் பண்பாட்டில் தோன்றி வளர்ந்து நிலை பெற்றுள்ள தமிழர் இசையைப் பலரும் திட்டமிட்டே புறந்தள்ளுகிற நிலையினைத் தமிழகத்தே காண்கிறோம். இயல்பான இயற்கையான இசையாக வளர்ந்த தமிழிசை வளர்ச்சியைத் தக்க சான்றாதாரங்களுடன் நாட்டாரய்யா விளக்கியிருப்பது அனைவரும் படித்துப் பரப்பும் தகையது. இசைப்பாடல்களின் தொன்மை குறித்தும் அப்பாடல்கள் பயின்றுவந்துள்ள திறம் குறித்தும் விரிவாக ஆராய்ந்து உள்ளார். இசை வகைகளையும், இசைக் கருவிப் பட்டியல்களையும் பழந்தமிழ் நூல்கள் வழியாக நிறுவியுள்ளார்.

"பல வகையான கூத்துக்களோடு வரிப்பாடல்கள் பாடப் பட்டன. கொற்றி, பிச்சி, சித்து, சிந்து, ஆண்டி, அம்மனை, பந்து, கழங்கு, உந்தி, தோள்வீச்சு, சாழல், தெள்ளேனம் முதலிய எண்ணிறந்த கூத்து வகைகளும் அவற்றிற்குரிய பாடல்களும் பயிற்சியில் இருந்தன. அவை பெரும்பாலும் மகளிருடைய விளையாட்டுக்களாக விளங்கின. மற்றும் மகளிர் கிளியோட்டுவதும் பாட்டு, சாந்திடிப்பதும் பாட்டு, உழத்தியர் நாற்று நடுவதும் களை பறிப்பதும் பாட்டு, இவ்வாறு எல்லாச் செயல்களும் பாட்டுக் களோடு நிகழ்ந்தன. இவற்றால் முற்காலத்தில் தமிழகத்திலிருந்த ஆடவரும் மகளிரும் இசையும் கூத்தும் ஆகிய இவ்விளையாட்டுக்களால் களி சிறந்து உடம்பும் உள்ளமும் தளிர்த்திருந்தனர் என்னும் உண்மை புலனாகும்" (ப. *196*) என்ற நாட்டாரய்யாவின் இசை குறித்த கூற்று இவண் சிந்தனைக்குரியது. அத்துடனின்றி இசை நுணுக்கங்கள், இசை மரபுகள் என அனைத்தினையும், தமிழ் இலக்கியங்களிற் காணப்படும் இசைப்பகுதிகள் எனும் கட்டுரையில் விரிவாக விளக்கியுள்ளார். மேலும், "மக்களுடைய உள்ளக் கிளர்ச்சியாகிய வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், வெகுளி, நகை, சாந்தம் என்பவற்றை மெய்ப்படத் தோற்றுவிக்கும் கவிதைகள் எல்லாம் இசையமைதி உடையவை என்று கூறுகின்றார். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் உள்ள உணர்ச்சியாகிய

சுவைகளுக்கு இலக்கணம் கூறப்பட்டிருத்தலின் அக்காலத் திலேயே அத்தகைய செய்யுட்கள் மிக்கிருந்தனவாதல் வேண்டும்" (ப. 198) என்றும் கூறுகின்றார். தமிழிசைப் பாடல்கள் பல நிலைகளில் பல்வேறு சூழல்களில் தமிழர்களின் பயில்வில் பொலிவுற்றமையை இக்கட்டுரையில் சுட்டியுள்ளார்.

**வீரம்**

வீரம் என்பது பகைவர்க்கு அஞ்சாது செயலாற்றும் வினைமட்டுமன்று கொடையை மறுக்கும் திறனும் வீரம் என்று விளக்கம் தருகின்றார். "ஒருவன் வலிதிற் கொடுக்கவும் அதனைக் கொள்ளேன் என்று மறுப்பின் அஃதும் வீரத்தின்பாற்படுவதே யாகும். பழைய சங்கப்புலவர்கள்பால் இத்தகைய பெருமித உணர்ச்சி ததும்பியிருந்தமையை அன்னோர் பாட்டுக்களால் அறியக்கிடக்கின்றது" (ப. 223) என்று வீரத்திற்குப் பழந்தமிழ்ப் புலவர்களின் மாண்பினைக் கூறி விளக்குதலும் குறிக்கத்தக்க தாகும்.

**வழக்காறுகள்**

மக்களின் வழக்காறுகள் பலவற்றையும் கட்டுரையில் விளக்கியுள்ள திறம் சிந்தனைக்குரியது. நடுகல், வழிபாடு, மக்களின் நம்பிக்கைகள், வடக்கிருத்தல், இறந்தோரைச் சுடுதல், தாழியிற் கவித்தல், கைம்மை நோன்பு, கணவனை இழந்த மகளிர் தீப்பாய்தல் போன்ற செய்திகளையும், புறநானூற்றிற் கண்ட சில பழைய வழக்குகளும் வரலாறுகளும் (பக். 474 – 476) எனும் தலைப்பிலான கட்டுரையில் பதிவுசெய்து நோக்கியுள்ள திறம் சுட்டுதற்குரியது.

மேலும், சங்க நாளிலேயே தமிழ் இராமாயணம் ஒன்று வழங்கியதாக நாட்டாரய்யா கூறுகிறார். கம்பர் தமிழ்நூல்கள் வாயிலாகவும் கண்கூடாக அறிந்த தமிழர்களுடைய நாகரிகம்,

பண்பாடு, பழக்கவழக்கங்களையும், கொள்கைகளையும் இராமயணத்தில் வெளிப்படுத்தியுள்ளார் (ப. 574) என்பதும் சிந்தனைக்குரியது.

தமிழர்ப் பண்பாட்டு நிலையில் தமிழர் சமயமாக நாட்டாரய்யா சைவ சமயத்தைப் பல்வேறு ஏதுக்களினடிப்படை யில் நிறுவுகிறார். இச்சமயம் தமிழரின் பண்பாட்டு வெளிப்பாடு எனவும் விளம்புகிறார். உருவ வழிபாட்டின் தேவையினை விரிவாக விளக்கியுள்ளார்.

சமயத்தில் பண்பாட்டில் திருவிழாவின் நோக்கினைப் பண்டைத்தமிழர் பதிவுகளினடிப்படையில் புலப்படுத்திக் காட்டி யுள்ளார். திருவிழாவின் தேவையினை, அக்கால மக்களின் ஒற்றுமையை, ஆளுமையை, அவர்களது பண்பாட்டினை, அறிவு வேட்கையை, கலையுணர்வினை வெளிப்படுத்துவதாக நாட்டா ரய்யா ஆய்ந்து கூறிய கருத்துக்கள் அரசுக்குரிய குறிப்பாணை யாகக் கொள்ளலாம்.

மக்களிடையே சாதி, குலவேறுகள் சில சமயத்திற்கு இல்லை என்பதனையும் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி யுள்ள திறன் சிந்தனைக்குரியது. தமிழர்கள் உலகிற்கு அளித்த பங்களிப்பாகச் சிறந்த கொடையாக உயர்வு தாழ்வற்ற மனித நேயத்தைக் குறிக்கின்றார்.

இலக்கணத்தின் நோக்கம் இலக்கியமும் வாழ்வும் நெறிபிறழாமற் செல்லவேண்டும் என்று கூறுகிறார். அவ்வடிப் படையில் தமிழ் இலக்கணம், இலக்கியம் குறித்துப் பல்வேறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ளார். மற்றும் தமிழர்களின் இசைப் புலமை, இசைப்பாக்களின் சிறப்பு ஆகியவற்றைத் தக்காங்கு விளக்கியுள்ள திறம் நாட்டாரய்யாவின் தமிழர் பண்பாட்டுப்

பழமைக்குரிய ஆய்வுக் கொடையாகும். சொற்பொழிவு, நூல், கட்டுரைகளில் மட்டுமன்றித் தம் வாழ்நாளிலும் தமிழர் பண்பாட்டிற் குரிய விளக்கமாகத் திகழ்ந்தவர் நாட்டாரய்யா அவர்கள்.

**குறிப்பு:**

பேராசிரியர் பி. விருத்தாசலம் அவர்கள் பதிப்பித்த நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆய்வுக் கட்டுரைகள் எனும் நூலின் கட்டுரையில் உள்ள குறிப்புகள் இக்கட்டுரையில் எடுத்தாளப் பெற்றுள்ளன. பக்கம் என்று கட்டுரையில் கொடுக்கப்பெற்ற பக்க எண்கள் இந்நூலின் பக்கங்களைக் குறிக்கின்றன.

# நாட்டாரின்
# மணிமேகலை உரை மாண்பு

முனைவர் வே. இரா. மாதவன்
தஞ்சாவூர்

தலைச்சிறந்த தமிழ் நூல்களுக்கு உரை இயற்றித் தம் பெயரை நிலைநாட்டிச் சென்றவர் நாவலர், பண்டித ந.மு.வேங்கட சாமி நாட்டார் அவர்கள். உரை வரையும் திறத்தில் இவருடைய தமிழ்நடை ஆற்றல் நிறைந்தது; எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவாக விளக்குவது; இலக்கண வரம்புடையது. இவரது பெருமை மிக்க உரைகள் தமிழ் மரபுணர்ந்து எழுதப்பட்ட அழகிய, செவ்விய உரைகளாகும். அவற்றுள், 1924ஆம் ஆண்டில் இவர் எழுதிய மணிமேகலை உரை மாண்பினை இவண் ஆராய்வோம்.

**மணிமேகலை**

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை. சீத்தலைச்சாத்தனாரால் இயற்றப்பெற்ற இந்நூல், சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளால் கேட்கப்பெற்ற பெருமையுடையது.

இருப்பினும், இந்நூலுக்கான பழைய உரை எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

மணிமேகலைக் காப்பியம் முதன்முதல் 1891இல், திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டது. இப்பதிப்பில் பல பிழைகள் இருந்தன எனக் குறிப்பிடும் டாக்டர் ஐயரவர்கள் 1898இல் இதனைப் பதிப்பித்து வெளியிட்டார். 1921இல் இதன் இரண்டாம் பதிப்பும், 1931இல் மூன்றாம் பதிப்பும் வெளிவந்தன. இவருக்குக் கிடைத்த பிரதிகள் அனைத்தும் மூலம் மட்டுமே என்பதால், உரைப் பிரதி கிடைக்குமா எனச் சென்னை, தஞ்சையிலுள்ள பழைய கையெழுத்துப் புத்தக சாலைகளில் தேடியும், யாழ்ப்பாணம், பாரீஸ் போன்ற நகரங் களுக்கு எழுதிக் கேட்டும் கிடைக்காததால், கிடைத்த பத்து மூல ஓலைச்சுவடிப் பிரதிகளை வைத்துக்கொண்டு பதிப்பித்துள்ளார். இப்பிரதிகளில் மிதிலைப்பட்டிப் பிரதியே திருத்தமாக அமைந்து, பதிப்பிற்கு ஆதாரப் பிரதியாக அமைந்தது எனவும், ஐயரவர்கள் தம் முன்னுரையில் குறித்துள்ளார். மேலும், ஐயரவர்கள் முதன் முதல் உரை எழுதிய நூல் மணிமேகலையே யாகும்.

மணிமேகலை ஆராய்ச்சித் தொடக்கத்தில், அது இன்ன சமயத்தைச் சார்ந்தது என்றே தமக்கு விளங்கவில்லை என ஐயரவர்கள் குறிப்பிடுவர். மாளூர் ரங்காச்சாரியாரே, அது பௌத்த நூல் என அறிவித்தவர். தெரியாத சமய நூலாகலின் அது குறித்து எங்குச் சென்று யாரிடம் அறிவது என மயங்கிய ஐயருக்கு ரங்காச்சாரியாரே கொழுகொம்பாக நின்று உதவினார். பௌத்த சமயத்தொடர்பான ஆங்கில நூல் முதலானவற்றைப் படித்து அதன் சாரத்தை ஐயருக்கு எடுத்தோதினார். டாக்டர் ஐயரவர்களும், தமிழ் நூல்களில் எங்கெங்கே பௌத்த சமயக் கருத்துக்கள் வருகின் றனவோ அவற்றையெல்லாம் தொகுத்தார். ஆங்கிலத்தில் மானியர் வில்லியம்ஸ், மாக்ஸ் முல்லர், ஓல்டன் பர்க், ரைஸ்டேவிஸ் முதலானோர் எழுதிய புத்த சமயநூற் கருத்துக்களை ரங்காச் சாரியார் உதவியுடன் குறிப்பெடுத்துக்கொண்டார் ஐயர்.

புத்த சரித்திரத்திலே ஈடுபட்டு உருகியும், பௌத்த மத தத்துவங்களை அறிந்து மகிழ்ந்தும் பெற்ற உணர்ச்சிப் பெருக்கிலே மணிமேகலைக்கு முதன் முதலாகக் குறிப்புரை எழுதிப் பதிப் பித்தவர் இவர். மணிமேகலை இலங்கை சென்றதாகக் காப்பியம் தெரிவித்தலின், அங்குள்ள செய்திகளை அறிய முற்பட்டார். அங்குள்ள சமனொளி என்னும் சிலம்பு பற்றி மணிமேகலை கூற, அதுவே ஆடம்ஸ்பிக் என்றும் அதில் புத்தர் பாத பீடிகை உள்ள தென்பதையும், கொழும்பு பொ.குமாரசாமி முதலியாருக்கு எழுதி, அவர் மூலம் 'சுமங்களர்' என்னும் பௌத்த பெரியார் எழுதி யனுப்பிய குறிப்புகளால் அறிந்தார்.

இக்காப்பியத்தில் வரும் சமயக் கணக்கர் தந்திரங்கேட்ட காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதைகளுக்கு உரையை வடமொழி, தர்க்க சாத்திரங்களில் வல்லவரான குறிச்சி மகாமகோ பாத்தியாய ரங்காச்சாரியரிடம் கேட்டு எழுதினார். அதிலும் பின்னுள்ள செய்தி, அவரால் விளக்க முடியவில்லையாகலின், அப்பகுதிக்குத் தெரியவில்லை எனத் தம் இயலாமையை நேர்மை யுடன் அடிக்குறிப்பில் எழுதி ஒப்புக்கொண்டுள்ளார். கும்பகோணம் கல்லூரி சமஸ்கிருதப் பண்டிதர் ரங்காச்சாரியிடமும், திருமலை ஈச்சம்பாடி சதாவதானம் ஸ்ரீநிவாசாசாரியரிடமும் வடமொழிச் சொற்கள் பற்றிய ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தார். இவ்வாறு, டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் வல்லார்வாய்க் கேட்டு வேண்டிய உரை எழுதிப் பதிப்பித்த மணிமேகலைப் பதிப்பை அடிப்படையாகக் கொண்டே நாட்டாரவர்கள் தம் உரைப் பணியை மேற்கொண்டுள்ளார்.

## உரையாசிரியர்

மொழிவளம் சிறக்கத் தொண்டாற்றும் புலமையாளரை நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என மூவகைகளில் குறிப்பர். நூல்களை இயற்றியவர் நூலாசிரியர். அந்நூல்களை விளக்கும் ஆசிரியர் மற்ற இருவர் ஆவர். மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லி நூல்களை விளக்கும் ஆசிரியர் போதகாசிரியர்.

நூல்களின் உரைகளை இயற்றிப் பலருக்கும் பயன்படும்படி வழங்கும் ஆசிரியர்கள் உரையாசிரியர்கள்.

நூலாசிரியரது மனக் குறிப்பினை உய்த்துணர்ந்து போத காசிரியர்க்குத் தெளிய அறிவிக்கும் நுண்ணுணர்வும் சொல் வளமும் ஒருசேரப் பெற்றவர்கள் உரையாசிரியர்களே. எனவே, நூலாசிரியர்களுக்கு எத்துணை மதிப்பு உண்டோ அத்துணை மதிப்பு உரையாசிரியர்களுக்கும் உண்டு.

நன்னூலில் உரையின் பொதுவிலக்கணம் கூறும் பவணந்தி முனிவர் உரை பதினான்கு வகைப்படும் என விளக்குவர்.

"பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனமென் றீரே ழுரையே!"

(நன். பொதுப்பாயிரம், 21)

1. பாடம் – மூலபாடம் எடுத்துரைத்தல், 2. கருத்துரை, 3. சொல்வகை – சொற்களைப் பிரித்துரைத்தல், 4.சொல்லுக்குப் பொருளெழுதும் பதவுரை, 5. தொகுப்புரை என்னும் பொழிப்புரை, 6. உதாரணம் எடுத்துரைத்தல், 7.வினா, 8. விடை, 9. விசேடம் – சூத்திரத்து உள்ள பொருளன்றியும் அவ்விடத்துக்கு வேண்டுவன வற்றைத் தந்துரைத்தல், 10. விரித்துரை, 11. அதிகாரத்தோடு பொருத்திக் காட்டியுரைத்தல், 12. துணிந்துரை, 13. பயனுரை, 14.ஆசிரிய வசனமெனும் ஆன்றோர் நூல்களினின்று மேற்கோள் காட்டியுரைத்தல் என்னும் இவை அனைத்தையும் மரபாகப் போற்றிய உரையாசிரியர்களை உய்த்துணர்ந்த நாவலர் நாட்டா ரவர்கள் தாம் நூல்களுக்கு உரை எழுதியவிடத்தெல்லாம் மரபு வழுவாமலும், புதுமைப் போக்குடனும் தம் முத்திரையைப் பதித் துள்ளார். இவருடைய மணிமேகலை உரை பல்வேறு நிலைகளில் நூல் பயில்வோருக்குப் பயன்படத்தக்க வகையில் அமைந்

திருக்கக் காண்கிறோம். இவற்றைச் சில எடுத்துக்காட்டுகளால் விளக்கிக் காண்போம்.

பாகனேரிச் செந்தமிழ் அன்பர் மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் நாவலர் நாட்டாரவர்களைக் கொண்டு சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதுவித்து வெளியிட்டது போலவே மணிமேகலைக்கும் உரையெழுதுவித்து வெளியிட விரும்பினர். அவ்வாறே முதல் இருபத்தாறு காதைகளுக்கு நாட்டார் அவர்களால் உரையெழுதப்பெற்றது. உடல்நிலை காரணமாக அதற்கு மேல் அவர்களால் எழுத இயலாமற் போயிற்று. பிற்பகுதி நான்கு காதைகட்கும் உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளையவர்கள் உரையெழுதி நிறைவு செய்துள்ளார்கள். செல்லூர்க் கிழார். செ.ரெ.இராமசாமி பிள்ளை அவர்கள் இந்நூலுக்கான ஆராய்ச்சி முன்னுரையை எழுதி அளித்துள்ளார்கள்.

மணிமேகலைக் காப்பியத்திற்கு உரையெழுத முற்பட்ட நாட்டாரவர்கள், பதிகம் முதலாக, ஒவ்வொரு காதையும் தொடங்கு முன்னே அதில் பொதிந்துள்ள செய்திகளைச் சுருக்கமாகத் திரட்டி உரைநடைப் பொழிவாக எழுதியமைத்துள்ளார். காப்பியத்தின் பாடல் அடிகளைத் தொடர்ந்து வரும் இவருடைய உரை பல்வேறு பகுதிகளாக ஆராய இடம் தருகின்றது. அவை வருமாறு:

### 1. பதவுரை

மூல நூலில் வரும் அருஞ்சொல், தொடர் முதலானவற்றிற்குப் பொருள் தரும் நிலையில் அமைவதே பதவுரை, இதனை நாட்டாரவர்கள் மணிமேகலை உரையில் பலவாறாக அமைக்கக் காணலாம்.

#### தமிழ்ச் சொற்களுக்கு வடசொற்பொருள்

உருவிலாளன் – அநங்கன் (மணி. 5:6)

ஊழி முதல்வன் – மகா பிரம்மா (மணி. 6:172)

இவ்வாறு பல அமையும். அக்காலச் சூழலில் இது தேவையாயிற்று எனலாம்.

**வடசொற்களுக்குத் தமிழில் பொருள்**

நித்திலத்தாமம் – முத்துமாலை (மணி. *19: 112*)

**சொற்பொருள் விளக்கம் திரும்ப வருதல்**

காடமர்செல்வி – காடுகிழாள் (மணி. *6:53;18:115*)
திட்டி விடம் – கண்ணில் நஞ்சுடைய பாம்பு;
அது பார்த்தால் உயிர்கள் சாம் (மணி. *9: 46*)

என இவ்வாறு உரை எழுதியவர், இதே சொல் பின்னால் வருமிடங்களையும் இங்கேயே தொகுத்துக் கூறுகிறார். "இந்நூலின் கண் (*11:100; 21:11; 21:40; 23:69; 23:84*) பலவிடத்து இது கூறப்பட்டுள்ளமை காண்க. 'திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை' (கம்ப. கும்பகர்ண. *80*) என்கிறார் கம்பரும் என்றும் குறிக்கின்றார்.

**அருஞ்சொற்பொருள் தரல்**

முது மூதாட்டி – மிக்க முதுமையை உடையவள் (*6. 157*)
ஆயிரம் – அளவில்லன என்னும் பொருட்டு (*6:166*)
கோட்டம் – அறை (*6: 166*)
அறவி – அறம் (*11: 25*)
அருளறம் – தயாதன்மம்; அருளிய அறம் என்றுமாம் (*12: 99*)
திருவின் செல்வம் – அரசாட்சிக்குரிய செல்வம் (*14: 70*)
பரிபுலம்பு – மிக்க வருத்தம் (*16: 57*)
இறும்பு – குறுங்காடு (*19: 97*)

என இவ்வாறு பல சொற்களைச் சுட்டியுரைப்பர்.

## உ. சொல்பொருள் விளக்கம் சான்றுடன் தருதல்

கவேர கன்னி – காவேரி *(3: 53 – 58; 9:51 – 53;)*

அரச இருடியாகிய கவேரர் என்பவர் வீடு பெறுதலை விரும்பிப் பிரமனைக் குறித்து அருந்தவஞ் செய்து; அவனருளால் விட்டுணு மாயையைத் தம் புதல்வியாக அடைந்து முத்திபெற்றனர் என்றும், பின்பு அக்கன்னி பிரமம் கட்டளைப்படி நதி வடிவு கொண்டு சென்றமையால் அந்நதி கவேர கன்னியென்றும் காவேரி மான்மியத்தால் வெளியாகின்றதென்பர். இவ்வாறு இவர் உரை விளக்கம் அமைகின்றது.

இடங்கழி காமம் – வரம்பு கடந்த காமமுமாம்; இடங்கழி என்பதே காமத்தை யுணர்த்தலுமுண்டு (10: 22).

சாது சக்கரன் – சாதுக்களின் மண்டலத்திலுள்ளவன் எனப் பொருள்படும் காரணப்பெயர்; ஓம் மணிபத்மேஹூம் என்னும் மந்திரம் சுற்றிலும் எழுதப்பட்ட உலோகத்தாலாகிய சக்கரத்தை வலக்கையில் வைத்துச் சுழற்றிக் கொண்டிருத்தல் பௌத்தர்களிற் சிலருடைய வழக்கமென்றும், இவனும் அங்ஙனம் செய்வனாதல் வேண்டுமென்றும் கூறுவர் (10: 24).

சமந்தம் சமனொளி யெனவும் வழங்குமென்பது, "இலங்கா தீவத்துச் சமனொளியென்னுஞ், சிலம்பினை யெய்தி" (28: 117, 118) என்று பின்வருவதனா லறியப்படும். சமந்தம் என்பதும், சமனொளி என்பதும் இலங்கையிலுள்ள 'ஆடம்ஸ் பீக்' என ஆங்கில மொழி யில் வழங்கும் மலையையே குறிக்குமென்று கருதுவர் (11: 23).

அலவலைச் செய்தி – ஆராயாது செய்த செய்தி ; அலமருதலைச் செய்யும் செய்தி யென்றுமாம்; "அலவலையுடைய" (கலி. நெய்தல். 5) என்புழி நச்சினார்க்கினியர் உரைத்தமை காண்க (17: 51).

**3. முன் வந்திருத்தலைச் சுட்டுதல்**

''கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயில் ஆடும்
விரைப்பூம் பந்தர் கண்டுளஞ் சிறந்தும்'' (19: 57 – 60)

என்னும் பாடலடிகளுக்கு உரை வரையுமிடத்து, 'குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட, மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய, வெயினுழை பறியாக்குயினுழை பொதும்பின், மயிலா டரங்கின்' (4: 3 – 6) என முன்னர் வந்திருத்தல் அறியற்பாலது எனக் குறித்துள் ளார். இவ்வாறு முன், பின் வரும் ஒத்த கருத்துக்களை அங்கங்கே சுட்டியுரைக்கின்றார்.

**4. உறவு முறைகளைக் கூறல்**

சித்திராபதி – மாதவியின் நற்றாய் (பதி. 35)

வயந்த மாலை – மாதவியின் தோழி; இவள் கூனியென்றும் கூறப்படுவாள் (பதி. 36)

மாதவி – மணிமேகலையின் தாய் (பதி. 36)

மணிமேகலை – கோவலக்கு நாடகக் கணிகையாகிய மாதவி வயிற்றில் பிறந்தவள்; இக்காப்பியத்தின் தலைவி (பதி. 44)

சம்பாதி – கழுகரசன் ; சடாயுவினுடன் பிறந்தவன் (3: 53)

கௌசிகன் – சுதமதியின் தந்தை (7: 112)

செங்குட்டுவன், பெயர்; இவன் ஆசிரியன் இளங்கோ வடிகளின் தமையனும் வஞ்சிமாநகரிற் கண்ணகி படிமம் நிறுவி யோனுமாவான் (26: 77)

என இவ்வாறு காப்பிய மாந்தர்களின் உறவு முறைகளை விளக்கியுரைப்பர்.

## 5. இலக்கணக் குறிப்புரைத்தல்

பழைய உரையாசிரியர் மரபில் நின்று, நாட்டாரவர்கள் பலவிடங்களில் சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தந்துள்ளார். பொருள் மயக்கம் ஏற்படாமல் இருக்க, தேர்ந்த பொருள் இதுவென உணர்த்த உரையாசிரியர்கள் இலக்கணக் குறிப்பைத் தருவதை மரபாகக் கொண்டுள்ளனர். இவ்வடிப்படையிலேயே நாட்டாரவர்கள் தரும் இலக்கணக் குறிப்புகளும் அமைந்துள்ளன.

எள்ளும் – உவமவுருபுமாம் (பதி. *1*)
கொண்டாங்கு, கேட்டீங்கு என்பவற்றில் ஆங்கு, ஈங்கு என்பன அசைகள் (பதி. *16, 19*)
தீயழல் – ஒரு பொருளிருசொல்; கொடிய அழலுமாம் (*2: 53*)
இதனொடு (இதனிடத்து) – உருபு மயக்கம் ( *13: 55*)
இடவயின் என்பதில் வயின் ஏழனுருபின் பொருட்டு (*15: 4*)
அரைசு – இடைப்போலி (*15: 44*)
விடலீயான் – வினைத்திரிசொல் ( *19: 32*)
செய்தவத்தாட்டியை – முன்னிலையிற் படர்க்கை (23: 64)

என இவ்வாறு இலக்கண விளக்கங்களையும் அங்கங்கே உரைப்பர்.

## 6. வேறு உரை நூல்களில் காண்க எனல்

ஆணு – அன்பு (பதி. *17*): "ஆணுப் பைங்கிளி" (சீவக. *1002*) என்பதன் உரை காண்க. விசும்பின் என முன் வந்தமையின், ஆகாய கங்கை என்பது பெயர் மாத்திரையாய் நின்றது. கங்கை வானின்று வந்ததென்ப ஆகலானும், காவிரி நீர் கங்கை நீர் ஆகலானும் 'ஆகாய கங்கை' என்றார். "பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்" என்புழி, "காவிரிநீர் கங்கை நீராதலிற் கங்கை புதல்வரைக் காவிரிப் புதல்வர் என்றார்" என அடியார்க்கு நல்லார் கூறியதும் (சிலப். 10: *148*), தொல்காப்பியப் பாயிரவுரையில் "கங்கையாருழைச் சென்று

காவிரியாரை வாங்கி" என நச்சினார்க்கினியர் கூறியதும் ஈண்டு அறியற்பாலன – என இவ்வாறு பலவிடங்களில் குறிக்கின்றார்.

முதலாவது, விழைவறை காதை இறுதியில்,

> ''பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி'' (1: 71, 72)

என வரும் வரிகளைச் சுட்டி, இத்தொடர் முழுவதும் சிலப்பதி காரத்தும் அப்படியே வந்துள்ளமையைக் (சிலப். 5: 723) காண்க எனக் குறிக்கின்றார். இவ்வாறு பலவிடங்களைச் சுட்டலாம்.

### 7. டாக்டர் உ.வே. சாமிநாதையர் கருத்து இதுவெனச் சுட்டுதல்

தமக்கு முன்பு மணிமேகலைக் காப்பியத்திற்கும் உரை எழுதிய டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் கருத்து இதுவெனத் தக்க இடங்களில் எடுத்துக்காட்டுவதிலும் நாட்டாரவர்கள் ஆழ்ந்த கவனம் செலுத்தியுள்ளார்.

பதினேழாவது உலகவறவி புக்க காதையில்,

> ''பத்தினிப் பெண்டிர் பாத்தூண் ஏற்ற
> பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
> அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
> திறத்து வழிப்படூஉஞ் செய்கை போல'' (17: 1– 4)

என்னும் பகுதிக்கு நாட்டாரவர்கள் உரை எழுதுமிடத்துப் பின்வரும் குறிப்புகளைத் தருகின்றார்.

பாத்து – பகுத்து என்பதன் மரூஉ. பாத்தூண் – இயல் புடைய மூவர்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத் துண்டற்குரிய உணவு; இதனால் ஆதிரை யளித்த உணவின் தகுதி யும், ஆதிரையின் மனையற மாண்பும் பெறப்பட்டன; "பழியஞ்சிப்

பாத்தூணுடைத் தாயின் வாழ்க்கை, வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" (குறள். 44) என்பது அறியற்பாலது. ஆதிரைபாற் பெற்றதற்கு அறத்தின் ஈட்டியதும், மணிமேகலை கருதியவாறு மன்னுயிர்க் களிக்க அது பயன்படுதற்கு அறவோன் திறந்து வழிப்படுதலும் உவமையாயின. இனி, அறவோன் என்பதற்குச் சற்பாத்திரம் என்றும், திறத்து வழிப்படும் என்பதற்குப் பெறுவோர் பெருமைக் குத் தக்கபடி பெருகுமென்றும் கருத்துக் கொண்டனர் மகாமகோ பாத்தியாய டாக்டர் சாமிநாதையர்; ஈண்டு அது பொருந்துமேற் கொள்க.

இவ்வாறே உதயகுமரனை வாளாலெறிந்த காதையில், "அந்தரஞ் செல்வோர் ......... கைம்மை கொள்ளேல் காஞ்சன இது கேள்" (20: 116 – 122) என்னும் பகுதிக்கு உரையெழுதியவிடத்தும் குறிப்பர்.

கைம்மை – சிறுமை; தனக்குரியளல்லாதாளை விரும்புதல்; உதயகுமரன் மணிமேகலைக்குப் பழம் பிறப்பின் நாயகனாதலின் அவன் இறந்தது பற்றி மணிமேகலையைக் கைம்மையாகக் கருதித் தெய்வங் கூறிற்றெனலுமாம் என்பர், டாக்டர் உ.வே. சாமிநாதையர் – என இவ்வாறு நாட்டாரவர்கள் அங்கங்கே முன்னோர் மொழி பொருளை எடுத்துக்காட்டுவது அவருடைய நேர்மைக்குச் சான்றாகும்.

## 8. பாட வேறுபாடுகளையும் குறிப்பிட்டு உரை வரைதல்

மணிமேகலைக் காப்பியத்தில் 1360 பாடவேறுபாடுகளை டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் முதல்முதலாகக் குறித்துள் ளார். இவருக்குப் பின் இந்நூலின் பதிகம் முதல் இருபத்தாறாவது வஞ்சிமாநகர் புக்ககாதை வரை நாவலர் நாட்டார் எழுதிய உரையில் பாடவேறுபாடுகளை மிகுதியாகக் காட்டவில்லை. நாட்டாரவர்கள் சுவடிகளைப் பார்வையிட்டதாகவும் தெரியவில்லை. மிகுதியான பாடவேறுபாடுகளை அளிப்பது தேவையில்லை என இவர்

கருதினர் போலும், ஆயின், இந்நூலின் இறுதி நான்கு காதைகளுக்கு உரை வரைந்த ஔவை சு.துரைசாமிப் பிள்ளையவர்கள் பாடவேறுபாடுகள் பலவற்றை அடிக்குறிப்பில் காட்டியுள்ளார். இவரின் உரை தனி ஆய்வுக்குரியது என்பதால் இங்கே அவை விளக்கப்பெறவில்லை.

மூலபாடம் என நாட்டாரவர்கள் கொண்ட பாடத்திற்கு உரைவரைதலே பெரும்பான்மையாக இருக்க, ஒரோவிடத்து பாடவேறுபாடுகளுக்கும் இவர் விளக்கம் தருகின்றார். காட்டாக, அங்கைப் பாத்திரம் – ஆங்கப் பாத்திரம் என்பதும் பாடம் (பதி. 59) என்பர். மேலும், பதிகத்தின் இறுதியில்,

"மற்றவர் பாதம் வணங்கிய வண்ணமும்
தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
பவத்திற மறுகெனப் பாவை நோற்றதும்" (பதி. 92 – 94)

என்னும் அடிகளுக்கு உரை கூறுமிடத்து,

மற்றவர் பாதம் வணங்கிய வண்ணமும் என்பதனை நெகிழ விடுத்தும், கேட்டு நோற்றதும் என்பதனைக் கேட்டதும் நோற்றதும் என இரண்டாகக் கொண்டும் ஈற்றிலுள்ள இரு காதைகளின் பெயரை முன்னர் யாரோ திரித்து அமைத்துள்ளனர். உம்மை கொடுத்து எண்ணியவற்றுள் ஒன்றை விடுத்தலும் ஒன்றைப் பகுத்தலும் கூடாமையானும், இறுதிக் காதையின் ஈற்றிலும் "தவத் திறம் பூண்டு தருமங் கேட்டு பவத்திற மறுகெனப் பாவை நோற்றன ளென்" எனக் கேட்டு நோற்றமை ஒன்றாக உரைத்திருத்தலானும் அங்ஙனம் அமைத்தல் பொருந்தா தென்க – என விளக்குவர். இவ்வாறே பிறவற்றையும் நோக்கலாம்.

மணற்பந்தர் – மணப்பந்தர் ( 1:58)

மணப்பந்தர் என்னும் பாடத்திற்கு மணத்தையுடைய தண்ணீர்ப்பந்தர் என்க.

மீதூர் – மூதூர் ( 4: 28)

உருகெழுமீது ஊர் – அச்சகம் பொருந்திய மேலிடத்தின் ஊர்ந்திருக்கின்ற. இதில், மூதூர் என்னும் பாடத்திற்குப் புகாரின் கண் என்றுரைக்க என உரை கூறுகிறார்.

கணவனை யிகழ்ந்தேன் எற்பயம் உடைமையின் – 'இழந்தே னெறிபய முடைமையின்' என்றும் பாடம் காணப்படும் (13: 81) என்பர்.

"ஆங்கவர் பசிதீர்த் தந்நாள் தொட்டு
வாங்குகை வருந்த மன்னுயிர் ஓம்பலின்" (14: 22, 23)

என்பதில், "மிகுதியாக அளித்தலின் வாங்குவோர் கை வருந்தும் என்றார். வருந்துதல் எனப் பாடங்கொள்ளலுமாம்" – எனவும் உரையில் கூறுகிறார்.

"புரப்போன்பாத்திரம் பொழிந்தூண் சுரந்தீங்கு" – என்பதற்கு "உயிர்களைக் காப்பாற்றுகின்ற ஆபுத்திரனது பாத்திரத் தின்கட் பெய்யப்பட்ட உணவு பெருகி" – என உரையைக் கூறிவிட்டு, 'பொருந்தூண் என்பதும் பாடம்' – எனவும் குறிக்கின்றார்.

"முதியாள் திருந்தடி மும்மையின் வணங்கி" (19: 1) என்பதில், "சம்பாபதியின் திருந்திய அடிகளை மும்முறை வணக் கஞ் செய்து" என்று உரை வரைந்தவர், மும்மையின் – உளம் உரை உடல் என்னும் முக்கரணங்களால் என்றுமாம் என்று விளக்கமும் கூறி, 'முறைமையின்' என்பதும் பாடம் – என்றும் குறிப்பிடுகின்றார். மேலும்,

தகாதொழி – தகாதொளி (22:26) – 'ஒளி' என்பது பாட மாயின் மறைந்துகொள் என்பது பொருளாகும்.

கொத்தன ளென்றே – கொத்தனரென்றே (22: 87)
அழுதடி வீழா தாயிழை – அழுதனளடி வீழ்ந்து (23: 9)
றழுது முன்னிற்ப – றழுதனணிற்ப ( 26: 9)

என இவ்வாறு அமைந்துள்ள பாடவேறுபாடுகளையும் சுட்டுவர்.

## 9. மேற்கோள் விளக்கங்கள் தருதல்

நாவலர் நாட்டாரவர்கள் உரைப்பகுதியில் தரும் ஒப்புமை மேற்கோள் விளக்கங்கள் நூல் கல்வியில் அவருக்கிருந்த பரந்து பட்ட அறிவைக் காட்டுகின்றன. மூலநூல், அல்லது மூல நூலுக்கு எழுந்த பழைய உரைநூல்களில் காணப்படும் குறிப்பிடத்தக்க சொல், தொடர், அடி முதலானவற்றிற்கு இணையானவை பிற நூல்களில் வரின், அவற்றைத் தேடித் தொகுத்துள்ளார். சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு; பதினெண் கீழ்க்கணக்கில் திருக்குறள், திரிகடுகம், பழமொழி, நாலடியார், ஏலாதி; காப்பியங்களில் சீவகசிந்தாமணி மற்றும் நீலகேசி, சூளாமணி, தொல்காப்பியம் போன்ற நூல்களிலிருந்தும்; சமய நூல்களில் கம்பராமாயணம், பெரியபுராணம், திருஞானசம்பந்தர் தேவாரம், திருவாசகம் போன்றவற்றிலிருந்தும்; பேராசிரியர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்களின் உரைகளிலிருந்தும் உரிய மேற்கோள் விளக்கங்களை மணிமேகலை உரையில் இவர் எடுத்தாண்டுள்ளார்.

## 10. சமயக் கலைச்சொல் விளக்கம் தருதல்

மணிமேகலை ஒரு பௌத்த சமய நூலானதால் அதில் புத்தநூல் கருத்துக்கள் பல உள்ளன. பௌத்த சமயக் கலைச் சொற்கள் பலவற்றிற்கும் நாட்டாரவர்கள் விளக்கம் தந்துள்ளார். இருப்பினும், இவர் நேரடியாகப் பார்த்த அல்லது கேட்டறிந்த பௌத்த நூல்களின் பெயர்கள் எதையும் இவர் குறிக்கவில்லை.

'இது பௌத்த நூல் வழக்கு' (7: 22; 26: 61)

'பிடகம் – பௌத்தாகமம்; இது வினயம் , சூத்திரம், சாத்திரம் என மூவகைப்படுதலின் திரிபிடகம் எனவும்படும். மூன்றுள் ஒவ்வொன்றும் பல பகுதிகளை யுடையதாம்' (26: 66) – என வரும் உரைக்குறிப்புகளில் இவர் கண்ட பௌத்த நூல்களின் பெயர்கள் எதையும் சுட்டவில்லை. மேலும்,

"கனக விசயர் முதற்பல வேந்தர் அனைவரை வென்று" (26: 86, 87) என்பதில், 'பலவேந்தரென்றது, கனகன், விசயன், என்பாரொடு கூடிச் செங்குட்டுவன் எதிர்த்த உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் முதலிய ஆரிய அரசர் பலரை, அனைவரை என்றார்' – என்று குறிப்பிடுகின்றார் நாட்டாரவர்கள். இத்தகைய பெயர்களை – விவரங்களை அவர் எங்கிருந்து பெற்றார் என்ற தகவல்களை அவர்தம் உரையில் குறிக்கவில்லை. இவ்வாறு பலவிடங்களிலும் காணலாம்.

பொதுநிலையில், மணிமேகலைக் காப்பியத்தின் இறுதி நான்கு காதைகளுக்கு நாவலர் நாட்டாரவர்களின் தெள்ளிய உரை கிடைக்கவில்லை என்பதே குறையாக உள்ளது; கிடைத்துள்ள உரை விளக்கங்கள் அருமையும் பெருமையும் கொண்டவை என்பதில் ஐயமில்லை. புறச்சமய நூலான இம் மணிமேகலைக் காப்பியத்திற்கும் இவர் புத்துரை கண்டது பெரும்பணியாகும். கற்போர் மனநிறைவு கொள்ளும் வகையில், கருத்துரை, உரைவிளக்கம், உரை ஒப்பு மேற்கோள், பிற உரை சுட்டுதல், உரைக்கு மறுப்பு தருதல்; உரை நயம் காட்டல்; இலக்கணக் குறிப்புரைத்தல்; பொருள்கோள் முறை, சமயச் செய்திகள், புராணப் பொழிப்புரைத்தல்; வரலாற்றுக் குறிப்புரைத்தல்; இசை, நாடக, சிற்ப, ஓவிய நூல் கருத்துரைத்தல்; வடநூல் வழக்கு தரல்;

உலக வழக்கு, பழமொழிசுட்டல்; பாத்திர உறவு காட்டல்; நாடு, நகர், பொருள் விளக்கங்கள்; பௌத்த நூல் போன்ற புறச்சமய விளக்கங்கள் தரல் எனப் பல நிலைகளில் நாவலர் நாட்டார் அவர்களின் உரை மாண்பு மிளிர்கிறது. தமிழ் உரையாசிரியர்கள் வரலாற்றில் இவர் சிறப்பிடம் பெற்றுள்ளமைக்கு, இவருடைய தமிழ்க்காதலும், இறுதிவரை அயராத பேருழைப்புமே காரணங் களாகும்.

### துணை நூல்கள்


1. மணிமேகலை மூலமும் குறிப்புரையும், (பதிப்) டாக்டர் உ.வே.சாமிநாதையார், மு.ப. *1898*, இ.ப. *1921*, மூ.ப. *1931*, ஆ.ப. *1965*.
2. மணிமேகலை – உரை, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, கழக வெளியீடு, *1985*.

# நாட்டார் ஐயாவும் சமய சீர்திருத்தமும்

பேரா. கி. விமலா
தஞ்சாவூர்

நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் 12.04.1884இல் பிறந்தவர். கல்லூரியில் சேர்ந்து பயிலாமல், தாமே பயின்ற தமிழ்ப் பேராசான். யாவதும் கற்றோர் அறியா அறிவின ராயும், கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையராயும் விளங்கி யவர்; தமிழ் நாட்டில் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக வேண்டும் என்றும், அதற்குத் தொடக்கமாகத் திருவருள் கல்லூரி என்னும் பெயரில் பெரிய கல்வி நிறுவனம் ஒன்று தொடங்க வேண்டும் என்றும் தம்முடைய முப்பத்தேழாம் வயதில் – அதாவது கி.பி 1921ஆம் ஆண்டிலேயே முயற்சி செய்தவர். அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை (முற்பகுதி), திருவிளையாடற் புராணம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய நூல்களுக்கு உரை யெழுதித் தமிழ்க்கடலாக விளங்கிய நாட்டார் ஐயா அவர்கள் ஆய்வுக்கட்டுரைகள் பலவும் எழுதியுள்ளார்கள்; பெருமை வாய்ந்த

நாட்டார் ஐயாவின் கருத்தரங்கிற்காக, நாட்டாரின் சமய சீர்திருத்தம் என்ற தலைப்பில் இக்கட்டுரை வழங்கப்பட்டுள்ளது.

**சமயம்**

"மன்பதைகள் உய்ந்திடுதல் வேண்டிக் கடவுளருள் பெற்ற பேரறிவுடைய பெருமக்கள் கண்ட நெறியே சமயம் எனப்படுவது. ஆதலின் அது கடவுள் வகுத்தது எனலும் அமைவுடைத்தே. உலகிலே சமயம் என்பது இன்று நேற்று உண்டானது அன்று. பல்லாயிரம் ஆண்டுகளாகவே உள்ளது. யாதானுமோர் ஒழுங்கிற்குட்பட்டொழுகும் மக்கள் வாழ்க்கை என்றுதொட்டுள்ளதோ, அன்று தொட்டே சமயம் என்பதும் உள்ளது. சமயத் தொடர்பு சிறிதும் இல்லாத நாட்டினரையோ, கூட்டத்தினரையோ நாம் ஒருபொழுதும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இடத்தானும் காலத்தானும் பல்வேறு குழுவினராகப் பிரிந்த மக்களின் அறிவு செயல்களின் வேறுபாட்டிற்கேற்பவும், நெறிவகுத்தோர்களின் அகக்காட்சிகளுக்கேற்பவும் சமயம் பலவாயின. எல்லாச் சமயங்களும் மக்கள் உயர்நிலையடைய வேண்டுமென்னும் பெருநோக்கமுடையனரோ? அவை யாவற்றிற்கும் பொதுவான அறங்களும், ஒழுக்க நெறிகளும் உள்ளன" என்பது சமயம் பற்றி நாட்டார் ஐயா கூறியுள்ள விளக்கம் ஆகும். இவற்றின் அடிப்படையில் சமய சீர்திருத்தம் பற்றி இக்கட்டுரையில் விளக்கப் பட்டுள்ளது.

நாட்டார் ஐயா அவர்கள் சைவ சமயத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்றாலும், அவர் அனைத்துச் சமயத்தின் மீதும் அன்பு கொண்டவர் என்பதை அவர் எழுதிய உரைகளின் மூலம் அறிய முடிகிறது. சிலப்பதிகாரம் ஓர் சமணக் காப்பியம்; மணிமேகலை ஓர் பௌத்த காப்பியம், சைவராகிய நாட்டாரையா அவர்கள் பிற சமயக் காப்பியங்களுக்கு உரையெழுதியமை அவரது பரந்த உள்ளத்தை எடுத்துக்காட்டுகிறது. கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் பலர் சைவ மதத்தையும், வைணவ மதத்தையும் தழுவியவர்கள், அவர்கள் சைவ சமயத்தைச்

சார்ந்தவராயினும் அவர்கள் கொண்டாடும் தெய்வம் 'அழகர்' ஆகும். சைவ மதத்தைச் சார்ந்த மக்கள் திருமாலைக் 'கள்ளழகர்' என்றுபோற்றி வழிபட்டார்கள். மேலும் கள்ளர்களில் சைவர்களும், வைணவர்களும் ஒருவர் வீட்டில் ஒருவர் திருமணம் செய்து கொண்டனர் என்று நாட்டார் ஐயா அவர்கள் கூறுவதிலிருந்து சமயக் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் மக்கள் அன்புடன் வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகிறது.

கல்வியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் கள்ளர் இனத்தில் கல்வி இல்லா மக்களை பற்றிக் கள்ளர் சரித்திரத்தில் கணக்கெடுத்துக் காட்டியுள்ளார். மேலும், மனிதராய்ப் பிறந் திருப்பினும் கல்வியில்லாதவர் விலங்குகளுக்கு ஒப்பாவர், கற்றவரே கண்ணுடையவர் என்று ஆன்றோர் கூறியதை எடுத் துக்காட்டி, கள்ளர் இனத்திற்கு மட்டும் அல்லாமல் அனைத்துச் சமய மக்களுக்கும் கல்வி வேண்டும் என்று எண்ணுவதில் இருந்து அவர் ஒரு சமய சீர்த்திருத்தவாதி என அறிய முடிகிறது. நாட்டார் ஐயா அவர்கள் சைவ சமயப் பற்றாளராய் இருந்தாலும்,

"அமரர்தருக் கோட்டம் புகர்வெள்ளை நாகர்தடம்கோட்டம்
......... ............ ........... ............ .............
......... ............ ............ ............ .............
நிலாக் கோட்டம் புக்கெங்கு மேவி"

என்ற சிலப்பதிகாரக் கனாத்திறம் உரைத்த காதைப்பகுதிக்கு உரை எழுதும்போது நூலாசிரியரைப் போலவே எந்தச் சமயச் சார்பும் இன்றிக் கோவில்களை அவ்வற்றிற்குரிய சிறப்போடு விவரித்துச் செல்கிறார். மேலும், கால்கோட் காதையில் "தெண்ணீர் கரந்த செஞ்சடைக்கடவுள்" எனவரும் வரிக்கும், "ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்" என்ற வரிக்கும் உரை எழுதும் நாவலர், வஞ்சி மாநகரின்கண் சைவ, வைணவ ஆலயங்கள் இருந்தன என்றும், அக்கோயில்களிலிருந்து கொண்டுவந்து தந்த பிரசாதங்

களை சைவ பக்தனான செங்குட்டுவன் அன்புடனும் மதிப்புடனும் வாங்கிக் கொண்டான் என்றும், சைவ பிரசாதத்தை நெற்றியிலும், வைணவ பிரசாதத்தைத் தோளிலும் அணிந்து கொண்டான் என்றும், இதனால் இவன் வேறு தெய்வ வழிபாட்டையும் மதிக்கக் கூடியவன் என்றும் கூறியுள்ளார். இதனால் செங்குட்டுவனைப் போன்றே நாட்டார் ஐயாவும் சைவத்தை மட்டும் அல்லாது அனைத்துச் சமயங்களையும் போற்றக் கூடியவர் என்பது விளங்குகின்றது.

"ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்
உலகு இன்பக் கேணி"

"தீயினைக் கும்பிடும் பார்ப்பார் - நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயில் சிலுவையின் முன்னே - நின்று
கும்பிடும் ஏசு மதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வமிந்தப்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்" –பாரதி

"ஆவேறு உருவின ஆயினும் ஆ பயந்த
பால்வேறு உருவின அல்லவாம்" (நாலடியார், 118)

"அல்லா என்பார்கள் சிலபேர்கள்
அரன்அரி என்பார் சிலபேர்கள்
எல்லாம் இப்படிப் பலபேசின்
ஏதோ ஒருபொருள் இருக்குமன்றோ"
(நாமக்கல் கவிஞர்)

மேற்கூறிய பாடல்கள் எல்லாவற்றிலும் பல்வேறு தெய்வங்கள் இருந்தாலும் 'பரம்பொருள்' ஒன்றுதான் என்று பெரியோர்கள் கூறியுள்ளனர். இவர்களைப் போன்றே நாட்டார் ஐயா அவர்களும், "சைவத்தின் மேற்சமயம் இல்லை; அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லை" என்று சைவ சமயத்தில் ஆழங்கால் பற்றுக் கொண்டவராயினும் மற்ற சமயங்களையும் போற்றக் கூடியவர் என்பதைச் சைவர் மாநாட்டுத் தலைமையுரை ஆற்றும் பொழுது, பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை,

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''

என்னும் திருக்குறளை எடுத்துக்காட்டிக் கூறுவதிலிருந்து அறியலாம்.

சமய நெறியிலே சாதி, குலம் என்னும் எண்ணம் உதித்தல் குற்றமாகும் என்றும் நாட்டார் ஐயா கூறியுள்ளார்கள். கோயில்களுக்குள் நுழைவது பற்றிப் பழங்காலத்தில் ஏற்றத்தாழ்வுகள் மிகுந்து இருந்தன. அது பற்றிக் கூறும்பொழுது, எக்குடியில் பிறந்தார்க்கும் அவரது சமயக் கோயிலில் சென்று வழிபட உரிமை உண்டு என்றும், அது கூடாது என்று கூறுபவர்கள் சமயப் பற்று அற்றவர்கள் என்றும் கூறுவதிலிருந்து நாட்டார் ஐயா சமய சீர்திருத்தவாதி என்று அறியமுடிகிறது.

மேலும் மக்களுள் பற்பல சாதிப்பிரிவுகள் இருப்பினும் அவர்களுக்குள் உயர்வு தாழ்வு கூடாது. சிவனடியார்கள் அனைவரும் சமமாக மதித்தும் போற்றப்பெற வேண்டும். சிவஞான போதத்திற்கு திராவிட மாபாடியம் என்னும் ஒப்பற்ற பேருரை வகுத்தவருமாகிய மாதவச் சிவஞானமுனிவர்,

"சிவனெனும் மொழியைக் கொடிய சண்டாளன்
செப்பிடின் அவனுடன் உரைக
அவனொடு கலந்து பேசுக அவனோ(டு)
அருகிருந் துண்ணுக வென்னும்
உவமையில் சுருதிப் பொருடனை நம்பா
ஊமரோ டுடன்பயில் கொடியோன்
இவனெனக் கழித்தால் ஐயனே கதிவே
றெனக்கிலை கலைசை யாண்டகையே"

இப்பாட்டின் கருத்தினை நன்குணர்ந்து வாழ்வதும் சைவர்கள். அனைவரையும் சரிசமமாக மதிப்பது சைவர்கள் கடனாகும் என்று தஞ்சையில் நடைபெற்ற சைவ மாநாட்டுப் பேருரையில் நாட்டார் ஐயா கூறியுள்ளார். ஐயாவின் சமய சீர்திருத்தக் கொள்கையை இதனால் அறியலாம்.

திருவிழாக்கள் பற்றிக் கூறும்பொழுது அந்தக் காலங்களில் திருவிழாக்கள் நடைபெறும் பொழுது மக்களின் ஒற்றுமையையும், ஆளுந்திறத்தையும் அறிய முடிகின்றது என்றும், திருவிழா நடக்கும் ஒவ்வொரு நாளிலும் நகரத்தின் பல பக்கங்களிலும் அறவுரைக் கட்டுரைகளும், சமய வரலாற்று ஆராய்ச்சிகளும் நிகழும் என்பது திருவிழாவின் பயனை மிகுதிப்படுத்திக் காட்டுகிறது என்றும், கல்வியும் சமய அறிவும் குறைந்துள்ள இக்காலத்தில் திருவிழாக்கள் நடத்தி வைக்கும் அறநிலையத் தலைவர்களும், அறப்புரவலர்களும் பிறரும் இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பு நம்முன்னோர் செய்து காட்டிய வழிகளை இனியேனும் பின்பற்றி ஒழுகவேண்டும் என்கிறார்.

"பற்றா மாக்கள் தம்முட னாயினும்
செற்றமும் கலாமுந் செய்யா தகலுமின்"

என்று இதில் குறித்திருப்பதை ஒவ்வொரு மதத்தினரும் சிந்தித்து உணரவேண்டும் என்று கூறுவதிலிருந்து நாவலர் ஐயா சீர்திருத்த வாதி என்று அறியமுடிகிறது. எந்தக் கடவுளரையோ, சமயத்தையோ இகழ்தல் என்பது பழைய தமிழரிடத்து ஒரு சிறிதும் காணப் படாத ஒன்று. அத்தகைய சிறந்த பண்பினை நாமும் கொண்டு ஏனையோரும் கொள்ளுமாறு செய்வோமாயின் சமயப்பூசல் ஒழியும் என்கிறார்.